1990





# பறை-1990

ஒரு தொகைநூல்
(AN ANTHOLOGY)

தொகுப்பாசிரியர் :

வே. மு. பொதியவெற்பன்

சிலிக்குயில்
அருங்கலை நூற்களின் கருவூலம்
20.ப, கோதண்டபாணித் தெரு,
கும்பகோணம்-612 001.

○ முதற் பதிப்பு : ஆகஸ்ட் 1990 □ பக்கங்கள் : 120 □ விலை: ரூ. இருபது
□ உரிமை : ஆசிரியர்க்கு □ அச்சாக்கம்: இராசகிளி அச்சகம், சென்னை-20.

# என் தொழில்

போலிகளின் நரிமுகத்தைப்
பொய்ம்மைகளின் அறிமுகத்தைத்
தோலுரித்துக் காட்ட வந்தேன் மெய்யா—அத்
தொழிலில் நான் சக்கிலியே அய்யா !

ஒப்புர(வு) ஓங்கிடவே
உள்மலங்கள் நீங்கிடவே
துப்புரவுப் பாங்குறவே மெய்யா—நான்
தூய்மைசெயும் தோட்டிதா னய்யா !

நடமாட்டப் பிணங்களுக்கும்
நாள்போட்டு கணக்குமிட்டு
சுடுகாட்டில் எரித்திடுவேன் மெய்யா—அச்
சுடலையாண்டி வெட்டியா னய்யா !

கலப்படத்துக் கைவரிசை
இலக்கியத்துச் சந்தையிலே
புலப்படவே பிடிக்க வந்தேன் மெய்யா—நான்
புலனாயும் உளவாளி அய்யா !

கமுக்கமெலாம் வெளிச்சமிடக்
கலைவடிவிற் பளிச்சிடவே
தமுக்கடித்தே பாடவந்தேன் மெய்யா—நான்
தப்பறையும் பறையன்தா னய்யா !

— பொதி

நன்றி : விழிப்பு, அக்டோபர் 1978

# பறை-1990


**தமிழாக்கம்**

| | | |
|---|---|---|
| லத்தீன் அமெரிக்காவின் பெயர்பெற்ற தனிமை | 10 — | காப்ரியேல் கார்ஸியா மார்க்வெஸ் |
| குறிப்பும் மொழியாக்கமும் : | | நாகார்ஜுனன் |
| சந்திப்பு | — | ஹுலியோ கொர்த்தஸார் |
| குறிப்பும் ஆங்கில வழி மொழியாக்கமும்: | | சம்யுக்தா |

**ஒரு நேர்முகம்**

| | | |
|---|---|---|
| மக்களுக்காக பாடுகிறேன் | 23 — | ஜெகன் ஜி.எஸ்.வி. |
| மொழியாக்கம் : | | கோமகன் |

**நூல் விமர்சனம்**

| | | |
|---|---|---|
| தமிழ்ப்பாலையில் ஒரு பசுந்தரை | 57 — | க. நா. சுப்ரமண்யம் |
| மொழியாக்கம் : | | கரிச்சான் குஞ்சு |
| பனுவலியல் அராஜகத்திற்கு எதிராக சாரு நிவேதிதாவின் புதிய நாவல் | 37 — | ஜமாலன் |
| விவசாயச் சமூக உளவியலின் வெளிச்சத்தில் 'சனங்களின் கதை' | 46 — | அ. மார்க்ஸ் |

**சிறுகதைகள்**

| | | |
|---|---|---|
| தொற்றுநோய் | 30 — | 'ஜெனகப்பிரியா' |

உயிர்ப்பு 33 — கோபிகிருஷ்ணன்
கருப்பன் போன பாதை 61 — 'கோணங்கி'

**கட்டுரைகள்**

தமிழன் மறந்த கலைஞன் 27 — மாலன்
புதுமைப்பித்தன் 81 — ராவ்சாஹேப் எஸ். வையாபுரிப்பிள்ளை
*சிலபல* 83 — *மீ. ப. சோமு*

•

**ஒரு திறந்த மடல்**

திருச்சிற்றம்பலக் கவிராயருக்கு
ஒரு திறந்த மடல் 92 — வே. மு. பொதியவெற்பன்

**திறந்து கிடக்குமொரு தேதியில்லாக் குறிப்பேடு**

திகம்பரம் 99 — சூர்யமுகி

**கவிதைகள் ...**

நள்ளிரவு அழைப்பு 18 — இன்குலாப்
இதயமும் தாகமும் 20 — பழமலை
முரண் 26 — உஷா எஸ். நாயர்
பொருத்தம் 114 — கிவி

**மற்றும் 'பாட்டு'கள்**

' பிரிவெண்டிவ்வும்
எப்ஃபையாரும்' 22 — வே. மு. பொதியவெற்பன்

பேச்சுக்குச் சொல்லவில்லை 89 — வேளூர் வெ. கந்தசாமிக் கவிராயர்
பேனாத் துணையுண்டு திருச்சிற்றம்பலக் கவிராயர்

மரம் சுட்டுக் கரியாகலாம் 86 — பித்தகுமாரன்
மயிர் சுட்டுக் கரியாகுமா? கூத்தப்பறையன்

பங்களிப்பாளர் பற்றி... 116 — பறை

ஓவியங்கள் : மருது
பின்பக்க அட்டையில் — ஹுலியோ கொர்த்தஸார்

இலக்கியம் செய்வதென்றால்
எளிதில்லை எழுத்தாளா !
கலக்கினால் காவிரியும்
கழிவுப்பொருள் பலகாட்டும் !

**பெ. கோ. சுந்தர்ராஜன்**

## பதிப்புரை

அன்றொருநாள் நள்ளிரவு
ஆந்திரத்தின் வீதி ஒன்று
**ஆத்மாவின் பெண்குறிகள் !**

'தேவடியாளெ'ன
இச்சமூகத்தால் முகஞ்சுளிக்கப்படும்
என் 'சகமனுஷி' ஒருத்தியினால் வெளியிடப்பட்டது
**திகம்பரக் கவிகளின் ' ஆத்மாவின் பெண்குறிகள்!**
திகம்பர கவிகளின் பரம்பரையாக

புதுமைப்பித்தனின் ஆவியும் மேவிய வெளிச்சப்பாடா'க
இப்'பரத்த'னின் திகம்பரக் கூத்துகள் ஆரம்பமாயின
'திரையோட்டு மறைக்கும் மாயச்சிற்றம்பல ங்களாகத்
தேங்கிக் கிடக்கும் தமிழ்ச்சூழலில் நித்தநிதநிதம்
'திகம்பர சொரூப'மாயே பறை கூத்தாடும் !

☐

வீராச்சாமி செட்டியாரின் **விநோதரச மஞ்சரி**
நகுலனின் **குருக்ஷேத்திரம்**
பால்ராஜ் கென்னடியின் **வீடு**
'அன்ன'த்தின் **சுயம்வரம்**
பாவை சந்திரனின் **திரட்டு**

இப்படியாகத்தானே ‘தமிழ்கூறு நல்லுலகில்’
தொகுப்பு முயற்சிகள் தொடரலாயின.
இந்த ரீதியில்...
ஆண்டுக்கொரு தொகுப்பாகத்
தொடரப் போவதன் ஆரம்பமே
**சிலிக்குயிலின் பறை—1990**

‘முன்னைப் பழமைக்கும் முதுபழந் தொன்மைத்தாய்
பின்னைப் புதுமைக்கும் பெயர்த்தும் அப்பெற்றித்தாய்’
1990—இல் காலூன்றும் பறை ‘அரிமா நோக்காய்’
நவீனத்துவ ஓர்மையுடன் ஆதிநிலையும் அவாவியே நிற்கும்
பழமையின் ஆணிவேர்களை அகழ்ந்தும் முன்வைக்கும்
புதுமையின் வீர்யமிக்க முளைக்குருத்துக்களை
விளையும் போதிலேயே இனங்கண்டும் எடுத்துரைக்கும்

□

எனது பீடங்களையும் இடறிச் சிதறி
இதர பீடங்களையும் கவிழ்த்து ஊடாடி
இங்கே உங்களோடு கைகோக்கிறேன்.

‘ஆசைபற்றி அறையலுற்றேன்’ இவ்வளவ்வும்
அருகதையும் பெறுமதியும் காலமடியில்...

என்றும் தாங்கள்
தோழமையுள்ள

---

* இன்னமுங்கூட உதறித்தள்ள இயலாமல் மிச்ச சொச்சமாய் மீதமிருக்கும் ‘இங்கிதம்...நாசூக்கு...’ இத்தியாதி இத்தியாதி பற்றியே இங்கு ‘பெண்குறி’ என்பதோடு நின்றது. உண்மையில் அத்தொகுப்பின் பெயராக அதற்கான வழக்குச் சொல்லே பிரயோகிக்கப் பட்டது.

சிலிக்குயில்

வழங்கும்

தொகைநூல்

பறை—1990

அதாவது, பிராமணன் பறையனாய் ஆகிவிட வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகிறது. படைப்புநிலை சாதி கடந்த நிலை. மிகவும் கொடூரமாய் சாதியமைப்பால் வருந்தும் சாதி எதுவோ அது தன்னை அழிக்க முந்தும். நல்ல படைப்பாளி ஒவ்வொருவனும் தாழ்த்தப்பட்டவனாய் தன்னை ஆக்கிக்கொள்கிறான். இங்கு வேறு வழியில்லை. படைத்தல் என்பதே சாதியைத்தாண்டுதல் என்றா கிறது. இதேதான் பிராமணரல்லாத பிற உயர்சாதிகளிடத்தும் உண்மையாகிறது. இந்த நிலையில்தான் பிராமணனும் கரடுமுரடான, அழகியல் வயப்பட்ட, பிராந்தியத் தன்மைக்குச் செவிசாய்க்கிற நாடோடிக் கதைகளில், புராணங்களில் தன்னை இழக்கிறவனாய் மாறுவான்...

...தன்னியல்பிலேயே ஒரு பறையன் ஓர் எதிர்ப்பாளனாய், புரட்சிக்காரனாய் இருந்துகொண்டே இருக்க வேண்டியிருக்கிறது. தன் எதிர்ப்புணர்வை விடும் அக்கணத்தில் அவன் ஒரு பொருளாய் மாறுகிறான். மூன்றாம் உலகத்தின் ஒருபகுதியான தமிழகத்தின் பறையனின் இலக்கியம்தான் உண்மையான பிரபஞ்ச சம்பந்தமுள்ள இலக்கியம். கலை என்பதன் தீவிரவாத அழகியல் தத்துவம் இப்படித் தான் உருவாக வேண்டும்.

தமிழவன்

பிராமணனிலிருந்து பறையன் வரை

இலக்கிய வெளிவட்டம், 1981

# லத்தீன் அமெரிக்காவின் பெயர் பெற்ற தனிமை

*காப்ரியேல் கார்சியா மார்க்யொஸ்*

இத்தாலி நாட்டின் பிளாரென்ஸ் நகரத்திலிருந்து கிளம்பி மெகல்லனுடன் உலகைச் சுற்றிவர் அன்டோனியோ பிகாஃபெட்டா (Antonio Pigafetta). தென்அமெரிக்காவைச் சுற்றியதை இவர் பயணக்குறிப்புகளாக எழுதினார். பயணக் கட்டுரையான இதை இன்றும் ஓர் அருமையான கற்பனையாக வாசிக்கலாம்.

இவருடைய புத்தகத்தில், தனது ஜோடியின் முதுகுமீது முட்டையிடும் கோழி இனத்தை, ஸ்பூன்போன்ற நீண்ட மரக்கட்டையாகிய மூக்குடைய, நாக்கற்ற பெலிக்கன் பறவை இனத்தை, விவரிக்கிறார். கழுதையைப் போன்ற தலையும் காதுகளும் ஒட்டகம் போன்ற உடம்பும் மான்போன்ற கால்களும் குதிரையைப் போன்ற கனைப்பும் கொண்ட மிருகத்தைப் பார்த்ததாகக் கூறுகிறார். பட்டகோனியா பிரதேசத்தில் முதன்முதலாக ஒரு மனிதனைப் பார்த்தவுடன் அவனுக்கு கண்ணாடி ஒன்றைக் கொடுத்ததைக் கூறுகிறார், பெரிய உடலைக் கொண்ட அவன் பயத்தால் பேதலித்துப் போனதை விவரிக்கிறார்.

பிகாஃபெட்டா எழுதிய சிறிய புத்தகத்தில் எங்களுடைய இன்றைய நாவல் களுக்கான முக்கியக் கூறுகள் இருந்திருக்கின்றன. அந்தப்புத்தகத்தில் இருப்பதை விடவும் அருமையான, எண்ணற்ற குறிப்புகளை மேற்கிந்தியத் தீவுகளுக்கு வந்தவர்கள் பதிவு செய்துவிட்டுப் போயிருக்கிறார்கள்.

மேலும் தங்கம் கிடைக்கும் இடமாகக் கருதப்படும் எல் டொராடோ, பலப்பல வருடங்களாக, பல்வேறுவகையான வரைபடங்களில் இடம்பெற்று வந்துள்ளது தெரிந்ததே. இப்படியாகத்தான் மெக்சிகோ நாட்டின் வடக்குப்பகுதியில் அல்வார் நூனஸ் கபெஸா டிவாகா தமது வாழ்க்கையின் இளமைப்பருவத்தை எட்டு வருடங்கள்வரை தேடியபோது, அவருடன் சென்ற அறுநூறுபேர் ஒருவரை ஒருவர் தின்றுகொண்ட பிறகு ஐந்தேபேர் திரும்பினர். இதைவிட மர்மமான விஷயம், குஸ்கோ பகுதியிலிருந்து தலா நூறு பவுண்டு தங்கத்தை அடஹூவெல்பாவுக்கான பயணத் தொகையாக ஏற்றிக் கொண்டு கிளம்பிய பதினோராயிரம் கழுதைகள் காணமல் போனதுதான்! கொஞ்சகாலத்துக்குப் பிறகு, அங்குள்ள வண்டல்மண்ணில் வளாக்கப்பட்டு, கார்டெக்னா டி இண்டியாசில் விற்கப்பட்ட கோழிகளின் குடலில் சிறிய தங்கக்கட்டிகள் கண்டுபிடிக்கப்பட்டது வேறு விஷயம்.

இப்படியாகத்தானே எங்கள் மூதாதையர்களின் தங்கப்பைத்தியம் இன்று வரை தொடர்ந்துவந்துள்ளது. உதாரணமாக, போன நூற்றாண்டில் அட்லாண்டிக்கிலிருந்து பசிபிக் சமுத்திரத்துக்கு பனாமா வழியாகச் செல்லும் ரயில்வே பாதையைக் கட்டுவதற்கு ஆகும் செலவைக் கணிக்கச் சொல்லி ஜெர்மானியக் குழு ஒன்று கேட்டுக் கொள்ளப்பட்டது. அக்குழுவானது, பாதைபோட இப்பகுதியில் இரும்பு கிடைக்காததால் தங்கத்தைப் பயன்படுத்தலாம் என்ற முடிவுக்கு வந்தது!

ஸ்பெயின் நாட்டு ஆதிக்கத்திலிருந்து நாங்கள் விடுதலை பெற்ற பிறகும் கூட எங்கள் பைத்தியமானது தெளியவில்லை. மூன்று முறை மெக்சிகோ நாட்டின் சர்வாதிகாரியாக இருந்த ஜெனரல் அன்டோனியோ லோபஸ் டி சந்தானா ''கேக்'' யுத்தத்தில் இழந்துபோய்விட்ட தனது கால் ஒன்லை வெகுவிமரிசையாகப் புதைக்க ஏற்பாடு செய்தார்.

ஈகுவடார் நாட்டை பதினாறு வருடங்களாக ஆண்டுவந்த ஜெனரல் காப்ரியேல் கார்சியா மெரெனோ என்பவரின் பிணம் இராணுவ உடையில் மெடல்களுடன் ஜனாதிபதி நாற்காலியில் உட்கார்ந்தவாறே புதைக்கப்பட்டது.

எல் சால்வடார் நாட்டை ஆண்டு முப்பதாயிரம் விவசாயிகளைக் கொன்று குவிக்க உத்தரவிட்ட ஜெனரல் மாக்ஸ்மிலியனோ ஹெர்னாண்டஸ் மார்டினெஸ், புதிய இறையியல் தத்துவத்தில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர். இவர் தனது உணவில் விஷம் இருக்கிறதா என்பதைச் சோதிப்பதற்கு ஒரு பெண்டுலத்தைக் கண்டுபிடித்தவர்; ஒருவகையான மஞ்சள் ஜுரம் பரவுவதைத் தடுக்க தெரு விளக்குகள் மீது சிவப்புப்பேப்பரை ஒட்ட ஆணையிட்டவர்.

டெகுசிகல்பா நகரத்தின் பிரதான சதுக்கத்தில் அமைக்கப்பட்டிருக்கும் ஜெனரல் பிரான்சிஸ்கோ மொரசான் சிலை, உண்மையில் பாரீஸ் நகரத்துக் காயலான்கடை ஒன்றில் வாங்கப்பட்ட மார்ஷல் நே என்பவரின் சாதாரண சிலை ஆகும்

★ ★ ★

பதினோரு வருடங்களுக்கு முன்பு ஸ்டாக்ஹோம் நகரத்தில் நமது காலத்தின் முக்கியக் கவிஞர்களில் ஒருவரான பாப்லோ நெருடா வந்தார். அப்போதிலிருந்து நல்லெண்ணமும்—சிலவேளை கொஞ்சம் வருத்தமும்—கொண்ட ஐரோப்பியர்கள், லத்தீன் அமெரிக்காவிலிருந்து பாயும் பலவித அதீத சமாச்சாரங்களால் தாக்குண்டு வருகிறார்கள்.

லத்தீன் அமெரிக்கா என்பது, பைத்தியம் பிடித்த ஆண்களும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பெண்களும் வாழும் எல்லையற்ற களமாகும். இப்படியாகத் தானே லத்தீன் அமெரிக்காவின் முடிவற்ற முரட்டுத்தனம் புராணமாகக் கலைகிறது.

இந்த பதினோரு ஆண்டுகளில் எங்களுக்கு ஓய்வு என்பதே இல்லை. எரியும் தனது மாளிகையில் தன்னந்தனியாக ஒரு முழு இராணுவத்தை எதிர்த்துப் போராடி மடிந்தார் புரோமதியஸ் போன்ற ஒரு ஜனாதிபதி[1]. பிறகு பரந்த இதயம் கொண்ட இன்னொரு ஜனாதிபதியும்[2] தனது மக்களின் சுயமரியாதைக்காய் நின்ற ஜனநாயகப் போராளி ஒருத்தனும்[3] மர்மமான விமானவிபத்துக்களில் இறந்து போனார்கள்.

பாப்லோ நெருடா இங்கு வந்துபோன பின்பு, ஐந்து யுத்தங்களும் பதினேழு இராணுவக் கிளர்ச்சிகளையும் நாங்கள் பார்த்துவிட்டோம். இப்போது கடவுளின் பெயரால் கொடூரமான சர்வாதிகாரி ஒருவர்[4] இனப்படுகொலையை நடத்திக் கொண்டிருக்கிறார். லத்தீன் அமெரிக்காவிலேயே நமது காலத்தின்போது நடக்கும் முதல் இனப்படுகொலை இது. இதற்கிடையில் இரண்டு கோடி லத்தீன் அமெரிக்கக் குழந்தைகள் வயது ஒன்றைத் தாண்டுவதற்கு முன்பே இறந்திருக்கிறார்கள். இதே பதினோரு ஆண்டுகளில் ஐரோப்பா முழுவதிலும் பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கையைவிட இது அதிகம். அரசாங்க அடக்குமுறைகளால் மாயமாய் மறைந்து போனவர்களின் எண்ணிக்கையோ ஒருலட்சத்து இருபதாயிரம். இங்கே ஸ்வீடனில் உப்ஸலா நகரவாசிகள் அத்தனை பேரும் திடீரென்று காணாமல் போவதைப் போல. ஆர்ஜெண்டினாவில் கர்ப்பமாயிருக்கும்போது கைது செய்யப்பட்ட பெண்கள் சிறைகளில் குழந்தை பெற்றார்கள். குழந்தைகள் யார், எங்கே இருக்கிறார்கள் என்பது தெரியாதவகையில் ரகசியமாக இராணுவத்தால் தத்தெடுக்கப்பட்டு அனாதை இல்லங்களில் வளர்க்கப்படுகிறார்கள்.

இப்படி லத்தீன் அமெரிக்கா முழுவதுமாய் இரண்டு லட்சம் பேர் போராடி மடிந்து போயிருக்கின்றனர். தமது உலகமானது அப்படியே இருப்பதில் அர்த்தமில்லை, மாற வேண்டும் என்பதற்காகத்தான் இந்தப் போராட்டம். மூன்று சிறிய நாடுகளான நிகரகுவா, எல் சால்வடார், கதேமாலா ஆகியவற்றில் மட்டும் ஒரு லட்சம்பேர் போராடி இறந்துள்ளனர். அமெரிக்க நாட்டில் மட்டும் இதே அளவிலான போராட்டம் ஏதும் நடந்திருந்தால் நான்கு வருடங்களுக்கு பதினாறு லட்சம் பேர் என்ற அளவில் இறந்திருப்பார்கள். விருந்தோம்பலுக்குப் பெயர்போன சிலி நாட்டிலிருந்து பத்துலட்சம் பேர் வெளியேற வேண்டியிருந்தது. அந்த நாட்டின் ஜனத்தொகையில் இது பத்து சதவிகிதமாகும். 25 லட்சம்பேர் தம்மை நாகரிகம் மிக்கவர்களாகக் கருதிவாழும் உருகுவே நாட்டிலிருந்து 20 சதவிகிதம்பேர் வெளியேறிவிட்டார்கள். இன்றைக்கு லத்தீன் அமெரிக்காவிலிருந்து வெளியேறி வாழவேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டவர்களின் எண்ணிக்கை இங்கே பக்கத்திலுள்ள நார்வே நாட்டின் ஜனத்தொகையைவிட அதிகம்.

★ ★ ★

இந்த பயங்கரமான சூழல்தான் ஸ்வீடிஷ் இலக்கியக் கழகம் (Swedish Academy of Letters) எங்கள் மீது காட்டும் கவனத்துக்குக் காரணமா? அல்லது, எங்களின் சூழல் விளைவித்த வெறும் இலக்கியம்தான் இந்த கவனத்துக்கான காரணம்? இப்படியாகத்தான் யோசித்துப் பார்க்கிறேன். எங்கள் சூழலானது

---

*1. 1972-இல் ஜெனர்ல் அகஸ்டோ பினோஷேவின் படைகளுடன் போரிட்டுமடிந்த சில நாட்டு இடதுசாரி ஜனாதிபதி சால்வடார் அயண்டே.*

*2. 1981-இல் இறந்த பனாமாவின் ஜனநாயகரீதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி. தோரியோஸ்,*

*3. யாரென்று தேரியவில்லை. தெரிந்தால் சொல்லுங்கள்.*

*4. சிலிநாட்டு இராணுவஅதிபர் ஜெனரல் அகஸ்டோ பினோஷே. கார்சியாமார்க்யொசின் சமீபத்திய புத்தகமான Clandestine in Chile பினோஷே ஆட்சியை ரகசியமாக திரைப்படமாக்கிய இளம் இயக்குநரைப் பற்றிய அறிக்கை. நாவல் போல எழுதப்பட்டது.*

வெறும் காகிதத்திலுள்ள விஷயம் இல்லை; மாறாக, எங்களுக்குள் வாழ்ந்து, எங்கள் எண்ணற்ற தினசரிச்சாவுகளின் ஒவ்வொரு கவனத்தையும் தீர்மானித்து, எங்களின் தணிக்கவியலாத படைப்புத்தாகத்தைச் சுரக்கச் செய்வதாகும். துயரத்தாலும் அழகாலும்ஆன இச்சூழலில்அலையும் இந்தக் கொலம்பியாக்காரனான நான் இதில் இன்னும் ஒரு பூஜ்யம். அதிர்ஷ்டவசமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பூஜ்யம். அவ்வளவுதான்.

கவிஞர்களும், பிச்சைக்காரர்களும், இசைக்கலைஞர்களும் தீர்க்கதரிசிகளும், போராளிகளும் குற்றவாளிகளுமாக எங்கள் அபரிமிதமான சூழலின் அத்தனை ஜந்துக்களாகிய எங்களின் கற்பனைக்குக் குறைச்சலே இல்லை. இருக்கும் ஒரு பிரச்சினை, எங்கள் தற்கால வாழ்க்கையை ஒரு சாத்தியப்பாடாக அடையாளம் காட்டுவதற்கான வழிமுறை என்று எதுவுமே இன்று போதாமல் இருப்பதுதான். நண்பர்களே, இதுதான் எங்கள் பெயர்பெற்ற தனிமையின் (solitude) அர்த்தம்.

இந்த அடிப்படைப் பிரச்சினை எங்களை மிகவும் குழம்பியவர்களாக ஆக்குவதும் தமது கலாச்சாரம் பற்றியே தியானத்தில் மூழ்கிப்போயிருக்கும் ஐரோப்பியர்களால் எங்களை அர்த்தப்படுத்திக் கொள்ள முடியாமல் போவதும் இப்போது புரிகிறது. ஐரோப்பிய விமரிசகர்கள் தங்களுக்கான அளவுகோலை வைத்து எங்களையும் அர்த்தப்படுத்த விரும்புகிறார்கள். வாழ்க்கையின் பாதைகள், அழிவுகள் எல்லோருக்கும் ஒன்றேபோல் இருப்பதில்லை என்பதை அவர்கள் மறந்து விட்டார்கள். எங்களுடைய கலாச்சாரத்தை இனம்காணும் பாதை என்பது கடுமையாக, ரத்தம் நிறைந்ததாக இருப்பது ஐரோப்பிய சமுதாயத்துக்கு நடந்ததைக் கொஞ்சம் ஒத்திருப்பதைக் கூட மறந்துவிட்டார்கள். இப்படி அந்நிய அளவுகோல்களால் எங்களை அர்த்தப்படுவது என்பது எங்களை இன்னும் தனிமைப் படுத்துவதாக, எங்கள் சுதந்திரத்தை, எங்களை இனந்தெரியாதவர்களாக ஆக்குவதாகப் போய்முடியும்.

கனம்பொருந்திய ஐரோப்பா கொஞ்சம் தன் வரலாற்றைத் திரும்பிப் பார்த்துக் கொள்ள முயன்றால் நிறைய விஷயங்கள் தெளிவாகலாம். லண்டன் நகரத்தின் முதல் சுவரைக் கட்டுவதற்கு முன்னூறு வருடங்கள் ஆனது என்பதையும் அங்கே முதல் பாதிரியார் வருவதற்கு இன்னும் முன்னூறு வருடங்கள் பிடித்தது என்பதையும் பார்க்க வேண்டும். ரோம் நகரத்தை ஓர் எட்ருஸ்க அரசன் வரலாற்று முக்கியத்துவம் கொண்டதாக மாற்றுவதற்கு முன்னாய் அது இரண்டாயிரம் வருடங்களாக உழன்று கொண்டிருந்தது என்பதைக் காணவேண்டும். இன்றைக்கு சமாதான விரும்பிகளாக கைக்கடிகார உற்பத்தியிலும் வெண்ணெய் தயாரிப்பிலும் சாதனை படைத்துக் கொண்டிருக்கும் ஸ்விட்சர்லாந்துக்காரர்கள், 16ஆம் நூற்றாண்டுக்காலம்வரை கூலிப்படைகளாக ஐரோப்பாவை ரத்தக்காடாக ஆக்கிக் கொண்டிருந்தார்கள் என்பதைப் பார்க்கவேண்டும். 17ஆம் நூற்றாண்டான மறுமலர்ச்சிக் காலகட்டத்தின் நாகரிக வளர்ச்சியின்போதுகூட ரோம் நகரத்தை 12,000 கூலிப்படைகள் தாக்கி அழித்து அங்கிருந்த எட்டாயிரம் பேரைக் கொன்றதை நினைவு கூறவேண்டும்.

53 வருடங்களுக்கு முன்பு இதே ஸ்டாக்ஹோமில் ஜெர்மானிய நாவலாசிரியர் தாமஸ் மான் மேற்குலகக் கலாச்சாரத்தையும் இதர கலாச்சாரங்களையும் இணைக்க வேண்டியதன் தேவையைப் பற்றிப் பேசினார். அதை மீண்டும் இங்கே குறிப்பிட நான் விரும்பவில்லை. அதே சமயத்தில், ஐரோப்பியர்களில் தெளிவான பார்வை கொண்டவர்கள்கூட எங்களைப் பார்க்கும் விதத்தை மறுபரீசீலனை செய்து கொள்ள

வேண்டிய நிலையில் இருக்கிறார்கள் என்றே நினைக்கிறேன். எங்கள் கனவுகளைப் புரிந்துணர்வோடு நீங்கள் பார்ப்பதால்மட்டும் எங்கள் தனிமை உணர்வானது தணிந்துவிடும் என்று கருதிவிட முடியாது. உங்கள் புரிந்துணர்வு மிக அதிகமாகத் தேவைப்படுகின்ற எங்களில் பலருக்கான ஆதரவாக அது வெளிப்பட்டால்தான் எங்கள் தனிமை உணர்வு குறைவது சாத்தியம். அப்படியிருக்கின்ற எங்களில் பலர் உலகில் எங்களுக்கு நியாயமாகக் கிடைக்கவேண்டிய பங்கை என்றாவது ஒருநாள் அடைந்துவிட முடியும் என்ற மாயையில் நம்பிக்கை வைத்திருப்பவர்கள் ஆவோம்.

எங்களுக்கென்று மனோபலம் எதுவுமில்லாமல் யாருடைய பகடைக்காயாகவும் ஆக நாங்கள் விரும்பவில்லை. அப்படியான தேவையும் இல்லை. சுதந்திரத்துக்கும் தனித்துவத்துக்குமான எங்களின் போராட்டம் மேற்குலக நாடுகளின் விருப்பத்துக் கேற்றவாறு ஆகிவிடக்கூடாது என்று நாங்கள் விரும்புவதில் அர்த்தமுள்ளது.

அமெரிக்க—ஐரோப்பியக் கண்டங்களுக்கு இடையில் பயணம் செய்தவற்கான வசதிகள் அதிகரித்திருந்தாலும் நமக்கிடையிலான கலாச்சார தூரமானது அதிக மாகிவிட்டது. ஆக, நாங்கள் உங்களைக் கேட்கவிரும்பும் கேள்வி இதுதான்: இலக்கியத்தில் எங்களுக்குத் தரப்படும் தனித்துவமும் படைப்பாற்றலும் ஏன் சமுதாய மாற்றத்துக்கான எங்களுக்கான, எங்களுடைய முயற்சிகளில் மறுக்கப் படுகின்றன? முற்போக்கான ஐரோப்பியர்கள் தமது சமுதாயங்களில் விழையும் சமுதாய நீதியானது ஏன் லத்தீன் அமெரிக்காவில்—வித்தியாசமான சூழலில், வித்தியாசமான விதிமுறைகளின்படி—சாத்தியமாகக் கூடாது?

எங்கள் வரலாற்றில் திரும்பத்திரும்ப வரும் பலியும் வன்முறையும், காலங் காலமாகத் தொடரும் சமத்துவமின்மை, இதுவரை வெளியில் சொல்லப்பட முடியாத கசப்புணர்வு ஆகியவற்றின் விளைவுகளே. அவை முப்பதாயிரம் கிலோ மீட்டர் தூரத்திலிருந்து யாரோ செய்த சதிவேலையால் ஏற்பட்டவை அல்ல. இந்த விஷயத்தை ஐரோப்பியச் சிந்தனையாளர்களும் அரசியல்வாதிகளும் புரிந்துகொள்ள வில்லை. வயதாகிப்போய்விட்ட அவர்களுக்கு தமது குழந்தைப்பருவ விளை யாட்டுக்கள் மறந்துவிடுவதைப் போல அவர்கள் இந்த விஷயத்தைப் புரிந்து கொள்ளாமலேயே இருக்கிறார்கள். அவர்களைப் பொறுத்தவரை, உலகின் இரண்டு வல்லரசுகள் நிர்ணயிக்கும் தலைவிதியைத் தாண்டி யாரலும் வாழமுடியாது! அவர்கள் அப்படி நினைப்பதுதான், நண்பர்களே, எங்களது பெயர் பெற்ற தனிமையின் அளவு.

எது எப்படியிருந்தாலும் ஒடுக்குமுறைகள், பகற்கொள்ளைகள், அபரிமிதங் களையே நாங்கள் வாழ்வாக எதிர்கொள்கிறோம். வெள்ளங்களும் பஞ்சங்களும் நோய்களும் இயற்கை உற்பாதங்களும் நூற்றாண்டுகளாய் எங்கள்மீது நிரந்தரமாய் திணிக்கப்பட்ட யுத்தங்களும்கூட சாவைத்தாண்டி வாழ்வு மீதான நிச்சயமான பிடிப்பை ஒழித்துவிட முடிவதில்லை. இந்தப் பிடிப்பு ஒவ்வொரு வருடமும் வேகமாக வளர்கிறது. ஒவ்வொரு வருடமும் மூன்றாம் உலக நாடுகளில், இறப்ப வர்களைவிட ஏழுகோடியே நாற்பது லட்சம் பேர் அதிகமாகப் பிறக்கிறார்கள். அதாவது, நியுயார்க் நகரத்தின் ஜனத்தொகை ஒவ்வொரு வருடமும் ஏழு மடங் காகப் பெருகும் நிலை போல். இதில் பெரும்பான்மை லத்தீன் அமெரிக்க நாடு களில்தான். அதே சமயத்தில், இது வரை பூமியில் வாழ்ந்த அத்தனை பேரையும், உயிரினங்களையும் நூற்றுக் கணக்கான முறை ஒருசேர அழித்தொழிப்பதற்கான ஆயுதங்களை சேர்த்து வைத்துள்ளது வளர்ச்சிபெற்ற நாடுகளில்தான்.

இன்றைப் போன்ற ஒரு நாளில் என் ஆசானாகிய வில்லியம் ஃபாக்னர், ''மனிதன் முடிந்து போவதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை'' என்றார். உண்மையில் அவர் நின்ற இடத்தில் நிற்பதற்கு எனக்குத் தகுதியில்லை தான். ஆனால் 32 வருடங்களுக்கு முன்பு அவர் அங்கீகரிக்க மறுத்த அந்த விஷயம், மனித வரலாற்றிலேயே முதன்முதலாக இன்று சாத்தியப்பாடாக, விஞ்ஞான ரீதியாக, ஆகியுள்ளதால், அதைச் சுட்டிக்காட்ட நான் இந்த மேடையில் நிற்க வேண்டியிருக்கிறது என்று கூறிக்கொள்ளலாம்.

இப்போது இந்த புதிய பயங்கர எதார்த்தத்துக்கு முகம் கொடுத்தாக வேண்டியிருக்கிறது. மனித வரலாற்றில் இதுவரை வெறும் கற்பனாரீதியாக இருந்து வந்துள்ள இந்த விஷயத்தை, கதை சொல்பவர்களாகிய நாங்கள் எதிர்கொண்டாக வேண்டியிருக்கிறது. இதற்கென, மிகவும் வித்தியாசமான கனவுலகம் ஒன்றை உருவாக்க முனைவதற்கு இன்னும் காலந்தாழ்த்தி விடவில்லை என்பதை உணர வைக்க வேண்டியிருக்கிறது. அந்த உலகத்தில், யாரும், பிறர் எப்படிச் சாகப் போகின்றனர் என்பதை, அந்த பிறருக்காகத் தீர்மானிக்க முடியாது. அந்த உலகத்தின் அன்பு என்பது முழுமையானதாக இருக்கும்; மகிழ்ச்சி என்பது சாத்தியப்பாடாகும். ஒரு நூற்றாண்டுத் தனிமையாகச் சபிக்கப்பட்ட இனங்களுக்கு, கடைசியில், வாழ்வதற்கான இரண்டாவது சந்தர்ப்பம் கிடைக்கும், நிரந்தரமாக.

---

1982 நோபல் பரிசுக்கான விருதைப் பெறும் போது நிகழ்த்திய உரை. விருதின் நிதித் தொகை கொலம்பியா நாட்டுப் புரட்சிகரப் பேராளி அமைப்பான எம்-19க்கு ஆதரவான பத்திரிகை ஒன்று அமைக்கப் பயன்பட்டது. இதே எம்-19 அமைப்பின் தலைவரான கெய்ம் பேட்மன் இறந்ததும் 1983-இல் ஒரு ரகசியமான விமானவிபத்தின் போதுதான்.

---

குறிப்பும் மொழிபெயர்ப்பும் : **நாகார்ஜுனன்**

## பிழை திருத்தம்

| பக்கம் | பத்தி | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| 68 | 1 | 45 | எதேச்சையில் | எதேச்சையாகப் |
| 69 | 1 | 25 | துக்கத்தில் | தூக்கத்தில் |
| 70 | 1 | 12 | நின்று விட்டது பரவாயில்லை | நின்று விட்டது. பரவாயில்லை |
| 70 | 1 | 30 | ஆம் சற்றே உறவு கொண்டாடுவதற்காக | ஆம். இந்த உலகத்துடன் சற்றே உறவு கொண்டாடுவதற்காக |
| 72 | 1 | 18 | என்றோரு | என்றோ ஒரு |
| 76 | 1 | 18 | குரியனுடன் | சூரியனுடன் |
| 76 | 1 | 39 | 45 குண்டு | ·45 குண்டு |
| 77 | 3 | 16 | வாயில் சுருட்டு | வாயில் சுருட்டுடன் |
| 78 | 2 | 11 | தண்ணீரோடு | கண்ணீரோடு |
| 78 | 3 | 10 | குறியாகி விட்டது. | சின்னமாகி விட்டது. |
| 80 | 1 | 4 | கொர்த்தஸார் தன் கதை மாதிரியான குறியீடுகள் காரணமாக கதை வெறும் சலிப்பூட்டும் | கொர்த்தஸார் தன் கதை மதக்குறியீடுகள் காரணமாக வெறும் சலிப்பூட்டும் |
| 80 | 2 | 1 | யதார்த்தத்துக்கும் fantasyக்குமான மலையின் மீது நிகழும் சந்திப்பிலும் காணப்படுகிறது. | யதார்த்தத்துக்கும் fantasyக்குமான இணைவு கதையின் இறுதியில் மலையின் மீது நிகழும் சந்திப்பிலும் காணப்படுகிறது. |

“

**அரசு விருது**

எதிர்பார்த்ததுதான் அது
என்றேனும் ஒருநாள்
அர்த்தராத்திரியில்
அதிகாரத்தின் கைகள்
கதவுகளைத் தட்டுமென்பது.

தடதடவெனச்
செவிப்பறை அதிர
அப்படித்தான் அது
நிகழ்ந்தது.

”

□

மார்ச் 1988ல் சென்னை மறைமலை நகரில் காங்கிரஸ் மாநாடு. அன்றைய பிரதமர் ராஜீவ் அதற்கு வருகைதந்தபோது ஏறத்தாழ தமிழகமெங்கும் 2000 சமூகவிரோதிகள் முன்னெச்சரிக்கையாகக் கைது செய்யப்பட்டனர். அந்த இரண்டாயிரத்தில் நாங்கள் (நான், பழமலை, இன்குலாப்) மூவரும் அடக்கம். தமிழகச் சூழலில் இதைக் கண்டித்து மூன்றாம் அணி ஏடுகளான புதிய கலாச்சாரம், புதிய ஜனநாயகம், மனஓசை, கேடயம் இவை மட்டுமே எழுதின. பாலம் இதழ் மட்டும் பெயர் குறிப்பிடாமல் கண்டனம் தெரிவித்திருந்தது. மற்ற சிற்றேடுகள் எல்லாமும் அப்போது காந்தி பொம்மைக்குரங்கு களாயின.

இந்தச் சமூக விரோதிகள், தேசத்துரோகிகள் பட்டியல் இன்னமும் அவர்களிடம் இருக்கிறது. இப்பொழுது தமிழக முதல்வர் வந்தால் கூட அதிகாரத்தின் கண்கள் எங்களைக் கண்காணிக்கின்றன. தமிழகக் கவிராயர்கள் விருதுகளுக்காக அதிகாரத்தின் கடாட்சத் திற்கு அலைந்து கொண்டிருக்கிறார்கள். என்ன எழுத? இன்குலாப் பாரதியிடம் சொல்கிறார்.

இந்த அரசாங்கம் கவிஞர்களை எப்படிக் கௌரவிக்கும் என்று—

''பாரதி!
வாழ்ந்து பிணமானால் உன்போன்றோரை
பிணமாக வாழ்ந்தால் என்போன்றோரை''

**—தொகுப்பாசிரியர்.**

## நள்ளிரவு அழைப்பு

நட்சத்திரங்களின் சுமைகளால்
கனத்த நள்ளிரவு...
கனவுகளின் சுமைகளால்
கனத்த உறக்கம்.

தலை மாட்டில்
மூடாமல் கிடந்த
பேனாவும் தாளும்.

இருமிக் களைத்துச்
சற்றுமுன் கண்ணயர்ந்த
மனைவியும்...அம்மாவின்
மடிதேடிப் பிடித்துப்
புறாக்குஞ்சு போலப்
புதைந்த என் மகளும்.

அலறும் அழைப்பு மணி,
கதவு திறந்த என் மகன்
தூக்கம் வழிந்த கண்களைத்
துடைத்துப் பார்க்கையில்
காக்கிச் சீருடையும்
கராத்தே சங்கிலிக் கட்டையுமாய்
அதட்டியபடி நிற்கும்
அரசாங்கம்.

என்னை அழுத்திய
கனவுகளை உதறி
கதவை நோக்கி நடக்கும்போதே
எதிரில்
கனத்த பூட்சும்
காக்கிச் சட்டையும்.
''நீங்கள்தானே இன்குலாப்...
கீழே ஜீப்பில்
அதிகாரி கூப்பிடுகிறார்
உடனே வாருங்கள்''.

மாடிப்படிகளின் இருள்கள் பிதுங்க
பூட்சுகளின் சத்தத்தின்
மத்தியில் நான்இறங்க
ஜீப்பின் திறந்த வாய்
என்னை விழுங்கியது.
சாலையில் நான்கு சக்கரங்கள் பறந்தன

★★★

விழித்தும் உறங்கும்
மனிதர்களுக்கு
விடியலின் செய்தியை உணர்த்தும்
எனக்கு
இரவில் உறங்கும் உரிமை ஏது?

இன்குலாப்

நன்றி : விசிட்டர்

பறை

பகலிலும் விரியும் கனவுகளைக் கிழித்து
பார்க்கப்படாத வாழ்க்கையை உணர்த்த
எழுதும் எனக்கு
எதற்குக் கண்கள் இரவில்.

ஒரு நாள்...
இலக்கியத்துக்காகப் பரிசு
பெற்றவர்களின்
பட்டியல் ஒன்றைப் பட்டியலில் பார்த்து
உதடுகளைப் பிதுக்கி
என் மகள் கேட்டாள் :

''உங்களுக்கு எந்தப் பரிசுமில்லையா?''
புன்னகையோடு அவளுக்குச்
சொன்னேன்:

''அவ்வப்பொழுது விசாரணைக்காக
இந்த அரசாங்கம் என்னை அழைப்பதே
எனக்கான பரிசுகளின் தொடக்கமாகும்.
இந்த நிலைமை இப்படியே
தொடர்ந்தால்

ஒரு நாள்
அரசாங்கம் என்னை அழைத்து
நெடுநாள் விருந்தினனாய்
நிச்சயம் வைக்கும்.

அதற்கும் மேலே
என்
பேனா அழுந்துகையில்
எழுத்தாளன் எவனுக்கும்
கிடைக்காத பரிசு

இந்திய மண்ணில்
எனக்கு நிச்சயம்...

அன்று நான் சொன்னது
அவளுக்குப் புரியவில்லை.

இன்று
அரசின் நள்ளிரவு
விருந்தை ஏற்றுப்
பகலில் வீடு திரும்பியபோது
எதிர்கொண்ட என் மகள்
இப்படி கேட்டாள் :

''அரசு...
பரிசு தர
ஆரம்பித்து விட்டதா?''

இப்பொழுது
என் சின்ன மகளுக்கும்
எல்லாம் புரிகிறது.

*பழமலை*

'' போங்க, வரன்,'' என்றேன்.
'' கையோட அழச்சிக்கிட்டு வரச்சொன்னார்—''
'' வரன்னுதான் சொல்றன்.''
உள்ளதைச் சொன்னார்கள் :
'' மறுத்தா, கைது பண்ண வேண்டியிருக்கும்—''

வாடகை டாக்சி, காந்தி சிலையில் திரும்பிக்
காவல் நிலையம் போய்நின்றது.
உட்காரச் சொன்னார்கள்.

நான், பதற்றம் தணிந்திருந்தேன்.
எதிர் பார்த்தது,
கண்முன்னால் நிகழ்ந்து கொண்டிருந்தது.
எதையும் எதிர் கொள்வதற்கு
இதயம் உறுதிமொழிந்தது.
என்றாலும்,
இதற்கு ஒருவன் போதாது.

தோழமை விழைந்து, விழித்துப் பார்க்கையில்,
எதிரே—
பாலு நின்றார் ரவி வந்து கொண்டிருந்தார்.
'' யாரோ ஞானசூரியாம், கெடய்க்கில—'' என்றார்கள்.
அடுத்த ஊர் சென்று திரும்பிய முரட்டு உந்திலிருந்து,
கஜேந்திரன் இறங்கினார்.

# இதயமும் தாகமும்

*பழமலை*

நள்ளிரவானாலும் செய்தி தெரிந்து,
வழக்குரைஞர்கள், நகர்மன்ற உறுப்பினர்கள்—என்று
நண்பர்கள் கூடிவிட்டார்கள்.
காவலர் ஒருவர்,
யாரையோ குறிப்பிட்டுச் சொல்லிக் கொண்டார் :
" நாம இவங்களல்லாம் தேடல—"

எதிர்வீட்டு டாக்டர் கூடவே வந்திருந்தார்.
இரவு கரைந்து, நிறத்தை இழக்கையில்,
யார்யாரோ வந்துவிட்டார்கள்.
பெரியவர் திருப்பாண்டியன், கருப்புச்சட்டையுடன்
ஒரு கூட்டமாக வந்து நின்றார்.
வந்து கொண்டிருப்பதாகச் சொன்னார்கள்,
மேலும், இன்னும், 'தேடப்படாதவர்கள்.'

' இதுக்கு இவ்வளவு பேர் இருக்காங்க—'
என்பதை எண்ணுகையில் புரிந்தது :
என்னுடைய இதயமும், தாகமும்,
எல்லோருடையதாகவும் இருப்பது.

அது, ஒரு விடுதலைக்காக
எதையும் எதிர்கொள்ள ஆயத்தமாக இருப்பது.

# 'பிரிவெண்டிவ்'வும் 'எஃப்பையாரு'ம்

வே. மு. பொதியவெற்பன்

நாடு போற போக்கப் பாத்து
நாகரீகக் கோமாளி
நாகரீகக் கோமாளி
பாடு ஒருபாட்டக் கேப்போம்
நாகரீகக் கோமாளி
நாகரீகக் கோமாளி

தந்தத்தானே தந்தத்தானே
தானேனானே னன்னன்னா
தானேனானே னானேனானே
தன்னன்னானே னன்னன்னா.

பூவாத் தலையா போட்டுப்பாத்து
புடிக்கிறான்யா போலீசு—ஆமா
புடிக்கிறான்யா போலீசு
சாவா வாழ்வா ரெண்டில் ஒண்ணு
சர்த்தான் பாப்போம் வாவா நீ! அட
சர்த்தான் பாப்போம் வாவா நீ

பிரதமரு பேரக் கேட்டாப்
பாட்டன் பேரச் சொல்றாரு-அவரு
பாட்டன் பேரச் சொல்றாரு-அவரப்
பிரதமரக் கொல்லச் சதி செஞ்சதா
'பிரிவெண்டிவ்ல புடிச்சான்யா
'பிரிவெண்டிவ்ல புடிச்சான்யா

எஃப்பையாரப் பொரட்டிப் பாத்தா
இன்னன்னமோ டமாஸு-ஆமா
இன்னன்னமோ டமாஸு-அட
எக்கச்சக்கமா ஜோக்கிருக்குது
வார்ரே வாவ்வாவ் சவாஸு-அர்ரே
வார்ரே வாவ் வாவ் சவாஸு!

ராஜீவ்காந்தி பேரச் சொல்லி
ராயல் சல்யூட் அடிநைனா-நீ
ராயல் சல்யூட் அடிநைனா
தேசத்துரோகி சமூகவிரோதி
பட்டியல்லேர்ந்து உட்டுர்வான்-அவென்
பட்டியல்லேர்ந்து உட்டுர்வான்!

முக்கியப்புள்ளி கைதானதா
மாலைமுரசில் படிச்சேன்யா-நம்ம
மாலைமுரசில் படிச்சேன்யா-அட
அப்றந்தாய்யா எனக்கே தெரிஞ்சுது
முக்கியபுள்ளி நானுன்னு-ஆமா
முக்கியபுள்ளி நானுன்னு.

அண்ணனைப் போய்த் தம்பியின்னு
ஆளமாத்திப் புடிச்சான்யா-அவென்
ஆளமாத்திப் புடிச்சான்யா
அத எதுத்துக கேட்டதுக்கு
'ஆர்ஒய்எல்'னு போட்டான்யா
'ஆர்ஒய்எல்'னு போட்டான்யா

ஜெயிலுக்குள்ள போகக்குள்ள
ஜேப்படிக்கான் போலீசு-நம்ம
ஜேப்படிக்கான் போலீசு-அத
ஜெயிலர் சொன்னார் அனுப்பறதா
சேதி ஏதுங் காங்கல்லே—அந்தச்
சேதி ஏதுங் காங்கல்லே.

“

வசந்தத்தின் இடிமுழக்கமான நக்சல்பாரி களின் தெலங்கானா ஆயுத எழுச்சி, ஸ்ரீகாகுளம் விவசாயிகள் போராட்டம் பற்றிய வீரம் செறிந்த செய்திகள் அளித்த உத்வேகத் தால் விட்டல் கத்தாராகப் பரிணமித்தார்.

”

# மக்களுக்காகப் பாடுகிறேன்...

## கத்தாருடன் ஒரு நேர்முகம்

ஒடுக்கப்பட்ட மக்களின் குரலாக ஒலிக்கும் கத்தாரின் போர்ப்பரணி நாட்டுப் புறப்பாடல்களோடு நடை பயில்கையில் புரட்சிகரச் செய்திகளைச் சுமந்தவண்ணம் விண்ணுயர்கிறது. துயரம் தோய்ந்த கிராமியப் பெண்ணின் நலிந்துபோன வாழ்வைப் பற்றி நினைவில் நீங்காப் பாட்டு ஒன்றைக் கத்தார் எழுதினார். அப்பாடல் அவர் தாய் லட்சுமி அம்மா வைப் பற்றித்தான். 1950களில் மேடக் மாவட்டத் தோப்புரான் கிராமத்தில் வளர்ந்த கத்தாரின் ஏழ்மை சூழ்ந்த வாழ்க்கை மிகவும் சோகத்திற்குரியது. அரசியல், சமுகமுரண்பாடுகளால் பின்னப் பட்ட அந்த வாழ்க்கைதான் விட்டல் என்ற கத்தாரைத் தந்தது.

கலை, ஒடுக்கப்படும் பெரும்பான்மை யோருக்காக வாழ வேண்டுமேயொழிய ஒடுக்கும் சிறுபான்மையோரோடு ஒண்டிக் கொள்ளக்கூடாது என்பது கத்தாரின் அழியாத நம்பிக்கை. உஸ்மேனியாப் பல்கலைக் கழகத்தில் பொறியியல் பயிலும்போது 'மாபூமி', 'தாசி' ஆகிய திரைப்படங்களின இயக்குநரான B. நர சிங்கராவால் நடத்தப்பட்ட கலை விரும் பிகள் சங்கத்தோடு அவர் கொண்டிருந்த நெருக்கமான உறவு சமூக ஏற்றத் தாழ்வு களைச் சாட நாட்டுப்புறக் கலைகளைத் தேர்வு செய்யக் கத்தாரை உந்தியது.

தெலங்கானா கிராமீயம் நாட்டுப் புறப் பாடல்களின் செழிப்பான பூமி. மனத்தை நெகிழ்த்தும் எதிரொலிகளை அப்பாடல்களில் விட்டல் கண்டார். அதில் இழையும் லயமும், ராகமும் இளம் பிராயத்திலேயே அவரின் கருத்தைக்

கவர்ந்து கவிதை எழுதத் தூண்டுகோலாயிற்று.

வசந்தத்தின் இடிமுழக்கமான நக்சல் பாரிகளின் தெலங்கானா ஆயுத எழுச்சி, ஸ்ரீகாகுளம் விவசாயிகள் போராட்டம் பற்றிய வீரம் செறிந்த செய்திகள் அளித்த உத்வேகத்தால் விட்டல், கத்தாராகப் பரிணமித்தார்.

'புர்ரகதா' (Burrakatha) என்ற தொன்மையான நாட்டுப்புறக் கலை வடிவத்தை உள்வாங்கித் தெருப் பாடகனாகப் புரட்சிகரச் செய்திகளை மக்கள் செவியில் அரங்கேற்றினார். அல்லூரி சீதாராமராஜுவைப்பற்றி முதன்முதலாக அவர் நாவில் தெறித்த ஒலி அலைகள் மக்களின் செவிப்பறைகளில் புதிய அதிர்வுகளைத் தொடக்கி வைத்தது.

'விரசம்' (புரட்சிகர எழுத்தாளர் சங்கம்) 1970களில் அமைக்கப்பட்டது. 1972 முதல் கத்தாரை தலைமையாகக் கொண்டு 'ஜனநாட்டிய மண்டலி' (JNM) என்ற பண்பாட்டு அமைப்பு புரட்சிகரச் செய்திகளை வீதி எங்கும் பறையறைந்தது. 1975இல் நெருக்கடிநிலைபிரகடனப் படுத்தும் வரை ஆந்திரம் முழுவதும் கத்தாரின் பாதங்கள் பயணித்தன. குறிப்பாக அவர் தெலங்கானவை மையப் படுத்தி இயங்கினார். 1977இல் பாராளு மன்றத்திலிருந்து காங்கிரஸ் துடைத் தெறியப்பட்ட பிறகு ஹைதராபாத்தில் வங்கி ஒன்றில் பணிபுரிந்து கொண்டே தன் கலைப்பணியைத் தொடர்ந்தார். மாநில அரசால் தொடுக்கப்பட்ட அடக்கு முறையினால் எழுத்தாளர்களும் மனித உரிமைக் காவலர்களும் புத்தி ஜீவிகளும் புரட்சியாளர்களும் சொல்லொண்ணா துயரத்திற்குள்ளாயினர். இச் சூழலில் 1985இல் கத்தாரும் ஜனநாட்டிய மண்டலியும் தலைமறைவு இயக்கத்திற்குத் தயாராயினர்.

கத்தார் ராம்நகர் சதி வழக்கில் தொடக்கத்திலேயே தொடர்பு படுத்தப் படாமல் வழக்கு நடந்து கொண்டிருக்கும் போது அதனோடு தொடர்புடையவராக ஜோடிக்கப்பட்டார். அவர் தலைமறைவானாலும் அதிர வைக்கும் அவரின் தலைமறைவு இயக்கம் அவர் பாடல்களுக்கு மகோன்னத வலிவைக் கொடுத்தது என்பது நிதர்சனம். அண்மையில் நடந்து முடிந்த தேர்தலில்கூட எல்லா அரசியல் கட்சிகளும் அவரது பாணியுடன் கூடிய இசையின் ராகத்தை பிரசாரத்திற்கு பயன்படுத்த வேண்டிய தவிர்க்க இயலா நிர்ப்பந்தத்திற்கு உள்ளாயின. கத்தார் அதற்கு எவ்விதத் தனி உரிமையும் கொண்டாடவில்லை. ஜனநாட்டிய மண்டலியின் பாடல்கள் அனைத்திற்கும் மக்களே பூரண சொந்தக்காரர்கள் என்பது கத்தாரின் உறுதிகுலையாத நிலைப்பாடு.

ஐந்து ஆண்டுகாலம் தலைமறைவானாலும் கத்தாரின் படிமங்களும் பிம்பங்களும் மக்கள் மத்தியில் இன்று விஸ்வரூபம் எடுத்துள்ளன. இதை இவ்வாண்டு பிப்ரவரி 20இல் நடந்த ஜனநாட்டிய மண்டலியின் 18வது ஆண்டு விழாவின் போது சுமார் 4 லட்சம் மக்கள் கூடி நிருபித்தனர். அன்று நிசாம் கல்லூரி மைதானத்தில் கத்தாரின் குரலால் காற்று கருவுற்றது, சிவக்கும் செவிப் பறையில் புதிய முகிழ்வுகள். கத்தார் போன்ற ஒரு சில பாடகர்களால்தான் அவ்வகையான உணர்வுகளை நம்மிடையே மீட்ட இயலும்.

அந்தக் கத்தாருடனான நேர்முகத்தில் சில :—

? : ஐந்து ஆண்டுகால தலைமறைவு வாழ்வுக்குப் பிறகு எது உங்களைப் பகிரங்கமான இயக்கச் செயல்பாடுகளுக்குத் தூண்டியது?

கத்தார் : நான் எப்பொழுதும் பகிரங்கமாகவே இருந்தேன். நேற்று வரை ஒரு கிராமத்திலேயோ, நான்கு சுவர்களுக்குள்ளேயோ, பாடிக் கொண்டிருந்தேன். இன்றோ ஒலிபெருக்கி, மின் விளக்குகளுடன் மேடையில்

தோன்றியிருக்கிறேன். சுரண்டும் சமூக அமைப்பைப் பற்றி, மக்கள் மீது தொடுக்கப்படும் வெறித்தன மான அடக்குமுறை பற்றியும் மோதல் என்ற பெயரில் நடத்தப் படும் கொலைகள் பற்றியும், மத்தியி லும் மாநிலத்திலும் ஆளும் அரசு களின் பொய் முகத்தின் அடையாளங் களையும் கூவி புரட்சியின் அவசியத் தைக் கூற நான் வந்திருக்கிறேன். எல்லாவற்றிற்கும் மேலாக நான் பாடும் உரிமையை யாரும் தடுக்க முடியாது என்பதை நிரூபிக்க வந்திருக்கிறேன்.

உங்களைப் போன்ற கலைஞர்களும் மக்களும் போராட்டத்திற்கு ஆயுதம் ஏன் ஏந்த வேண்டும்' என்று நீங்கள் கேட்கலாம். இது அரசு எங்கள் மேல் சுமத்தும் நிர்ப்பந்தம். ஆயுதத்தை ஆயுதத்தால்தான் சந்திக்க வேண்டும் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டிருக் கிறோம். முதலில் நிலச்சுவான்தார் கள்தான் உரிமம் பெற்ற ஆயுதங் களால் ஏழை மக்கள் மீது வன்முறை யைத் தொடுத்தார்கள். பிறகு ஆயுதம் ஏந்துவது தவிர்க்க இயலாத தாகியது.

**? :** ஓர் அபாயகரமான பண்பாடு நுகர் வோர் மீது தொலைக்காட்சி மூலம் திணிக்கப்படுகிறதே? அதை எதிர்க்க எப்படித் திட்டமிட்டிருக்கிறீர்கள் ?

**கத்தார் :** இதை ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று மக்களோடு நேரடித்தொடர்பு கொண்டு பிரசாரம் செய்துதான் முறி யடிக்க முடியும். ஜனநாட்டிய மண்ட லியின் உறுப்பினர்கள் இதைச் செய் வார்கள். ஆனால், இதை முறி யடிப்பது உடனடியாக முடியாத ஒன்று. ஒரு பத்தாண்டுக் கால மாகலாம்.

**? :** வீதி நாடகங்களைப் புறக்கணித்து, பாடல்களுக்கு மட்டுமே முக்கியத் துவம் வழங்குவது. ஜே. என். எம் என்று விமர்சிக்கப்படுகிறதே, இதைப் பற்றிய உங்கள் கருத்து என்ன ?

**கத்தார் :** நாங்கள் ஒருபோதும் வீதி நாடகங்களைப் புறக்கணிக்கவில்லை. உண்மையைக் கூறப்போனால் ஜே. என். எம். ஒரு வீதி நாடக அரங்கு. எங்கள் கலைஞர்கள் ஒரு மேஜை, பெட்ரோமாக்ஸ் விளக்குடன் சைக்கி ளில் சென்று நிகழ்ச்சிகளை நடத்து கிறார்கள். நாங்கள் வீதி நாடகங் களை அரங்கேற்றுகிறோம். குறிப் பாக, நாகார்ஜுன சாகரில் அணுமின் நிலையம் அமைத்தல். 59வது அரசி யல் சட்ட திருத்தம், மோதல் என்ற பெயரில் நடத்தப்படும் கொலைகள் மற்றும் தெலங்கானா மக்கள் மீதான அடக்குமுறை போன்றவற்றை எதிர் த்து வீதி நாடகங்கள் போடுகிறோம். ஜே.என்.எம்மின் மிகப்பெரிய வெற்றி எதுவென்றால் அவ் வீதி நாடகங் களில் பாடல்களையும், இசையையும் இணைத்ததுதான். இந்த நுட்பத்தை பாம்பாட்டிகளிடமிருந்து கற்றோம். நாங்கள் தழுவும் கலை வடிவங்கள் பார்வையாளர்களையும், போராட்டத் தின் தீவிரத்தையும் பொறுத்தது.

**? :** தெலங்கானாப் போராட்டம் பல கலை வடிவங்களைத் தந்தது. ஆனால் அதை தொடரும் நக்சல்பாரி இயக்கத்தால் புதிய கலைவடிவங்கள் பரிணமிக்கவில்லை என்ற பரவலான விமர்சனம் மீதான தங்கள் கருத்து என்ன ?

**கத்தார் :** ஸ்ரீகாகுளம் நக்சல்பாரி போரா ட்டங்களின் போது நாடகம், கோலச் சூடலு (Gollasuddalu) புர்ரகதா, (Burrakatha) ஒகுகதா (Oggukatha) பாடல்கள், ஓரங்க நாடகங்கள் போன்ற கலை வடிவங்கள் மூலம் புரட்சிகரச் செய்திகள் மக்களை சென்று அடைந்தன. இந்த அனை த்து வடிவங்களும் ஜே.என்.எம். மினால் வளர்க்கப்பட்டு வாழவைக்கப்

படுகிறது. கொள்கை வழி நின்று வாழும் எங்கள் நோக்கம் பணம் அல்ல. எந்தக் கலை வடிவத்தையும் வளர்ப்பது எங்களுக்குக் கடினமான தன்று. எந்த கலை வடிவம் மக்களுக்குச் சேவை செய்யாதோ அதை மக்களிடம் திணிப்பதில் எவ்வித நியாயமும் கிடையாது.

?: அரைநிலவுடைமைச் சூழலில் தனி மனிதனைப் பிரதானப் படுத்துவதில் சில ஆபத்துகள் உள்ளன. இது சட்டாம்பிள்ளைத் தனத்திற்கே (authoritarianism) இட்டுச் செல்லும். இது உங்கள் விஷயத்தில் நடந்துள்ளதாக நம்பப்படுவது பற்றி...

கத்தார்: நான் தொன்மையை அல்லாமல் தொன்மை வாய்ந்த மக்களையே சார்ந்து இருக்கிறேன். மக்களே தொன்மையானவர்கள். அவர்களிடமிருந்துதான் பல கலைவடிவங்களை கற்று அறிகிறேன். நான் செய்வதெல்லாம் அவற்றை புரட்சியுடன் இணைப்பதுதான். நகரத்தில் உள்ள மக்கள்கூட என் நிகழ்ச்சியைக் காணத் திரள்கிறார்கள் எனில், நான் ஜே. என்.எம். என்ற புரட்சிப்பண்பாட்டு அமைப்பில் இயங்குவதனால் தான். நாளையே நான் ஜே.என்.எம்-மோடு கொண்ட உறவைத் துண்டித்துக் கொண்டால் சில ஆயிரம் பேர் மட்டும் தான் என் நிகழ்ச்சிகளைக் காண வருவார்கள். அந்த வரலாற்று நாயகர்களான மக்களிடமிருந்து அந்நியப்படும் எவரும் வெகுவிரைவில் அவர்கள் மனதிலிருந்து தூக்கி எறியப்பட்டு மறைந்து போவார்கள்.

?: இந்திய அரசியலில் வகுப்புவாதம் தலைவிரித்து ஆடுகிறதே! இதை எதிர்க்க உங்கள் திட்டம் என்ன?

கத்தார்: இது கூரிய உணர்வுபூர்வமான பிரச்சினை. இது இரண்டு அணிகளால் எதிர் கொள்ளப்பட வேண்டியது. ஒரு வகை, வீதி நாடகங்கள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் மூலம் வகுப்பு வாதத்தின் அபாயங்களை மக்களிடம் எடுத்துச் செல்லுதல்: அடுத்தது, இதற்கு எதிராக இளைஞர்களைத்திரட்டுவது. அவர்களிடம் சொல்ல வேண்டும் வகுப்புவாதம் ஆளும் வர்க்கத்தால் அவர்களின் நலன்களின் நோக்கில் ஊக்கப்படுத்தப்படுகிறது என்பதை. புரட்சிகர இயக்கங்கள் வலுப்பெற்ற பகுதிகளில் வகுப்புவாதத்தை நீங்கள் காண இயலாது. ஜே. என்.எம். மிகப் பெரிய அளவில் இந்த அபாயத்தை எதிர்த்துப் போராட வீதி நாடகங்களை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

தமிழாக்கம்: **கோமகன்**

(Express Weekend இல் I sing for the people' எனும் பெயரில் வெளியான கத்தாருடன் நேர்முகத்தின் தமிழாக்கமே இது. பேட்டியாளர்கள் ஜெகன் மற்றும் ஜி.எஸ்.வி.

## முரண்

முற்றத்தின் மூலையில்
கையகலச் செம்பருத்தி
கொல்லையில் கயிற்றில்
மையிட்ட கன்றுக்குட்டி

பச்சைப்புல் நுனியில்
பளிச்சிடும் பனித்துளி
நிழல் பரப்பி நின்று
அரவணைக்கும் பூமரம்

மறைந்திருந்து பாடும்
மாமரத்துப் பூங்குயில்
மழை நின்ற பின்னர்
கம்பியில் வெள்ளிச்சரம்

இவற்றோடு பேச
இப்போது நேரமில்லை
இவைகளுக்குப் புரியாது
வயிற்றின பாஷை.

—**உஷா எஸ். நாயர்**

# தமிழன் மறந்த கலைஞன்

—மாலன்

"அச்சு, தபால்-தந்தி, ரெயில், விமானம், போட்டோ, ப்ளாக் செய்தல், கல்வி, அரசியல் சூழ்நிலை, எல்லாம் சேர்ந்து பத்திரிகைத் தொழிலை இன்று வெகுதூரம் வளர்த்திருக்கின்றன. வளர்த்தனவோ, அமுக்கினவோ, வெகுதூரம் வீங்கச் செய்திருக்கின்றன. பலவிதமான பத்திரிகைகள் தோன்றியிருக்கின்றன. பலதரமான நிலைகளில் நடக்கின்றன. செய்திப் பத்திரிகைகள், இலக்கியப் பத்திரிகைகள், பொழுது போக்கான பத்திரிகைகள், தொழில் பத்திரிகைகள், அபிப்ராய விமர்சனப் பத்திரிகைகள், விளம்பரப் பத்திரிகைகள், பிரச்சார இயக்கப் பத்திரிகைகள், 'ப்ளாக்மெயில்' பத்திரிகைகள்—இப்படி எல்லாம் எத்தனையோ ரகமான, தரமான பத்திரிகைகள் நடக்கின்றன, இப்படிப்பட்ட எண்ணற்ற வகையான பத்திரிகைகளில் எது நல்லது, எதுகெட்டது என்று எப்படிச் சொல்லமுடியும்?

பத்திரிகைத் தொழில் முறையிலும் நிலையிலுமோ பிரமாதமான—பிரம்மாண்டமான— மாறுதல்கள் ஏற்பட்டுவிட்டன, ஒரு புறம், குடிசைத் தொழில் மாதிரி பல பத்திரிகைகள் நடக்கின்றன. மறுபுறம் ராட்சச ஆலைத்தொழில் மாதிரி பல பத்திரிகைகள் நடக்கின்றன. குடிசைத் தொழில் ரகப் பத்திரிகைகளில் அசோகாப் பாக்கையும் நஞ்சன்கூடு பல்பொடியையும் போல் பேரளவில் வளர்ந்து விட்டவை உண்டு. பெருந்தொழிலாய் தொடங்கி நடக்கும் பத்திரிகைகளில் உள்ளுக்குள்ளே உளுத்துப்போய் ஆட்டம் எடுத்தவை உண்டு......

பத்திரிகை நடத்தக் காகிதம்வேண்டும் என்பது மற்றவர்கள் கருத்து. காகிதம் விற்கப் பத்திரிகை வேண்டும் என்பது பெரிய முதலாளி கருத்து. வெள்ளைக் காகிதமாக நியூஸ்பிரிண்டை ஆயிரமாயிரம் டன் விகிதம் நாள்தோறும் தொடர்ச்சியாக வாங்கி விற்க முடியாது. அந்த காகிதத்தை வாங்கி, அதிலே கொஞ்சம் மசியைத் தடவிக் கறுப்பாக்கி, ஊருக்குள்ளே, நாட்டுக்குள்ளே, நாலு திசையிலும் விட்டால் ஜனங்கள் 'எனக்கு உனக்கு' என்று அள்ளிக் கொண்டு போகிறார்கள். இந்த வியாபாரத்தை நாள்தவறாமல் முடிந்தால் காலையிலும் மாலையிலும் ஒரே சீராக, ஏறி இறங்காதபடி நிர்ப்பயமாக நடத்தலாம். அசுர அச்சுக் கூடமும் 'எழுத்துக் கூலி'களான ஆசிரியர்களும் இதற்குத் தேவையான 'அவசியத் தீமைகள்'. இவ்வளவுதான் விஷயம். மிகப்பெரிய பத்திரிகைகளின் இன்றைய நிலை—மர்மம் எல்லாம் இதுவே.

அந்தப் பத்திரிகைகளில் அரசியல், கலை, சமூக, இலக்கிய விஞ்ஞான, பொருளாதார சமய விஷயங்களும், அபிப்ராயங்களும் வருவது —விறுவிறுப்பாகக் கூட வருவது—இன்ஸிடெண்டல் சங்கதி. அதாவது, அகஸ்மாத்தாக வந்து ஒட்டிக் கொண்ட அம்சம், சரித்திர பூர்வீகம், காலப்போக்கு, அரசியல் பேரம், வியாபாரத் தேவை கூடிய ஆட்கட்டுப்பாடு இவையெல்லாம் அதற்குக் காரணங்கள் ஆகின்றன.

குடிசைத் தொழில் மாதிரி பத்திரிகைகள் நடத்த வருகிறவர்கள் எழுத்துப் பலமும், தெளிவான அச்சுமே தங்கள் உயிர்நாடி என்று கொள்ளவேண்டும். சிறு முதலை வைத்துக் கொண்டு ஆரம்பித்து நடத்தக்கூடிய பத்திரிகையே குடிசைத் தொழில் போன்றது. இந்த மாதிரிப் பத்திரிகைகள் நிச்சயம் அபிப்ராய சுதந்திரத்தைக் காப்பாற்ற முடியும். என்னைப் போன்ற எழுத்தாளர்களின் ஊன்றுகோலாக இருக்க முடியும். எழுதுகிற ஒவ்வொருவருடைய தனித்தன்மையையும் வளர்க்க முடியும் புதுப் புது எழுத்தாளர்களைக் கண்டுபிடிக்க முடியும். புதுமையான எழுத்துப் பரிட்சைகளுக்கு உரிய சூழ்நிலை ஏற்படுத்த முடியும்.

இதற்காக இவை லாபமே அடையக் கூடாது என்றோ இவற்றின் பிரதி

விற்பனை அதிகரிக்கவே கூடாது என்றோ நான் சொல்லவில்லை. குடிசைத்தொழில் பொருளும் வியாபாரமாகத்தான் வேண்டும் ஆனால் அது மனித சுதந்திரத்திற்கு ஊறு செய்யாத வியாபாரம். மனிதனை ஒரு ஜீவனாக எண்ணாமல் பெரிய இயந்திரம் ஒன்றின் உறுப்பாகச் செய்யும் பெருந் தொழில் போலல்லாது மனிதத் தன்மை யைப் பாதுகாப்பது குடிசைத் தொழில்.

எது எழுத்தாளர்களின் உரிமையைக் காப்பாற்றுகிறதோ, எழுத்துக் கலையைக் கட்டுத்திட்டமின்றி வளர்க்கிறதோ மக்களி டம், அறிவைப் பரப்புகிறதோ, பண் பாட்டை உயர்த்துகிறதோ தூயமுறையில் உற்சாகம் கொடுக்கிறதோ, எது சமூகத் திற்கு நல்லது செய்யாவிட்டாலும் கேடு செய்யாதிருக்கிறதோ அதுவே நல்ல பத்திரிகை. குடிசைத் தொழில் ரீதியான பத்திரிகையே நல்ல பத்திரிகையாக இருக்க முடியும்"[1]

☐ ☐ ☐

இதைச் சொன்னவர் தி.ஜ.ர. (தி.ஜ. ரங்கநாதன்). அவர் குறிப்பிடும் 'இன்று' 1958 அல்லது 1959. சரஸ்வதியின் மூன்றாம் ஆண்டு மலரில் எழுதப்பட்ட கட்டுரை இது. இருபத்திஐந்து வருடங் களுக்குப் பின்னரும், குடிசைத தொழில், அசுரத் தொழில் பிளவு மங்கி விடவில்லை! தடவிய மசி காகிதம் விற்கும் பெரிய முதலாளிகளும் எழுத்துக்கூலி ஆசிரியர் களும் அருகி விடவில்லை !

இந்த உண்மை தூக்கி வாரிப் போடு கிறது. இருபத்தைந்து வருடங்களாக ஒரு சமூகம் தேங்கிக் கிடக்கிற நிஜம் வருத்தம் தருகிறது. இந்த தேசத்தில் நிகழ்கின்ற விஞ்ஞான தொழில் நுட்ப மாற்றங்கள் இங்கு வாழ்கிறவனுக்கு மேன்மையை அல்ல, சுரண்டலையே நிச்சயப் படுத்துகிறது என்கிற சத்தியம் சுடுகிறது.

இந்த சத்தியம்தான் தி.ஜ.ர. எழுத் தின் சாரம். மேலே தந்துள்ள மேற்கோள் அவர் எழுத்திற்கு ஒரு சோற்றுப் பதம். கனமான ஆனால் தெளிந்த சிந்தனை. எளிய ஆனால் வலுவுள்ள சொல்லாட்சி, தர்க்க பூர்வமான அணுகல்.

கட்டுரைகளில் மட்டுமல்ல சிறுகதை களில் கூட இந்த தர்க்க ரீதியைக் காண முடியும். ''தார்கிக அமைப்பை என் கதை களில் பெரும்பாலனவை பெற்றிருக்கு மானால் ஆச்சரியமில்லை. வாழ்க்கை தர்க்க நியாயத்திற்குக் கட்டுப்படுவ தில்லை. தர்க்க நியாயமோ எப்படியோ வாழ்க்கை முழுவதும் வியாபித்து இருக் கிறது''[2]. தி.ஜ.ர.வின் கதைகள் கணித மேதைகளின் சூத்திரங்களைப் போன்று அவரே சொல்கிற மாதிரி 'யூக்லிட்டின் க்ஷேத்ர கணித ஆராய்ச்சி'' போல படிப் படியாக ஒரு ஒழுங்கில் வளர்ந்துகொண்டு செல்பவைதான். ஆனால் வெறும் தத்துவம் சார்ந்தவை அல்ல. வாழ்க்கை யையும், ஜீவனையும் உள்ளடக்கியவை. 'எல்லாம் மானுஷ்யமான கதைகள்.' சேற்றைச் சந்தனமாகப் பம்மாத்துப் பண்ணும் கிராமப் பூசாரியின் சூது, உடல் வற்றிக காலை முதல் பட்டினியாய் கிடக் கும் ரிக்ஷாக்காரன், யாசகம் கேட்பதைப் போல 'டிராம்' சார்ச் கொடு போதும், சென்ட்ரல் ஸ்டேஷனில் கொண்டு உட் றேன்.' என்று தனக்குப் பிழைப்பிற்காகக் கெஞ்சும் ரிக்ஷாக்காரன், இரக்கம் மேலிட்டு 'பிச்சை'யாக காசு அளிக்கப் படும்போது வெகுண்டு எழும் ரோஷம், இவை தி.ஜ.ர.விற்கு எழுதும் பொருளா கின்றன.

இவை ஏதோ தற்செயல் அல்ல, தெளிவான பிரக்ஞையும் உணர்வும் கொண்டு எழுதப்பட்டவை இவை. ''வானத்தில் பறக்க மாட்டேன் என்று நான் சொல்ல வில்லை. விமானம் வேண்டும். அல்லது இறக்கை முளைக்க வேண்டும். அப்போதுதான் நான் வானத் தில் பறப்பேன். ஆதாரம் இல்லாமல் ஜாலம் செய்ய நான் துணிய மாட்டேன். எனக்கு விருப்பமும் இல்லை. இறக்கை முளைக்காது என்பது நிச்சயம். விமானம் இப்போது கையில் இல்லை கிடைத்ததும் உங்களுக்குத் தெரிவிக்கிறேன். அதுவரை பூலோகக் கதைகளையே என்னிடம் எதிர்

பாருங்கள். 'வானத்து'க் கதைகளை எதிர்பார்த்துப் பயன் இல்லை. நமஸ்காரம்''[3].

கற்பனைக் கதைகள் எழுதுவது ஒரு ஃபாஷனாகவும் புத்திசாலித்தனமாகவும் கருதப்பட்ட ஒரு காலத்தில் இந்த 'முட்டாள்தனமான' காரியத்தைச் செய்து கொண்டிருந்தார், தி.ஜ.ர, என்கிற ஆளுமைகது இது இயல்பே. ஜனங்கள் யோசிப்பதற்கு எழுதி கொண்டிருந்தவர் அவர். சந்தோஷப்படுத்த அல்ல. பொது மக்களின் 'சுரணையற்ற' தன்மையைக் கண்டு கொண்டபோது கண்டிக்கத் தவறியதும் இல்லை. ''அரசியல்வாதிகளைக் கேளுங்கள்: ஆசிரியர்களை வினவுங்கள்; சினிமாப்பட நிபுணர்களை உசாவுங்கள். ஸ்ரீமான் பொதுஜனம் 'அசடோ இல்லையோ; சமர்த்தில்லை' என்று அவர்கள் எல்லோரும் நிச்சயமாய் மதிப்பது தெரியும் நானும்தான் கேட்கிறேன். ஸ்ரீமான் பொதுஜனம் சமர்த்தாய் இருந்தால் மேற்படி கனவான்களின் திருவிளையாடல்களுக்கெல்லாம்தான் எப்படி இடமிருக்க முடியும்?''[4].

ஸ்ரீமான் பொதுஜனத்தைக் கோபித்து கொள்கிறவர், பெரிய மனிதர்களிடம் எவ்விதம் மோதிக்கொள்ளாமல் இருந்திருக்க முடியும்? ''ராஜாஜியின் புத்தகத்தின் மூலம், ஸயின்ஸைத தமிழில் எழுத முடியும் என்பது நிச்சயமாய் நிரூபணமாகி விட்டது. ஆனால் ஸயின்ஸைத் தமிழில் படித்துப் புரிந்து கொள்ள முடியும் என்பது மாத்திரம்தான் அந்தப் புத்தகத்தால் நிச்சயப்படவில்லை''[5] என்று எழுதியவர் தி.ஜ.ர.

இந்த வரிகளைப் படிக்கும் போது தி.ஜ.ர. தமிழின் வளர்ச்சிக்கும், நவீனப் படுத்தலுக்கும், விஞ்ஞான உணர்விற்கும் எதிரானவர் போல் தோன்றக்கூடும். ஆனால் உண்மை மாறானது. புதுப்பதங்கள் உற்பத்தி என்ற பெயரில் நடந்த மூடத்தனங்களுக்கு அவர் ஒப்பவில்லை. தமிழைத் தனிப்படுத்துவது தமிழனைத் தனிமைப்படுத்துவதாகும் என்று எண்ணினார். எளிய தமிழை விரும்பினார். ஆனால் கொச்சையை அனுமதிக்க வில்லை. தமிழ் வெறும் கூச்சலால் வளர முடியாது. மொழியும் கலையும் வாழ்வில் வேருன்றியவை, வாழ்வோடு வளர்பவை என்று நம்பினார், தமிழ் வளர வேண்டுமானால் தமிழன் வளர வேண்டும் என்று நம்பினார்.

தமிழன் இந்தக் கலைஞனை இன்று மறந்து போனான்.

இது குறித்து யாரும் புலம்ப வேண்டியதில்லை. புகழ் என்பது தற்காலிகமானது. எனவே புகழுக்கு எழுதுவதைக் காட்டிலும் சத்தியத்தை எழுதுவது முக்கியம் என்பதுதான் தி.ஜ.ர.விடம் ஒருவன் முதலில் கற்கவேண்டிய விஷயம்.

தி.ஜ.ர. மணிக்கொடியில் எழுதினாரா என்று தெரியவில்லை. அவர் ஹனுமானிலும், சுதந்திரச் சங்கிலும், ஊழியனிலும், சக்தியிலும், சரஸ்வதியிலும் எழுதினார். மணிக்கொடியின் எதிர் முகாம் என்று நம்பப்பட்ட கலைமகளில் கூட எழுதினார். மணிக்கொடியில் எழுதவில்லை. ஆனால் அதுவல்ல முக்கியம். மணிக்கொடி என்பது எழுத்திலும் கருத்திலும் புதுமை, எளிமை, உண்மை, துணிச்சல் இவற்றின் ஒரு குறியீடே அன்றி, ஒரு பத்திரிகையின் பெயர் மாத்திரம் அல்ல.

☐ ☐ ☐

1. ''நல்லபத்திரிகை'' — சரஸ்வதி மூன்றாம் ஆண்டு.
2,3 எப்படி எழுதினேன் — தி.ஜ.ர. (சக்திமலர்)
4. 'ஸ்ரீமான் பொதுஜனம்' ஹனுமான்
5. 'புதுப்பதங்கள் உற்பத்தி'— ஹனுமான்.

(எறத்தாழ ஆறாண்டுகளுக்கு முன் மாலனே எமது 'முனைவன்' மணிக்கொடி பொன்விழா மலருக்கென அனுப்பப் பட்டது. திரு. மாலனின் இக் கட்டுரை. இன்றைக்கும் இதன் பொருத்தப்பாடு கருதி திரு. மாலனின் இசைவுடனேயே இது வெளியிடப்படுகின்றது. ஆ-ர்)

# தொற்று நோய்

ஜெனகப்ரியா

என்னை மட்டும் எனக்குத் தெரிகிற இருள். வீட்டிற்குள் விளக்கு அணைந்து போயிருந்தது. என்னைத் தவிர்த்து மற்ற குடும்ப உறுப்பினர்கள் வீட்டினுள்ளே. வெளியே இருப்பது எனக்கு உவப்பாயிருக்கிறது. விலகி இருக்கிற தேவை வளர்ந்து கொண்டிருக்கிறது. பழகிய பாதையன்னியில் நடையிடக் கால்கள் தயங்குகின்றன. இருள் பலமானதுதான்.

'இருளைக் கிழித்தது ஓசை' என்று படித்திருக்கிறேன். இங்கோ எதிர்மறை. குழந்தையின் அழுகை பலவீனமாக, ஆனால் இருள் இறுகிற்று. இதயத்தில் விழுகிறது ஒரு சுத்தியல்.

குழந்தையின் உடம்பை அடிக்கடி நான் தொட்டுப் பார்க்கவில்லை என்பது மனைவியின் குறை. சபித்தல் முன்று நாட்களாய் தொடங்கியிருந்தது. குழந்தையிடம் எனக்கு அன்பில்லை என்று நான் உரக்கப் பிரகடனம் செய்தால் மனைவி மகிழ்வதாகச் சொல்கிறாள். இதை அவள் சொல்கிறாள் என்பது முக்யம்.

எனக்கும் அவளுக்குமிடையில் சில சமயங்களில் உண்மை குற்றுயிராய் வதைபடும். மனம் வலிக்கிறது என்பது எனக்குப் போதாத தண்டனை எனக்கருதி பெளதீக விளைவுகளுக்காய் காத்திருப்பாள். அந்தக் காத்திருத்தல்தான் எனக்கு ஆத்திரத்தைக் கிளப்பி என்னை நிர்வாணமாக்கக் காத்திருந்தது.

ஒருநாள் பத்திரிகை வாசித்துவிட்டு அருகிலிருந்தவரிடம் சொன்னேன் மனிதர்கள் அவமதிக்கப்படுகிறார்கள் என்று. இல்லை அவர்கள் கடமையைத் தான் செய்கிறார்கள் என்றார் அவர். கண்ணாடித் துகள்களின்மீது உதைத்துத் தள்ளுவதும் நன்மைதான். ஒரேமுறையாய் கொலை செய்வதைவிட இது சாலவும் சிறந்தது; ஏனெனில் அவர்கள் மனிதர்கள்பால் அன்பு காட்டியவர்கள் என்று அவர் விளக்கியது எனக்கு ஞாபகமாயிற்று இப்போது.

"நேற்றே நான் சொன்னபடி டாக்டரிடம் போயிருந்தால் இப்படி ஆகியிருக்காது. உங்கள் கவனக்குறைவால்தான் எல்லாம். இனி என்னவெல்லாம் ஆகுமோ" என மனைவி புலம்புகிறாள்.

அவளுக்கு குழந்தையின் மீது மிகவும் அன்பு இருப்பதாக நான் ஏற்றுக் கொள்கிறேன். கடந்த மூன்று நாட்களாக இந்தக் குழந்தை அவளை மிகுந்த தொல்லைக்கு உள்ளாக்கியிருக்கிறது. அவளது சேலையில் ரவிக்கையின் மார்பில் வாந்தி எடுத்திருக்கிறது. பலமுறை மலம் நீராய் கரைந்து அவள் மடியில் பீச்சியிருக்கிறது.

துப்பாக்கிகள் இப்போது ஓசையின்றியே வெடிக்கின்றன, கட்சிக் கொடிகள் மட்டுமே சப்தமாய்ப் பறக்கின்றன. மனித நடமாட்டம் குறைந்து கொண்டே வருகிறது. நாகசாகியும் ஹிரோஷிமாவும் ஒவ்வொரு வீட்டிலும். வீட்டின் பூகோளப் படம் காணாமற்போய் பல ஆண்டுகள் ஓடிவிட்டன.

ஊதற்காற்று. மழைவருவதாகவும் கூட இருக்கலாம். நான் உள்ளே படுக்கலாம்; ஆனால் உறங்குவதற்கு கொஞ்சம் அமைதியும் எனக்கு வேண்டும். உறக்கம் மிக நல்லது. பகலிலும் உறங்கலாம் பலன் ஒன்றுதான். உள்ளூர் மருத்துவர் சொல்லியிருக்கிறார்.

கப்பல்களில் மனிதர்கள் போவதாகவும் கடலினுள் திமிங்கலங்கள் வாழ்வதாகவும் பள்ளிக் கூடத்தில் சொல்லிக் கொடுக்கிறார்கள். காந்தித் தாத்தாவையும் பிள்ளைகள் இப்படித்தான் படிக்கிறார்கள். இந்தியா மிகப்பெரும் தேசம், பாகிஸ்தான் பிரிந்து போய்விட்டாலும் கூட.

நீண்ட நாட்களாகவே வீட்டை இருளும் ஒருவாரமாக இந்தப் பிள்ளையைச் சுரமும் மூடிக் கொள்கின்றன. இரண்டும் விலகினால் நல்லதுதான். தங்கம் நாளுக்குநாள் விலை ஏறிக் கொண்டே போகிறதாக உறவினர் ஒருவரிடம் ஆயாசப்பட்டார் என் தகப்பனார். கற்பகம் சமஞ்சு எட்டு வருஷமாச்சு என்றாள் அம்மா,

ஹார்லிக்ஸ் வாங்கித்தந்தால் குழந்தைக்கு எளிதில் ஜீரணமாகும் என்று பக்கத்துவீட்டுப் படித்தபையன் சொன்னதாக மனைவியோடு அம்மாவும் அடிக்கடி சொல்கிறாள். தொட்டில் கயிறு மரக் கம்பில் உராய்ந்து உராய்ந்து உராய்ந்து எனக்கு நெஞ்சில் புண். ரத்தச் சிவப்பாய் மேல் சட்டை குழந்தைக்கு.

பக்கத்து வீட்டிலிருந்து குழந்தைக்குப் பாட்டியானவள் வந்து தொட்டிலைத் தூக்கி, குழந்தையைக் கைக்கு மாற்றினாள். அழுகை நிற்கவில்லை. 'புள்ளைக்கி ஒரம் விழுந்திருச்சு' மாமனோட வேட்டியிருந்தாக் கொண்டாங்க போட்டுக் குலுக்கணும்'' என்றாள்.

நான் ஒவ்வொரு நாளும் நிம்மதியாக தூங்குவதாக வந்திருந்தவர்களிடம் மனைவி குறைப்பட்டுக் கொண்டாள். ஒப்புக்காகவாவது விழித்துக் கொண்டிருக்கலாம் என்றாள்.

ஆண்கள் பகலில் மட்டும் 'வெளியே' போகிற ஓடைப் புளிய மரத்தில் அந்த நாயுடுப் பையன் தூக்குப் போட்டுத் தொங்கியது எப்படி இரவு முடிவதற்குள் ஊர்முழுக்கத் தெரிந்தது என நான் வியந்து கொண்டிருக்க கிழவா ஒருத்தர் சொன்னவாசகம்: காற்றுக்கும் கல்லுக்கும் கூடக் கண் உண்டு.

தகப்பனார் முன்கோபி என்றாலும் அழுதது உண்மையாகத்தானிருக்கும் என நிறையப்பேர் முடிவு கட்டியது வீட்டுக்காரர்களுக்கு சந்தோஷம் தந்தது.

இப்போது குழந்தை கீழே படுத்திருந்தது; நேற்றைய அதே அளவு சத்தத்துடன் தாலாட்டுப் பாடினாள் பாட்டி:

மாமன் அடிச்சானோ
மல்லிகைப்பூச் செண்டாலே
மாமி அடிச்சாளோ
மகிளம்பூச் செண்டாலே
அடிச்சாரைச் சொல்லியழு
ஆக்கினைகள் செய்திடுவோம்

இன்று பாடியது வேறாக இருந்தது. இளமையில் அவளுக்குக் குரல் இதைவிட வளமாக இருந்திருக்கும். உடம்பு கூட இப்போதும் செழிப்பாகத்தான் இருக்கிறது. பிராயத்தில் எந்த டெய்லர் இவளுக்கு ரவிக்கை தைத்திருப்பான்? உள்பாடி கடையில் வாங்கியிருப்பாளா? அளவு கொடுத்துத் தைத்திருப்பாளோ...?

ஈரானில் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரை தூக்கில் போட்டுவிட்டார்கள்! ஒரு உயிர் உடலிலிருந்து பிரிவதில் எவ்வளவு காரியங்கள் நடப்பதாக் நினைக்கிறார்கள்! என்று ஒருநாள் பெருமாள் வருத்தப்பட்டார். பெருமாளின் தகப்பனார் தனது நாற்பத்திரெண்டாவது வயதில் க்ஷயரோகத்தால் இறந்து போகும் போது பெருமாள் விளையாடப் போயிருந்தாராம். தனது தாத்தா அழுதது அப்போது தனக்கு பயமாக இருந்தது என்றார்.

முன்பு சிலியில் அலெண்டேயைக் கொலை செய்தார்கள். இந்தோனேஷியா

வில் பல ஆயிரம் கம்யூனிஸ்ட்களை கொலை செய்தார்கள். யார் அழுதது? அழுவது கோழைத்தனமென்றா? எனக் கேட்டார். எனக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை.

மனைவி கண்ணீர் வடித்துக்கொண்டிருந்தாள். பெருங்காயம் உரசிக் கொடுத்தால் சுக்கைச் சுட்டுத் தேனில் குழைத்துக் கொடுத்தால் குழந்தை தூங்கும் என்று பாட்டி சொன்னபடிக்கும் செய்து பார்த்திருந்ததும் அதன் பிறகும் சரியாகவில்லை என்பதும் மனைவியின் அழுகை நின்ற பிறகு தெரியவந்தது.

மூன்று மாதமாக கிரைப்வாட்டர் வாங்கித்தராத புருஷன் செத்தாலும் நான் கவலைப்படப் போவதில்லை என்று மனைவி சொன்னதைக் கேட்ட பாட்டிக்கு தன் இளம்பிராயம் ஒரு 'ப்ளாஷ்பேக்' காட்சியாக விரிந்ததாம்.

அவளுக்குக் கல்யாணம் ஆனபுதிதில் சிலம்பாட்டம் ஆடும்போது திருவிழாக் கூட்டத்தில் எந்தப் பெண்ணின் கண் பட்டதோ தெரியவில்லை. தோளில் வலி கண்டு கணவர் துடிக்க தவிடு வறுத்து ஒத்தடம் கொடுத்தபோது அந்த தோளின் வாளிப்பைப் பார்த்து தன் கண்ணே பட்டு விடுமெனப் பயந்து சூடம் கொளுத்தி திருஷ்டி கழித்தாள். எந்தத் திருவிழா என்று இனம் காட்ட *''பறையங்களுக்கும் நாய்க்கமாருக்கும் சண்டைவந்து போலீசு வந்து சுத்திச் சுத்தி எல்லாத்தையும் அடிச்சான்ல...அந்த வருஷம்'' என்றாள்.*

குழந்தையின் உடம்பு எள்ளாய்ப் பொரிந்தது. கண்கள் மூடியிருந்தன. தலையைத் தூக்கிக் கைகளைத் தூக்கி ஏதோ முனகிற்று,

பெருங்கூட்டம் கலைந்து ஓடிற்று காக்கிச் சட்டை போட்டவர்களும் பயந்து கிடந்தார்கள். எப்போதாவது இப்படியும் நடந்து கொண்டுதானிருக்கிறது.

குழந்தை பக்கவாட்டில் இரண்டு முறை அசைந்தது. அழுகையின் ஒலி முழு வீச்சில் வெளிவர முடியாமல் கர்...கர்... என்று இன்னொரு ஓசை கேட்டது. சப்தம் நின்றுவிட்டது. மெல்லக் கண்களைத் திறந்து பார்த்தது, ஒருமுறை புரண்டு குப்புறவிழப் பார்த்தது இயலாமல் முன்பிருந்த நிலைக்கே திரும்பியது.

வீட்டுக்கு எதிர்த்த கோவிலில் பாரதம் படித்தார்கள். வியாக்யானம் செய்தவர் நாவன்மை மிக்கவர். குறைந்தது நான்கு தடவைகளாவது எவர்சில்வர் கூஜாவிலிருந்து டம்ளர் நிறைய பால் ஊற்றிக் கொடுத்தார்கள். பட்டு அங்கவஸ்திரத்தில் வாயைத் துடைத்துக் கொள்ளாமல் தனியே ஒரு துண்டு வைத்திருந்தார்.

*தருமர் மிகவும் பொறுமையாக இருந்தது பிற்கால மனிதர்களுக்கு எடுத்துக்காட்டு என்று ஒருநாள் சொன்னார். குருக்ஷேத்திரத்தில் தன் எதிரே தன் குருநாதரும் ஒன்றுவிட்ட சகோதர்களும் பந்துமித்ரர்களும் நிற்கக் கண்டு பார்த்தீபன் பகைமுகம் இழந்து சோர்ந்து விட்டபோது, பார்த்தசாரதி அவனை நோக்கி''பார்த்தா, தர்மம் வெல்வதற்காக நீ அதர்மத்தை அழிக்கிறாயே அந்நியில் உன் உறவினரை அல்ல'' என்று திடப் படுத்தி அஸ்திரம் தொடுக்கச் செய்தார் என்றார்.*

எனக்கு உடம்பு நாறிற்று. முகத்திலும் உச்சித் தலையிலும்கூட மலம். என் சுவாசப் பையிலிருந்து ஊதுவத்தியின் நறுமணம் வந்து கொண்டிருந்தது.

சிந்து தேசாதிபதி ஜெயத்ரதன் அபிமன்யுவைக் கொன்றது அதர்மயுத்தத்தினால் தான் என துரோணாச்சாரிக்கும் தெரிந்துதான் இருந்தது என்றார் பாகவதர்.

மனைவி வெளியே போயிருந்தாள். வீட்டில் யாருமில்லை. நானும் குழந்தையும் பாரதம் கேட்டபடி மெல்லக்கை நடுங்க குழந்தையின் அருகே சென்று நாசித் துவாரங்கள் இரண்டையும் ஒன்று சேரப் பற்றி இறுக்கத் தொடங்கினேன். □

# நாட்குறிப்புப் பதிவுகள்

*கோபிகிருஷ்ணன்*

1—13—89 ஒரு மன நோயாளியிடம் உரையாடிக் கொண்டிருந்த போது, இவ்வளவு படித்த இவருக்கு இந்த நோய் வந்திருக்க வேண்டாமே என்று நினைக்கத் தோன்றிற்று.

2-12-89 துருதுருவென்றிருந்த அந்த ஏழு வயதுச் சிறுமியைப் பார்த்த போது, அவள் என் குழந்தையாக இருந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும் என்று நினைக்கத் தோன்றிற்று.

3-12-89 நான் டீ சாப்பிட வரும் பிரியாணிக் கடையில் சைவப் பட்டைகள் நெற்றியை அலங்கரிக்க ஆம்லெட் சாப்பிட்டுக் கொண்டிருந்த அந்த பக்திமானைப்பார்த்து லேசாகச் சிரிக்க தோன்றிற்று.

4-12-89 எனது நீண்ட நாள் தோழி மேல்மட்ட பூர்ஷுவா பாணியில் தன் வாழ்க்கையை மாற்றிக் கொண்டு விட்டாள். அவளுக்காக இன்று இரண்டு சொட்டு துக்கக் கண்ணீர் உகுக்கத் தோன்றிற்று.

5-12-89 பாலுணர்வைக் கட்டிக்காத்து அந்த அறுபது வயதிலும் பேருந்து நிறுத்தத்தில் இளம் பெண்களை நோட்டமிட்டுக் கொண்டிருந்தவரைப் பார்த்தபோது என்னுள் ஒரு கலவர உணர்வு தோன்றிற்று.

6-12-89 நன்மை பயக்கும் புரட்சிக் கருத்துக்களை மனதில் கொண்டு நடைமுறைப் படுத்த விழைந்து கொண்டிருக்கும் மருத்துவ—உளவியலாளர் நண்பரை இன்று சந்தித்தேன். அவரை மனதாரப் பாராட்ட வேண்டும் போல் தோன்றிற்று.

7-12-89 இன்று நிறைய நண்பர்களைப் பார்த்ததில் மனம் சந்தோஷத்தால் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. இன்றைக்கு இந்தச் சந்தோஷத்திலேயே செத்துப் போனால் எவ்வளவு அருமையாக இருக்கும் என்ற எண்ணம் தோன்றிற்று. அந்த நைட்டிங்கேல் பறவையின் நாத இனிமையில் சாக விரும்பிய கீட்ஸ் நினைவில் நின்றார். அந்த இளம் அழகி கொடுத்த அன்னியோன்னிய சந்தோஷத்தின் பூரணத்துவத்தில்

தன்னை மாய்த்துக்கொண்ட 'அப் அட் த வில்லா' வில் வரும் கார்ல் என்கிற கதாபாத்திரம் மனதில் தங் கிற்று. இன்று கிடைத்த மனநிறைவு மீண்டும் கிடைக்குமா என்ற ஏக்கம் மனதில் தோன்றி நிலைத்தது.

8-12-89 கண்பார்வை அற்றுப் போய் வாழ்க்கை ஆட்டம் கண்டு வறிய நிலையில் உழலும் அந்தத் தமிழ் ஆசிரியரைப் பார்த்ததும், உலகத்தின் குரூரம் மீது ஆத்திரம் பொங்கி யெழுந்தது.

9-12-89 வாழ்க்கை துக்கமானது. கசப் பானது. மனிதன் ஒரு நரகத்தி லிருந்து இன்னொரு நரகத்துக்கு நகர்ந்து கொண்டிருக்கிறான். விடிவு என்பது ஒரு கானல் நீர். மாறுதல் நாடி வேறு ஒரு வகையான நரகத் தில் வாழ ஆரம்பிப்பதைவிட பழைய நரகத்தில், பழக்கப்பட்ட நரகத்தில் உழல்வதே பாதுகாப்பானது என்று அந்தப் பெண்ணிடம் சொன்னேன். கண்களைக் கசக்கிக் கொண்டு என் அறையை விட்டு அவள் வெளியேறி னாள். அவள் சென்ற பிறகு, ஆலோசனை என்ற பெயரில் இவ் வளவு தூரம் அவளை துக்கப்படுத்தி யிருக்க வேண்டாம் என்று நினைக்கத் தோன்றிற்று. ஆனாலும் வாழ்க்கை யின் மேம்போக்கான அழகைச் சொல்லி அவளைத்தேற்றுவது பொய் யானது என்ற எண்ணமும் கூடவே எழுந்தது.

10-12-89 'வாழ்க்கை என்பது தொடர்ச்சி யான சாதுரியமான சமரசங்கள். இந்தச் சமரசங்களுடன் உங்கள் கொள்கைகளையும் விட்டுக் கொடுக் காமல் வாழ்வதுதான் விவேகமானது' என்றேன் அந்தப் பையனிடம். 'புரிகிறது' என்றான். அவன் நிர்வா கத்தின் முறைகேடுகளைக் கண்டித்து வேலையை உதறியிருந்தான் அவன். அவன் என்னை விட்டு அகன்றதும் 'நான் ஊருக்கு மட்டும்தான் உபதேசி' என்று நினைத்துக் கொண்டேன். என் சமீபத்தில் பழைய வாழ்க்கை என் கண்முன் நிழலாடிற்று.

11-12-89 'அப்படியானல் உன் சான் றிதழ்களைக் கொளுத்தி விடேன்' என்றார் அவர். 'கைவசம் வத்திப் பெட்டி இருந்தால் கொடுங்கள். உடனே செய்கிறேன்'' என்றேன். மனதில் அமைதி வந்து குடி கொண்டது.

12-12-89 அதோ அந்த 'நான்' உணர்வு பலூன் மீது ஒரு குண்டூசி யைக் குத்த வேண்டும் போலிருந்தது இன்று.

13-12-89 'உன்னுடைய பொய்யில் மயங்கிக்கிடக்கும் உன்னை நான் குலைக்க மாட்டேன். நான் உன்னி லிருந்து விலகிக் கொள்கிறேன். உன் பொய்களை என்மீது சுமத்தாதே' என்றேன் அவளிடம். அவளிடமிருந்து விலகிய பிறகு ஒர் இழப்பு உணர்வு மனதில் தோன்றிற்று.

14-12-89 'என்மீது அசைக்க முடியாத நம்பிக்கை வைக்கவேண்டும்' என்றுள் அவள். 'நீ கடவுளாக அவதாரம் பூண்டுவிட்டாய். இனி உன்னை எந்தக் கடவுளாலும் காப்பாற்ற முடியாது' என்று அவளிடம் சொல்ல வேண்டும் போலிருந்தது.

15-12-89 'இந்த பில்லில் அதிகமான தொகையைக் குறிப்பிட்டிருக்கீறீர்கள் எப்படி?' என்று கேட்டார் அந்த சார்டர்ட் அக்கவுண்டென்ட். 'போய் முதலாளியிடம் கேட்டுக்கொள்ளுங்கள்' என்றேன். 'கம்பெனியின் லாப இழவு களோடு என்னைச் சம்பந்தப் படுத் தாதே' என்று கத்த வேண்டும் போலிருந்தது.

16-12-89: 'என்ன கண்ணெல்லாம் சிவந்திருக்கிறது. கஞ்சா அடித்தீர்களா?' என்று கேட்டார்கள். 'இல்லை இரவு கண்விழித்துக் கட்டுரை ஒன்று எழுதிக்கொண்டிருந்தேன்' என்றேன். அவர்கள் நம்பியதாகத் தெரியவில்லை. 'என்னை உங்களிடம் நிரூபித்துக் கொள்ள வேண்டிய அவசியம் எனக்கில்லை' என்று சொல்லவேண்டும் போலிருந்தது.

17-12-89: அலுவலகம் விட்டு வீடு திரும்பியதும் என் மனைவியைப் பார்த்தேன். 'நீ மிகவும் பழக்கப்பட்டுப் போய்விட்டாய். நான் உன்னை மறந்தே போய் விட்டனோ என்று தோன்றுகிறது' என்று சொல்ல வேண்டும் என்றிருந்தது.

18-12-89: 'நீங்கள் யாரையும் மாற்ற முடியாது. நீங்கள் தான் மாற வேண்டும்' என்று சொல்லிருந்தேன் அவளிடம். இன்று புரிந்தது யாரும் மாறவில்லை என்று. நானும் கூட நான் வாயை மூடிக்கொண்டு பேசமல் இருந்திருக்கலாம் என்று எண்ணத் தோன்றிற்று.

19-12-89 'உன்னைப் புரிந்து கொள்ள வேண்டுமானால் வெளி உலகைப் பார். உலகைப் புரிந்து கொள்ள வேண்டுமானால் உன்னைப் பார்த்துக் கொள்' என்று யாரோ எங்கோ குறிப்பிட்டிருப்பதாக நண்பர் ஒருவர் சொன்னார். உலக நடப்புகளைப் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறேன். ஆனாலும் என்னைப் புரிந்து கொள்ளாமலேயே போய் விடுவேனோ என்றுதான் நினைக்கத் தோன்றுகிறது. இன்றைக்கென்னவோ அந்த பயம் அதிகமாகத் தோன்றிக் கொண்டிருந்தது.

20-12-89: நேற்றிரவு ஓர் அருவருப்பான கனவு வந்தது. கனவை ஆழ்மன விகல்பம் என்று எடுத்துக்கொண்டால், ஆழ்மனதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு பார்க்கும்போது என்னைக் கண்ணியமானவன் என்று சொல்லிக்கொள்ள முடியாது என்று தோன்றிற்று.

21-12-89: அடுத்த வீட்டுக் குழந்தை என் மகளின் வயிற்றில் விளையாட்டாகக் குத்திவிட்டது. 'என்னடா பையா, வயித்திலடிக்கிறாய். முதலாளியாகப் போறயா? என்று கேட்டேன். 'ஆமா' என்று சொல்லி விட்டுப் பையன் ஓடிவிட்டான். நான் என்னமோ பொருத்தமாகச் சொன்னதாகப் பட்டது.

22-12-89 : இன்றைக்கு அந்த இளம் பெண்ணின் நினைவு அடிக்கடி வந்தது. இந்த 44 ஆண்டு காலத்தில் இந்த அளவு அற்புதமான பிறவியை நான் சந்தித்ததில்லை. எந்த ஒரு துக்ககரமான சூழலையும் இனிமையாக மாற்றும் திறன் அவளிடம் இருந்தது. இன்று முழுக்க மலைப்பும் பிரமிப்பும் என் உள்ளத்தை நிரப்பியிருந்தது. ஒருவேளை இவளைப் போன்ற ஒருசிலரால் மட்டும் தான் வாழ்க்கையை ஆனந்தமாக அனுபவிக்க முடிகிறதோ என்று எணணத் தோன்றிற்று.

23-12-89 : 'எனக்கு நேரமிருந்தால் இதை எப்படி நேர்த்தியாச் செய்வது என்று சொல்லிக் கொடுப்பேன்' என்றார் அவர். அவரது பணக்கார நண்பரின் திருமண வரவேற்பு நேற்று ஓர் ஐந்து நட்சத்திர ஓட்டலில் நடந்தது. அதில் கலந்துகொள்ள அவருககு நேரம் இருந்தது. நான் வசதி படைத்தவர்களால் உதாசீனப்படுத்தப்படுவது முதல் முறையல்ல. 'நீங்கள் சொல்லிக் கொடுக்காமலேயே இதை நான் நேர்த்தியாகச் செய்து விடுவேன. நீங்கள் சிரமப்பட வேண்டாம். உங்கள் கேளிக்கைகளுக்கு உங்களுக்கு நேரம் வாய்த்தால் சரி'

என்று சொல்ல வேண்டும்போல் இருந்தது.

24-12-89 : 'இப்பொழுது அவர் பெரிய புள்ளியாகிவிட்டார்' என்றார் அவர். 'எனக்கும் காசிருந்தால் அல்பினோ எலி வளர்ப்போர் சங்கம் ஒன்று ஏற்படுத்தி அதற்குத் தலைவராக இருப்பேன். கார் வைத்திருக்கும் சீமான்கள் என்னிடம் ஒட்டிக்கொள் வார்கள்' என்றேன். உலகத்தின் பொய்மைமீது வெறுப்பு ஏற்பட்டது.

25-12-89 : பக்கத்துப் பகுதி ஸ்டெல்லா வீட்டிலிருந்து கிறிஸ்த்மஸ் கேக் வந்தது, கேக் சாப்பிட்டேன். கிறிஸ்து மனதில் தோன்றவில்லை. நிறைய சந்தேகங்கள் என்னை ஆட் கொண்டன.

26-12-89 : 'மனம் என்பதே ஒரு கற்பி தம்தான்' என்றார் நண்பர். 'நிறைய யோசிக்க வேண்டிய ஒரு விஷயம் தான் இது' என்றேன். இன்று முழுக்க மிகவும் குழம்பிய நிலையில் இருந்தேன்.

27-12-89 : வீடு திரும்பியதும் கேட்டது குழந்தை. 'அப்பா எனக்கு என்ன கொண்டு வந்திருக்கீங்க?' என்று. 'வெளி உலகத்திலிருந்து நிறைய எரிச்சலைக் கொண்டு வந்திருக் கிறேன்' என்று சொல்லத் தோன் றிற்று.

28-12-89 கருத்தரங்கு விருந்தில் பசி யூட்டி தக்காளி சூப்பை முதலில் கொடுத்தார்கள். நான் ஒரு சராசரி இந்தியன். எனக்குப் பசி ஓர் அன்றாட அம்சம். பசியை ஊட்டிக் கொள்ள வேண்டிய அவசியம் எனக் கில்லை என்று மனதில் சொல்லிக் கொண்டே சூப்பைத் தவிர்த்தேன். சூப் என்னைப் பார்த்துச் சிரிப்பதாக ஓர் உணர்வு ஏற்பட்டது.

22-12-89 'இரண்டாம் வகுப்பு கிடைக் காவிட்டால் முதல் வகுப்புப் டிக்கெட் டையே பதிவு செய்து விடுங்கள்' என்றார் அவர். 'ரொட்டி இல்லை யேல் கேக் சாப்பிடுங்கள்' என்ற அரசியின் ஞாபகம் வந்தது.

30-12-39 'சூபர்வைசருக்கு இன்ஸ்ட்ரக் ஷன்ஸ் கொடுக்கத் தெரியவில்லை' என்றேன். 'அவர் சூபர்வைசர். அவர் சொல்படித்தான் நீ நடக்க வேண்டும்' என்று சொல்லிவிட்டார் கள். நான் தவறுகள் செய்து கொண் டிருந்தேன். நிர்வாகத்துக்கு அவை தவறுகளாகப் படவில்லை. எக் கேடோ கெட்டு ஒழியுங்கள்.' என்று வைதுகொண்டு தவறுகளில் ஆழ்ந்தி யிருந்தேன்.

31-12-89 இன்று சம்பளநாள் சம்பளத் தைப் பெற்றுக் கொண்ட போது அடுத்த முறை சம்பளத்தைப் பெற இன்னும் முப்பது நாட்கள் ஆகுமே என்றஎண்ணம் மேலோங்கியிருந்தது. 'சே, என்ன வாழ்க்கை!' என்று மனம் சலித்துக் கொண்டது.

நான் என்னை மற்றவர்களுடனும் பிறவற்றுடனும் தொடர்பு படுத்திக் கொண்டும் என் 'நான்' உணர்வுக்கு ஓர் இருத்தலையும், பாதுகாப்பையும் எனக் குள் ஓர் அங்கீகாரத்தையும் தேடிக் கொண்டிருக்கிறேன்.

எனக்குள் நிகழும் இந்தத் தோன்று தல்களும் தொடர்புபடுத்தல்களும் முற் றாக அற்றுப்போய் ஒரு சூனியம், ஒரு வெற்றிடம் தோன்றினால் 'நான்' உணர்வு இல்லாத நான் ஒரு வேளை உருவாகச் சாத்தியமுண்டு; அப்படி யானால் 'நான்' உணர்வுக்கு ஒரு நீட்சி கிடைக்காமல் அது அழிந்து போகும், 'நான்' உணர்வு அழிந்த பிறகு அங்கு, அந்தச் சூனியத்தில் உன்னதங்கள் பிறக்க இடமுண்டு. ஒவ்வொரு கணமும் என் நினைவுகள், எனது 'நான்' உணர்வு மரணமடைவதில் புதிதான ஒரு நான் உருவாகவும் அது மடியவும் மீண்டும் புத்தம் புதிய ஒரு நான் உயிர்க்கவும் வாய்ப்பு உண்டு. □

ஜமாலன்

# பனுவலியல் அராஜகத்திற்கு எதிராக சாரு நிவேதிதாவின் புதிய நாவல்

The main threat to existentialism is non—availability of good quality condoms
—பக். 158

நவீன அணுகுமுறைகளும். சிந்தனைகளும், புரிதல்களும் ஊடுருவிக் கொண்டிருக்கும் இன்றைய தமிழ்ச் சூழலின் விசித்திரத்தில் எக்ஸிஸ்டென்ஷியலிஸமும், பேன்ஸிபனியனும்— பற்றிப் பேசப் போகிறோம். மனிதனும், சூழலும் சூழல் சார்ந்த இருப்புகளும் குறிகளாலும் (signs) சமிக்ஞைகளாலும் (codes) கட்டப்பட்டுள்ளதாக அறிவித்துக் கொண்டிருக்கும் நவீன அணுகுமுறையைக் கொண்ட ஒரு மதிப்பிடலைச் செய்யமுனைவோம்.

நாவல் பற்றிய முழுமையான மதிப்பிடலை செய்யவில்லை. மரபான அணுகுமுறைகளைக் கொண்டு அணுகும் போது ஏற்படும் விபத்துகளைத் தவிர்க்கும் பொருட்டு சிலவற்றில் மட்டும் நம் கவனத்தை தக்க வைத்துக் கொள்கிறோம்.

தன்னை ஒரு எக்ஸிஸ்டென்சியலிஸ்டாகக் கருதிக் கொள்ளும் சூர்யா, களச் செயலில் ஈடுபட்ட மார்க்சியவாதி பாலா, அழகியல் சார்ந்த இலக்கியம் பண்ணும் நீரஜா, உடல் வலுவுடன் ஒப்பிடத்தகுந்த பிலாய்... ஆகிய பிம்பங்களின் ஊடாட்டத்துடன் ஆரம்பித்து தன்இருத்தல் குறித்து சிந்திக்கும்முகமாக நாவலைஎழுதுகிறான். அவன் எழுதிய பகுதிகளையும், எரித்து விட்டதால் நினைவுகூர்ந்த பகுதிகளையும் தொகுக்கிறான் கிளிங்கோவிட்ஸ். எனவே, நாவல் பலவித எழுத்துமுறைகளையும், மையங்களையும், சம்பவங்களையும் — தனக்கேயுரிய எழுதுதல் (writing) மூலம் கட்டமைத்துக்கொண்டு செல்வதால் அடிப்படையில் நாவல் ஒழுங்கமைவின்மையை (disorder) கொண்டமைந்து விடுகிறது.

## I. பனுவலியல் (Textuality) அமைப்பில் செயல்படும் அரசியல்

எழுதுதலால் கட்டமைக்கப்படும் பனுவலின் (Text) உற்பத்திக்கு தேவையான மூலப்பொருள் (raw material) 'மொழி'— என்பதில் இரு கருத்துக்கள் இருக்க முடியாது. பரிணாம ரீதியாக மனித உடலின் வளர்ச்சியில், மைய நரம்பு மண்டலம் (central nervous system), மூளை அமைப்பு ஆகியவற்றின் தகவமைப்பிற்கு ஒரு... முதன்நிலை அவசியமாக initial condition) மொழி என்ற தொழில் நுட்பமே செயல்பட்டுள்ளது. இத்தொழில் நுட்பமே இன்றைய மனிதனை கட்டமைத்

துள்ளது, எனவே, மொழியின் செயல்பாடு களால் உருவான குறிகளாலும், பிம்பங் களாலும் ஆன இம்மனிதனைக கட்டவிழ்ப் பது(deconstruct)மொழிவழிச் சாத்தியமே. இச்சாத்தியப் பாட்டினைக் கொண்ட இதே தொழில் நுட்பம் மனிதனை அதிகாரத் திற்கு அடிமையாக்கிய முதல் வடிவமு மாகும். மனிதர்கள்... மொழியால் கட்ட மைக்கப்பட்டு ஒழுங்கமைவுகளுக்கு (systamatization) உட்படும்போது மொழியின் உள்ளார்ந்த வன்முறையினூடாக அதன் அதிகாரத்திற்கு உட்படுகிறார்கள். இச் செயல்பாடு முன்னுரையில் பிரேமால் தெளிவு படுத்தப்பட்டுள்ளது. (பார்க்க நாவலின் முன்னுரை)

ஒழுங்கமைவுகள் வழி அதிகாரம் செயல்படுவதால், அதிகாரத்தை எதிர்த்து செயல்படும் மொழியைக் கொண்டு கட்டப் படும் நாவல் இயல்பில் ஒழுங்கமைவு அற்றதாகவே இருக்கும். இது ஒரு அரசியல் செயல்பாடாகும்.

இன்று வளர்ச்சியடைந்த, வளர்ந்து கொண்டிருக்கிற பல்வேறு சமூகங்கள் மேலும், மேலும் நிறுவனமயமாக்கப்படு வதின்மூலம் மையப்படுத்தப்பட்ட அதிகார அமைப்புகள் உருவாகி, முற்றிலும் ஜன நாயகத்தை விட்டொழித்து காட்டுமிராண் டித்தனமான வன்முறைகளும், ஒடுக்கு முறைகளும் கட்டவிழ்க்கப்படுவதை அறி வோம், அதிகாரத்தை மையப்படுத்துதல் (centeralization) பாசிசத்திற்கு கொண்டு செல்லும். இத்தகைய பாசிசப் போக்கின நிலைக்களனாக இன்றைய மொழி அமைப்புகள் கட்டமைக்கப்பட்டு வரு கின்றன. மொழியின் புலத்திற்குள் இயங்கும் சொல்லாடல்கள் (discourse) மையப்படுத்துதலின் விளைவாக உருவாகி வரும் அதிகாரப் போக்குகளை உள் முரணாகக்கொண்டு கட்டமைக்கப் படு கின்றது. நாவல், கவிதை, கதை, விஞ்ஞானம், தத்துவம் எனப் பல்வேறு ஊடகங்களிலும் மையப்படுத்துதல் என்பது ஓர் உத்தியோக அதிகாரத்தை மன முவந்து ஏற்றுக்கொள்வதற்கான பாசிச மன இயல்புகளாக ... உருவாகி வரு கின்றது, இன்று உற்பத்தி செய்யப்படும் சொல்லாடல்களினைக் கொண்ட மையப் படுத்தப்பட்ட பனுவல்களில் ஒரு வகை பனுவலியல்அராஜகம்(Textualanarchism) செயல்படுவதை இதனூடாக அவதானிக்க லாம். இந்த வகை மரபான எழுத்து முறைகள், உற்பத்தி செய்த சொல்லாடல் களில் வழியே செயல்படும்அதிகாரங்களை ஏற்க, எழுத்தாளனையும், வாசகனையும் நிர்ப்பந்திக்கிறது. மையத்துவ அதி காரத்தை ஏற்கும் வாசகனை முன் அனு மானித்து பின்னப்படும் பனுவல்கள் தங்களது அதிகாரத்துவப் பரவலை... இயல்பானதாக ஆக்குவதன் மூலம் வாசகனை காயடித்து மொண்ணையாக்கு கின்றன. நுட்பமான மன அமைப்புகளில் பின்னப்படும் இவ்வதிகாரச் செயல் பாடானது பாசிசத்திற்கான மனப்பக்கு வத்தை ஏற்படுத்துகிறது. பாசிசமயம் என்பதே இன்றைய சமூக நடவடிக்கை களின் அமைப்பாக்க உத்தியாக செயல் படுகிறது.

இன்று பின்னப்பட்டுவரும் பனுவல் களின் மையங்கள் பெரும்பாலும் தந்தை வழிச் சமூக (patriarchal) அதிகாரத்தை கொண்டியங்குவதை வாசித்தறியமுடியும். தந்தைவழிச் சமூக அதிகாரம் என்பது அப்பாவை சட்டமியற்றும் உரிமையுள்ள தலைமை அதிகாரியாக கொண்டு கட்டப் படும் குடும்பங்களைக் கொண்ட அமைப் பாகும். இக்குடும்ப அமைப்புகளே அதி காரத்தை நிலைப்படுத்தும் கருவிகளாகச் செயல்படுகின்றன. இவ்வதிகாரமானது குடும்பநபர்களின் பாலியல் வேட்கைகளை ஒழுங்குபடுத்தி கண்காணிப்புக்கு உட்படு வதன் மூலம் தங்களை நிலைநிறுத்தி கொள்கின்றன. ஒரு குடும்ப அமைப் பினுள் செயல்படும் ஒழுக்கவிதிகள் (moral laws), சுத்தம்/அசுத்தம், புனிதம்/தீட்டு, உடல்/மனம், ஆத்மலயம்/மிருகஇச்சை- போன்ற இரட்டைமுரண்களைக் கொண்டு உடல்களை தீவிர கண்காணிப்புக்கு உட் படுத்துகின்றன. இக்கண்காணிப்புகளின் வன்முறையிலிருந்து விலகிச் செல்லும் ஒருவன் இந்தவகை ஒழுக்கவியல் ஒழுங்

கமைவுகளை எதிர்ப்பதன் மூலம் மட்டற்ற சுதந்திரத்தையும், தனது இருப்பையும் உணரவும், நிலை நிறுத்தவும் முயல்கிறான். எனவே, தான் சார்ந்த சூழல்களின் பிம்பங்கள், குறியமைப்புகள் இவற்றின் ஆற்றலுக்கு உட்படாத இருட் பகுதிகளில் தனது பாலினப வேட்கைகளை நிறைவு செய்து கொள்கிறான். இத்தகைய நிறைவினூடாக அதிகாரத்தின் களங்களை எதிர்த்தியங்குபவனாகவும், அமைப்பாக்கப்பட்ட பிம்பங்களுக்கும், குறிகளுக்கும் எதிராக வன்முறை சார்ந்த சொல்லாடலை உற்பத்தி செய்பவனாகவும், இயக்குபவனாகவும் இருக்கிறான். இத்தகைய வர்க்கம்சாரா ஓரப்பகுதிகளை (marginal class) நோக்கி நகரும் மனிதன் விடுதலைக்கான குரலை முன்னெடுப்பவனாகவும், அதிகாரங்களை எதிர்த்து இயங்குபவனாகவும் இருக்கிறான்.

நாவலின் பெரும்பகுதி இத்தகைய வர்க்கம்சாரா பிரிவினரின (lumpen) தோற்றம், வளர்ச்சி வாழ்நிலைபற்றி கூறுகிறது. இத்தகையவர்களால் நிறுவனமயமாக்கப்பட்ட அமைப்பு குலைவுகளுக்கு உள்ளாகிவிடாமல், சமநிலையைக் காக்கவென பல்வேறு உத்திகளை கையாள்கிறது. அவ்வுத்திகளினால் பின்னப்பட்ட குறிகளையும், பிம்பங்களையும் சுமந்து திரியும் இன்றைய மனிதன் அத்தகைய ஒழுங்கமைக்கப்பட்ட சட்டகத்தினுள் வைத்து பதனப்படுத்தப்படுகிறான். மனிதனின் உயிராதாரமான உடல், உடல் சார்ந்த உணர்வுகள் மற்றும் அவனது இருத்தலை சிதைப்பதன் மூலம் சமூகம் தனது சமநிலையைத் தற்காத்துக் கொள்கிறது. மனிதனின் உயிராற்றல்கள் (biopower) சாகடிக்கப்பட்ட நிலையில் ஒருவகை காயடித்தலை செய்யும் மொழியமைப்பாக இன்றைய இலக்கிய அமைப்புகள் நிலவி வருகின்றன. எனவே, ஒழுங்கமைவுக்குள்ளனான மொழியை சிதைக்கும் இலக்கிய வடிவம் அடிப்படையில் மனித இருப்பின் யத்தனத்திற்கான ஒருவகை அரசியல் தன்மையை கொண்டு இயங்குகிறது.

இப்புரிதலினூடாக இப்பனுவல் கூறும் உண்மைகளை கணக்கில் கொள்ளவேண்டும். அவைகள்...(i) எதிர் அழகியல் மதிப்பீடுகள் (ii) பாலியல் அரசியல் (iii) மாயை அழிப்பு ஆகியனவாகும். இன்றைய அழகியல் மதிப்பீடுகளுக்கு எதிராக செயல்பட ஆரப்பிக்கும் பிரதி...இலக்கிய, தத்துவார்த்த, அறிவுஜீவி பிம்பங்களை மாயை-அழிப்புக்கு உட்படுத்துகிறது. இதற்கான பின்புலங்களை பாலியல் சார்ந்த நடவடிக்கைகள் மூலம் மேலெழுப்பிக் கொண்டுவந்து போட்டுவிடுகிறது.

## II பனுவலில் சுட்டப்படும் எதிர் அழகியல் மதிப்பீடுகள்

அழகியல் என்பது முதலாளித்துவ சமூகத்தினால் கட்டமைக்கப்பட்ட ஆதிக்க நிலைசார்ந்த கருத்துருவமாகும். அழகியல் என்பதை உடைத்துப் பார்த்தால் அது எல்லாவற்றிலும் ஒரு ஒழுங்கை (order), லயத்தை (harmony) தேடுவதாக அமையும்.

*மனிதனின் நினைவிலி மனப்புலங்கள்* (Field of unconcious) கட்டமைக்கப்பட்ட குழந்தை நிலையில் தனது உடலமைப்பையும், சூழலையும் ஒழுங்கமைக்கப்பட்டதாக உணர ஆரம்பிப்பதில் ஒழுங்கு, லயம் பற்றிய கண்ணோட்டங்கள் உருவாகிவிடுகின்றன. எனவே, மனிதன் இருத்தலின்போது எதிர் கொள்ளும் எந்த ஒன்றையும் ஒரு ஒழுங்கமைவுக்கு உட்படுத்த முனைவதின் மூலம் அதை தனது இருத்தலுக்குள் நிலைப்படுத்துகிறான். இந்நிலைப்படுத்தல் மொழிவழிச் சாத்தியமாகிறது. ஒழுங்கு, லயம் போன்ற கருத்தமைப்புகள் மனிதமனத்தை கட்டமைத்த மொழியின் ஒழுங்கு, லயம் போன்ற செயல் அமைப்புகளே ஆகும். எனவே, அழகியல் என்பது ஒழுங்கை நாடுவதாகவும், ஒழுங்கு என்பது நிறுவனமயமாக்கப்பட்ட அல்லது கட்டமைக்கப்பட்ட அதிகாரப் பரவலினை உட்கொண்டு இயங்கும் கருத்துருவத்தை (ideology) அடைவதாகவும், கருத்துருவம் முதலாளித்

துவ சமூக அதிகாரத்தையும் சுரண்டலையும் நிலை நிறுத்துவதாகவும்-இருக்கிறது. எனவே, அழகியல் என்பதே பூர்ஷுவா மாயை, அதிகாரத்தை மறைக்கும் ஒரு வகை மனவயப்பட்ட நிலையாகும். அழகியல் எனப்படும் மென்மை சார்ந்த ஒழுங்குணர்வு, வன்முறைக்கு எதிரான அதிகாரத்தின் ஒழுங்கமைக்கப்பட்ட வன்முறையாகும். எனவே, அழகியலுக்கு எதிராக நிறுத்தப்படும் எதிர்— அழகியல் சொல்லாடல்களை உற்பத்தி செய்வதன் மூலம் பழையவகைப்பட்ட மென்மை சார்ந்த சொல்லாடலை செயலிழக்கச் செய்ய முடியும். அவ்வகையில் மூக்கை நோண்டுதல் தொடங்கி, பீச்சந்து, காய்ந்து கிடக்கும் மலக்கிடங்கு...எனப்பல எதிர் அழகியல் மதிப்பீடுகளை கொண்ட சொல்லாடல்கள் பனுவலில் பேசப்பட்டுள்ளன. தமிழில் இயங்கிவரும் பல்வேறு இலக்கியப் பனுவல்கள் (literary text) மென்மை சார்ந்த அழகியல் உணர்வுகளை கட்டமைத்து தங்களது ஆதிக்க உணர்வை நிலை நிறுத்துகின்றன. இந்நிலையில் இப்பிரதி உருவாக்கும் எதிர்—அழகியல் கவனத்தில் இருத்த வேண்டியது.

எதிர்-அழகியலைக்கண்டு முகஞ்சுளிப்பவர்களை கொஞ்சம் கவனிக்கலாம்: இவர்கள் மேற்குறித்த செயல்களின் பௌதீக இருப்பின் மூலமே மனிதர்கள் உயிர்வாழ்கிறார்கள் என்பதை உணர்வதில்லை. அடிப்படையான மனிதனின் பௌதீக இருப்பிற்கு எதிராக கற்பனை வயப்பட்ட கருத்துவ இருத்தலை நிலை நிறுத்தும் அழகியலில் மயங்கித்திளைப்பவர்கள் ஆதிக்கத்தினை எதிர்த்து ஒன்றும் செய்ய முடியாதவர்களாகவே இருப்பார்கள். இவர்களை முழுமையாக புரிந்து கொள்ள மூன்றேமூன்று உதாரணங்களை மட்டும் சுட்டலாம்.

அ) சோப்பு விளம்பரம் ஒன்றின் வாசகம்- "அழுக்குகளை மென்மையாக கழுவிக் களைகிறது" இவ்வாசகம் ஏற்படுத்தும் சமூகத்தின் சலனமின்மை பற்றிய கருத்தும், மென்மை சார்ந்த உணர்வும்...'நகத்தில் அழுக்கில்லாமல், மூக்கை கழுவி சுத்தம் செய்ய மறைவிடம் தேடுதல் குறித்த உணர்வும்' அடிப்படையில் ஒன்றே. இரண்டும் மனித இருப்பில் சிதைக்கப்பட்ட யதார்த்தத்தின் வன்முறையை மறைத்து சமூகத்தின் ஒழுங்கை அள்ளிப் பருகச் சொல்லி சமநிலையைக் காக்கின்றன.

ஆ) தமிழ் பத்திரிக்கை ஒன்று வெளியிட்டுள்ள புகைப்படம் — இன்றைய உதவிப் பிரதமர் தேவிலால் திரும்பி நின்றுகொண்டு மூத்திரம் பேயும் புகைப்படம். அதில் காணப்படும் வாசகம். Devilal : Do you want him to be the next Prime Minister? (இந்தியா டுடே டிசம்பர்-20, 1989, பக்-36) பிரதமர்களும், அமைச்சர்களும் மூத்திரம் பேய்தல் என்ற மனித இருப்பிற்கு அப்பாற்பட்ட தெய்வீகப் பிறவிகள் என்ற மாயையை ஏற்படுத்தும் வெகுஜன அரசியல் வாதிக்கும், அழகியல்வாதிகளுக்கும் என்ன வித்தியாசம்?

இ) வாத்ஸ்யாயனரின் காமசூத்திரம் பகுதி-1, அத்தியாயம் 4-இல் பேசப்படும் விஷயங்கள். (ஸ்லோகம்-3, சூத்திரம் 1-39). ஒரு குடிமகனின் வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய சுத்தம், பழக்கங்கள், கொண்டாட்டங்கள் மற்றும் வசிப்பிட அறை அமைப்பு ஆகியன. இப்பகுதி கற்பனார்த்தம் கொண்ட அழகுணர்வு பற்றிய உச்சபட்ச எல்லைகள் எனக் கூறலாம். அந்நூலின் அழகுபற்றிய குறிப்புகளுடன், இன்றைய அழகு பற்றிய உணர்வுகள் பிரமாதமாக வேறுபட்டுவிட்டதாக கூறமுடியாது.

முடிந்தவர்கள் பார்க்க: VATSYAYANA'S KAMASUTRA (A universal Publications. Delhi—6, 1973. பக்-41-49)

## III பனுவலில் எதிர் கொள்ளப்படும் பாலியல் அரசியல்[2]

நாவலின் பகுதி இரண்டில் நாவலை எழுதும் சூர்யாவின் எரிக்கப்பட்ட பகுதிகள் என கிளிங்கோவிட்ஸால் நினைவு கூறப்படும் பகுதிகள் (பக். 100-148) சூர்யா என்ற நவீன எக்ஸிஸ்டென்ஷியலிச மற்றும் அறிவார்ந்த சிந்தனையாளனின் பால்ய கால இருட் பகுதிகள் (regime of silence) வெளிக் கொண்டுவரப் படுகின்றன. அவைகளை பட்டியலிடுவோம்.

1. ஓரினப் புணர்ச்சி (Homosextual) தனபால்-சூர்யாவுக்கு இடையில் நடைபெறுவது 2. சுயமைதுனம் (Mastur bution) 3. வாய்வழிப் பாலுறவு (Oral sex). செட்டியாரிடம் 15 வயது பெண், சூர்யாவிடம் பூசாரி. 4. உடலுறவு (Intercourse) - நிறைய முறையற்ற, தேவடியாள்களுடன், உறவினர்களிடையேயான, 5. தூக்கத்தில் ஸ்கலிதமாதல் 6. யோனியில் முத்தமிடல் 7. துர்க்கையின் தலையில் மூத்திரம் பேய்தல்.

இவ்வுறவுகள் எல்லாம் சூர்யா என்ற அறிவு ஜீவியின் நினைவில் மனப்புலத்தை கட்டமைக்கிறது. இளம் சூர்யாவின் உலகம் வர்க்கம் சாரா ஓரப்பிரிவினரின் வாழ்க்கையும், இருத்தலுமே ஆகும். நாவலின் முதல்மற்றும் இரண்டாம் பகுதி இத்தகைய 'லும்பன்'-பகுதியினரின் தோற்றம். வளர்ச்சி, இருத்தல் பற்றியே பேசப்படுகிறது, சூர்யாவின் அப்பா கிருஷ்ணசாமி என்கிற தெலுங்கு பேசும் நாயுடுவின் எட்டு சகோதர, சகோதரிகளும் (கடைசிச் சகோதரியைத் தவிர) வீட்டை விட்டு சூர்யாவின் தாத்தாவல் விரட்டப்படுகிறார்கள். சமூகத்தின் பொருளியல் கொடூரங்களை எதிர் கொள்ள முடியாமல் சிதைவுற்ற வாழ்க்கை முறையை ஏற்று வாழ்ந்துவிட்டு போகிறார்கள். சூர்யாவின் அம்மா பார்வதியின் 9 சகோதர, சகோதரிகளும். அதே பொருளியல் கொடூரங்களுடன் போராடி. குடும்பம் சிதைந்து 'லும்பன்' வாழ்நிலையை நோக்கி நகர்த்தப்படுகிறார்கள்.

அடியாட்கள், குற்றவாளிகள், பாலியல் வேட்கையாளர்கள், பாலியல் பிறழ்ந்தவர்கள், போதை மருந்து கடத்தல், உட்கொள்ளல்...ஆகியவர்களாக சிதைக்கப்படுகிறார்கள். இவர்களும் சேர்ந்துதான் அக்காலத்தைய சமூக வரலாற்றை எழுதுறார்கள். இச்சிதைவுக்கு நாம் அனைவருமே காரணம்தான். இது ஏதோ சமூக அவலம் என்ற புறக் கணிக்கக் கூடியதல்ல. ஏனென்றால், இச் சிதைவுகளினால் சமூக அமைப்பு உடைந்து விடாமல் சமநிலையை காப்பவர்கள் நாம் எல்லாரும் தான். இத்தகையவர்களை அவலத்திற்குரியவர்களாகவும், குற்றவாளிகளாகவும் இடம்மாற்றம் செய்வதன் மூலம் சீரழிவிற்கான குற்ற உணர்விலிருந்து விடுபட்டுவிடுகிறோம் நாம்[3]. இதன் பின் புலத்திலதான் பாலியலின் அரசியல் செயல்படுகிறது. என்பதை அறிந்து கொள்ள வேண்டும். பாலியல் என்பதும் அரசமைப்பின் அதிகாரத்தினை கொண்ட கட்டமைக்கப்பட்ட ஒரு கருவி என்பதை உணரவேண்டும். பாலியலுக்கும் (Sexuality), மதத்திற்கும் உள்ள எதிர் மறை உறவை உடைத்து வாசிப்பதன் மூலம் இதை புரிந்து கொள்ளலாம்.

மதமும், பாலியலும் இரட்டைமுரண் எதிர் அமைப்புகளைக் கொண்டு அதிகாரம் செலுத்தும் கருவிகளாக செயல்படுகின்றன. அதிகாரத்துடன் மதம் நேர்மறையான உறவையும், பாலியல் எதிர்மறையான உறவையும் கொண்டிருக்கின்றன. மதம் நேரடியான அறமதிப்பீடுகளைக் கொண்டு, பாவத்தை அறிகையில்கடவுளிடம் மன்னிப்புகோரல்,பரிகாரம் செய்வதன்மூலம் கடவுளை சாந்தப் படுத்துதல்...போன்றவற்றின் மூலம் மனிதனின் குற்றம் சார்ந்த உணர்வுகளை அமைப்பாக்கம் செய்து நேரடியான அதிகாரத்தை நிலைநிறுத்துகிறது. பாலியல் எதிர்மறையான அறமதிப்பீடுகளைக் கொண்டியங்குவதால் மனிதனின் குற்றம்

சார்ந்த உணர்வுகளை ஒடுக்கி பதுக்குவதன் மூலம் அதிகாரத்தை நிலை நிறுத்துகிறது. மதம் பாலியலுக்கு எதிராக கட்டப்பட்டு நிலைநிறுத்தப்படுவதால் ஆதிக்கத்தின் மையக் கண்ணியாக பல நூற்றாண்டுகள் இருந்து வந்துள்ளது. மதத்தின் ஆதிக்கத்தை எதிர்க்கும் மனிதன் பாலியல் பிறழ்ச்சிகள் மூலம் அதை சாதிக்க முனைகிறான்.

நாவலில் சூர்யா சுயமைதுனம் செய்யத் தேர்ந்த இடங்கள் இருண்ட பிள்ளையார் கோவில், பேய்கள் நடமாடுவதாக நம்பப்படும் சுடுகாடு, புனிதமான தாகக் கருதப்படும் துளசிங்கப்பெருமாள் கோவில்...இவை மதம் மற்றும் மரணம் பற்றிய புனிதம் பற்றிய கருத்துத் திணிவுகளுக்கு எதிரானது என்பதைக் காட்டுகிறது. 'அச்சம்' மற்றும் 'குற்றம்' பற்றிய உணர்வுகள் மனித மனத்திற்குள் கட்டப்பட்ட ஆதிநிலை உணர்வுகள் என்பதும், அது சமூகத்தின் மையத்தில் செயல்படும் குற்ற உணர்வு, அச்சம் ஆகியவற்றின் வெளிப்படலே என்பதையும் சுட்டுகிறது.

சூர்யாவின் தங்கை ஆர்த்தி பேய் பிடித்து, மந்திரிக்கப்பட்டுள்ள நிலையில் தூய்மை காக்க வேண்டும் எனக் கூறப்பட்டபோது...சூர்யாவுக்கு இரவு ஸ்கலிதமாகிறது. ஒன்றைச் செய்யக்கூடாது என எதிர்மறை ஒடுக்குதல்கள் அதை செய்யும் தூண்டுதலை நினைவிலி மனப்புலத்தில் ஏற்படுத்தி அதற்கு எதிராக இயங்க வைத்து விடுகிறது.

பேய்களுக்குப் பயப்படும் சூர்யா துர்க்கையின் தலையில் மூத்திரம் பெய்கிறான். துர்க்கைக்கும், பேய்களுக்கும் இடையிலான நுட்பமான வித்தியாசம் முக்கியமானது. பேயின் ஒரு தெய்வீக வடிவமாகவே துர்க்கை புரிந்துகொள்ளப்பட்டிருக்கிறது, பேய் அமானுஷ்யத் தன்மை கொண்டதாகவும், துர்க்கை தெய்வத் தன்மை கொண்டதாகவும் ஒரு முரண் நிலை நிலவுகிறது. பேயும், தெய்வமும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள், ஆனால் ஒரே நாணயத்தில்தான் இருக்கின்றன. இப்படி ஒரு சமநிலை மதத்தால் காக்கப்படுவதனால்...பேய்க்குப்பயம் உள்ளவன், துர்க்கையிடம் பயம் இல்லாதவனாக இருக்கிறான். ஏதோ ஒருவகையின் மதத்தின் அதிகாரத்திற்குள் பயம் சார்ந்த உணர்வுகள் மூலம் மனிதர்களை இருத்தி வைக்க முடிகிறது.

பூசாரி என்ற புனித பிம்பம் (பார்ப்பான்) சூர்யாவிடம் தொண்டையில் முடி வளர்வதாகக் கூறி வாய்வழிப் பாலுறவு கொள்கிறான். வயதான செட்டியார் சூர்யாவின் பாலியல் ஆலோசகராய் உள்ளார். தாய் உறவுடையவர், மகன் உறவுடையவரிடமும், தந்தை உறவுடையவர் மகள் உறவுடையவரிடமும்...முறையற்ற உடலுறவுகள் நிறைய பேசப்படுகின்றன. இவை எல்லாம் சேர்ந்து கட்டமைக்கப் பட்டவன்தான் இன்றைய அறிவுஜீவி சூர்யா. இப்படிப் பதுக்கப்பட்ட மௌனங்களை உடைத்து பேச வைப்பதன்மூலம், மனிதன் பாலியல் ஒடுக்குதல்களிலிருந்து விடுபட்டு விடுதலைக்குரிய போராளியாகிறான். ஆதிக்கத்தின் சகல துறைகளையும் எதிர்த்து கலகம் செய்பவனாக கட்டமைக்கப்படுவான். பாலியல் வேட்கை, பிறழ்ச்சி பற்றிய உண்மையான அறிக்கையிடல்கள் (Confession) சொல்லாடல்கள் வெளிப்படுத்துவதன்மூலமே இன்றைய ஆற்றல் வாய்ந்த ஆதிக்கவெறி பிடித்த வாழ்க்கையை உடைத்தெறிய முடியும்.

இத்தகைய நிகழ்வுகளே இல்லை என்பது போல மௌனித்து இருப்பவர்கள் அதிகாரத்தின் முகமூடிகளை அணிந்து கொண்டு மனித உடல்களை அடக்கியாள்வதில் இன்பம் அடைபவர்கள். இவர்களே நாளைய பாசிசத்தின் கருத்துருவத் தூண்கள். இத்தகைய நிகழ்வுகளின் இருப்புகள் சமூகத்தின அடித்தளத்தில் சலனமுறுவதை அனைவரும் அறிந்தே உள்ளனர். அவ்வகையில் இந்நாவல் பெரும் பாய்ச்சலைச் சாதித்துள்ளது.

இந்நாவலை எதிர்கொண்டு முகஞ்சுளிக்கும் 'முற்போக்காளர்களை'க் கொஞ்

சம் கவனிப்போம். இந்நாவலின் பாலியல் கட்டுமானங்கள், மதவாதிகள் நல்ல ஒழுக்கவாதிகள், அழகியல்வாதிகள் — ஆகியோரை ஒருசேரத் தாக்குகிறது. இதை புரிந்துகொள்ள முடியாத முற்போக்காளர்கள் — தாங்களும் பாலியலைப் பொருத்தவரை அதே மதவாதிகள், நல்லொழுக்கவாதிகள் ஆதிக்கத்திலிருந்து விடுபடவில்லை என்பதைப் புரிந்துகொள்வதில்லை.

இப்படிப் பாலியல் பற்றி நாம் பேசுவதால்—'இவர்கள் அனைவரும் பாலியல் வக்கிர உணர்வுகள் உடையவர்கள்'— என்ற மலினமான கருத்திற்குச் செல்பவர்கள் ஏற்படுத்தும் மாயையை அழிப்பதே நாவலின் அடுத்தமைந்த தளமாகும். இன்று அதிகாரப் பரவலைச் செய்யும் கருத்துருவ எந்திரங்களுடன் (ideological apparatus) துணைக்கருவிகளாய் (alliance apparatus) செயல்படுபவர்களே இந்த இணைக்கலாச்சார மாயையை ஏற்படுத்தும், சிறுபத்திரிகையாளன், இலக்கியவாதி, நாவலாசிரியன்...etc....etc.... ஆவார்கள். இவர்கள் ஏற்படுத்தும் மாயையை—அழிப்பதில் நாவல் கவனம் செலுத்தும் தளத்திற்கு செல்வோம்.

## IV. பனுவலின் மாயை—அழிப்புக் கூறுகள்

நாவலின் முகவிரை மற்றும் 3, 4, 15-ஆம் பகுதிகள் இத்தகைய கட்டமைப்புகளை கொண்டியங்குகின்றன. நடுத்தரவர்க்க அறிவுஜீவியான சூர்யா — ஒரு எக்ஸிஸ்டென்ஷியல், மார்க்சீய, அழகியல் சார்ந்த கருத்தமைப்புகளின் உலகில் சஞ்சரிப்பவன்.

சூர்யாவின் நாவலில் எரிக்கப்பட்டதாகக் கூறப்படும் பகுதிகள் முழுமையும் பாலுணர்வு எழுச்சிகளைப்பற்றிக்கூறுவது. தனது பாலுணர்வு சார்ந்தவேட்கைகளைப் பற்றிய அறிக்கையிடலை வெளிப்படுத்தி தனது பிம்பங்களை கிழித்தெறிய தயாரற்று எரித்து விடுகிறாள். இன்றைய இலக்கியப் பிரதிகளின் பிம்பங்களுக்கு அடியில் சலனமுறும் இத்தகைய பதுக்கப்பட்ட பகுதிகளை சுட்டுவதே இந்நிகழ்வு. எனவே 'சூர்யா' என்ற குறி, பிம்பம் முழுமையும் மாயை—அழிப்புக்கு உட்படுத்தப்படுவது கிளிங்கோவிட்ஸால்.

மாயை—அழிப்பு (demythification) என்பது அங்கீகரிக்கப்பட்ட ஆதிக்கநிலை பிம்பங்களுக்கு எதிராக, பிம்பங்களின் அடித்தளத்தில் சலனமுற்று, அவற்றை உருவாக்கிய நிகழ்ச்சிகளை முன்வைப்பதன் மூலம் நடைபெறுகிறது. துகள் பௌதீகத்தில் (Particle Physics) துகள்களுக்கும், எதிர் துகள்களுக்கும் (Anti-particle) ஒன்றை ஒன்று சந்திக்கும்போது மோதி பிணைவுற்று அழிந்து போவதைப் போல.

சூர்யாவின் ஆதிக்கநிலை சார்ந்த பிம்பங்களை கட்டமைப்பவை:—சார்த்தரின் critique-ஐ 15 நாள் லீவுபோட்டு படிப்பது, தமிழ்வீறு என்ற பெயரில் 'கதிரொளி' நடத்துவது, செகுவேராவின் 'பொலிவியன் டைரியை'—உலகில் சிறந்த இலக்கியம் என்ற ரீதியில் அங்கீகரிப்பது, ஒரு நாளைக்கு 5 படம் வீதம் 15 நாளைக்கு 70 படங்கள் பார்ப்பது — இப்படி இதுவும் நிஜம். இதற்கு எதிராக கிளிங்கோவிட்ஸால் நினைவு கூறப்படும் சூர்யாவின் பால்ய கால பாலியல் நடவடிக்கையும் நிஜம். இவை ஒன்றை ஒன்று எதிரிடும் போது சூர்யாவின் இன்றைய குறி, பிம்பம் ஆகியன உடைபட்டுச் சிதறுகின்றன. இதில் வெளிப்படும் ஆற்றல் புதிய சூர்யா என்ற கலகக்காரனை கட்டமைக்கிறது. இச்சிதறலை பின்னிச் செல்வதே எழுத்து. இவ்வெழுத்து இன்றைய ஆதிக்க மாயைகளுக்கு எதிரான கலகமாகும்.

நாவலின் பல தளங்களில் இவ் எதிர்வைப்புகள் நடைபெறுகின்றன. சிறு வயதில் விஜயலட்சுமி என்ற சக பள்ளி மாணவியின் 'அல்குலை'-விலகும் அவளது தொடை துணிகள் வழியே பார்க்க பிரயத்தனப்படும் சூர்யா — நகர்ப்புற நடுத்தர வர்க்கப் பண்பாட்டை அடியொற்றி மறு கட்டமைப்புக்கு (reconstruction) உட்படும் போது டெல்லியில் பஸ்ஸில் பிரயாண

மாகும் பெண்களின் அக்குள் ரோமத்தைப் பார்க்கும்போது யோனியின் ஞாபகம் வர குமட்டுகிறான். மனதிற்குள் பதுக்கப்பட்ட நினைவிலிமனக் கட்டமைப்பியல் முரண் பாடு இதுதான். நடுத்தர வர்க்கத்தின் பாலியல் வேட்கைகள் ஒடுக்கப்படுவதின் வழி செயல்படும் பாலியல் கருவிகளின் செயல் ரீதியான வெற்றி இது.

கமலநாதன் எழுதிய விமர்சனக் கூறுகள் கொண்ட கடிதத்தை கிளிங்கோவி ட்ஸிடம் சூர்யா காட்டவில்லை. இது சூர்யா அணிய விரும்பிய பிம்பத்தை பற்றிய உணர்த்தாலம். அடுத்து மிஸ்ரா, கிரன், ஆதி போன்றவர்களிடம் தனது பிம்பத்தை அடையாளம் காண முனையும் சூர்யா — அவனிடம் அடையாளம் காண முனையும் பாலா, நீரஜா போன்றவர் களின் செயலை உடைககிறான். பிம்பங் களும், அவற்றின் ஊடுருவல் மட்டுமே இன்றைய இணைக் கலாச்சார இலக்கியங் கள் காட்டும் போலி உலகமாகும். தனது பாலியல் வாழ்க்கையை எரித்து விட்ட சூர்யா. கிரனிடம் ஏற்படும் உறவில் தந்தையின் நிலையும், உடலுறவு நிலையும் ஒருசேர ஏற்படுத்திக் கொள்ளும் போது மீண்டும் அதே பகுதிகளால் கட்டமைக்கப் பட்ட இறுக்கங்களிலிருந்து (fixation) மீள முடியாதவனாகிறான்.

அருண், குரு, சூர்யா மூவரும் ரயிலில் கிடைத்த பெண்ணை அனுபவிக்க முனை யும்போது கிரனுடன் வேறொரு ஆட வனை உறவு ஏறபடுத்தி கொள்ள சூர்யா அனுமதிப்பதில்லை. இதுபோன்ற முரண் கள நாவலின் நுட்பமான அமைப்பாக்கத் தில் செயல்படுகிறது. நிர்வாணமான வேறொரு ஆணை பார்த்தவுடன உறைந்து போகும் சூர்யா (கிரனிடம்) தனபாலுடன் ஒரினச் சேர்க்கையில் ஈடு பட்டவன. ஆதி என்ற இருட்குகையிலும், நிலவறையிலும் இருந்து கொண்டிருந்த வனிடம் சூர்யாவின உறவு பற்றிய கரோலின் போர்ச்சேவின் செய்திகளும், கிரனுடன், சூர்யா பிணக்கு ஏற்படுததிக் கொண்டதாகக் கூறப்படும் பகுதிகளும், இரண்டுவித interpretation-ஐ தருகின்றன

இதில் எது உண்மை என்பதைவிட, கிரனிடம் ஏற்பட்டதாகக் கூறப்படும் பிணக்கிற்கு இருவகை புனைவாக்கியங்கள் சுட்டப்படுவதே முக்கியமானது.

கிரனின் சம்பவங்களை விளக்கும் மூன்றாம் பகுதி இன்று உற்பத்தியாகி தமிழ் படிப்போர் சரித்திரத்தை ஆக்கிர மித்து வரும் Pocket novelகளின் எழுத்து முறையை கொண்டமைக்கப்பட்டிருப்பது நிகழ்வினைப் பற்றிய மற்றொரு பரிமா ணத்தை தருகிறது. கிரனுடன் சூர்யா ஏற்படுத்திகொண்ட உறவு ...ஒரு மர்ம நாவலின் கற்பனார்த்த குணம் படிந்த புனைவியல் எதார்த்தத்தை (fictional reality)கொண்டவை என்பதை நுட்பமான எழுத்துமுறைகளின் வித்தியாசம் நமக்கு உணர்த்தி விடுகிறது.

இப்படி நிறைய சம்பவங்களை இணைகளாக்கி எதிர் எதிரே மோத விடு வதன் மூலம் நாவல் தனது இறுக்கமான கட்டமைப்பிலிருந்து உடைபட்டு சிதற லடைகிறது. இச் சிதறலே இன்றைய ஆதிக்க குணம் படிந்த மாயையே அழிக் கும் செயலாகும்.

பகுதி நான்கு இன்றைய அறிவார்ந்த இலக்கிய உலகின் மாயையை அழிந்து விடக் கூடிய எழுத்தாகும். பாலியல் வேட்கைகளே பின்னால் கற்பனார்த்தம் கொண்ட புனைவாக்கத்தினைக்கட்டமைக் கின்றன என்பதையும், இலக்கிய வாதிகள் ஏற்படுத்தும் இணைக் கலாச்சார மாயை வெறும் பிம்ப வேட்கையும் ஊடாட்டுமே ஆகும் என்பதையும் பாலா, நீரஜா போன்றவர்களின் பொய் உலகம் அழிக் கப்பட வேண்டியது என்பதையும் நாவல் நமக்கு உணர்த்துகிறது. இதுவே இந் நாவலின் செயல்மயமாகும்.

நாவலின் முழுமையிலும் புதிய நாவல்களுக்கே உரித்தான பலகுரல் தன் மைகளும் சிதைவுகளும், சிதறல்களும்— உள் வாங்கப்படவில்லை. சில இடங் களில் வழக்கமான நாவல் தன்மைகள்

ஏற்பட்டு விடுகிறது. இது இத்தகைய ஊடகங்களை கையாள்வதில் மேலதிக கவனம் தேவை என்பதை உணர்த்துகிறது சாரு நிவேதிதாவின் இம் முயற்சி நமது 'விசித்திர'ச் சூழலில் உள்வாங்கப்படுமா? என்ற கேள்வியுடன் நிறுத்திக்கொள் வோம்.

□

1. இக் கருத்து மூலக்கூறு உயிரியலில் (Molecular biology) 1965-இல் நோபல் பரிசு பெற்ற பிரெஞ்சு விஞ்ஞானி JACQUES MONOD— என்பவரின் கருத்தாகும். மொழியை தொழில்நுட்ப என்பதாக இவர் ஏற்கா விட்டாலும் மொழி வெறும் உற்பத்தி பொருள் மட்டுமல்ல என்ற கருத்தை உடையவர்:

''Language was not only the product but one of the initial conditions of the evolution'' Page 124, Chance and necessity (1989, IVth impression) Collins Fontana Paperbacks.

2. பாலியல் அரசியல்- (Sexual Politics) பற்றி தமிழில் முதன் நிலை அறிமுக மற்ற சூழலில் இந் நாவலும் இக் கட்டுரையும் வெளிவருகிறது. பாலி யலுக்கும், அரசியலுக்கும் இடையி லான உறவு பற்றியும், பாலியல்— ஒரு விஞ்ஞானம் என்ற ரீதியில் பல ஆய்வுகளுக்கு உட்பட்டிருப்பது பற்றி யும் நிறைய பேசலாம். ஆனால், கட்டுரையில் எல்லைக்கு வெளியே இருப்பதால் அது குறித்து மேலதிக விளக்கம் இல்லை. பிராய்டு தொடங்கி இன்றைய பெண்நிலைவாதிகள்வரை பாலியல் அரசியல் பற்றி கருத்து களை ஆய்ந்துள்ளனர். இங்கு பாலி யலுக்கும், அதிகாரத்திற்கும் இடை யிலான உறவு பற்றிய கருத்துகள் பெரும்பாலும் மிஷேல் ஃபூக்கோ வினுடையவை என்பதை மட்டும் தெரிவித்து கொள்கிறேன்.

3. 1960-களில் ஜெர்மனில் வெளிவந்த ஹ்யூபட் ஃபிக்ட்எழுதிய'டீ பலேட்டா' என்ற நாவல் குறித்து ''மார்ஷல் ரைஷ்—ராணிக்கி'' எழுதியுள்ள விமர் சனம் ஒன்று **ஜெர்மானிய புத்திலக் கியம்** என்ற நூலில் வெளி வந் துள்ளது. (1981 தென் மொழிகள் புத்தக நிறுவனம்—சென்னை) அந் நாவலின் நாயகன் யக்சி கூறுகிறான். ''அதிகாரத்தை தவறாக பயன்படுத் தியதாலும், கொலை, பொய்மை, கொள்ளை, சித்திரவதை, கூட்டாக கொன்று குவித்தல், பொய்ச்சான்று புகலுதல், நீதிபதி பொறுப்பை தவறாக பயன்படுத்துதல், ஆசிரியர் பொறுப்பை தவறாக பயன்படுத்து தல் ஆகியவற்றில் ஈடுபட்டதாலும், குற்றவாளி வர்க்கத்தில் சேராமல் தப்பித்துக் கொண்டவர்களை மனதில் கொண்டு பார்த்தால், குற்றவாளி வர்க்கத்தில் சேர்ந்திருப்பதே பெரும் கௌரவம் என்று தோன்றக் கூடும்'' (பக். 384)

4. துகள் பௌதிகத்தில் (Particle Physics) எலக்ட்ரான், எதிர் மின்னணு துகள் (— e), பாசிட்ரான் நேர் மின்னணு எலக்ட்ரான் ( + e) இந்த துகள்களும் எதிர் துகளும் (பாசிட் ரானும்) ஒன்றை ஒன்று சந்தித்தால் மோதிபிணைவுற்று பெரும் ஆற்றலை வெளிப்படுத்தும். இவ் வாற்றல் 'புலக்குவாண்டுகள்' எனப்படும்— இப்படி நாம் வாழும் உலகுக்கு (world), எதிர் உலகு (anti-world), இருக்கலாம் என பௌதீகவாதிகள் நம்புகின்றனர்.

# விவசாயச் சமூக உளவியலின்
# வெளிச்சத்தில் 'சனங்களின் கதை'

அ. மார்க்ஸ்

கவிதை பற்றிய ரொம்பவும் மேட்டிமைத் தன்மை மிக்க வரையறைகள் உருவாக்கப்பட்டுக் கொண்டிருந்த தமிழ்ச் சூழலில் **சனங்களின் கதையின்** வருகை அம் முயற்சிகளையெல்லாம் பொக்கென ஓர் கணத்தே போட்டுடைத்துவிட்டது. நாங்கள் தான் கவிதைக்கு 'அத்தாரிடி' என்று சொல்லி இறுமாந்து கிடந்தவர்களெல்லாம் ஓராண்டுக்கு முன் இந் நிலையை எதிர்பார்த்திருக்கமாட்டார்கள். கவிதைகள் பற்றி இவர்கள் அளவு படித்திராத இந்தக் கிராமத்துச் சாதாரணனின் பட்டிக்காட்டு எளிய சனங்கள் பற்றிய இக் கவிதைகளை ஒரு காலத்தில் கண்டுகொள்ளாமலிருந்த இவர்கள், இவை குலுக்கிய குலுக்கலில் அதிர்ந்து போய், தாங்கள் பெரும்பான்மையான ஆர்வலர்களிடமிருந்து அந்நியப்பட்டுப் போகவில்லை என்பதை நிருபிப்பதற்காகவாவது இன்று **சனங்களின் கதையை** அங்கீகரிக்க வேண்டிய அவசியத்திற்குள்ளாகி இருப்பதையும் நாம் பார்க்க முடிகிறது. ''பழமலை அலை'' என்று சொல்லும் அளவிற்கு இன்று பழமலைப் பாணிக் கவிதைகள் சிற்றிதழ்களை அலங்கரிக்கத் தொடங்கிவிட்டன.

பொதியவெற்பன் முதல் **கி.ரா.** வரை ஞானி முதல் சுஜாதா வரை மயங்கிக் கிறங்கிநிற்கும்இக்கவிதைகள்பழமலையின் இருபதாண்டுக் கால உழைப்பின் விளைபொருள். பிள்ளைப் பிராயத்து நினைவுகளை அசைபோட்டு அசைபோட்டுப் பல் வேறு வடிவங்களில் எழுதி, அறிவும் அனுபவமும் வளர வளர அவற்றை மேலும் செழுமைப்படுத்தி, செறிவாக்கி, அவரறிந்த நண்பர்கள், கவிஞர்கள் அனைவரிடமும் கொடுத்துக் கருத்துக் கேட்டு, திருத்தங்கள் மேற்கொண்டு உருவானது **சனங்களின் கதை.** பழமலை கவிதைகளின் மூன்று வடிவங்களை ஒப்பிட்டுப் பார்க்கும் போது இந்த உழைப்பு வீண்போகவில்லை என்பது தெரிகிறது. வடிவச் செழுமையும் சொற்செட்டும் பழமலையிடம் எப்படிக் கூடி வந்திருக்கிறது என்கிற வியப்பு தவிர்க்க இயலாது. இத்தனை நீண்ட காலம் தனது படைப்புகளை வேறு எந்தப் படைப்பாளியாவது அடைகாத்துச் செழுமைப்படுத்திப் பின் வெளியிட்டிருக்கிறாரா என்றெனக்குத் தெரியவில்லை. ஆக உணர்ச்சி வேகத்தில் படைக்கப்பட்டவை அல்ல இந்தக் கவிதைகள்; நின்று நிதானித்து எழுதப் பட்டவை. பழமலையின் ஒழுங்கும் நேர்த்தியும் அவரது கையெழுத்துப் பிரதிகளிலுங்கூட வெளிப்படும். நான் பார்த்த மூன்று படிகளையும் அவர் அழகுற எழுதி, கோப்பில் பொதிந்து, முதல் பக்கத்திலிருந்து இறுதிப் பக்கம் வரை என்னவெல்லாம் அமைய வேண்டும் என்பதற்கு மீளதிகச் சிரத்தை காட்டி...முதலிரண்டு பிரதிகளிலும் பழமலையின் சுருக்கமான வாழ்க்கைக் குறிப்பு வேறு. (அச்சில் ஏனோ அதைச் சேர்க்கவில்லை!)

இரு வேறு காலகட்டங்களில் எழுதப் பட்ட **சனங்களின் கதையின்** இரு படிகளை வரிக்கு வரி ஒப்பிட்டு ரசித்துப்

படித்துப் பார்த்தேன். வடமொழிச் சொற்களைப் பயன்படுத்துவதில் இறுக்கம் தளர்ந்திருப்பது, மேலும் மேலும் சிக்கனமாய்ச் சொற்களைக் கையாள்வது என எவ்வளவோ மாற்றங்கள் இருந்தாலும் அடிப்படையான உலகப் பார்வையில் எந்தச் சிறிய மாற்றமும் இல்லாமல் பார்த்துக் கொண்டிருக்கிறார் பழமலை. படிப்பு, அனுபவம், வல்லுநர்களின் ஆலோசனைகள் போன்ற எந்த ஆடுகளும் இந்த அடிப்படைப் பார்வையை மேய்ந்து விடாமல் ரொம்பவும் கெட்டிக்காரத்தனமாக அவர் இருந்திருப்பது எனக்குப் பெரிய அளவில் வியப்பாக இல்லை. என்னைப் பொறுத்தமட்டில் பழமலை எனக்கொரு எழுத்தாள நண்பர் மட்டுமல்லவே. என்னுடைய அன்பிற்குப், மரியாதைக்கும், பாசத்திற்குமுரிய இயக்கத் தோழருமில்லையா? *சுமார் ஐந்தாண்டு* காலமாக நான் அவருடன் நெருங்கிப் பழகியிருக்கிறேன் அல்லவா?

சுமார் மூன்றாண்டுகள் இருக்கலாம். ஒரு பஞ்சாயத்துக்காக அவரிடம் வந்திருந்தேன். சமூக அங்கீகாரம் பெற்ற இரண்டாம் மனைவி, குடும்பம் ஆகியவற்றின் லயிப்பில் முதல் தொடர்பைப் புறக்கணிக்கத் தொடங்கிய ஒருவர் குறித்து அந்த முதல் மனைவியின் சார்பாக நான் பழமலையை அணுகினேன். இந்தப் பிரச்சினையில் அவர் கொண்டிருந்த கருத்து என்னை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. பழமலை என்கிற நானறிந்த புரட்சிஇயக்க முன்னோடியின் உள்ளே ஒளிந்திருந்த **தந்தைவழிச் சமூகப் பாலியல் ஒழுக்கவாதி**யின் (patriarchal sexual moralist) குரல் என்னை ரொம்பத்தான் உலுக்கி விட்டது. கொஞ்சம் யோசித்துப் பார்த்த போது பழமலையின் பார்வை தந்தை வழிச் சமூக **விவசாய** வர்க்கத்தினுடையதுதான் என்பது புரிந்தது. நம்மில் பலரிடமும் இப்படிப் பல பார்வைகள் அடி மனத்தில் ஆழப் புதைந்து கிடக்கின்றன. நமது நகர வாழ்க்கை அனுபவங்களோ, ஏன் புரட்சிகர இயக்கச் செயற்பாடுகளோ கூட இவற்றை மேய்ந்துவிட நாம் அனுப்பதில்லை. வர்க்க நீக்கம் செய்து கொள்வது குறித்து ரொம்பவும் கொச்சையான பார்வையே நம்மிடம் மிகுந்திருக்கிறது. சாப்பிட்ட தட்டை நாம் கழுவி விட்டால், தீபாவளிப் பண்டிகை கொண்டாடாவிட்டால், மனைவியின் தாலியைக் கழற்றி விட்டால் வர்க்கநீக்கம் செய்துகொண்டாகி விட்டது என்று நம்புகிறோம். அடியாழத்தில் கொழுத்துத் திரியும் பன்றிக் குட்டிகளை படிப்பு, அனுபவம் போன்ற ஆடுகள் ஒன்றும் செய்ய முடிவதில்லை. இந்தப் பன்றிக் குட்டிகள் இயக்கச் செயற்பாடுகளையும் பார்வையையும் எந்த அளவிற்குப் பாதித்து விடுகின்றன என்பது வேறுகதை. அவற்றைக் கொஞ்சம் ஒதுக்கி வைத்து விட்டு மீண்டும் பழமலை கவிதைகளுக்குள் நுழைவோம்.

நான் சொல்ல வருவது இதுதான். **சனங்களின் கதை**யின் 'பழமலை அமைதி' யினூடாக துருத்திக் கொண்டு தனியே நிற்கக் கூடிய — கொடுவாள் பேசுவது போன்ற — மிகச் சில பகுதிகளும், 'ஓசை இல்லாத இடி', 'நெருக்கடி', 'முடிச்சை வெட்டு', 'பதினாறு பவுன் சங்கிலி' போன்ற சில கவிதைகளும் தவிர பிற அனைத்தும் ஒரு தந்தை வழி விவசாயச் சமூகத்தின் கூட்டுக்குரலாகவே வெளிப்பட்டிருக்கிறது. இந்த உருவாக்கத்தில் பழமலை என்கிற மனிதரின் பங்கு மிகக் குறைவானதே. மேலே செல்லுமுன் இத்தகைய விவசாயச் சமூகத்தின் சமூக உளவியல் குறித்து மார்க்சியத் தத்துவ முன்னோடிகளில் முதல்வராகிய **பிளக்கனாவ்**, உளப் பகுப்பாய்வு அறிஞர்களாகிய **வில்ஹெல்ம் ரீச்**, **எரிக் ஃப்ரம்**, இந்தியச் சமூகவியல் அறிஞராகிய **யோகேந்திர சிங்** ஆகியோர் கூறியுள்ள கருத்துக்களை மிகச் சுருக்கமாக வேனும் தொகுத்துக் கொள்வோம்.

நிலத்தோடு கட்டப்பட்டவர்கள் இந்த மக்கள். இயற்கையையும், இயற்கை நிகழ்வுகளையும் சார்ந்து வாழ்வை அமைத்துக் கொண்டவர்கள். நிலம் இயற்கை ஆகியவற்றின் ஆற்றலையும்

அதிகாரத்தையும் மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டவர்கள். கிராமமும், உறவினரும், மாடும் கன்றுகளும் மட்டுமல்ல இந்த நிலம், தோட்டம் அதில் வளரும் வேம்பு, முருங்கை ஆகியவற்றோடும் ரத்தமும் சதையுமாய் ஆகிப் போனவர்கள். இவர்களின் குடும்பம் ஒரு சிறிய அளவிலான பொருளாதார உற்பத்தி அலகு. பழமலையின் 'மாமா' வையும் 'அப்பா'வையும் போன்ற ஒரு வலிமை வாய்ந்த குடும்பத் தலைவனின் கீழ் இந்தக் குடும்ப உறுப்பினர் அனைவரும் இணைந்து உற்பத்தியில் ஈடுபடுகின்றனர். மேலிருந்து கீழான ஒரு அதிகார உறவுமுறை இதில் தவிர்க்க இயலாது. குடும்பத் தலைவனுக்கும் இதர பெண்டுபிள்ளைகளுக்குமுள்ள உறவு அடிமைத் தன்மையாய் அமைந்திருக்கும். இவர்களின் உற்பத்தி முறை ஒரு இறுக்க மான குடும்பக் கட்டைக் கோருகிறது. இந்தக் குடும்பக் கட்டு என்பது பெண்டு பிள்ளைகள் மீதான பாலியல் ஒடுக்கு முறையைக் கோருகிறது. இந்த அடிப் படையிலேயே ஆணாதிக்கத் தன்மையி லான பாலியல் ஒழுக்கக் கோட்பாடுகள் இந்தச் சமூகத்தில் உருவாகின்றன. தன்னோடு கொல்லைக்கு வந்து இருட்டிய பின் திரும்பிச் சமைக்கும் மனைவியின் சமையிலில் தலைவன் குறை காண்பான். மனைவி இதை மட்டுமல்ல அவனது கம்மாவரத்து நாயகியையும் 'அக்கா'வாக ஏற்றுச் சகித்துக் கொள்ள வேண்டும். அவ்வப்போது இட்டிலி, பணியாரம், மீன்பொடி சகிதமாய் வந்து தலைவனைத் தரிசித்து மகிழ்ச்சியில் ஆழ்த்தி விட்டுப் போகும் உரிமை மட்டுமே கம்மாவரத் தாளுக்கு உண்டு.

ஒரே விவசாயச் சமூகத்திற்குள் உள்ள பொருளாதார ஏற்றத் தாழ்வுகளால் ஏற்பட்ட இடைவெளிகளை நிரப்பும் பாலமாகவும் இந்தப் பொதுவான ஒழுக்க வியல் உணர்வுகள் விளங்குகின்றன என்பர். இந்த ஒடுக்குமுறை, வேலையைத் தவிர வேறெதையும் தெரியாத விரக்தி யுற்றவர்களாகப் பெண்களையும், தந்தை யின் அதிகாரத்தில் அடையாளம் காண பவராக (ஆண்) பிள்ளைகளையும் மாற்றி யமைக்கும். குடும்பத்திற்குள் தந்தைக்கும் குடும்பத்திற்கு வெளியே அரசுக்கும் அடி பணிந்து நடக்கும் இயல்பினராக இதர உறுப்பினர்கள் உருவாகுவார்கள். இந்த அதிகாரமும் அதிகாரத்தின் கீழான பாது காப்பும் எப்போதும் இவர்களுக்கு தேவை யாயிருக்கும். தன்னை அதிகாரத்தோடு இனங்காணும் தலைவர்களோ அந்தச் சுகத்தில் அதிகாரத்தை ஏற்றுக் கொண்ட வர்களாக இருப்பர்.

மூடப்பட்ட இவர்களது உற்பத்தி முறை வெளியிலிருந்து அறிவுவரத்திற்கு அதிக வாய்ப்பளிக்காதது, கதைகள், பழ மொழிகள் ஆகியவற்றின் வாயிலான வாய் வழி அறிவுப் பரவலே இவர்கள் அதிகம் அறிந்தது. காலையில் கொல்லைக்குச் சென்று இருட்டிய பின் திரும்பி நெருப்புக் கேட்டு அடுப்பு ஊதும் இவர்களுக்கும் இவர்கள் மீது அதிகாரம் செலுத்துகிற குடும்பத் தலைவர்களுக்கும் தங்கள் உரிமைகள் பற்றியோ, அனுபவிக்கும் துன்ப துயரங்களின் பின்னணி பற்றியோ, அதிகாரத்தின் செயற்பாடு பற்றியோ ஒன்றும் தெரியாது. துன்ப துயரங்கள் பற்றிய பிரக்ஞை இருக்கும். கஞ்சி குடிப் பதற்கிராது. ஆனால் அதற்கான கார ணங்கள் இன்னதென்கிற அறிவுமிராது. நேரடியான நிலப்பிரபுத்துவக் கொடுமை இல்லாத குழுமூர் போன்ற தென்னாற் காட்டு வன்னியக் கிராமங்களில் வர்க்க எதிரியை அடையாளம் காண்கிற வாய்ப் புக் குறைவு. இவர்கள் கண்ட மிகப் பெரிய எதிரி வெல்லம் வாங்க வரும் வியாபாரிதான். விருத்தாசலம் கோவிலில் பிச்சை எடுக்கும் நிலைக்குச் சீரழிந்த போதும் கூட கீழாய்க் கெடந்ததுகள் கின்னாரம் பாடுவதுதான் பெரியதாய்த் தெரியுமே யொழிய தாங்கள் கஞ்சிக் கில்லாமல் போனதற்கான காரணங்கள் இவர்கள் கண்ணில் படுவதில்லை. தரகு முதலாளிகளா இல்லை தேசிய முதலாளிகளா என்பதெல்லாம் இவர் களுக்கு ரொம்பவும் அந்நியமான விஷயங்கள். தூரத்தில் இருக்கும் அரசை

யும் அதிகார வர்க்கத்தையும் இவர்கள் எதிரிகளாய்ப் பார்ப்பதில்லை. கேசவன் நமக்குப் பணிகிறான். கேசவனை நாம் பாதுகாக்கிறோம். அது போல்தான் நாம் அரசுக்குப் பணிவது. அரசு நம்மைப் பாதுகாக்கிறது. வரிகளை நாம் ஒழுங்காகக் கட்டவேண்டும். வரிகள் இல்லாவிட்டால் அரசு எப்படி இயங்கும் ?

சிறு விவசாயி தன்னை எப்போதும் ஒரு நில உடமையாளனாகவே அடையாளம் காண்கிறான், தன் துன்ப துயரங்களுக்கு அவன் நொந்து கொள்வது "தரித்திரி நான் ஆனேனே" என்று விதியைத் தான், கஷ்டங்களோடு அவன் சமரசமாகி விடுகிறான். எதார்த்த வாழ்விற்கும் அதுகுறித்த உலகப் பார்வைக்கும் விவசாய சமூகத்திற்குள் முழுமையான ஒத்திசைவு விளங்குகிறது. (There exists perfect harmony between existential order and normative order). இந்த ஒத்திசைவு தகரும்போது மட்டுமே அங்கே எதிர்ப்பும் கலகமும் பிறகக வழி தோன்றும்.

அரசையும் அதிகாரத்தையும் அது அளிக்கும் பாதுகாப்பிற்காக நம்பி அண்டியிருக்கும் இவர்கள் எந்தப் பிரச்சினை குறித்தும் தங்கள் மண்டையை உடைத்துக் கொள்வதில்லை. அதெல்லாம் 'மேலே இருப்பவர்கள்' பாடு. இம்மன நிலை ஒருவிதமான சுதந்திரம் குறித்த அச்சத்தையே (Fear of Freedom) அவர்களிடம் ஏற்படுத்திவிடுகிறது. விவசாயி தன்னைக் கும்பலில் ஒருவனாகவே அறிந்து கொள்கிறான். கும்பலில் அவன் ஒரு சல்லி, குடும்பத் தலைவர்கள் அதீத சுயம் (ego) உடையவர்களாக இருப்பதென்பது இன்னொரு பக்கம். தன்னையும் தன் குடும்பத்தையும் பற்றிக் கவிதைகள் எழுதிக் கொள்வதெல்லாம் இந்தத் தந்தை வழிச் சுயத்தின் வெளிப்பாடுதான். இந்தப் பண்புகளின் மறுதலையாய் அவன் ரொம்பவும் இரக்கமறற குரூரமானவனாகி விடுகிறான். இந்த மக்களிடம் அகப்பட்ட திருடனின் கதையை நாம் கோபல்ல கிராமத்தில் பார்த்தோம். பாலியல் ஒழுக்க விதிகளை மீறிய இளம் பெண்கள் அவர்களது பெற்றோர்களாலேயே வெட்டிக் கொல்லப்பட்ட சேதிகள் எங்கள் கிராமத்தில் ஏராளம்.

உலகெங்கிலுமுள்ள விவசாயச் சமூகங்கள் கூட்டுக் குடும்ப வடிவிலானதே என்பர். பொருளாதார, கலாச்சார, மதம் மற்றும் அரசியல் நடவடிக்கைகளின் அடிப்படை அலகாக கூட்டுக் குடும்பமே விளங்குகிறது. குழந்தைகளின் வளர்ச்சிப் பருவத்தில் கூட்டுக் குடும்பம் ஏற்படுத்தும் தாக்கம் அதிகம். கூட்டுக் குடும்பத்தில் வாழ்வது குழந்தைகளுக்கு எப்போதுமே ஒரு இனிய அனுபவம்தான். உறவினர்கள் வருவதும், ஏதோ ஒரு சுவையான நிகழ்ச்சி நடைபெறுவதும் தொடர்கிறது. நெருங்கிய உறவினரால் பாதுகாக்கப்பட்டு பொத்தி வளர்க்கப்படும் கூட்டுக் குடும்பக் குழந்தை எபபோதும் ஒருவரைச் சார்ந்திருக்கும் பாதுகாப்பிற்காக ஏங்கியிருக்கும் இயல்புடையதாகி விடுகிறது. இளமைக் காலம் இத்தகைய குடும்பச் சூழலில் அமைந்து போனவர்கள் இந்தப் பாதுகாப்பு நாட்டத்தையும் — இதன் மறுதலையான அதிகாரத்திற்கு அடங்கிப்போதலையும் — எச்சசொச்சமான பண்பு நலனாக இறுதிவரை பெற்றிருப்பர். அதிகம் அந்நியமாதலுக்கு ஆட்படாமல் உணர்வுவயமான உலகில இயங்குவர். உறவினர் மீதும், மூத்தவர்கள் மீதும் அதிக ஒட்டுதலும், ஈடுபாடும், உணர்ச்சி வயமான பிணைப்பும் கொண்டிருப்பர். பெண்களை அடிமைகளாகவே நடத்துவர். அதிகாரம் செலுத்துவதில் மட்டுமல்ல அதிகாரத்திற்குக் கட்டுப்படுவதிலும் பிரியமுடையவர்களாக இருப்பர். கஷ்டங்களைத் தங்கள் விதியாக மட்டுமல்ல, குற்றத் தண்டனைகளாகவும் ஏற்றுக் கொள்வர். மகிழ்ச்சியடையும் திறனே பழுதுபட்டவர்களாக இருப்பர். மாற்றங்களுககும், நவீனமயமாதலுக்கும், புதிய சிந்தனைகளுக்கும் எதிராக இருப்பர். பழமைக்கு ஏங்கும் (nostalgia) இயல்புடையவராக இருப்பர். கருக் குடும்பத்தில் (nuclear family) வளர்ந்தோருக்கு இவற்றிற்கு மாறான பண்புகள் இருக்கும் என்பர்.

இந்தியக் குடும்பங்களில் — அவை நகரத்தில் இருக்கும் மத்திய தர வர்க்கக் கருக் குடும்பங்களாக இருந்தபோதிலும் — கூட்டுக் குடும்ப உளவியலே விளங்குகிறது என்று சமூகவியலாளர்கள் குறிப்பிடு கின்றனர். இளம் வயதில் இத்தகைய விவசாயக் குடும்பத்தில் பயிற்சி பெற்ற ஒருவன், விவசாயச் சமூகத்தை விட்டு விலகி மத்தியதர வர்க்கமாக மாறினாலும் கூட தனது தந்தை வழி விவசாயச் சமூக உளவியல், பாலியல் ஒழுக்கப் பார்வை முதலியவற்றை அப்படியே மத்தியதர வர்க்கத்துக்கேற்றதாய் சிதைத்து மாற்றிக் (mutate) கொள்கிறான். கிராமப்புறங் களிலும் கூட இடைநிலை மற்றும் தாழ்ந்த சாதியினர் மத்தியில் நிலமின்மை, பற்றாக் குறை போன்ற எதிர்மறைக் காரணங் களின் விளைவாகக் கூட்டுக் குடும்ப அமைப்பிற்குப் பதிலாகக் கருக் குடும்பங் கள் அதிகமாக இருந்தாலும் — பழமலை காட்டும் குடும்பங்கள் போல — கூட்டுக் குடும்ப உளவியலே இவைகளுள்ளும் நிலவுகிறது என்று **யோகேந்திரசிங்** போன்றோர் குறிப்பிடுவது இங்கு கவனிக்கத் தக்கது.

கவிதைகளிலிருந்து விலகி தொடர் பில்லாமல் ஏதேதோ விசயங்களைப் பேசிக் கொண்டே போகிறேனே என எண்ண வேண்டாம். பழமலை கவிதைகள் காட்டும் உலகிற்கும் மேலே குறிப்பிட்ட விவசாயச் சமூக உளவியலுக்குமுள்ள இயைபை **சனங்களின் கதையை** மேலோட்டமாகப் படித்தோர் கூட உணர முடியும். சுருக்கம் கருதி ஓரம்சத்தை மட்டும் இங்கே பார்ப்போம்:

**சனங்களின் கதையில்** விவசாயச் சமூகத்தின் கூட்டுக் குரலாக ஒலிக்கும் கவிதைகளை மட்டும் எடுத்துக் கொண்டீர் களானால் அவற்றில் பெரும்பான்மை கிட்டத்தட்ட ஒரே வடிவப் பாங்கம் உடை யதாய் அமைந்திருப்பதைக் காணலாம். தொடக்கத்தில் எதார்த்த வடிவிலான ஒரு அறிமுகக் காட்சி. வாழைப்பழத்தைத் தோலோடு சாப்பிடுவதாகவோ, பேராண் டிக்குப் பேனெடுப்பதாகவோ, விளையாடிக் கொண்டிருக்கும போது வரும் விருந்தாளி யாகவோ. அம்மாயியின் சாவாகவோ இது அமையும். கவிதையின் மையப் பகுதியில் இந்த அறிமுகத்தினடியாக நடைச்சித்திர மாகப் படைக்கப்பட்ட பாத்திரத்தை முன்னணியாகக் கொண்டு அந்த விவசாய மக்களின் வறுமை அவலம் சித்திரிக்கப் படும். இந்த அவலம் வெறும் அவல மாகவே நின்றுவிடாது. இந்த அவலத்தி னூடே ஒரு ஆதரவும், பாசமும், பாது காப்பும், ஆதூரமும் இணைந்து ஒலிக்கும். இதயத்தை வருடும். உறவின் நெருக்க மும் அரவணைப்பின் கதகதப்பும் வறுமைக் குளிருக்கு இதமளிக்கும். இந்த இதமும் சுகமும் வறுமைத் துயரைப் பின்னுக்குத் தள்ளும். நிலவும் மயான அமைதியை அதிர்ச்சிக்குள்ளாக்கிக் குலைப்பதற்குப் பதிலாக இந்த அமைதி யின் லயத்திற்கு வாசகனின் இதயம் மீட்டப்படும். பழத் தோலையும் விட்டுவிட இயலாத அம்மா உறங்கும் மகனுக்கு முந்தானை சார்த்துவாள்; மகனிடம் கொள்ளிக்கு யாசிப்பாள். கிளியப்பட்டி விருந்து நடந்துவரும் கிழவி அப்பாவுக்கு மொச்சையும் முருங்கைக்காயும் கொண்டு வருவாள். தாத்தா பொரியும் பொட்டுக் கடலையும் மட்டும் கொணடு வருவ தில்லை. மகனை வெளிச்சத்திலேயே வீட்டிற்குத் திரும்ப அறிவுரையும் சொல் வாள். தடியூன்றிவரும் செவிட்டுக் கிழவி பள்ளி இடைவேளையில் பேரனைக் கண்டு தின்பண்டம் ஊட்டுவாள் இப்படி **வறுமைத் துயர்** × **உறவுப் பாதுகாப்பு** என்கிற எதிர்வு **சனங்களின் கதை** முழுவதும் ஊடாடி நிற்பதைக் காணலாம். இந்த முரண்கூறு களுக்கிடையேயான ஒருமை கவிதையின் அழகைச் சாத்தியப்படுத்திவிடுகிறது. இறுதியில் கவிதை முற்றிலுமாய் அறிவுத் தளத்திலிருந்து விலகி உணர்வுத் தளத்தை எட்டிச் சடக்கென முடிகிறது. ஓர் உணர்வு மயமான பழமை ஏக்கத்தில் (emotive nostalgia) மனம் குவிகிறது. 'இந்தக் குரலை எரிப்பதற்கு நெருப்பால் முடியாது' என்பது போல் கவிதைகள் உச்ச இறுதி

**ஆக சனங்களின் கதை,** கிராமங்களின் கதையாகப் பரிணமிக்க வில்லை. சாதிகளாய்ப் பிளவுண்ட இந்திய கிராமங்களின் ஒட்டு மொத்தக் குரல் என ஒன்று ஒலிப்பது சாத்தியமில்லை. எனவே அப்படி ஒரு குரலைப் படைப்பிற்குள் கொண்டு வருவது சாத்தியமில்லைதான். இந்திய நாகரிகத்தின் அடிப்படை நுண் அலகாக இந்திய கிராமத் தைக் கருத முடியாது என்றும் இந்தியா என்பது சமூகவியல்ரீதியில் பார்க்கும்போது கிராமங்களால் ஆனதல்ல என்றும் டுமான்ட் போன்ற சமூகவியலாளர்கள் பேசுவதின் நியாயம் புரிகிறது.

பெறுவதை பழமலையில் அடிக்கடி காண முடியும்.

★

இங்கே ஒரு கேள்வி எழுகிறது. **சனங் களின் கதை** இன்றைய தமிழ்க் கிராமத் தின் அல்லது தமிழ் விவசாயச் சமூகத்தின் ஒட்டு மொத்தமான ஆன்மாவைப் படம் பிடித்துக் காட்டிவிட்டது என்று சொல்லி விட முடியுமா? முடியாது என்றுதான் சொல்லத் தோன்றுகிறது, பழமலைக்கும் குழுமூருக்கும் ஒரு கிராமம் என்கிற அடிப் படையிலான உறவு புவியியல்ரீதியானது தான். கிராமத்தின் அனைத்துப் பிரச்சினை களையும், அனுபவங்களையும் பழமலை கவிதைகளில் கொண்டு வந்துவிடவில்லை. சுற்றிச் சுற்றி அவரது சுற்றம், நட்பு, பண்ணையாளோடும் அவர்களுக்கிடையே யான முரணற்ற ஒத்திசைந்த உறவனுப வங்களோடும் கவிதைகள் முடிந்து விடு கின்றன. கேசவன், தையல்நாயகி, தில்லை, சின்னக்கண்ணு என ஒரு சிலர் தவிர மற்ற அனைவரும் அவரது சுற்றத் தினர்தான், சாதிக்காரர்கள்தான். மற்ற வர்களும் இவர்களை அண்டியவர்களா கவே படைக்கப்படுகின்றனர். பண்ணை யுறவும், கடனுறவும் கூட ரொம்பவும் இணக்கமானதாகவே இருக்கிறது. விவசா யச் சமூகத்தின் ஒத்திசைவைக் குலைக்கும் எந்த அம்சமும் அதிலில்லை. இங்கும் ஒரு பாதுகாப்பும் அரவணைப்புச் சுகமுமே மேலோங்கி நிற்கிறது. செருப்பால் அடித்த போதும், விளக்குமாற்றைத் தூக்கிய போதும் காலில் விழுகிற கேசவனின நன்றி அந்த விவசாயச் சமூகத்திற்கு மட்டுமல்ல, எழுதிய பழமலைக்கும், படிக்கிற நமக்கும் ஒரு புளகிதத்தையே அளிக்கிறது.

ஆக **சனங்களின் கதை,** கிராமங் களின் கதையாகப் பரிணமிக்கவில்லை. சாதிகளாய்ப் பிளவுண்ட இந்திய கிராமங் களின் ஒட்டு மொத்தக் குரல் என ஒன்று ஒலிப்பது சாத்தியமில்லை எனவே அப்படி ஒரு குரலைப் படைப்பிற்குள் கொண்டு வருவது சாத்தியமில்லைதான். இந்திய நாகரிகத்தின் அடிப்படை நுண் அலகாக இந்திய கிராமத்தை கருத முடியாது என்றும் இந்தியா என்பது சமூகவியல் ரீதியில் பார்க்கும் போது கிராமங்களால் ஆனதல்ல என்றும் டுமான்ட் போன்ற சமூகவியலாளர்கள் பேசுவதின் நியாயம் புரிகிறது. இங்கே விவசாயச் சமூகமே பிளவுண்டு கிடக்கிறது. மேலைச் சமூகங் களுக்கும் நமக்குமுள்ள வேறுபாடுகளில் இது பிரதானமானது. பழமலையே சொல்வதுபோல மேல்கள், நடுகள், அடிகள் என்கிற முப்பிரிவில் நடுகளின் வாழ்க்கையும், உளவியலும் கூட்டுக் குர லும் மட்டுமே சனங்களின் கதையில் ஒலிக் கிறது. சுந்தர ராமசாமியும் ஞானக்கூத்த னும் இதையும் கூடச் செய்துவிட முடியாது என்பது எத்தனை உண்மையோ அத் தனை உண்மை பழமலையால் கேசவன் களின் குரலை ஒலித்துவிட முடியவில்லை என்பதும்.

★

பழமலை கவிதைகளின் வாசக ரஞ்சக மான வெற்றி என்பது இந்த உளவியலை நுண்மையாக வெளிப்படுத்தியதிலேயே அடங்கியிருக்கிறது. இதனை இவரது

படிப்பு அல்லது இயக்க அனுபவம் என்கிற ஆடு அல்லது புல்டோசர் மேய்ந்த பகுதிகளில் ஒட்டுமொத்த அமைதியிலிருந்து கவிதை விலகி விடுகிறது 'கொடுவாள்' தத்துவம் பேசும் போது இப்படித்தான் ஆகிவிடுகிறது. தாமஸ் கிரேயைப் படித்தறிந்த பேராசிரியர் பழமலையின் குரல் தூக்கலாய் ஒலித்துத் தத்துவ விசாரம் செய்யும் ஒசையில்லாத இடி போன்ற கவிதைகளும விவசாய உளவியலைப் பிரதிபலிப்பதில்லை. இத்தகைய இருப்பியற் பிரச்சினைகள் அந்த மக்களின் பொதுப் பிரச்சினைகள் அல்ல. கிராம வாழ்வுடன் தொப்பூழ்க் கொடி இணைக்கப்பட்ட பேராசிரியரும் இயக்கவாதியுமான பழமலை என்கிற படைப்பாளியின் கருத்தியலின் வெளிப்பாடாகவே இத்தகைய கவிதைகளை நாம் காண வேண்டும்.

இவற்றைத் தவிர்த்துப் பார்த்தோமானால் சனங்களின் கதையை ஒரு துன்பியல் இலக்கியமாக (Tragic genre) வகைப்படுத்த முடியுமா? இதர இருபத்தெட்டு பாடல்களில் ஆறு (பாணைத்தாத்தா, அம்மாயி இறந்துவிட்டாள், தில்லை, சேத்தாளி, கமலி ஆச்சி, ராசா என்கிற புகழேந்தி) மரண கீதங்கள். துன்பமானாலும் இறுதியில் மறு உலகிலாவது கூடுவதாக முடியும். இலக்கிய மரபிற்கு இயைபுடையதாய் இருந்தபோதும் சனங்களின் கதைப் பாடல்களில் பெரும்பான்மை அவலச் சுவைப் பாடல்களே, துன்பியற் கவிதைகளே. "வரலாற்று ரீதியான தேவைக்கும் அதனை நடைமுறைப்படுத்தும் சாத்தியமின்மைக்குமுள்ள மோதலே துன்பியல்" என்பார் பேராசான் எங்கல்ஸ். சனங்களின் கதையில் அவலப்படும் ஏழை விவசாயிகள் இயக்க ரீதியாய் ஒன்றிணைந்து போராட வேண்டும் என்பது வரலாற்றுத் தேவை. அதை நடைமுறைப்படுத்தும் சாத்தியங்கள் பழமலை காட்டும் உலகத்திற்குள் இல்லவே இல்லை என்பது மட்டுமின்றி இந்தத் தேவை குறித்த பிரக்ஞையுடைய சனங்களே எவருமில்லை. எனவே சனங்களின் கதை வெறும் அவலப் பதிவுகளாகவே நின்று விடுகின்றனவேயொழிய ஒரு உன்னத துன்பியற் காவியமாக உயர முடியவில்லை.

★

அவலச் சுவையை மனிதன் எப்போதுமே ரசித்து வந்திருக்கிறான் என்பது மட்டுமா சனங்களின் கதையின் வெற்றிக்குக் காரணம்? அதுமட்டுமல்ல. நம்முள் ஆழப் பதிந்துகிடக்கும் தந்தை வழிச் சமூக விவசாய உளவியலுடனும் அது சிதைந்து உருவான மத்திய தரவர்க்க உளப்பாங்குடனும் பழமலை கவிதைகள் ஒத்திசைகின்றன என்பதே முக்கிய காரணம். தவிரவும் நம் எல்லோரினது பழமை ஏக்கத்திற்கும் பழமலை கவிதைகள் தீனி போடுகின்றன. சனங்களின் கதையை ஈடுபாட்டுடன் படிக்கும் யாரும் ஒரு கணம் புத்தகத்தை மடியில் வைத்துவிட்டுத் தங்களின் பழமையை அசைபோடாதிருக்க முடியாது. அந்தப் பழமை எத்துணை சோகமானதாயினும் அதைக் கடந்துவந்து இப்போது அசைபோடும் போது சுகமாகத்தான் இருக்கிறது. பழமலையின் கிராமக் காட்சிகளும், நடைச் சித்திரங்களும், உரையாடல்களும், உணர்வெழுச்சி முத்தாய்ப்பும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாய் பழமை ஏக்கத்தைப் பூர்த்தி செய்ய உதவுகின்றன. பழமலையின் எளிய தத்துவ விசாரங்கள் சிலருக்கு இதமளிக்கிறது. மலச்சிக்கல்காரர்கள் நமது பொருளியலில் லயித்து விடுகின்றனர்.

★

நமது பொருளியலைத் திறவுகோலாகக் கொண்டு உளப்பகுப்பாய்வு நோக்கில் சனங்களின் கதையை அணுகினால் மேலும் சில பகுதிகள் விளக்கமுறும். முழுமையாய் அப்பணியை இங்கே நிறைவேற்ற முடியாவிட்டாலும் ஒரு சில குறிப்புகளைத் தர முடியும்.

மலங்கழிப்பது தொடர்பான நகைச்சுவைகளும் பழங்கதைகளும் கிராம மக்கள் மத்தியில் நிறைய வழங்குவதைக் காண

லாம். ஆதிவாசிகள் மத்தியிலும் இத்தகைய புனைவுகள் உண்டு என்பர். இவற்றிற் கெல்லாம் உளவியலடிப்படையிலான விளக்கத்தை பிராய்டின் உளப் பகுப்பாய்வு அணுகல்முறை தருகிறது.

குழந்தை பிறந்தவுடனேயே பாலியல் உணர்வு கொணடுள்ளது என்பதும் அதனை அது நிறைவேற்றிக் கொள்கிறது என்பதும் பிராய்டின் முக்கிய கண்டுபிடிப்பு களில் ஒன்று. ஆனால் குழந்தையின் இப் பாலியல் நடவடிககை எனபது நாம் எதிர்பார்ப்பதுபோல பிறப்புறுப்பு சார்ந் ததோ, கரு உருவாக்கத்துடன் தொடர் புடையதோ அல்ல. பாலியல் உந்துத லுக்கும் உடலின காம உணர்வு மணடலங் களுக்கும் (erogeneous zones) இடையே சில நெருக்கமான தொடர்புகளைப் பிராய்டு நிறுவினார். குழந்தையின் பாலியல் நடவடிக்கையின் வளர்ச்சியில் முதல் நிலை வாய் மண்டலம் (oral zone) சார்ந்தது. இதனுடன இணைந்த செயற் பாடுகளாகிய உறிஞ்சுதல், கடித்தல் போன்றவை இந்நிலையில் பாலியல் நட வடிக்கைகளாகின்றன. இரண்டாவது நிலை ஆசனவாய் மண்டலம் (anal zone) சார்ந்தது. பால்குடி மறப்பதி லிருந்து இது தொடங்குகிறது. மலத்தைக் கழிப்பதிலும், அடக்கி வைப்பதிலும் இக் கால கட்டத்தில் குழந்தை பாலியல் சுகத்தை அடைகிறது. மூன்று முதல் ஐந்து வயதுக்குள் பிறப்புறுப்பு சார்ந்த பாலியல் நடவடிக்கைகள் தொடங்கி வயது வரும்போது முழுமை எய்துகிறது.

இரண்டாவது நிலையை மட்டும் சிறிது விளக்குவோம். தடையற்ற மல வெளியேற்றம் என்பது குழந்தையின் ஆசனவாய்ச் சளிச் சவ்விற்கு இதமான தூண்டுதலைத் தருகிறது. வெளியேற்றப் பட்ட மலத்தின் தோற்றம், நாற்றம், ஆசனவாய்ப் பகுதியோடு அது ஏற்படுத் தும் தொழுகை, கையில் இழும்பும் போது ஏற்படும் இதம் ஆகியவை குழந்தை களுக்குச் சுகம் அளிக்கும் நிகழ்வுகளா கின்றன. தனது மலத்தைப் பார்த்துக் குழந்தை பெருமை கொள்கிறது. தனது உற்பத்தித்திறனின் முதல் வெளிப்பாடாக அதைக் கருதி மகிழ்கிறது. வளர வளர குழந்தை அதன் விருப்பத்திற்கு மலங் கழிப்பது இயலாமற் போகிற போது அதனை அடக்கி வைத்து வெளியேற்று வதும் அதனோடு கூடிய நடவடிக்கை களும் கூட அதற்குச் சுகமளிப்பதாய் அமைந்து விடுகினறன.

வளர்ந்து பெரியவரான பின்னரும் அவன் — அவளிடம் இந்தப் பண்புகள் எச்ச சொச்சமாய்த் தங்கி விடுகின்றது என் கிறது உளப்பகுப்பாய்வு அறிவியல். தங்கள் மலத்தைத் தாங்களே ரசிக்கும் பண்பு எல்லா மனிதர்களிடமும் ஓரளவு இருக்கவே செய்கிறது. இந்தப் பின்னணி யிலேயே ஆசனவாயைத் தொடர்பு படுத்திய அவமதிப்புச் செயல்களும் நகைச் சுவைகளும் மக்கள் மத்தியில் ஆழமான உணர்வுத் தாக்கங்களை ஏற்படுத்து வதைப் பார்க்க வேண்டும் என்கிறார் இது குறித்து விரிவாய் ஆராய்ந்த கால் அப்ரஹாம்.

ஆக, வளர்ந்த பெரியவர்களிடமும் கூட இளம் வயதின் இத்தகைய வாய் மண்டலம்/ஆசனவாய் மணடலம் சார்ந்த இயல்புகள் எஞ்சி நின்று சில பண்பு நலன் களாக வெளிப்படுகின்றன. இந்த அடிப் படையில் மனிதர்களை வாய்ப் பண்புகள் (Oral traits) உடையவர்கள் எனவும் ஆசனவாய்ப் பண்புகள் (anal traits) உடையவர்கள் எனவும் உளப் பகுப்பாய் வர்கள் பிரிப்பர். மனிதர்களின் பண்பு நலன்கள் பற்றிய ஒரு அறிவுத் துறையே உளப்பகுப்பாய்வுப் பண்பு நலத்துறை (Psychoanalyitic Charetorology) என்று உருவாகியுள்ளது.

இந்த அடிப்படையிலான ஆசன வாய்ப் பண்பு நலன்களைக் கீழ்க்கண்ட வாறு தொகுக்கின்றனர்: பெரும்பாலும் தந்தை வழிச் சமூகங்கள் ஆசனவாய்ப் பணபுகள் கொண்டதாகவே இருக்கிறது என்பர். தனது உடமைகளின் மீது அதீத அன்பு, கடமை உணர்வு, இப்படி அல்லது அப்படி (must/must not) என்று எல்லா வற்றையும் விதிகளாக்கி எளிமைப்படுத்தி

இறுதியாய்ச் சமூக மாற்றத்தை நோக்கிக் களத்தில் நிற்போர் இந்தக் கவிதைகள் ஏற்படுத்தியுள்ள வரவேற்பை எப்படி எதிர்கொள்வது என்கிற கேள்வி நம்முன் எழுகிறது. நம்மிடமுள்ள தந்தை வழிச் சமூக உளவியற் கூறுகள், ஒழுக்கப் பார்வைகள், கிராம வாழ்க்கையில் லயிப்பு, பழமை ஏக்கம், குடும்பப் பாசம், ஆசனவாய்ப் பண்புகள் ஆகியவற்றோடு இக்கவிதைகளின் சுருதி ஒத்திசைவதே இத்தகைய வாசக ரஞ்சக வெற்றிக்குக் காரணம் என்றோம். இதனை நமது 'முதுசொம்' எனப் பொதிய வெற்பனைப் போல குதூகலித்துக் கும்மாளமிடுவதா? பழமலை நம்புவது போல இந்தச் சனங்கள் தங்கள் நோயை அடையாளம் காணவும் போராட உந்தம் பெறவும் இவை உதவுமா? அல்லது போராட வேண்டிய வரலாற்றுத் தேவையைப் பழமலை நன்றாகவே வலியுறுத்திவிட்டார் எனத் திருப்திப்பட்டுக் கொள்வதா? பட்டிக்காடுகள் என உதாசீனப்படுத்தப்பட்டவர்களின் நனி சிறந்த நாகரிகங்களைப் பதிவு செய்து விட்டதாய் இந்திரன் போலப் பெருமை கொள்வதா?

உள் வாங்குதல்; பிடிவாதம்: குரூரம்; பிறர் மீது வெறுப்பு; ஒழுங்குகள் மீதும், தூய்மை மீதும், சிக்கனத்தின் மீதும் அளவுக்கதிகமான நாட்டம்; தன்னிலிருந்து வேறுபட்ட அனைத்தையும் அசுத்தமாய்க் காணுதல்; சிக்கனம் என்பது பொருளில் மட்டுமின்றி நேரம், ஆற்றலைச் செலவழிப்பது ஆகியவற்றிலும் நீடிப்பு; பணம் சம்பாதிப்பது; உடைமைகள் சேர்ப்பது; உருப்படியான உற்பத்தித் திறனோடு மாற்றியமைக்காமலேயே துண்டு துக்காணிகளாக அறிவைச் சேகரிப்பது: ஒழுக்க வாதம் பேசுவது; பெண்களை உடைமைகளாகக் கருதுவது; கால ஒழுங்கைக் கடைப்பிடிப்பதையும் எல்லாம் சமச்சீராக இருக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்துவது... இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம்.

ஆசனவாய்ப் பண்புகள் மிகுந்துள்ள எல்லோரிடமும் இந்தப் பண்புகள் அப்படியே படிந்திருக்கும் என்பதில்லை. நாம் எந்த அளவிற்கு ஆசனவாய்ப் பண்புகளுக்கு ஆட்பட்டிருக்கிறோம் என்பதையும் இதர நமது செயற்பாடுகள், சூழல் அனுபவம் ஆகியவற்றின் அடிப்படையிலும் இது கூடவோ, குறையவோ செய்யலாம். இறுதி ஆய்வில் நமது வாழ்நிலையே பண்புகளைத் தீர்மானிக்கிறது.

இந்த நோக்கில் நமது பொருளியல் கவிதையை நீங்கள் மறுபடியும் படிப்பதோடு இதர கவிதைகளையும் அணுகிப் பார்க்கவும் வேண்டுகிறேன். இவற்றை எழுதிய பழமலையிடமும் ஈர்க்கப்படும் நம்மிடமும் இந்தப் பண்புகள் எந்த அளவிற்கு வேரூன்றியிருக்கிறது, நமது பொருளியலை நம்மில் எத்தனை பேர் இரண்டாம் முறை படித்து ரசித்தோம் என்பதையெல்லாம் யோசித்துப் பார்க்கலாம். இந்த அடிப்படையில் நம்மிடம் கழித்துக் கட்ட வேண்டிய பண்புகளை அடையாளம் காணலாம். இந்திரன் கோபித்துக் கொண்டாலும் பரவாயில்லை எனத் துணிந்து அவற்றின் மீது ஆடுகளை மேயவிடலாம்.

இறுதியாய்ச் சமூக மாற்றத்தை நோக்கிக் களத்தில் நிற்போர் இந்தக் கவிதைகள் ஏற்படுத்தியுள்ள வரவேற்பை எப்படி எதிர் கொள்வது என்கிற கேள்வி நம்முன் எழுகிறது. நம்மிடமுள்ள தந்தை வழிச் சமூக உளவியற் கூறுகள், ஒழுக்கப்

பார்வைகள், கிராம வாழ்க்கையில் லயிப்பு, பழமை ஏக்கம், குடும்பப் பாசம், ஆசன வாய்ப் பண்புகள் ஆகியவற்றோடு இக் கவிதைகளின் சுருதி ஒத்திசைவதே இத் தகைய வாசக ரஞ்சக வெற்றிக்குக் காரணம் என்றோம். இதனை நமது 'முதுசொம்' எனப் பொதிய வெற்பனைப் போல குதூகலித்துக் கும்மாளமிடுவதா? பழமலை நம்புவது போல இநதச் சனங்கள் தங்கள் சேநாயை அடையாளம் காணவும் போராட உந்தம் பெறவும் இவை உதவுமா? அல்லது போராட வேண்டிய வரலாற்றுத தேவையைப் பழமலை நன்றாகவே வலியுறுத்திவிட்டார் எனத் திருப்திப்பட்டுக் கொளவதா? பட்டிக் காடுகள் என உதாசீனப்படுத்தப்பட்டவர் களின் நனி சிறந்த நாகரிகங்களைப் பதிவு செய்து விட்டதாய் இந்திரன் போலப் பெருமை கொள்வதா? சுருங்கச் சொன் னால் இக் கவிதைகள் படிப்பவர்கள் உள்ளத்தில் ஏற்படுத்தும் பதிவு மாற் றத்தை நோக்கியதா இல்லை இருப்பை உறுதி செய்வதற்கானதா? அல்லது இரண் டில் எது கூடுதலான தாக்கததை ஏற்படுத் துவதாய் இருக்கிறது?

இந்தக் கேள்விகளுக்கு விடை காண்ப தற்கு சமூக உருவாக்கத்தில் குடும்பம் போன்ற நிறுவனங்கள் மற்றும் அவற்றி னடியாக உருவாகும் உளவியல் ஆகியவற் றின் பங்கு குறித்த சில மார்க்சிய மற்றும் உளவியற் சிந்தனைகளை நாம் தொகுத் துக் கொள்ள வேண்டியிருக்கிறது: தனிச் சொத்தின் தோற்றத்தோடு குடும்பம் என்கிற நிறுவனத்தின் பிறப்பு குறித்த பேராசான் எங்கல்சின் கருத்துக்கள் நாம் அறிந்ததே. ஏற்றத் தாழ்வறற ஆதிப் பொதுமைச் சமூகங்களில் குடும்பம் என்கிற நிறுவனம் இருந்ததில்லை. தனிச் சொத் தின் அடிப்படையில் உருவான இந் நிறுவனம் பின்னர் தனிச் சொத்தையும், அதனடிப்படையிலான ஏற்றத் தாழ்வுகள் உள்ள, மேலிருந்து கீழான அதிகாரச் செயற்பாடுகளுடைய இச் சமூகத்தையும் கட்டிக் காக்கும் பிரதான கருவிகளில் ஒன்றாக மாறி இன்றுவரை செயற்பட்டு வருகிறது. இன்றைய குடும்பம் என்பது அரசு அல்லது தேசத்தின் ஒரு சிறிய அளவிலான வடிவம். அதிகாரத்திற்கு அடிபணிந்து போகும் மனநிலையின் பயிற்சிக் களன். 'தந்தை' என்கிற வடி வத்தில் ஒவ்வொரு குடும்பத்திற்குள்ளும் எதேச்சதிகாரத் தன்மையிலான அரசின் பிரதிநிதி நிலவுகிறார். இந்தத் தந்தை பின்பு நிறுவனத்தின் அதிகாரியாக (boss) வும், கட்சித் தலைவராகவும், ஆளும் (பாசிச) சர்வாதிகாரியாகவும் ஏற்றுக் கொள்ளப்படுகிறார். மகன் தந்தைக்கும் குடும்பக் கட்டிற்கும் பணிதல என்பது பின்னாளில் இவர்களுக்குப் பணிவதற் கான பயிற்சியேயாகும். ஆக பொருளா தார / சமூக அமைப்புகளின் மறு உருவாக் கத்திற்கேற்ற உளவியல் உருவாக்கம் என்பது குடும்பத்திலும் அதன் விரிவாக்க மான விவசாய மற்றும் மத்திய வர்க்கச் சமூகத்திலும் நிகழ்கிறது. ஒரு மேலிருந்து கீழான அதிகாரத்துவமிகக குடும்பச் சூழலில் தனது முதல ஐந்தாண்டுகளைக் கழிக்கும் குழந்தை சகலவிதமான பிற் போக்கான சிந்தனைக்கும் களனாகிவிடு கிறது. மதரீதியான அச்சங்கள், பாலியல் ரீதியான குற்ற உணர்வுகள் எனபன பின் னாளில் இத்தகைய பிற்போக்கான சிந்தனைகளை உறுதி செய்கின்றன. குடும்பம் என்பது அரசுக்குப் பணியும் பயிற்சிக் களன் என்கிற கருத்தை பிளக்கனாவ் போன்ற மார்க்சியப் பேரறி ஞர்களும் ஏற்றுக் கொள்கின்றனர். தேசத் தின் மீதும், இனத்தின் மீதும், மொழியின் மீதும் வெறியூட்ட தாய்மீதுள்ள பற்றையே பாசிஸ்டுகள் பயன்படுத்துகின்றனர். குடும்ப அமைப்பைக் காப்போம் என் பது இட்லர் கலாச்சாரத் துறையில் வைத்த முதல் முழக்கம். தந்தை வழி விவசாய உளவியலின் பின்னணியே தேசிய / இன வெறிக்கும், பாசிச நடவடிக் கைக்கும் களனாக அமையும் என்பதைச் சரியாகவே கண்டுணர்ந்த இட்லர், **விவசாயச் சமூகத்தைக் கட்டிக் காப்பது சேர்மானிய தேசத்தைக் கட்டிக் காப்பது** என்கிற முழககததை முன்வைத்ததையும் நாம் கருதிப் பார்க்க வேண்டும். விவசாய

வர்க்கத்தைக் காப்பதோ, குடும்பங்களைச் செழிப்பாக வைப்பதோ இட்லரின் நோக்க மன்று. மாறாக விவசாய உளவியலைத் தக்க வைப்பதும், குடும்ப நிறுவனத்தின் மூலமாக பாசிச உளவியலை வளர்த்தெடுப் பதுமே அவரது நோக்கம்.

எனவே பொருளாதார விடுதலை அடைந்துவிட்ட சமூகங்களில் பழைய நிறுவனங்கள் தகர்த்தெறியப்படுதல் வேண்டும். உடனடியாய்த் தகர்த்தெறிய முடியாவிட்டாலும் படிப்படியாய்த் தகர்த் தெறியும் நோக்கில் சமூகம் கட்டமைக்கப் பட வேண்டும். மாற்றியமைக்கப்பட வேண்டிய நிறுவனங்களில் குடும்ப நிறுவனம், தந்தைவழிச் சமூக ஒழுக்க உளவியல் முதலியன அடங்கும் எனபதை விளக்கத் தேவையில்லை. புரட்சிக்குப் பிந்திய சமூகங்களின் சீரழிவிற்கான பல காரணங்களில் இந்தத் திசையில் கவனம் எடுத்துக் கொளளாததும், கவனத்தை வற்புறுத்தியவர்களை "அராஜகவாதிகள்" என ஒதுக்கிப் புறக்கணித்ததும் ஒன்றா கும். இதன் பொருள் உடனடியாக நாம் எல்லோரும் குடும்பங்களைக் கலைத்துவிட வேண்டும் என்பதோ வரைமுறையற்ற பாலியலை ஆதரிப்பது என்பதோ அல்ல. ஒரு சரியான பொதுமைச் சமூகத்தில் இன்றைய வடிவில் குடும்பங்கள் இருக் காது, இன்றைய ஒழுக்க நியதிகளுக்கு அங்கே இடமில்லை என்கிற தொலை நோக்குடன் இன்றைய நிறுவனங்கள் அணுகப்பட வேண்டும் என்பதுதான். குடுமபக் கட்டு, பாலியல் ஒழுக்க ஒடுக்கு முறை விதிகள் ஆகியவற்றிலிருந்து விடு பட்டோர் ஒப்பீட்டளவில் மாற்றங்களை எளிதில் ஏற்றுக்கொள்ளத் தக்கவராக இருப்பர் என்கிற கருத்துக்களும் அவ்வளவு எளிதில் புறக்கணிககத்தக்கவை அல்ல. அஸ்வகோஷ் தனது சமீபத்திய நூலொன் றில் இதனைச் சுட்டிக் காட்டியிருப்பது கவனத்திற்குரியது.

இந்த நோக்கில் பார்க்கும் போது தான் அதிகாரத்தின் கனனாக விளங்கும் இத்தகைய பாசவலைகளை விரிப்பதையும் நம்மில் தீய்த்து கருக்கப்பட வேண்டிய சில உளவியற் கூறுகளுக்கு மறு உயிர்ப்புக் கொடுக்கும் நடவடிக்கைகளையும் நாம் எப்படிப் பார்ப்பது என்கிற கேள்விக்கு நமக்கு விடைகிடைக்கும். மனிதப் பற்று, கிராமிய மனிதர்களின் மீது மரியாதை என்பதைக் காட்டிலும் இந்தக் கவிதைகள் மூலம் அதிகாரத்திற்கு உடன்பட்டுப் போகும் உளவியல்கூறு மறுஉறுதி செய்யப்படுகிற ஆபத்து அதிகமில்லையா? போராடும் வரலாற்றுத் தேவையைப் பற்றிய பிரக்ஞை கொள்வது என்பதைக் காட்டிலும் இன்றைய எதார்த்தத்துடன் ஒத்திசையும் மனநிலையை உறுதி செய்யும் வாய்ப்பு இந்தக் கவிதைகளுக்குக் கூடுத லாக இல்லையா? விவசாயச் சமூகத்தின் ஒத்திசைவில் வியந்து மகிழ்ந்து போகிற வர்களின் இறுதி முழக்கம் எதேச்சதிகாரம் சனாதனம், குறுகிய தேசியவாதம என்ப வையாகவே இருக்க முடியும் என்கிற அறிஞர் பிளக்கனோவின் கருத்து எளிதில் புறக்கணிக்கத் தக்கதல்ல. பாசிசத் தகவ மைப்பிற்கு நாட்டுப் பாடல்களை இட்லர் வெற்றிகரமாய்ப் பயன் படுத்தினான் என்பது வரலாறு. இன்றைய இட்லர் களுக்கும் கூட சனங்களின் கதை உவப் பளிக்கும், உவப்பளிக்கிறது என்பதை நாம் மறந்துவிடலாகாது.

குறிப்பு: விவசாயச் சமூக உளவியல் குறித்த கருத்துக்கள் கீழ்க்கண்ட நூற்களி லிருந்து தொகுக்கப் பட்டவை.


(1) G. Plekhanov, **Selected philosophical works Vol V,** Progress, 1981.

(2) Wilhelm Reich, **The Mass Psychology of Fascism,** Pelican, 1983.

(3) Eric Fromm, **The Crisis of Psychoanalysis,** Penguin, 1973.

(4) Yogundra Singh, **Modernization of Indian Tradition.** Thomson Press, 1977.

# தமிழ்ப்பாலையில் ஒரு பசுந்தரை

*க. நா. சு.*

தமிழில் ஓவியம் சிற்பம் போன்ற நுண் கலைகள் பற்றிய ஒரு பயனுள்ளதும் தகுதியுள்ளதுமான புத்தகத்தைக் காண்பது நிஜமாகவே ஓர் அபூர்வ நிகழ்வு; தமிழில் இசை பற்றியும் நாட்டியம் பற்றியும் ஏராளமான புத்தகங்கள் இருக்கின்றன; எனினும், ஓவியர் சிற்பிகள் போன்றோருடைய சுயமான போக்கு பற்றிப் பேசும் புத்தகத்தைக் காண்பது மிகவும் அபூர்வமாகவே இருக்கிறது; தமிழர்கள் — மக்கள் என்ற வகையிலோ அல்லது ஓர் இனம் என்ற வகையிலோ மிகவும் ஈடுபாடும் சுவையும் கொள்வது, சுய அபிமானத்தால் விளைந்த அசட்டுணர்ச்சிகள் கொந்தளிப்பதும் நாடகமேடை வசனத்தன்மை கொண்டதும் மிகைப்படுத்தப் படுவதுமான எழுத்தில்தான்; ஆகவே தமிழில் இசை நாட்டியம் போன்ற நுண்கலைகள் பற்றிய எழுத்துக்கள் — வெறும் கூச்சலாய் — தெளிவில்லாத ஒரே சத்தமாய் — அசட்டு உணர்ச்சி வெளியீடுகளாகவே உள்ளன.

இந்த நிலையில்—இதற்கு மாறாக முதன் முதலாக ஒரு புத்தகத்தைப் பார்ப்பது சற்றே களைப்பைப் போக்குகிறது. அதை எழுதியவர் திரு. எம். சீனுவாசன்: (இவர் ஓர் அபூர்வராகமான ''தேனுகா'' எனும் ராகத்தின் பெயரைத்தான் புனைப் பெயராய்ப் பூண்டுள்ளார்). அவர் இந்தச் சிறு நூலில் இரைச்சல் கிளப்பவில்லை. எதையும் ஆகா ஓகோ என்று மிதமிஞ்சிப் பெரிதுபடுத்தவில்லை. ஆசார்ய புருஷனாகி உபதேசமும் செய்யவில்லை. அதீதமான அசட்டு உணர்ச்சிகளையும் தூண்ட முயலவில்லை. இந்த ஆசிரியருக்குள்ள மற்றொரு அநுகூலமும் குறிப்பிடத்தக்கது. அவர் — தம் சக காலத்தில் நிகழும் புதுக் கவிதை இயக்கத்தையும் விழிப்புணர்வுடனும் ஈடுபாட்டுடனும் கவனித்து வருகிறார். இவற்றை இவர் விளக்கங்கள் உரைக்கும் போதும் உதாரணங்கள் காட்டும் போதும் எடுத்தாள்கிறார். இவர் எழுதியுள்ள வண்ணங்கள் வடிவங்கள் என்ற நூல் முற்றிலுமாக வாழ்க்கை வரலாறுகளாகவோ அல்லது விமர்சனமாகவோ எழுதப்படவில்லை. மேலும் இது சரித்திர நூலும் அன்று; ஒரேயடியாகப் புகழ்பாடுவது மன்று: இசை, ஓவியம், சிற்பம் மற்றும் புதுக்கவிதை பற்றிச் சிந்தனையைத்தூண்டும் வழிகளை நமக்கு அளிக்கிறது. தெளிவான நடையாலும், கருத்தாலும் நம்மைத் தூண்டும் நூலான வண்ணங்கள் வடிவங்கள்

கற்காலத் தமிழில் தனக்கே உரிய தனி வகையில் நிற்கிறது. மேலும் நீண்ட கால மாக உள்ள தேவையையும் நிறைவேற்று கிறது.

ஓவியமும் சிற்பமும் பற்றி எழுதும் ஒரு மரபு நம்மிடையே இல்லாத நிலையில் இது போன்ற புத்தகங்களைக் காண்பது பாலை யில் ஒரு பசுந்தரையை கண்டு மகிழ்வது போன்றதே ஆகும். தேனுகா மிக விரிவான ஆய்வு செய்யவில்லை; எனினும் தான் ஆயும் சிறிய பரப்பை, நல்ல பிரக் ஞையுடனும் தெளிவுடனும் மிகப் பெரிய ஞானத்துடனும் பொது அறிவுடனும் ஆய் கிறார். பிற கலை விமர்சகர்களுக்கும் மதிப்பீடு செய்வோருக்கும் பெரிய தலை நகரங்களான டெல்லியும் பம்பாயும் கல்கத்தாவும் மையமாக இருப்பதுபோல இவருக்குச் சிறியநகரமான கும்பகோணம் மையமாகிறது. அதுதான் சரி. கும்ப கோணத்தில்தான் கலைகளைப் பற்றிய சிந்தனை தொடங்குவது உசிதம். அயல் நாட்டுத் தாக்கம் இருக்கத்தான் இருக்கும். ஆனால் அது மட்டுமே இருக்கும் இடங் களில் இந்தியக் கருப்பொருளும் இந்தியா வின் உள்ளுறையும் இருப்பதில்லை. இந்தி யாவில் தொடங்கி, பாரிஸ், மாஸ்கோ, நியூயார்க் என்று போய் முடியும் எழுத்துக் கள் நிறையவே உண்டு. டெல்லியிலோ, பம்பாயிலோ தொடங்கினாலும் (கல்கத்தா இதில் மாறுபடலாம்) அங்கே வந்து முடிவ தில்லை. பாரீசுக்கோ, மாஸ்கோவுக்கோ சென்று அடைகின்றன. இது தவிர்க்கப் படவேண்டிய காலம் வந்துவிட்டதென்று இப்பொழுதாவது நாம் உணர்தல் வேண் டும். இந்தியக் கலைகள் என் இந்திய எழுத்துக்களும்கூட தேசியமாகவும் — உள் முகமாகவும் மாறவேண்டும். மிகவும் புறம் செல்வது தவிர்க்கப்பட வேண்டும். கல்கத்தா மாறுபடலாம் என்று சொன் னேன். ஆம்; அப்படித்தான் இருக்கிறது அது; கல்கத்தாவின் கலைகளைப் பற்றிய எழுத்தெல்லாமே அங்கேயே தொடங்கி அங்கேயே முடிந்தும் விடுகின்றன. கல்கத்தாக்காரர்கள், தங்கள் கலைகளி லும் எழுத்துக்களிலும் முற்றிலுமாகத் தம்மைத் தனிமைப்படுத்திக் கொண் டுள்ளனர்.

தேனுகாவுக்கு நிஜமான விமர்சன விஷயங்களை சாய்வான கோணத்தில் கூறும் ஒரு அலாதி விருப்பம் அமைந்திருக் கிறது; அது சில சமயம் சந்தோஷம் தரு கிறது. இறந்த மிருகங்களை பாடம் செய்து வைப்பவர்கள் தேர்வு என்ற ஒரு ஆறு பக்க சிறு கட்டுரையில் தற்கால மனிதகுலத்தின் அரசியற்பிழை அறி வின்மை போன்வற்றால், விலங்குகளே— ஏன், மனிதர்களே இல்லாமற் போகும்— இனமே அழிந்துவிடும் பிரச்சினையைத் தருகிறார். அந்தக் கட்டுரையில் கலை களைமட்டுமன்றி, விஞ்ஞான இயல்பு களையும் பற்றிக் கூறுகிறார். இது போதுமானதொரு சிந்தனையைத் தூண்டு வதாகவும் அமைகிறது. ஆனால் தமிழர் கள் புதிதாக ஏதாவது சொன்னால் — கருத்துக்களை முன் வைத்தால் அதைப் பற்றிச் சிந்திக்க வெறுக்கும் இயல்புடை யவர்கள். லெமூரியர்கள் என்பவர்கள் லெமூரியா என்ற கண்டத்தில் வாழ்ந்தவர் கள் — அது பழைய கற்காலத்திற்கும் முற் பட்ட காலம், கடல்கள் மலையாகி மலை கள் கடலான மிகப்பழைய இயற்கை நிகழ்ச்சிகளைப் பற்றிய ஆராய்ச்சியாளர் கள் லெமூரியா என்றொருகண்டம் இருந்த தாகக் கூறுவர். அங்கு வாழ்ந்தவர்கள் லெமூரியர்களை, அமானஸ — அதாவது மனம் என்ற அகவுறுப்பு இல்லாதவர்கள் என்று, பிரம்ம ஞான சங்கத்தார் ஆவி களைப் பேச வைத்துக் கண்டுபிடித்து உறுதியாக கூறினர்.

லெமூரியாக் கண்டம் இருந்த காலம் டார்வின் கூறிய பரிணாம வளர்ச்சி தத்து வத்தின்படி, மனம் என்பது தோன்றி வளராதிருந்த காலம். ஆனால், தற் காலத்திலும், லெமூரிய மரபு தொடர் கிறது போலும்; தமிழர்கள் மனம் வளராத வாகள் — ஆம் — முழு அர்த்தத்திலும் இதைக் கொள்ளலாம். தமிழர்கள் சிந்திக்க மறுப்பவர்கள்; பிறர் இழுத்த இழுப்பில் செல்பவர்கள்: இவ்வாறு இருந்தும் தேனுகா பயனற்றதொரு பணியைச்

செய்யப் பார்க்கிறார். தன்னால் முடிந்த வரை இதைத் தொடர்ந்து செய்யும் அவருக்கு நன்றி கூறுவோம்.

காக்கையைப் பற்றிப் பாரதியையும், ஞானக்கூத்தனையும்அடுத்தடுத்து நிறுத்தி "ஆன்மஒத்தடம்" எனற தலைப்பில் உள்ள கட்டுரையில், மனித குலத்திற்கே பொதுவானது என்று தீர்மானமாகக் கூறும் வகையில் கருணை பற்றிய ஒரு முழுச் செய்தி கூறுகிறார். காக்கைகளும் வாழ்க்கையில் பௌதிக ரீதியிலும், உயிரியல் ரீதியிலும் ஆன்மீகமாவும்கூட அர்த்தமுள்ள ஒன்று; என் நண்பர் ஒருவர் சிங்கப்பூரில் காக்கைகளே இல்லையென்ற காரணத்தால் வேலையை ராஜிநாமா செய்துவிட்டு ஊருக்கே திரும்பி வந்து விட்டார். நலல ஊதியம் கிடைத்த வேலையைவிடக் காக்கையைப் பார்ப்பது மேலானதென்று நினைத்துவிட்டார். இது நடந்தது 1939-இல்.

இதற்கும் நுண்கலை—ஓவியம் போன்றவற்றிற்கும் என்ன சம்பந்தம்? எல்லாம்தான்; ஒன்றுமில்லையும்தான்; மனிதனைப் பற்றிய விஷயம் வரும்போது எதுவுமே, வேறு எதையும் சாராமல் இருப்பதில்லை. நாம் எவற்றைச் சொன்னாலும் அவை ஒன்றையொன்று சார்ந்தே இருப்பன. இலக்கியமோ. ஓவியமோ, சிற்பமோ, வேறு எதுவுமோ அது மட்டும் தனிந்து இருப்பதில்லை. ஒரு விமர்சகன்-ஆய்வாளன தான் செய்வதைப் போதுமானதாகவும், திருப்தி தருவதாகவும் செய்ய முயன்றால், இவை ஒவ்வொன்றுக்கும் உள்ள தொடர்பை — ஒன்றோடு பலவற்றிற்கும் உள்ள தொடர்பைக் கண்டுரைத்தல் வேண்டும். இந்த நூலில் இசை பற்றிய ஒரே ஒரு கட்டுரைதான் இருக்கிறது. அது: "ராஜரத்தின தர்பார்". இதில் தேனுகா, மேலே சொன்ன தொடர்பைக் காண்கிறார். அதோடு மட்டுமின்றி, நம்நாட்டில் கலைப் பயிற்சிக்கும் ரஸனைக்கும் உள்ள ஆன்மீகப் பின்னணியையும் திறந்து விடுகிறார். இவ்வளவுக்கும் இது மிகச் சிறியக் கட்டுரை.

ஒன்றுடன் ஒன்று வேறுபட்ட கட்டுரைகள் கொண்ட இந்தப் புத்தகத்தைப் படிக்கும் யாரும் தம்மைத்தாமே கேட்டுக் கிடைத்த விடையாக ஓர் உண்மையை அறியலாம். அது யாதெனில், நூலாசிரியர் தெளிவாகச் சிந்திக்கிறார், தான் கூற விரும்பியதை நன்கு எடுத்துரைக்கிறார்.

சாரம்,— சுருக்கம்—அதாவது மிகப் பெரியதைச் சுருக்கமாகக் காட்டல் என்பதே கலைகளின் நுண்மை. தேனுகா கூறும் கருத்துக்கள் கலைபற்றிய பல விரிவான விசாரங்களுக்கும் ஆரம்பப் புள்ளியாய் அமைகின்றன. புல்லின் நுனியில் ஒளிரும் பனித்துளியில் முழு உலகமும் பிரதிபிம்பமாவதுபோல், கட்டுரைகள் மிகச் சிறியனவே எனினும் — முழுமையின் மிகச் சிறிய பிரதிபிம்பமாகவே - தனக்குத்தானே முழுமை பெற்றதாகவே உள்ளன. ஆசிரியருடைய முதல் புத்தகம் இது என்பதை நினைக்கும்போது அவருடைய அற்புதமான தெளிவாய்ச் சொல்லும் பாங்கும் அடித்துக் கூறும் போக்கும் கண்டு பிரமிக்கிறோம், பாராட்டுகிறோம். "உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்" என்று பாரதியார் கூறியது இந்தப் புத்தகத்தில் நன்குப் புலப்படுகிறது.

முதற்கட்டுரை "தோற்றம் — பின்னுள்ள உண்மை" என்பது. இதில் தேனுகா, புதுக்கவிதைகளை—குறிபபாக ஞானக்கூத்தனுடைய கவிதைகளை வைத்து விவாதிக்கிறார். உள்ளார்ந்த உண்மை—சொற்களால் அதை ஏற்கும் மனதில் தோன்றுகின்றன. இது பற்றிய பேச்சில், பாரதியின் சில கருத்துக்களையும், சாகாமல் வாழ்வதில் அவருக்கு இருந்த வேட்கையையும் விளக்குகிறார் ஆசிரியர். இந்தக் கட்டுரை இலக்கிய விமரிசனம், ஓவியம், பிறகலைகள் பற்றியதாகவும் ஆகிறது. வடிவங்களிலும் வெளிப்பாடுகளிலும் பல்வேறுப்பட்ட தன்மை இருக்கலாம் ஆனால் அனைத்து வாழ்வும் ஒன்றே — ஒருமைப்பாடு கொண்டனவே என்பதை தேர வேணடியது. இது தான் ஜென்னும் (Zen) வேதாந்தமும் முடிவாகக் கூறும் பாடம்.

சந்தானராஜின் ஓவியப் பெருவெளியைப் பற்றிப் பேசும்போதும், அரங்கராஜனுடைய கலை அருமையைச் காட்டும் போதும், அல்போன்ஸாவின் கோணக் கோடுகளை விளக்கும்போதும், புரியாத சொற்களையும் ஒரே மாதிரியான தொடர்களையும் உபயோகிக்காமல், அந்த மூவருடைய கலையிலும் உள்ள தகுதிகளையும் குறைகளையும் விரித்துரைக்கிறார். இங்கே அவருடைய அபூர்வமான சாமர்த்தியத்தைக் காணமுடிகிறது. கலைகளைப் பற்றிய கருத்துக்களைக் குறைவின்றி வெளியிடும் வகையில் இதுவரையில் வளர்ந்துள்ள தமிழ்ச் சொற்களின் எல்லையை விரிவுபடுத்துகிறார். குறிப்பிட்ட கலைஞர்களையும் அவர்களுடைய படைப்புகளையும் பற்றி எழுதுவதற்கும் மேலாக அவர் செய்யும் ஒரு தொண்டு தமிழுக்கு இன்றியமையாத ஒருதேவையை நிரப்புகிறது. அதாவது கலை விமர்சனத்திற்கான புதிய சொற்களைக் கையாள்வதன் வாயிலாகத் தமிழ்மொழிக்கும், தமிழர்களுக்கும் தமிழ்ப்பண்பாட்டிற்கும் அவர் வளம் சேர்க்கிறார். எழுத்துக்கு அவர் புதியவர்—ஆரம்ப நிலையில் இருப்பவர்தான்; ஆயினும் பக்குவப்பட்ட அறிவும் அநுபவமும் கொண்டவர். சொல்வதற்குப் போதுமான விஷயங்கள் நிறையக் கொண்டவர். புதிய முறையில் கருத்துக்களை வெளியிட அவர் கையாளும் சொற்கள் அவர் எழுத்துக்குப் புதியவர் என்பதை ஈடு செய்து விடுகின்றன. ஒரு கட்டுரை, பியத்மொந்திரியான் பற்றியது. அவருடைய கலையை முழுதுமாக விளக்குகிறது. மற்றொரு கட்டுரை கும்பகோணம் கலைக்கல்லூரி பற்றியது. அந்தக் கல்லூரி ஆபத்துக்களால் அழிந்து விடாமல் இருக்கத் தம்மையே பலவிதங்களிலும் தியாகம் செய்து கொண்டவர்களை பாராட்டிப் புகழ்வது.

இளைஞரான இவர், பல்வேறு சந்தர்ப்பங்களில் எழுதிய கட்டுரைகளின் சிறிய இந்தத் தொகுப்பு முழுவதுமே ஒரு பூரணமும், ஒருமைப்பாடும் கொண்டுள்ளது; இவர் நுண்கலைகளின் பிற துறைகளிலும் ஈடுபட்டுப் பணியாற்ற ஊக்குவிக்கப்படல் வேண்டும். இவருடைய அறிவும் மனோதர்மமும் நுண் உணர்வும் கருத்து வெளியீடும் மிகவும் அபூர்வமானவை. தன் சம காலத்தைப் பற்றிய உணர்வுடன் அமரத்தன்மை பற்றிய பார்வையும் பெற்றுள்ளார். இதுபோன்ற எழுத்துக்கள் அரிதானவை என்பது மட்டுமில்லை ஆஷாடபூதித்தனமும் வீண் ஜம்பங்களும், பாசாங்கும் கூத்தடிக்கும் இந்த வேளையில் இவை இன்றியமையாதவையும் ஆகின்றன. இவரை 'சபாஷ், பலே' சொல்லவேண்டும், தன் ஆளுமை காட்டும் திசையில் தொடர்ந்து சென்றும் தன் நுண்ணுணர்வு காட்டும் வழியில் சென்றும் தன் பணியைத் தொடர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளவும் வேண்டியது அவசியம்.

சித்திரங்கள், குறிப்பாக நகல் பிரதிகள் அவ்வளவாக நன்கு செய்யப்படவில்லை. பதிப்பகம் இன்னும் சற்று ஜாக்கிரதையாக இருந்திருக்க வேண்டும். ஆயினும் பதிப்பகத்தைப் பாராட்டவே வேண்டும். தமிழில் தற்காலம் பரவியுள்ள பிரக்ஞையே இல்லாத மரத்துப் போய்விட்ட நிலையில் துணிச்சல் உள்ள ஓர் இளைஞர் எழுதிய நூலைத் துணிந்து வெளியிட்டது பாராட்டப்பட வேண்டியது தான். இந்த இளைஞர் அவருடைய பயங்கரமான கயிற்று ஊசல் பயிற்சியில் உறுதியாகவே நிற்பார் என்று எதிர்பார்க்கிறோம். நூலுக்கும் அவருடைய துணிச்சலுக்கும் மறுபடியும் ஒரு சபாஷ், பலே.

**தமிழாக்கம் : கரிச்சான் குஞ்சு**

[சிதம்பரம் மணிவாசகர் பதிப்பகம் வெளியிட்ட தேனுகா—எழுதிய வண்ணங்கள், வடிவங்கள் என்ற நூலுக்கான மதிப்புரை இது, An Oasis in Tamil Desert எனும் தலைப்பில் Indian Express இதை இடை இடையே தணிக்கை செய்து வெளியிட்டது. மூலவடிவம் முழுமையாக இங்கே தமிழாக்கம் பெற்றுத் தரப்பட்டுள்ளது. அழுத்தம் இதழாசிரியருடையது.] □

# கருப்பன் போன பாதை

□

*கோணங்கி*

□

தாலியறுத்த கிழவிமாதிரி வெம்போ டாய் கிடந்தது தட்டப்பாறை ரயில்வே ஸ்டேஷன். வராண்டாவில் படுத்திருக்கும் கேடிகளை யாரும் எழுப்ப முடியாது. ரெண்டு பேர் சேர்ந்து பதினெட்டாம்புலி ஆடுவது ஸ்டேஷன் இயங்கும் அடையாளம். சமயத்தில் யாருமில்லாத அக்காத்தியாய் கிடக்கும். வெட்டுப்பட்ட புலிகள் இரைந்து கிடப்பதும் வழக்கம் போல ஸ்டேஷனுக்கு வரும் காகங்களின் வாக்கு வாதம் தொடர்ந்து கைகலப்பில் முடிவதுண்டு.

மற்றபடி எப்போதாவது தூத்துக்குடியிலிருந்து மணியாச்சிக்கு ஒரு பாசஞ்சர்

வரும். புல்லுக்கட்டு ரயிலென்றும் டிபார்டு மெண்டு கேங்க்கூலிகள் சாமான்களை கொண்டு செல்லும் கூட்சு என்றும் புகழ். மறைவிற்கு உடைக்கும் பொட்டல் பச்சேரி பெண்களை தவிர பாசிஞ்சர்கள் என்றோ டிக்கெட் வாங்கிக் கொள்பவர்கள் என்றோ யாரும் கிடையாது. இன்றைக்கு போலீஸ் எஸ்காடுடன் கருப்பன் வந்து இறங் கினான். ரொம்ப காலமாய் ஸ்டேஷன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த விருந்தாளி. உற்றுப்பார்த்தான். ஆட்கள் யாருமில்லை. ரயில்வே கிராதியில் அமர்ந்த காகங்கள் பழைய ஆளைக்கண்டு புதிய கார்வையில் ஓப்பாரி வைத்தன.

ஸ்டேஷனில் தொப்பி போலீஸைக் கண்டு வரவேற்க யாருமே இல்லை. கிழவனிடம் ஒப்படைக்க வேண்டிய பொருட்களையும் உழைப்புக் கூலியையும் கொடுத்து; வந்த பெட்டியிலேயே ஏறி உட்கார்ந்தார் தொப்பிக்காரர். ஜன்னல் வழியாக "ஏ கௌவா... ஊருக்கு போயிரு" பாதையை காட்டினார் போலீஸ் அய்யா. கருப்பன் ரிப்பேர் ஆன பெட்போடு மோட் டாரைப் போல் இருமி சளியை துப்பிய உடன் ரயில் கிளம்பியது. கருப்பனைக் கண்டு மலைத்தபடி பெருமூச்சு விட்டது. கதவுப்பக்கம் தொப்பித்தலை நீட்டிப் பார்த்ததை யாரும் கண்டு கொள்ளவில்லே. மறுபடியும் ஸ்டேஷனில் அக்காத்தியான உறக்கம்.

கருப்பன் ரயில்கத்தாழையை தாண்டி னான். சாம்பல் மூடியிருந்த தார்ரோட்டின் முதுகில் புளிமூட்டையாய் ஏறிக் கொண் டிருந்த வண்டிப்பாதை. மேலும் மேலும் சக்கரங்கள் பதிந்து கரடு விழுந்திருந்தது. அதைப்பார்த்து நடக்க முடிந்தது. கருப் பனுக்கு பார்வை கொஞ்சம் மங்கல். பாதை போகிற போக்கிலேயே நடந்தான். சுற்றிலும் காடு. பூச்சி வெட்டியது. தார் அடித்த புளியமரங்களைத் தாண்டி விலக்குப்பாதை பிரிந்தது. சிலமரங்களில் பொந்தில் தீவைத்து பொசுங்கியிருந்தது. தாழ்வாக இறங்கிய பாதையில் விலகி னான். தலையை முன்பக்கம் நீட்டி நெற்றிக்கு மேல் கைவைத்து உற்றுப் பார்த்தான். வண்டிப்பாதை தூர்வரைக்கும் வளைந்து போகிறது. இன்னும் வெகு தூரம் போகவேண்டும், முதுகுப்பக்கம் அக்குளில் சேர்த்து கட்டியிருந்த பொட்ட ணத்தை தொட்டுப் பார்த்தான். இனி அவையும் தேவையில்லை. ஜெயில் சம் பாத்தியத்தை வாங்கிக் கொள்ள காட்டில் யாருமில்லை.

எங்கும் தரிசும் பொட்டலுமாய் சாம்பல் முடிவிட்டது. எளந்தை நின்றது. வண்டிப்பாதையில் ஒரே முள்ளும் முடலும். கண் தூரத்துக்கு மேலும் ஆள் நடமாட்டம் தெரியவில்லை. பொட்டல் காட்டின் ஏகாந் தத்தில் வெறுக்கென்ற அசைவு. இந்தக் காட்டாளுக்குள்பயம் புகுந்து கொண்டது. மூச்சு முட்டிக் கொண்டு வந்தது. வண்டிப் பாதையை விரட்டிக்கொணடு பெரிய எட்டாகப் போட்டான். வெயில் ஏறஏற புழுதிபோல அசையும் கானல். தொண் டைக்குள் எச்சில் இறங்கவில்லை. ஒரு இடத்திலாவது தண்ணித் தடத்தைக் காணோம். நீர்ச்சாரம் இழந்திருந்தது. ஒரு சரங்கையாவது அள்ளிப்பருக, சூடேறிப்போன காலைக்கொஞ்சம் ஈரத்தில் நனைத்துக்கொள்ள நீரில்லை. இந்தச் சனியன் மிதியடி எமபாதகன். இத் தனையோ வருஷங்கள் பழகியும் சொன்ன படிக்கு வரவில்லை. மிதியடிக்குள் அடங் காமல் கோணக்கால் விழுந்துபோனது.

குதிங்காலில் ரொம்பகாலம் தொட்டு வளந்துவரும் கரணைவேறு குத்தல் எடுத்தது. பெருவிரல் ஓரமாய் மிதியடியி லிருந்து ஆணி எவ்விக் கொண்டு சதையோடு மல்லாடியது. சின்னக்கல்லும் ஒரு பெரிய கல்லும் கிடந்தால் அதைக் கொஞ்சம் உள்ளே தள்ளிப் போடணும். வெறும் சரல்காடாய் கிடந்தது. கல்லைக் காணோம்.

இந்தப் பழைய பாதைக்கு கருப்பனைப் போன்ற பழைய கேடிதான் பொருந்தி நடப்பான். அவனைப் போன்ற அக்காத்தி

யான ஆளைக்கண்டு காடு வெயிலில் அலைபாய்ந்தது.

பழைய அடையாளங்கள் இருந்தன. சமீபத்தில் இந்த திக்கில் சம்சாரித்தனம் நடக்கவில்லை. சப்பாத்திக்கள்ளி தலைகளை ஆட்டியது.

ஐந்து தலை நாகம்வேறு உடம்புமுழுவதும் முள்ளுடன் வண்டிப்பாதைக்கு குறுக்கே படர்ந்து சீறியது. குறுக்கே வந்து முள்ளைக் காட்டியது. ரொம்ப ஜாக்கிரதையாக ஒவ்வொரு எட்டாக நடந்தான். எப்படி எட்டு வைத்தாலும் கோணக்காலில் முள்தீண்டியது. அனலுக்கு பாதையும் நெளிந்து புரண்டது. தூரத்தில் ஒரு கிணறு. கருப்பன் தடத்தைவிட்டு ஓடினான். கமலைக்கல் இரண்டும் நீட்டிப் படுத்திருந்தன. வெயிலில் கல் உறங்கும். கிணத்தை எட்டிப்பார்த்தான். இடிகிணறு. இறவையாகி பல வருஷங்கள் ஆகியிருக்கும். கிணத்துக் கல்லில் ஆந்தை கால் வைத்து உட்கார்ந்திருந்தது. கருப்பனைக் கண்டு பதுங்கியது. கிணத்து தூரில் கொஞ்சம் தண்ணீர்போல பாசி காய்ந்த பூண்டுகள். இறந்த பட்சி கிணத்தடியில் கோரமாகி கிடந்தது. கமலைக்கல்லில் உடைகலைந்த பாம்பு இரைதேடப் போயிருக்கும். நீண்ட பாம்புச்சட்டை கிடந்தது. கமலைக்கல்லிலிருந்து ஆடியது. பாம்புவந்துவிடுமென்று பயந்து ஓடினான். திரும்பிய இடமெல்லாம் ஐந்து தலை நாகம் தீண்டிவிட்டது. திரும்பி வண்டிப் பாதைக்கு வந்து தொடர்ந்தான்.

எதிர்பார்த்தபடியே பாதை ஓடைக்குள் இறங்கியது. வண்டிகள் போகும் அளவுக்கு ஒரே அகலமானதூரம். நெடுக மணல்சாரி. அதில் கால்நடைகள் வந்துபோன அடையாளம். வண்டி போனதற்கான பழைய தடம் இருந்தது.

அவனுக்கு மணலில் நடக்கும்போது எத்தனையோ வருஷங்களாய் அதனோடு தொடர்பிருப்பதாகப்பட்டது. ஓடைக்குள் வந்துவிடவும் திகில் பறந்தது. தூரத்தில் உடைமரம். அதன் நிழலைப்பற்ற வேகமாக நடந்தான். போகப் போக உடைமரம் தள்ளிப்போனது. உடைமரத்தடியில் எறும்புப் புற்று. வட்ட நிழல் விட்டிருந்தது உடைமரம். ஒருசில எறும்புகள் அலைந்து கொண்டிருந்தன. அவற்றுடன் சேர்ந்து நிழலில் இளைப்பாரினான் கருப்பன். எறும்புகளை அவன் விரல் நசுக்கப் போனது. ஈரத்தோடு தேய்த்து ஒவ்வொன்றாக நசுக்கினான். புற்றிலிருந்து கிளம்பிய எறும்புகள் அவன் விரலில் இருந்த இருட்டைக்கண்டு திரும்பி புற்றுக்குள் மறைந்தன. ஒரு குச்சியை ஒடித்து புற்றை இடித்தபடி ஏதோ நினைவிலாழ்ந்திருந்தான்.

எட்டத்தில் ஒரு பெரிய கல்தூண். அதற்கு நேர் எதிரே பருத்திக்காடு. நாளைந்து வெள்ளை கண்டாங்கிகள் குனிந்து பருத்தி எடுக்கிறது. வெடிப்பு பருவம். அந்தக் கூட்டத்தில் அசைகிற உருவங்களை உற்றுப்பார்த்தான். காட்டில் இருட்டித்திரிந்த பேத்தி இருக்கிறாளா. நாலு திசைகளையும் சுற்றி நோட்டம்விட்டான் கருப்பன். காடுமுழுவதும் இந்த காட்டின் அரசியை காணவில்லை. வெள்ளித் தண்டைபோட்ட கால்களுடன் ஓடித்திரிந்த பேத்தி.

கல்தூணில் காகம் பறந்து வந்து அமர்ந்தது. அவனை திரும்பிப்பார்த்தது. ஜென்மதண்டனையிலிருந்து வெளிவந்த கருப்பனின் கண்பட்டையிலுள்ள வெட்டு அடையாளத்தை கண்ட காகம் பயந்து கரைந்தபடி பறந்து போகிறது.

பளுப்படைந்து காய்ந்த தூண்டியில் எழும்பிய மண்மேடு. அவர்கள் புதையுண்ட இடங்கள் மறையவில்லை. கருப்பனின் தாயாதிகள் மடிந்த இடம். மண்மேடு பிளந்து தீயுருவங்கள் எழுந்து எரிந்து கொண்டிருந்தன. தீயைச்சுற்றி நீர்வளையம். நாய்கள் எரிகிற தீயில் பாய்ந்து சதையை பிய்த்து கவ்வியபடி தீப்பற்றிய கால்களுடன் நீரில் பாய்ந்து புரண்டு புகையும் சதையை விழுங்கியது. திரும்பவும் நீரிலிருத்து தீயில் பாய்ந்து பாதி எரிந்த சதையை இழுத்துக்கொண்டு

நீரில் குதித்துப் புரண்டு எழுந்து ஓடியது. காடுமுழுவதும் ஓடிக்கொண்டிருந்த நாயின் இரைப்பொலி. சுற்றிச் சுற்றி நாய்வெறி. சதை எரிந்து கொண்டிருந்தது.

கல்தூணை நோக்கி நடந்தான். எல்லாம் அடங்கி இறுகிய சாம்பல் மூடியிருந்தது. கல்தூணில் காட்டு பட்சி. இன்னும் நிறைய பட்சிகள் வந்துபோன அடையாளம்.

கல்தூணில் பட்சிகளின் எச்சக்கோடு விழுந்திருந்தது. கல்தூணை நெருங்கினான். தூணைவிட்டு இறங்கிய பட்சி வேகமாய் பறந்து போய் காட்டில் அலறியது. நடுங்கும் கைகளுடன் கருப்பன் தூணைச் சேர்ந்து கட்டிக்கொண்டான். அவன் கைகளையாரோ பிடித்து இழுப்பது போல் உணர்ந்தான். தூண் மேலிருந்து ரத்தக் கோடுகள் கீழிறங்கிக் கொண்டிருந்தன. பெண்களின் ஒப்பாரியுடன் பெரிய ஓலமாய் ஓடைக்குள் குரல் வந்தது. கல்தூணின் நிழல் நீண்டு வளர்ந்தது. அந்தப்பக்கம் யாரும் நெருங்க முடியாது. மனதைப் புரட்டிப் புரட்டி படுகுழியில் தள்ளும்படி பெண்கள் கூட்டமாய் மாரடித்து அழுதார்கள்.

நடுகல்லில் கெட்டிவைத்து உரிக்கப்பட்ட கருந்தோலுடன் நின்றிருந்தான் கருப்பன். ஊர் பெரிய குடும்பனுக்கு நேர்ந்த கெதியால் பள்ளக்குடியே படை திரண்டு வந்திருத்தது சந்திக்கு. நடுகல்லில் தலைதொங்கவிட ஒடிந்து தொங்கும் முதுகுடன் கிழவன் 'எய்யா...எய்யா...' ஈனசுரத்தில் முனகினான். பெலத்து சத்தம் போட்டு ஓய்ந்திருத்தான் ஏற்கெனவே. யாராவது கூப்பிட்டாக வேண்டிய கட்டாயத்தில் — முழுத்திராணியையும் இழந்த நிலையில் குடும்பனின் தொண்டைக்கடியிலிருந்து கசியும் வார்த்தைகள் தகப்பன் எலும்புகளிலிருந்து கசிந்தன. வாயில் நுரைதள்ள மூக்கிலிருந்து கீழாகத் தொங்கும் அவனது கெடேரி மீசையிலும் வடிந்த ரத்தம் காய்ந்து கொண்டிருந்தது.

பலத்த அடிகளால் உடைந்த சில எலும்புகள் முன்னோருடையதாக இருக்கும். வெறுங் கோவணத் துணியுடன் விடப்பட்டிருந்தான். அவனுக்கு எதிரில் விசிரி எரியப்பட்டிருந்த ரத்தம் பட்ட வேட்டியை அந்த சிறுவன் எடுத்துக் கொள்ள நினைத்தான். தாத்தாவின் வேட்டியை யாருக்கும் தெரியாமல் எடுத்துக்கொள்ள வேண்டும். ஒரு குச்சியால் மெல்ல மெல்ல இடத்தைவிட்டு நகர்த்தினான். நடுகல்லோடு கிழவனின் நிழலும் அவனுக்கு பின்னால் நீண்டது. அவனைச் சுற்றிக் கூடியிருந்த கருப்பு வம்சம் அவனையே ஒத்திருந்த முகச்சாயலுடன் பயபீதிமிகுந்த தோற்றத்துடன் கிழவனையே பார்த்துக் கொண்டிருந்தன.

தலப்பாத்துண்டை எடுத்து 'உங்க தானிய குதிர்களுக்காக விற்கப்பட்ட எங்கள் விலை மிக மலிவானது அய்யா...' என்ற முறையில் இடுப்புகச்சையின் மீது இறுக்கிக் கட்டிக் கொண்டு குனிந்து கொண்டே கொசுக் கொசுத்தனர்.

அவர்களுக்கு மேலே உயரமான பீடத்தில் செவ்வாளைக் கண்ணுடன் மூலவீட்டார் 'தானியக் குதிரில் இறங்கி சாகவேண்டிய விலை உங்கப்பன் பட்டாவில் உள்ளதே நீங்களா விரும்பிச் சாக முடியாதே' என்பதுபோல் பார்ந்தார். சட்டங்களை சுமந்துவந்த அதிகாரி அய்யாவும் பக்கத்திலிருத்தார். கிராம முனிசீப்பு அய்யாவும் காதைக் கடித்தார். மூலவீட்டாரின் ரெண்டு கண்களைப்போல் ரெண்டு தடித் தூண்களாய் தலையாரியும் வெட்டியானும் ரந்தக்கரையில் பூண் போட்ட காவல் கம்பை பிடித்து நின்றார்கள்.

பெரும் இருட்டு குடிகொண்ட தெரு ஓரங்களில் புள்ளைக்குட்டிகளுடன் பள்ளப் பெண்கள் வத்திருந்தார்கள். குத்துக்காலிட்டு உட்கார்ந்தபடி சலசலத்துக் கொண்டார்கள். தாத்தா முகத்தில் குடிகொண்ட இருட்டைவிடவும் அதிக இருள்

பூசிய முகத்துடன் பேத்தியும் இருந்தாள். கொதித்துப் புரண்ட மாறாப்பில் விலகிய கருப்பு முலையிலிருந்து சின்னப்பயல் கொதி கொதிக்கும் பாலை முண்டிக் குடிக்கிற சத்தம் கேட்டது.

நிலைகொள்ளாத அவள் மனசில் ஓடும் நினைப்பு — தாத்தாவை சீக்கிரமே கூட்டிக்கொண்டு போய்விட வேண்டும். தாத்தா உயிர் பிரிவதற்குள் இங்கிருந்து அவரை அப்புறப்படுத்திவிட வேண்டும். சந்துகளில் பதுங்கி நின்ற இளவட்டங்கள் எட்டிப்பார்த்தார்கள்.

மூலவீட்டாரின் செவ்வாளைக் கண் அவர்களையும் நோட்டம் பார்த்துவிட்டது. இன்னும் கிழவன் மேல் பிரயோகிக்க வேண்டிய அடி பாட்டன் பூட்டனுக்குப் பாக்கியிருப்பதாக பட்டது. அதற்குள் தலையாரியும் வெட்டியானும் மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்கிக் கொண்டிருந்தார்கள்.

கூட்டத்துக்கு நடுவில் இருந்தவன் ஒருவன் தன்னை யாரென்று யாரும் அடையாளம் கண்டு கொள்ள முடியாத கருப்பன்.

குடும்பனின் ரத்தம்பட்ட வேட்டி இப்போது சிறுவனின் கைக்கு கிடைத்து விட்டது. அதைக் கொண்டு போய் சந்துக்குள்ளிருக்கும் எத்துப்பல்லனிடம் கொடுக்கவும் அதை வாங்கிப் பார்த்தவனின் கை கால் வெடவெடத்து நடுங்கியது. தாங்காத துக்கத்துடன் அதை அவசரமாய் மறைத்தான்.

சந்திலிருந்து வெளிப்பட்ட சிறுவனை, முகம் தெரியாத கருப்பன் பிடித்துக் கொண்டு அவன் முகத்தில் கலந்திருக்கும் பெரும்பீதியை கணடு அவன் பரட்டை தலையை தடவிக் கொடுத்தான். ஆறுதல் கொண்டுவந்திருக்கும பார்வையுடன் அவனை அணைத்துக் கொண்டான். சிறுவனின் கையிலிருத்து நழுவிய மயிலிறகுகள் புழுதியில் புரண்டு கொண்டிருந்தது. விளையாட்டையெல்லாம் மறந்து போயிருந்தான் சிறுவன்.

திரும்பவும் பாக்கியை நிறைவேற்ற ஆவேசத்துடன் தலையாரியின் அடி உயருமுன்—...

கழுத்து அறுபட்ட கோழியாகத் துடிந்துக் கொண்டிருந்த மூலவீட்டாரைச் சுற்றி 'துடி' பறந்தது. இருட்டில் புகுந்து கருப்பன ஓடிக் கொண்டிருந்தான், தண்ணிக்குள் விழுந்து முள்ளில் விழுந்து குருட்டு வவ்வாலைப்போல் மோதி மோதி உதைத்த முகத்துடன் ஓடிக் கொண்டிருந்தான்...

—சுற்றிவர பெருங்கூச்சலும் புழுதிப் படையும். ஊடு புகுந்து விரட்டிய ஆயுதங்களுடன் புழுதியும் ரத்தமும் மூடி மறைந்தது...

—இப்போது மண்மேடு சாம்பல் மேவி மேவி தடித்திருந்தது. சாம்பலில் கால் வைத்து தூணில் சாய்த்து நின்றான் நடந்துவந்த கருப்பன்.

சூழல் எங்கும் சாம்பல் அழகுடன் வெயில் பதிந்தது. வானம் முழுவதும் வரிவரியான கருகித்தீய்ந்த மேகங்கள் ஸர்ப்பம் போல் வளைந்து நெளிந்தன. சாம்பல் ஸர்ப்பத்தின் வால்பக்கம் உற்றுப் பார்த்தான் கருப்பன். மலைப்பறம்பில் தோல்றும் நாற்பது சிகப்பு ஓடுபோட்ட காலனி வீடுகள், கூந்தல் அறுந்த ஒற்றைப் பனையுடன். வளைந்த மூக்குடன் மொட்டைப் பனைமேல் கால் வைத்து அமர்ந்திருக்கும் கள்ளப் பறாந்து. நடுகல் மேட்டிலிருந்து மொட்டைப் பனைக்கு நேராய் செங்குத்தான பாதை. சாம்பல் ஸர்ப்பத்தின் தலை தூணுக்கு நேராய் தொங்கியது. அதன் வால் காலனி வீடுகளுக்கு மேல் துடித்தது. ஒன்றைப் பனையிலிருத்து மெல்ல எழுந்த பறாந்து சாம்பல் ஸர்ப்பத்தை காலில் கவ்வியபடி மிதந்து மிதந்து ஸர்ப்பத்தின் தீண்டலையும் அசைவுகளையும் தாண்டி கொண்டு செல்கிறது சாம்பலை. □

# சந்திப்பு

□

*ஹூலியோ கொர்த்தஸார்*

□

ஜாக் லண்டனின் கதை ஒன்று ஞாபகம் வந்தது...அதன் கதாநாயகன் அமைதியாக ஒரு மரத்தின் மீது சாய்ந்து நின்று கௌரவமாகச் சாவதற்கு தன்னைத் தயார் செய்து கொள்கிறான்.

> —கூபா : புரட்சிகர யுத்தத்தின் வரலாறு, 1963-இல் எர்னெஸ்தோ ''சே'' குவாரா (மலையும் சமவெளியும் - La Sierra y el llano (ஹவானா, 1961) என்ற புத்தகத்தில்).

இதைவிட மோசமான நிலைமை ஒன்றும் வந்துவிடப் போவதில்லை. குறைந்த பட்சம் படகிலிருந்து இறங்கி விட்டோம். இனி இயந்திர துப்பாக்கிகளுக்கிடையே நமத்துப் போன பிஸ்கட்டுகளைக் கடித்துக் கொண்டு, வாந்தியெடுத்துக் கொண்டு அழுக்கிலும் அசிங்கத்திலும் கடல்நடுவே உழல வேண்டியிருக்காது. லூயிஸ் (அவன் பெயர் லூயிஸ் அல்ல; ஆனால் காலம் வரும்வரை நாங்கள் எங்கள் பெயர்களை நினைவு கொள்வதில்லை என்று உறுதி எடுத்திருந்தோம்) முன் யோசனையுடன் தகர டின் ஒன்றில் பத்திரப்படுத்தி வைத்திருந்ததால் ஈரமாகாதிருந்த சிறிதளவு புகையிலைதான் இப்போது எங்களுக்கு ஒரே ஆறுதலாயிருந்தது. டின் முழுக்க தேள்களாய் இருந்தால் கூட அதை அத்தனை ஜாக்கிரதையாக யாரும் திறந்திருப்பார்களா

என்பது சந்தேகம் — அத்தனை கவனமாக நாங்கள் அதைத் திறந்தோம். ஆனால் அந்த பாழாய்ப்போன படகில் புகையிலையும் ரம்மும் இருந்தும்கூட ஒன்றும் பயனில்லாமல் போய்விட்டது. கள்ளுண்ட ஆமையைப் போல் அப்படியும் இப்படியும் ஆடிக் கொண்டு வடதிசைக் காற்றின் ஈவிரக்கமற்ற சாட்டையடியில் ஐந்து நாட்கள் அலைக்கழிந்தது மட்டுமல்லாமல் உக்கிரமான அலைகளை எதிர்த்து கைத்தோலைக் கிழிக்கும் வாளிகளுடன் வேறு போராட வேண்டியிருந்தது. எல்லோருக்கும் கடல்நோய் கண்டு, முறிந்து விடுகிறாற் போல் இரண்டாக மடிந்து உட்கார்ந்து வாந்தியெடுத்துக் கொண்டிருந்தோம். இதற்கிடையில் என்னுடைய கொடுமையான ஆஸ்த்மா வேறு. ஏற்கனவே வடதிசைக் காற்றினால் சற்றும் எதிர்பாராத வகையில் Cabo Cruz வெளிச்சத்தைப் பார்க்க முடியாமல் அதிர்ச்சியடைந்து போயிருந்த நாங்கள், இரண்டாம் நாளன்று இரவு லூயிஸ்உம் பச்சை நிறத்தில் வாந்தியெடுத்து தளர்வடைந்த போது மிகுந்த துக்கத்திற்கு ஆளானோம். இதைப்போய் ஒரு போர்ப் பயணம் என்று சொன்னால் இன்னும கொஞ்சம் குமட்டலெடுத்தது. ஆனாலும் பரவாயில்லை — எப்படியாவது இந்தப் படகைவிட்டு வெளியேறினால் போதும் — நிலத்தில் எங்களை எதிர்நோக்கியிருப்பது எதுவாக இருந்தாலும் சரிதான். ஆனால் எங்களை எதிர்நோக்கியிருந்தது எது என்பதும் எங்களுக்குத் தெரிந்துதான் இருந்தது. எனவே அது ஒன்றும் பெரிய பிரச்சினை அல்ல. வானம் அனுகூலமில்லாத நேரத்தில் வெளுத்து உதவி விமானங்கள் சமிக்ஞை பெற முடியாமல் செய்து கொண்டிருந்தால் என்ன செய்ய முடியும்? மார்பளவு நீரில் — அது சேறோ அல்லது வேறு எதுவோ — அதை நடந்தே கடந்து மோசமான மேய்ப்புநிலங்களிலோ சதுப்பு நிலக் காடுகளிலோ மறைந்து கொள்ள வேண்டியதுதான். இயங்குவதற்குத் தேவையான அட்ரினலின் ஸ்ப்ரேயோடு நான் ஒரு முட்டாளைப்போல் நடந்துவர ரோபர்த்தோ என் springfield-ஐத் தூக்கிக் கொண்டு சகதியைக் கடக்க உதவினான். (வெறும் சகதிதானா? எங்களில் பலருக்கு ஏற்கனவே நாங்கள் வழி தவறிவிட்டதாகவும், நிலத்திற்கு பதிலாக தீவிலிருந்து இருபது மைல் தொலைவில் கடலிலுள்ள ஏதோ ஒரு சகதி நிறைந்த திட்டு ஒன்றில் இறங்கிவிட்டோமோ என்ற சந்தேகமும் ஏற்பட்டிருந்தது...) தொடர்ச்சியான குழப்பம் மிகுந்த செயல்களாலும் அனுமானங்களாலும் மோசமாகத் திட்டமிட்டு, மிக மோசமாகச்செயல்படுத்தப்பட்டதன் விளைவு இது. இந்த விமானங்களின் தொல்லையையும் நெடுஞ்சாலையில் நாங்கள் சந்திக்க வேண்டியவை குறித்தும்(அதாவது அந்த இடத்தை நாங்கள்அடைய முடிந்தால்) நினைத்தால் விவரிக்க முடியாத சந்தோஷமும் கோபமும் ஒருங்கே ஏற்பட்டது. இப்படியே இந்தக் கரையோரச் சேற்றில் சர்க்கஸ் கோமாளிகளைப் போல் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தோமானால் அரண்மனையில் இருந்த செங்குரங்குக்கு வேடிக்கை காட்டும் எண்ணம் படுதோல்வியடைந்து விடுமோ என்ற பயமும் ஏற்பட்டது.

எத்தனை நேரம் அப்படியிருந்தோம் என்று யாருக்குமே நினைவில்லை. தாழ்வாகப் பறந்து வேவு பார்த்துக் கொண்டிருந்த விமானங்கள் அகன்று அந்நிலப் பகுதிகளில் அமைதி ஏற்பட்டு விட்டதையும், என் இடப்பக்கத்திலிருந்து நான் கேட்ட அலறலையும் — அது ரோக்கின் குரல் — கொண்டு நேரத்தைக் கணிக்க முயன்றோம். (முறுக்கிக் கொண்டு கிடந்த கொடிகளுக்கும் தேரைகளுக்குமிடையே கிடந்த அந்த சிதைந்த உடல் ரோக்கி-னுடையதுதான் என்று என்னால் நிச்சயமாகச் சொல்ல முடியும்). இப்போது இறுதி இலக்கு மட்டும்தான் எஞ்சியிருந்தது. அதாவது, சியர்ராவை அடைந்து லூயிஸைச் சந்திப்பது — அவன் அங்கு வருவது சாத்தியமாகியிருந்தால்! காரணம், வடதிசைக் காற்றினால் திட்டமிட்ட இலக்கை அடைய முடியாமல் போனதால் எங்களின் ஏனைய திட்டங்கள் யாவும் சின்னாபின்னமாகி விட்டிருந்தன. ஆனா

லும் ஒரு உண்மையை ஒப்புக் கொண்டாக வேண்டும் — எதிர்பார்த்தபடி எதிரி விமானங்களின் தாக்குதல் நடக்கத்தான செய்தது. இது நாங்களே தூண்டிவிட்டு எதிர்பார்த்த ஒன்றுதான். அதனால்தான் ரோக்கின அலறல என்னுள் வேதனையையும் வலியையும் ஏற்படுத்தியபோதும், இந்த உலகின் மீதான எல உக்கிரமான புரிதல் காரணமாக என்னால் சிரிக்க முடிந்தது. ரோபர்த்தோ என் springfield ஐ வாங்கிக்கொண்டு நான் அட்ரினலின் ஸ்ப்ரேயை உபயோகிக்க உதவினான். சிரித்ததால் எனக்கு மேலும் மூச்சுத்திணற, அட்ரினலின் ஸ்ப்ரேயை எடுத்து தண்ணீரிலிருந்தபடியே உறிஞ்ச முயனற போது மூககினுள் அட்ரினலினைவிட சேறுதான அதிகம புகுந்தது. நாஙகள் தவறான கடற்கரையை அடைந்து விடவில்லை; மிஞ்சிப் போனால ஒருசில மைல்களே தள்ளி வந்திருக்கலாம் என்பதை அந்த விமானங்கள் உறுதிப்படுததி விட்டன. மேய்பபு நிலங்களுககப்பால் நெடுஞ்சாலையும் பிறகு விளைநிலங்களும் அவற்றின் வடக்கே குனறுகளும் இருபபது தெளிவாகிவிட்டது. எங்கள தாக்குதலின் நேர்த்தியை எதிரியே உறுதி செய்ய நேர்ந்தது தான் இதில் வேடிக்கையான அம்சம்.

எத்தனை நேரம் இது நீடித்ததோ— கடவுளுக்குத்தான் வெளிச்சம். இரவு வந்த போது எங்களில் ஆறு பேர் முதன் முறையாக உலர்ந்த நிலப்பரப்பில் மெல்லிய மரங்களின் கீழே ஈரப்புகையிலையையும் பிஸ்கட் துண்டுகளையும் கடித்துக் கொண்டு நினறிருந்தோம். லூயிஸ், பாப்லோ, லூகாஸ் யாரிடமிருந்தும் தகவல் இல்லை. தனித்தனியாகப் பிரிந்து போய்விட்டார்களோ — அல்லது செத்தே தான் போனார்களோ; எங்களைப் போலவே கண்காணாத இடத்தில் சொத சொதவென்று அவர்களும் நனைந்துதான் போயிருக்க வேண்டும். நீரிலும் நிலத்திலுமான அந்த அணிவகுப்பின் முடிவில் என எண்ணங்கள் ஒருமுகப்படுவதை உணர மகிழ்ச்சியாயிருந்தது. இனி மரணம் என்பது சேற்றின் நடுவே எதேச்சையில் பாயும் தோட்டாவினால் சம்பவிக்கக்கூடியதல்ல; எல்லாப் பகுதிகளும் துல்லியமாகப் பங்கேற்கும் மிகச்சரியாக இயக்கப்பட்ட ஓர் இயங்கியல் நிகழ்வாகவே அது இருக்கும் என்பது முன் எப்போதைக் காட்டிலும் திட்டவட்டமாகத் தெளிவாகியது. அங்கே ராணுவத்தினர் நெடுஞ்சாலையைக் கண்காணித்துக் கொண்டு, புதர்களைச் சுற்றி வளைத்துக் கொண்டு காத்திருப்பார்கள். பசியால் துவண்டு, சேற்றில் உழன்று இருவர் மூவராய் நாங்கள் வெளிவருவதை எதிர்பார்த்திருப்பார்கள். எல்லாவற்றையும் இப்போது தெளிவாகப் பார்கக முடிந்தது. மீண்டும் முக்கியமான விஷயங்கள் யாவும் என வசமாயின. நாடகத்தின் உச்சக்கட்டத்தில் அத்தனை உயிரோட்டத்துடன், அத்தனை புத்துணர்ச்சியுடன் இருக்க முடிந்தது எனககு சிரிப்பை வரவழைத்தது. சகிக்க முடியாமல் ரோபார்த்தோ பைத்தியமாகும்படி அவன் காதில் கிழப்பாஞ்சோவின் கவிதைகளை பாடிப்பாடி வேடிக்கை செய்து கொண்டிருந்தேன்.

''இந்த சேற்றை மட்டும் கழுவி விட்டால் எத்தனை நன்றாக இருக்கும்...'' என்றார் லெஃப்டினன்ட்.

''நிம்மதியாகப் புகை பிடிக்க முடிந்தால்...'' என்றார் வேறொருவர். (இடது பக்கத்தில் மிகவும் தள்ளியிருந்த அவர் யாரென்று எனக்குத் தெரியவில்லை ஆனால் விடிகாலையில் அவரை நாங்கள் இழந்துவிட்டோம்). மரண பயத்தை வெல்ல எங்களைத் தயார் செய்து கொண்டோம். காவலுக்கு சிலரை நியமித்து விட்டு முறை போட்டுத் தூங்கினோம். அவ்வப்போது புகையிலையை மென்று கொண்டோம். நனைந்து நனைந்து ஊதிப் போய்விட்ட பிஸ்கட்டுகளை உறிஞ்சிக் கொண்டோம். யாரும் லூயிஸ் பற்றிய பேச்சையே எடுக்கவில்லை. காரணம், அவன் கொல்லப்பட்டு விட்டானோ என்ற பயம். அதுதான் எங்கள் முதல் எதிரி. போதுமான ஆயுதங்கள் ஏதுமின்றி கொப்பளித்துப்போன கால்களுடன் லட்சியத்தை

அடையும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் எங்களை அது மிக மோசமாக வீழ்த்தி விடக் கூடும். ரோபார்த்தோவைக் கவனித்துக்கொள்ளச் சொல்லிவிட்டு நான் தூங்கப் போனேன். அவர்கள் லூயிஸைக் கொன்றிருக்கக்கூடும் என்பதை திட ரென்று ஏற்பதென்றால் நாங்கள் இத் தனை நாள் செய்த காரியங்கள் அனைத் தும் அர்த்தமற்றவையாகி விடும். ஆனால் இந்தக் கண்மூடித்தனமான போக்கு இறுதி வரை தொடர்ந்துதானாக வேண்டும். இறுதி என்பது வெற்றியாகவும் இருக்கக் கூடும். இந்த அபத்த விளையாட்டு எங் களின் வருகை பற்றிய விபரம் எதிரிகளுக் தெரியும் அளவுக்கு மோசமடைந்திருந் தாலும்கூட, லூயிஸை இழக்கும் அபாயம் ஏற்படக்கூடும் என்று எங்களுக்குத் தோன் றவேயில்லை. ஒருவேளை நாங்கள் வென்றுவிட்டால், மீண்டும் லூயிஸை சந் திக்க முடிந்தால் — அப்போதுதான் நிஜ மான விளையாட்டே துவங்கப் போகிறது என்றும் தோனறியது. தவிர்க்க முடியாத, கட்டுப்பாடற்ற, பயங்கரமான சாகசங் களுக்கான பிராயச்சித்தங்கள் அப்போது தான் செய்யப்படவேண்டும். துக்கத்தில் ஆழ்வதற்கு முன் எனக்கு ஒருவித காட்சி தோன்றியது: ஒரு மரத்தின் அருகே நின்றிருந்த லூயிஸ் கைகளை மெதுவாக உயரே தூககிச்சென்று ஏதோ முகமூடி யைக கழறறுவது போல் தன் முகத்தைக் கழற்றினான். கழற்றிய முகத்தை கையில் எடுத்துக் கொண்டு தன் சகோதரன் பாப் லோவிடம், என்னிடம், லெஃப்டினன்டிடம், ரோக்கிடம் என்று எல்லோரிடமும் சென்று அதை வாங்கி அணிந்து கொள்ளும்படி ஜாடை செய்கிறான். ஒவ்வொருவராக மறுக்க, கடைசியில் நானும் கண்கள் பனிக்க புன்னகையுடன் மறுக்க, கழற்றிய முகத்தை தானே திரும்பவும் அணிந்து கொள்கிறான் லூயிஸ். பிறகு தோள் களைக் குலுக்கிக் கொண்டு சட்டை பாக் கெட்டிலிருந்து சிகரெட்டை உருவிய போது அவனிடம் அதீதமான களைப்பைக் கண்டேன். ஜுரத்துடன் கூடிய குறைத் தூக்கத்தில் நேர்ந்த பிரமைத் தோற்றம் என்று இந்தக் காட்சியை சுலபமாக விளக்கி விடலாம். ஆனால் கரையேறும் போது அவர்கள் நிஜமாகவே லூயிஸைக் கொன்றுவிட்டிருந்தால் அவன் முகத்தை அணிந்து சியர்ராவுக்குப் போகப் போவது யார்? எங்கள் எல்லோருக்குமே சியர் ராவை அடையவிருப்பமிருந்தது—ஆனால் லூயிஸின் முகத்தை அணிந்து அல்ல... அரைத் தூக்கத்தில் தியாதோச்சி[1]யைப் பற்றி நினைத்தேன். ஆனால் தியா தோச்சியினால் எல்லாம் நாசமாய்ப் போனது தெரிந்த விஷயம் தானே.

வானத்துக்கும் எங்களுக்குமிடையே வெறும் மரங்கள் மட்டுமே நிற்க, இந்தக் கணத்தில் நான் புல்லின் மீது மல்லாந்து படுத்திருக்கும் விபரத்தை எப்படிச் சொல்லுவேனோ அதே போல் சற்று முன்னால் நடந்து முடிந்த அந்தக் கதை யையும் என்னால் நிகழ்காலத்தில்தான் விவரிக்க முடியும். காரணம், கதையின் ஒவ்வொரு கணமும் ஒவ்வொரு சிறு விபரமும் என் நினைவில் துல்லியமாய்ப் பதிந்து கிடக்கின்றன. இது நடந்தது மூன்றாம் நாள் இரவில். மறுநாள் நாங் கள் வேவு பார்க்கும் ஜீப்புகளுககும் இயந் திரத் துப்பாக்கிகளுக்கும் இடையில் எப் படியோ நெடுஞ்சாலையைக் கடந்து விட்டோம். ஆனால் இனி நாளை விடி காலைவரை நாங்கள் காத்திருக்க வேண்டி யதுதான். எங்கள் வழிகாட்டியை அவர் கள் கொன்றுவிட்டார்கள். நாங்கள் சாப் பிடுவதற்கு ஏதேனும் வாங்க வேண்டு மானால் அதற்கேற்ற இடத்திற்கு அழைத் துச் செல்ல யாராவதொரு விவசாயியைக் கண்டுபிடித்தாக வேண்டும் உணவு 'வாங்க' என்றதும் கிட்டத்தட்ட எனக்கு சிரிப்பே வந்து விட்டது. சிரிப்பினால் அதைத் தொடர்ந்து மூச்சுத் திணறல். மற்ற எல்லா விஷயங்களையும் போலவே இதிலும் லூயிஸின் சொல்லை யாரும் மீறத் துணிய மாட்டார்கள். குன்றின் மேலிருந்த காலிக் குடிசையில் கிடைத்த உணவுக்கு விலையாக தட்டின்கீழே ரோபார்த்தோ ஐந்து பெசோக்களை வைத்து விட்டு வந்தது ஞாபகம் வநதது. நாங்கள் சாப்பிடும் பொருளை பணம்

கொடுத்தே வாங்க வேண்டுமென்பதும், நாங்கள் யார், என்ன செய்கிறோம், எதற்காகச் செய்கிறோம் என்பதை உதவி செய்பவருக்கு விளக்கிவிட வேண்டும் என்பதும் லூயிஸின் உத்தரவு. குன்றின் மேலிருந்த அந்தக் குடிசையில் கிடைத்த உணவு Ritz-இல் கிடைப்பது போல் சொர்க்கமாக இருந்தது. (அதாவது ரிட்ஸில் அப்படிப் பட்ட உணவு கிடைப்பது உண்மையானால்...) ஜுரம் மிகவும் கடுமையாகி விட்டதால் என் ஆஸ்த்மா தொல்லை நின்றுவிட்டது பரவாயில்லை. ஒவ்வொரு மேகத்திலும் அதற்கான ஒளிக்கீற்று இருக்கத்தானே செய்கிறது. ஆனால் இதென்ன? மறுபடியும் காலிக் குடிசையில் தட்டுக்குக் கீழே ஐந்து பெசோக்களை வைத்த ரோபர்த்தோவின் செயல் நினைவுக்கு வந்து பயங்கரமாகச் சிரித்து மறுபடியும் மூச்சுத்திணறி என்னை நானே திட்டிக் கொண்டேன். இப்போது நாங்கள் தூங்கியாக வேண்டும். திந்த்தி காவலுக்கு நின்றான். மற்றவர்கள் ஒருவர் மீது ஒருவர் சாய்ந்தபடி ஓய்வெடுத்துக் கொண்டார்கள். என் இருமலும் இழுப்பும் இவர்களைத் தொல்லைப்படுத்துமென்று நான் இவர்களையெல்லாம் விட்டு சற்று தள்ளிப்போய் படுப்பேன். அதுமட்டுமின்றி இரவில் இரண்டு மூன்று முறை நான செய்யக் கூடாத மற்றொரு காரியத்தையும் செய்தேன். ஆம் சற்றே உறவு கொண்டாடுவதற்காக இலைகளால் என் முகத்தை மறைத்துக் கொண்டு சுருட்டைப் பற்ற வைத்துக் கொள்வேன்.

ஒட்டு மொத்தமாகப் பார்த்தால்— அன்று முழுவதற்குமான நல்ல விஷயம்— லூயிஸைப் பற்றி எந்தத் தகவலும் கிடைக்காததுதான். மற்றதெல்லாம் சர்வநாசம். எண்பது பேரில் ஐம்பது அறுபது பேரைக் கொன்று விட்டார்கள். முதன் முதலில் வீழ்ந்தவர்களில் ஜேவியரும் ஒருவன். அந்தப் பெரு நாட்டுக்காரன் ஒருகண்ணை இழந்து மூன்று மணி நேரம் துடிதுடித்துச் செத்தான். என்னால் அவனுக்கு எந்த உதவியும் செய்ய முடியவில்லை; யாரும் பார்க்காத நேரத்தில் அவனைத் தீர்த்து விடக்கூட முடியவில்லை. நாள் முழுதும் எங்கள் கூரியர்கள் யாரேனும் லூயிஸின் மரணச் செய்தியுடன் வந்து விடுவார்களோ என்ற பயமாகவே இருந்தது. நம்ப முடியாத துணிச்சலுடன் எதிரியின் கண் பார்வையிலேயே மூன்று பேர் சென்றிருந்தார்கள். அவன் உயிருடன் இருக்கிறான் என்ற நம்பிக்கையில் காத்திருப்பதும், எந்தச் செய்தியும் கிடைக்காமலிருந்ததுமே பரவாயில்லையென்று தோன்றியது. அந்த மடையன் இப்படி கொஞ்சமும் பயமில்லாமல், எதைப்பற்றியும் கவலைப் படாமல், வெறும் கைத்துப்பாக்கியுடன் திறந்த வெளியில் நடமாடுவான் என்று எங்களுக்கெல்லாம் தெரியும். அதனால் சற்றும் உணர்ச்சிவசப்படாமல், அவன் கொல்லப்பட்டுவிட்டான் என்றே முடிவு செய்தேன். இருக்காது. லேரிபஸ் அவனை பத்திரமாகக் கவனித்துக் கொள்வான். சில சமயங்களில் லேரிபஸ் அவனை ஒரு குழந்தையைப் போல் நடத்தி தாஜா பண்ணிவிடுவான். குறிப்பிட்ட நேரத்தில் அவன் என்ன செய்ய நினைக்கிறானோ அதற்கு நேர் எதிரான காரியத்தைத்தான் செய்ய வேண்டுமென்று ஒப்புக் கொள்ள வைத்துவிடுவான். ஆனால் ஒரு வேளை லேரிபஸூம்...? இப்படிக் கவலைப்பட்டு அணு அணுவாகச் சாவதில் அர்த்தமில்லை. இந்தப் பயத்திற்கு எந்த ஆதாரமும் இல்லை. தவிர, இந்த அமைதி மிகவும் விசித்திரமானது. ஏதோ திட்டமிட்டபடி எங்கள் இலக்கையே அடைந்து விட்டது போல் ('லட்சியத்தைப் பூர்த்தி செய்துவிட்டது போல்' என்று கூட நினைத்தேன். ஆனால் அப்படி நினைப்பது எத்தனை முட்டாள்தனம்!) இதென்ன சுகமாக மல்லாந்து கிடப்பது? இது ஜுரத்தாலும் இருக்கலாம். களைப்பினாலும் இருக்கலாம். அல்லது பொழுது விடுவதற்குள் தேரைகளை நசுக்குவது போல் எங்கள் அனைவரையும் பூண்டோடு ஒழித்துக்கட்டிவிடுவார்கள் என்பதாலும் இருக்கலாம், ஆனால் இந்த அபத்தமான தருணத்தில் கிடைத்திருக்கும் ஓய்வை சரியானபடி அனுபவித்துவிட வேண்டியதுதான். பாதி மூடிய கண்களுடன் மிகக்



பற்ற

குறைந்த நட்சத்திரங்களே உள்ள தெளிவான வானத்தின் பின்னணியில் இலைகளும் கிளைகளும் உண்டாக்கும் தற்செயலான டிசைன்களை, அந்த சந்தங்களின் இணைவை, அவை ஒன்றன்மீதொன்றாய் ஊர்வதை, பின் பிரிவதை, சதுப்பு நிலப் பகுதியிலிருந்து வீசும் தகிக்கும் உஷ்ணக் காற்றினால் அந்த டிசைன்கள் மெலிதாய் மாறுவதை — இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்க வேண்டியதுதான். என் மகனைப்பற்றி நினைத்தேன். ஆனால் அவன் ஆயிரக்கணக்கான மைல்களுக் கப்பால் இன்னமும் மக்கள் படுத்துத் தூங்கக் கூடிய நாட்டில் இருக்கிறான். அவன் உருவம் நிஜத்தன்மையை இழந்து தேய்ந்து சிறுத்து மர இலைகளினூடே மறைகிறது. ஆனால் என்னுடனேயே எப்போதும் இருந்து வருகிற மொஸார்ட்டின் quartetஐ நினைவு கூர்வது எனக்கு மிகுந்த நன்மையைச் செய்கிதது. வேட்டை என்ற அந்த quartet இன் முதல் மூவ்மென்ட் — பல்லவியை எழுப்புதல் — மரணத்தின் எக்காளம் — வயலின்களின் அந்தமிருதுவானஇழைவு — காட்டுமிராண்டித்தனமான ஒரு சடங்கு தெளிவான உள்ளார்ந்த உவகையாக மாற்றமடைதல் — மீண்டும் மீண்டும் அதை நான் நினைவு கூர்கின்றேன். நினைவில் அதை மீண்டும் இசைத்துப் பார்க்கிறேன். அதே நேரத்தில் அதன் மெலடி (melody)யும் வானில் மரத்தின் உச்சி ஏற்படுத்திய காட்சியும் நெருங்கி சிநேகிதர்களாகி ஒன்றை யொன்று ஸ்பர்சித்து, சட்டென்று அதுவே மெலடியின் பிரத்யட்சக் காட்சியாக உருப்பெறுகிறது. என் தலை உயரத்திலிருந்த தாழ்ந்த கிளையொன்றிலிருந்து புறப்பட்ட சந்தம் குறிப்பிட்ட உயரம்வரை சென்று தன் தண்டுகளை விசிறியாய் விரிக்கிறது. அந்த மெல்லிய கிளைதான் இரண்டாவது வயலின். முந்தைய கிளைக்கு அடுத்தபடியாக உள்ள அது தன் இலைகளை வலப்பக்கமாக அந்தப்பாடல் பகுதியின் முடிவிலுள்ள ஒரு புள்ளியில் குவித்து அதனை முடிக்கிறது. இது பார்வையை மரத்தின் உடம்போடு கீழே கொண்டு செல்லும்படியாக, தேவையானால் மீண்டும் மெலடியை மற்றொரு முறை இசைக்கவும் வழி செய்கிறது. இது எல்லாம் சேர்ந்ததுதான் எங்களின் கலகமும். மொஸார்ட்டுக்கும் இந்த மரத்துக்கும் இது தெரியாமல் போகலாம். ஆனால் நாங்களும் எங்கள் வழியில் ஒரு குழப்படியுத்தத்தை அர்த்தமுள்ளதாக்கும் — நியாயபடுத்தும் — இறுதியில் வெற்றிக்கு இட்டுச் செல்லும் ஒரு வழிமுறையாகவே நினைத்து வருகிறோம். பல வருடங்களாயிருந்து வரும் வேட்டைக்கான தாரை தப்பட்டைக் கூச்சலுக்குப்பின் மீட்டெடுக்கப்பட்ட மெலடியைப் போல், quartet-இன் உச்சக்கட்டமான allegro அதன் adagioவை ஒளித்தாக்குதலாக தொடர்வதைப் போல் தன் முரட்டுத்தனத்தை விட்டுக் கொஞ்சம் கொஞ்சமாக அதனை அதீதத்தாலும் எச்சத்தாலும் மற்றெல்லா நுட்பமான தாற்காலிகமான நோக்கங்களையும் அழித்தொழித்து ஆதிநோக்கத்திற்கு இட்டுச் செல்லும் அவனை இந்தத் தருணத்தில் நான் மொஸார்ட்டுக்கு ஒப்பிடுவது தெரிந்துவிட்டால் லூயிஸுக்கு எத்தனை ஒரு போதை ஏற்படும்! அசாத்தியமான பாடலென்று நாங்கள் நினைத்திருந்த பாடலை, மர உச்சிகளுடன் சிநேகம் கொண்டு பூமியை அதன் பிள்ளைகளுக்கு மீட்டுத்தரும் அந்தப்பாடலை, சேறையும் தோட்டாக்களையும் சோர்வையும் மீறித் திட்டமிட்டு, மனிதர்களை இசைவிக்கும் கலைஞனாக இருப்பது தான் எத்துணை கசப்பானதும் பைத்தியக்காரத்தனமுமான காரியம்? இது ஒரு ஜுரம்! அவனுக்கும் மொஸார்ட்டைப் பிடிக்கும் என்பது நிச்சயமாகத் தெரிந்தாலும், அவன் தான் இதைக் கேட்டதும் எப்படிச் சிரிப்பான்!

இப்படியே இறுதியில் நான் தூங்கிப் போய்விடுவேன். ஆனால் அதற்குமுன், என்றாவது ஒருநாள் இன்னமும் வேட்டைக்கான தாரை தப்பட்டை முழங்கும் இந்த இயக்கத்தைக் கடந்து சிரமப்பட்டுக் கைப்பற்றிய adagioவை அனுபவித்து, அடிக்குரலில் நான் முணுமுணுக்கும் அந்த allegroவை அடையும் வழியைத் தெரிந்து

கொள்ள முடியுமா என்று ஆச்சரியப்பட்டு விட்டுத்தான் தூங்குவேன். எங்கள் முன் இன்னமும் ஜீவனுடன் விட்டு வைக்கப் பட்டவைகளுடன் சமரசம் செய்து கொள்ளத் தயாராக இருப்போமா என்று ஆச்சரியப்பட்டுவிட்டுத்தான் தூங்கிப் போவேன். இன்னமும் லூயிஸைப் பின் பற்றிக் கொண்டிராமல் அவனைப் போலவே நாங்களும் மாறியாக வேண்டும். வெறுப்பையும் குரோதத்தையும் அறவே துறந்துவிட்டு ரட்சகரைப் போல் தீராத கருணையுடன் எதிரியைப் பார்க்க வேண்டும். ஆனால் இதை எப்படி நான் வெளியே சொல்ல முடியும்? அவனொரு நீதிபதி, குற்றவாளியாகத் தொடங்கி, பின் சாட்சியாகத் தொடரும் நீதிபதி. நீதி வழங்காத நீதிபதி. இன்றைவிடத் தெளிவான காலத்தின் கரையில், என்றோரு ஒரு நாள், நடுங்கும் விடியல் பொழுதொன்றில் மக்களின் ராஜ்ஜியத்தை உருவாக்குவதற்காக இன்று நீரிலிருந்து நிலத்தைப் பிரிக்கும் காரியத்தைச் சாத்தியமாக்குபவன்.

எப்பேர்ப்பட்டதொரு adagio அது! வெள்ளி முளைத்ததும் எல்லாத் திசைகளிலிருந்தும் அவர்கள் தாக்குதலைத் தொடங்கிவிட்டார்கள். எனவே வடகிழக்கே தொடரும் எண்ணத்தைக் கைவிட்டு விட்டு கையிலிருந்த கொஞ்சநஞ்ச வெடிமருந்துகளையும் வீணடித்துக் கொண்டு முன்பின் அறிந்திராத ஒரு பிரதேசத்திற்குச் செல்ல வேண்டியதாயிற்று. அதற்கிடையே லெஃப்டினன்டும் மற்றொரு தோழரும் ஒரு குன்றில் இருந்தபடி சற்று நேரத்திற்கு எதிரியின் தாக்குதலை நிறுத்திவைத்து தொடையில் காயமடைந்த திந்த்தியைத் தூக்கிக் கொண்டு ரோபர்த்தோவும் நானும் அன்றைய பகற்பொழுதைக் கழிப்பதற்கு பாதுகாப்பான ஒரு இடத்தை அடைய வழி செய்தார்கள். எதிரியிடம் நீண்ட தூரத்திற்கு ஒளியைப் பாய்ச்சும் மின் கருவிகள் இருந்தும்கூட இரவில் அவர்கள் தாக்குவதே இல்லை. அதிக எண்ணிக்கையில் இருந்தும்கூட தவிர்க்கமுடியாத ஒருவகையான பயங்கர உணர்வும், ஆயுதங்களை வீணடித்துவிடக் கூடிய அபாயமும் அவர்களைத் தடுத்துவிடும். ஆனால் இரவு வரை நாங்கள் சமாளிக்க ஒரு முழுநாள் இருக்கிறது. துணிச்சலான அந்தப் பையன்களை விட்டு எங்களை அலைக்கழித்த அந்தச் செங்குரங்கை எதிர்த்துச் சமாளிக்க நாங்கள் இருந்தது ஐந்தே பேர்தான். அது தவிர, காட்டின் மத்தியிலிருந்த பொட்டல்களில் விமானங்கள் வேறு அடிக்கடி தாழ்வாகப் பறந்து கொண்டிருந்தன. அவை உமிழ்ந்த நெருப்பு பனைமரங்களைப் பெருமளவில் சுட்டெரித்தது.

அரைமணி நேரத்திற்குப் பிறகு லெஃப்டினன்டும் தனது தாக்குதலை முடித்துக் கொண்டு நாங்கள் இருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தார். திந்த்தியை கைவிட்டுவிட்டுச் செல்வது பற்றி யாரும் நினைத்துக் கூடப் பார்க்கவில்லை, காரணம், கைப்பற்றப்பட்ட கைதிகளின் நிலைமை பற்றி எங்களுக்கு நன்றாகவே தெரியும். அதை விட, அந்தக் குன்றின் சரிவில், அதன் புதர்க்காடுகளில், எங்களின் கடைசித் தோட்டா தீரும்வரை நாங்கள் போராடத் தயாராயிருந்தோம். ஆனால் விமானங்களால் ஏமாற்றப்பட்டு கிழக்கே வெகுதொலைவிருந்த ஒரு குன்றின் பக்கம் அவர்கள் தாக்கிக் கொண்டிருந்ததனால் கரடு முரடான பாதை வழியே நாங்கள் மேலும் உயரத்திற்குச் செல்ல முடிந்தது. இரண்டு மணி நேரத்திற்குப் பிறகு ஒரு மொட்டையான குன்றை அடைந்து தோழர் ஒருவர் தனது கழுகுப் பார்வையில் சுட்டிக் காட்டிய உயரமான புதர்களிடையே மறைந்திருந்த ஒரு குகையை அடைந்து மூச்சு வாங்க உட்கார்ந்தோம். அங்கிருந்து நேர் வடக்கே சியர்ராவை நோக்கிச்செல்வதென்று முடிவுசெய்தோம். ஒருவேளை ஏற்கனவே லூயிஸ் அங்கே சென்றடைந்திருக்கக் கூடும்.

சுயநினைவின்றிக் கிடந்த திந்த்தியை நான் கவனித்துக் கொண்டிருக்கையில், காலையில் ராணுவம் தன் தாக்குதலைத் தொடங்குவதற்குச் சற்று முன்னால்,

மேற்கே தானியங்கித் துப்பாக்கிகளும் பிஸ்டல்களும் இயங்கும் சத்தத்தை தான் கேட்டதாக லெஃப்டினன்ட் என்னிடம் சொன்னார். அது பாப்லோவின் குழுவாக இருக்கும். அல்லது லூயிஸாகவும் இருக்கலாம். எங்களின் முடிவான கணிப்பின்படி உயிர் தப்பியவர்கள் மூன்று குழுவினராக இயங்குவதும், பாப்லோ வெகு தொலைவில் இல்லை என்பதும் தெளிவாகியது. இரவு நெருங்கும் நேரம் ஒரு கூரியரை அனுப்பிப் பார்த்தால் என்ன என்று கேட்டார் லெஃப்டினன்ட்.

''நீங்கள் போக விரும்புவதால்தானே கேட்கிறீர்கள்?'' என்று திருப்பிக் கேட்டேன், திந்த்தியை குகையின் குளிர்ந்த பகுதியில் உலர்ந்த புல்லின் மேல் படுக்க வைத்து விட்டு நாங்கள் புகை பிடித்தவாறு ஒய்வெடுத்தோம். மற்ற தோழர்கள் வெளியே காவலிருந்தார்கள்.

''இது மாதிரி பயணங்கள் எனக்கு ஒருவகை போதையைத் தருகிறது. உன்னால் கற்பனை செய்ய முடிகிறதா, நண்பா?'' என்று வேடிக்கையாகக் கேட்டார் லெஃப்டினன்ட். கொஞ்சநேரம் இப்படியே பேசிக் கொண்டு, ஜன்னியில் பிதற்றிக் கொண்டிருந்த திந்த்தியிடம் ஜோககடித்து விட்டு வெளியே கிளம்பினார் லெஃப்டினனட். அந்தச் சமயம் தான் ரோபர்த்தோவும் ஒரு மலையேறியும் வறுத்த ஆட்டிறைச்சியை எடுத்துக் கொண்டு வந்து சேர்ந்தார்கள். நம்பவே முடியாத ஆச்சர்யத்துடன் நாங்கள் அதை பிசாசைப் போல் தின்றோம். திந்த்தி கூட ஒரு துண்டை மென்றுவைத்தான் (இரண்டு மணி நேரத்திற்குப் பிறகு அந்த இறைச்சித் துண்டையும் தன் உயிரோடு சேர்த்து வாந்தியெடுத்தான்). லூயிஸ் இறந்து விட்ட செய்தியைச் சொன்னான் மலையேறி. அதற்காக நாங்கள் சாப்பிடுவதை நிறுத்திவிடவில்லை. ஆனால், இந்தச் சிறிதளவு இறைச்சிக்கு இத்தனை உப்பா? லூயிஸைப் பார்த்தது அவரில்லை, பழைய வேட்டைத் துப்பாக்கி ஒன்றுடன் எங்களுடன் சேர்ந்து கொண்ட அவரது மூத்த மகன் தான். லூயிஸும் இன்னும் ஐந்து தோழர்களும் இயந்திரத் துப்பாக்கித் தாக்குதலுக்கிடையே நதியைக் கடக்க உதவிய குழுவினரில் அவனும் ஒருவனாய் இருந்தானாம். நீரிலிருந்து வெளியேறி புதர்களை அடையும் முன் லூயிஸ் தாக்கப்பட்டு விட்டான் என்று திட்டவட்டமாகச் சொன்னான் (மலையேறியின் மகன்).வேறு யாரையும் விட நன்றாகப் பழகிய கலையாதலால் காடுகளின் வழியே அவர்கள் விரைவாக மேலேறி வந்து விட்டார்கள். லூயிஸின் குழுவிலிருந்த மீதி இருவரையும் அழைத்துக் கொண்டு மலையேறிகள் சிலர் இரவில் ஏராளமான ஆயுதங்களையும் வெடி மருந்துகளையும் எடுத்துக கொண்டு வந்து எங்களுடன் சேர்ந்து கொள்வார்கள் என்றான் அவன்.

லெஃப்டினன்ட் மற்றொரு சுருட்டைப் பற்றவைத்துக் கொண்டு முகாமை ஒழுங்கு படுத்தவும் புதியவர்களை அறிமுகம் செய்து கொள்ளவம் வெளியே போனார். மெதுவாக — ஆனால் வலியில்லாமல் செத்துக் கொண்டிருந்த திந்த்தியின் அருகிலிருந்தேன் நான். கடைசியில் செய்தி கிடைத்து விட்டது. லூயிஸ் இறந்து விட்டான் — குட்டிஆட்டின் இறைச்சிசப்புக் கொட்டுகிற அளவுக்கு ருசியாயிருந்தது — இன்றிரவு நாங்கள் ஒன்பது அல்லது பத்து பேர், சண்டையைத் தொடர தேவையான ஆயுதங்களுடன் இருப்போம். ஒரு பக்கம் இச் செய்தி உணவையும் ஆட்களையும் தந்து நிகழ்காலத்தை பலப்படுத்தினாலும் மறுபக்கம் எதிர்காலத்தை குரூரமாக ஒரே வீச்சில் வீழ்த்துவதாயிருந்தது. ஒரு சிறிய செய்தி சிறிதளவு இறைச்சியோடு வந்து இதுவரைத்திய எங்களது செயல்பாடுகள் அனைத்தையும் சட்டென்று முடிவுக்குக் கொண்டு வந்து விட்டது. அந்த இருண்ட குகையில் என் கடைசி சுருட்டை சுருட்டியவண்ணம் யோசித்துப் பார்த்த போது அத்தனை சுலபமாக லூயிஸின் இறப்பை என்னால் ஒப்புக் கொண்டு விட முடியாது என்று தோன்றியது எங்கள் திட்டத்தின் மற்றுமொரு கட்டமாகத்தான் நான் அதைக் கையாள வேண்டும்.

காரணம், பாப்லோவும் கூட இறந்து விட்டிருந்தால், லூயிஸின் விருப்பப்படி நான் தான் தலைமையேற்க வேண்டும். இது எனக்கும் மற்ற எல்லோருக்கும் தெரிந்ததுதான். குழுவின் தலைமைப் பொறுப்பை ஏற்று சியர்ராவை அடைந்து எந்தத் தவறுமே நடக்காதது போல் மேற் கொண்டு ஆக வேண்டியதைக் கவனிப்பது தான் நான் செய்ய வேண்டிய காரியம். அப்போது நான் கண்களை மூடிக் கொண் டேன் என்று நினைக்கிறேன்; எனது நினைவில் உறைந்திருப்த காட்சி மீண்டும் தோன்றியது. ஒரு கணம் லூயிஸ் தன் முகத்தைக் கழற்றி என்னிடம் கொடுத்த தாகவும் நான் எனது முகத்தை இரு கைகளாலும் மறைத்துக் கொண்டு ''வேண்டாம், தயவு செய்து வேண்டாம் லூயிஸ்'' என்று கெஞ்சுவதாகவும் தோன் றியது. கண்விழித்த போது லெஃப்டினன்ட் திரும்பியிருந்தார். சிரமப்பட்டு மூச்சு விட்டுக் கொண்டிருந்த திந்த்தியைக் கவனித்துக் கொண்டே காட்டிலிருந்து மேலும் இரண்டு பேர் எங்களுடன் சேர்ந்து கொண்டதாகத் தெரிவித்தார். எல்லாம் நல்ல செய்தி தான். கொஞ்சம் வெடி மருந்துகளும் வறுத்த சீனிக் கிழங்கும் ஒரு மருந்துப்பெட்டியும் வந்திருக்கின்றன; ராணுவம் கிழக்கே குன்றுகளில் தோற்றுப் போனது ; ஐம்பது கெஜதூரத்தில் வேண்டிய அளவு ஊற்றுநீர் இருக்கிறது. ஆனால் அவர் என் கண்ணைப் பார்த்துப் பேசவேயில்லை. சுருட்டைக் கடித்துக் கொண்டே நான் ஏதாவது பேச மாட் டேனா, லூயிஸைப் பற்றி மறுபடி பேச்செடுக்க மாட்டேனா என்று காத் திருப்பது போல் தென்பட்டார்.

அதன்பிறகு சற்று குழப்பமான இடை வெளி. திந்த்தி ரத்தமாக வாந்தியெடுத் தான். நாங்கள் அவனை இழந்தோம். மலையேறிகள் அவனைப் புதைப்பதற்கு முன் வந்தார்கள். வாந்தி நாற்றமும் வியர்வை நாற்றமும் சேர்ந்து அடித்த போதும் நான் குகையிலேயே தங்கி ஓய் வெடுத்துக் கொண்டேன். ஏனோ காரணம் தெரியாமல் என் முன்னாளைய நண்பனைப் பற்றி, அந்த விரிசல் என் வாழ்க்கையில் ஏற்படும் வரையில் என் சிறந்த நண்பனாயிருந்தவனைப் பற்றி, நினைக்கத் தலைப்பட்டேன். என்னை என் நாட்டிலிருந்து பெயர்த்தெடுத்து, ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பால் லூயிஸிடம் அழைத்து வந்ததும், இந்த யுத்தத்திற்கும் இந்தக் குகைக்கும் அழைத்து வந்ததும் அந்த விரிசல்தான். கால வித்தியாசத்தைக் கணக்கில்கொண்டு பார்த்தால், அவன் இந்தப் புதன்கிழமை யில், இந்த நேரத்தில், தன் அலுவலகத் திற்குள் நுழைந்து, தொப்பியைக் கழற்றி கொக்கியில் மாட்டிவிட்டு தபாலைப் பார்த்துக் கொண்டிருப்பான். அவனைப் பற்றி நினைவுகூர கனவொன்றும் காண வேண்டியிருக்கவில்லை. அரசியலையும் பெண்களையும் புத்தகங்களையும் பகிர்ந்துகொண்டு, தினம் மருத்துவமனை யில் சந்தித்துக்கொண்டு நகரத்தில் நாங் கள் கழித்த அந்தச் சில வருடங்களை நினைத்தவுடன் எல்லாமே கண்முன் தெரிய ஆரம்பித்துவிட்டது. அவனுடைய ஒவ்வொரு அசைவும் எனக்கு மிகவும் பழக்கமானதுதான். அவனுடைய செயல் கள் அவனை மட்டுமின்றி என்னை, என் மனைவியை, தந்தையை, ஊதிப் பெருக்கப்பட்ட தலையங்கங்களைத் தாங் கிய செய்தித்தாள்களை, மதிய நேரத்தில் சக மருத்துவர்களுடன் நான் காப்பி அருந்திய நேரங்களை, என் படிப்பை, என் கருத்துக்களை என என் உலகம் முழுவதையும் ஆட்கொண்டன. அவன் இதையெல்லாம் பற்றி, லூயிஸையும் என்னையும் பற்றி, என்ன நினைப்பான் என்று யோசித்துப் பார்த்தேன். உடனே இதற்கான பதில் அவன் முகத்தில் எழுதி வைத்திருந்தாற்போல் எனக்குத் தெரிந்து விட்டது. (மறுபடியும் ஜுரம் வந்து விட்டது...க்வினைன் சாப்பிட்டாக வேண் டும்). நல்ல வாழ்க்கையும் திறமையான சர்ஜனாக விளங்கியதன் நற்சான்றுகளும் அவனுக்கு திருப்தியானதொரு முகத்தைத் தந்திருந்தன. அவன் வாயைத் திறந்து ''நீயும், உன் புரட்சியும்...'' என்று சொல்லக்கூடத் தேவையில்லை. அவனால்

அப்படித்தான் நினைக்க முடியும். அவர்களின் சுலபமான, திட்டமிட்ட கருணையின் உண்மைக் காரணங்களை, வரையறுக்கப்பட்ட அளவான தர்மத்தை, சமமானவர்களிடம் அவர்கள் காட்டும் நன்னடத்தையை, வரவேற்பறை நாகரிகத்தை ("என்ன சொன்னாய்? நம் பெண் அந்த முலாட்டோவை மணப்பதா?") ஓ... வருடாந்திர வட்டி தரும் குறுகிய காலத்திற்கு அலங்கார மேடைகளில் முழங்கும் படாடோபமான இவர்களின் கத்தோலிசிஸத்தை, மரவள்ளிக்கிழங்கு இலக்கியத்தை, எண் இடப்பட்ட பிரதிகளில் அடங்கும் அவர்களின் நாட்டுப்புறவியலை, தேவையானால் முழந்தாளிட்டு சலாம் போட்டு — வெள்ளிக்கிண்டிகளில் mate-ஐ உறிஞ்சும் நியாயவாதிகளின் கூட்டத்தை, தவிர்க்க முடியாத — மடத்தனமான — குறுகிய அல்லது நீண்டகால மரண பயத்தை — இவை அனைத்தையும் தோலுரித்துக் காட்டக்கூடிய எந்த ஒரு மாற்றத்தையும் ஒப்புக்கொள்ள முடியாதவர்கள் அவர்கள். (க்வினைன்...க்வினைன் ...மறுபடியும் ஆஸ்த்மா). அவனுடைய காலததுடன் அல்லது அதிகபட்சமாய்ப் போனால் அவன் பிள்ளைகளின் காலத்துடன் அழியப் போகிற பொய்யான மதிப்பீடுகளை முட்டாளைப் போல் சுமந்து கொண்டிருப்பான் என்பதை நினைக்க வருத்தமாக இருந்தது. அழகான வீட்டையும் ஆலோசனை அறையையும் தவிர வேறு எதுவுமில்லாத அவன் சொத்துக்கும் எல்லையில்லாத செல்வத்துக்குமான நிலப்பிரபுத்துவ உரிமையை நியாயப்படுத்திக் கொண்டிருப்பான். மனைவியின் பூர்ஷ்வா கத்தோலிசிஸத்தின் உதவியால் பல்கலைக் கழகங்களிலிருந்தும் தணிக்கை செய்யப்பட்ட பதிப்பகங்களிலிருந்தும் கிடைக்கும் ஆதாயத்தின் காரணமாக மட்டுமே தேவாலயத்தின் கோட்பாடுகளை நியாயப் படுத்துவான். பயமும் மாற்றம் குறித்த திகிலும் சந்தேகமும் அவநம்பிக்கையும் மட்டுமே ஆட்சி செலுத்தும் தன்னுடைய பரிதாபகரமான, இழந்து போன தாய் நாட்டில் அவனால் இதையெல்லாம் தான் நியாயப்படுத்திக் கொண்டிருக்க முடியும். சற்று முன்னர்தான் வடக்கே தொடர்பு கொண்டதாகவும் லூயிஸ் உயிருடன் இருக்கிறான் என்றும் கத்திக்கொண்டே லெஃப்டினன்ட் உள்ளே நுழைந்தபோது நான் இதையெல்லாம்தான் நினைத்துக் கொண்டிருந்தேன். Son of a bitch... லூயிஸ் உயிரோடு இருக்கிறான்! பள்ளத் தாக்கு ஒன்றில் ஒதுங்கிவிட்ட ராணுவத் துருப்புக்களிடமிருந்து கைப்பற்றிய எல்லா ஆயுதங்களுடனும், ஐம்பது விவசாயிகளுடனும் லூயிஸ் சியர்ராவின் உச்சியை அடைந்து விட்டானாம். அவ்வளவுதான். உடனே முட்டாள்களைப் போல் ஒருவரையொருவர் கட்டிக்கொண்டு ஏதேதோ பிதற்றினோம். அவற்றையெல்லாம் பின்னால் நினைத்துப் பார்த்தால் வெகு நாட்கள் வரைக்கும் கோபமும் வெட்கமும் சந்தோஷமும் ஏற்படும். ஒருவரையொருவர் கண்ணுக்குள் பார்த்துக் கொள்ள முடியாமல் சுருட்டைப் பற்றவைத்து விட்டு நெருப்பையே வெறித்துப் பார்த்துக் கொண்டு புகையால் ஏற்பட்ட கண்ணீரைத் துடைத்துக் கொண்டிருந்த நேரத்தில், லூயிஸ் உயிரோடிருந்த செய்தியைக் கேட்டு அடைந்த பரவசத்தைவிட, வறுத்த இறைச்சியைத் தின்றுவிட்டு ஆட்டம் போட்டதைவிட, வேறு எதுதான் அர்த்தமுள்ளதாக இருக்க முடியும்?

சொல்வதற்கு இனி அதிகம் ஒன்றுமில்லை. பொழுது விடியும் நேரம் எங்களுடனிருந்த மலையேறிகளுள் ஒருவன் பாப்லோவும் அவனது குழுவைச் சேர்ந்த மூன்று தோழர்களும் இருந்த இடத்தைக் காட்டினான். பாப்லோவின் கால்கள் சேற்றினால் உருக்குலைந்து போயிருந்ததால் லெஃப்டினன்ட் அவனைத் தூக்கிக் கொண்டார். நாங்கள் மொத்தம் இருபது பேர் ஆகி விட்டோம். தன் அதிவேகமான பாணியில் என்னைக் கட்டிக் கோண்டு, வாயிலிருந்து சிகரெட்டை வெளியே எடுக்காமலேயே, ''லூயிஸ் உயிரோடிருந்தால் இன்னமும் நம்மால் வெல்ல முடியும்'' என்று சொன்னான் பாப்லோ. வெகு நேர்த்தியாக நான் கட்டுப் போட்டிருந்த அவனுடைய காலைப் பார்த்து ''புது ஷூ

போட்டுக் கொண்டு 'ஷோ'வா காட்டு கிறாய்? இது மாதிரி தேவையில்லாத ஆடம்பரத்தைக் கண்டால் உன்சகோதரன் உன்னைச் சும்மா விட மாட்டான்'' என்று மற்றவர்கள் அவனைக் கேலி செய்தார்கள். வெறி கொண்டவனைப் போல் புகைத்துக் கொண்டே ''நன்றாகத் திட்டட்டுமே... யாரையாவது திட்ட வேண்டுமானால் நீ உயிருடன் இருக்க வேண்டும் நண்பா!

லூயிஸ் உயிருடன் இருக்கிறான். உனக் குத் தெரியாதா? முதலையைப் போல் அவன் உயிருடன் இருக்கிறான். நாமெல் லாம் இப்போது அங்கே போகப் போகி றோம். நீங்கள்தான் எனக்கு 'பாண்டேஜ்' போட்டு விட்டீர்கள். இது உங்களுடைய ஆடம்பரம்'' என்றான் பாப்லோ. ஆனால் இந்த உற்சாகம் நீடிக்கவில்லை. விடிந் ததும் சூரியனுடன், கூடவே தோட்டாக் களும் கீழிருந்தும் மேலிருந்தும் வர ஆரம் பித்தன. ஒரு சமயம் என் காதை உரசிக் கொண்டு பாய்ந்தது ஒரு தோட்டா. அது மட்டும் இன்னும் கொஞ்சம் சரியாக இரண்டு அங்குலம் தள்ளிப் பாய்ந்திருந் தால், இந்தக் கிழவன என்ன சொல்ல வருகிறான் என்று இன்று இதைப் படித் துக கொண்டிருக்கும் உனக்குத் தெரியாம லேயே போயிருக்கும் மகனே! ரத்தமும் வலியும் பயமும் சேர்ந்து கொள்ளவே ஒவ் வொரு உருவமும் எனக்குத் தெள்ளத் தெளிவாக, குவிஓவியத்தைப்போல் (bas-relief). முப்பரிமாணத்தில், அழகிய வண் ணங்களில் தெரிய ஆரம்பித்துவிட்டன.

வாழ வேண்டுமென்ற ஆசைதான் இதற் கெல்லாம் காரணமாக இருக்க வேண்டும். தவிர எனக்கு ஒரு குறையுமில்லை. கைக் குட்டையை வைத்து காயத்தை இறுகக் கட்டிவிட்டு மேற்கொண்டு ஆக வேண்டி யதைக் கவனிக்க வேண்டியதுதான். ஆனால் 45 குண்டு துளைத்த முகத்துட னிருந்த பாப்லோவின் உதவியாளனும். இரண்டு மலையேறிகளும் பின் தங்கி விட்டனர். இம்மாதிரி நேரங்களில் மிகவும் அற்பமான விஷயங்கள்கூட நம் மனதில் பதிந்து போய் விடுகின்றன. உதாரணத் துக்கு ஒன்று : சண்டையின் உச்சக் கட்டத் தின்போது கரும்புக்கழி ஒன்றின் பின்னால் மண்டியிட்டு பக்கவாட்டில் உட்கார்ந்த வாறு தன்னை மறைத்துக் கொள்ள முயன்றான் தடிமனான ஒரு ஆள். பாப்லோவின் குழுவிலிருந்த அவனும்கூட பின்தங்கிவிட்டான என்று நினைக்கிறேன். அது மட்டுமல்ல. யாரோ நாங்கள் சரண டைய வேண்டுமென்று கத்த, அவனுக்கு தாம்ஸன் துப்பாக்கியை இரண்டு முறை இயக்கி பதில்கொடுத்தார் லெஃப்டினன்ட். அந்த இரைச்சலையும் மீறிய குரலில்''No, fuck it, இங்கு யாரும் சரணடைவ தில்லை'' என்று அவர் கர்ஜித்ததும் துல்லியமாக நினைவிருக்கிறது.

அதன் பிறகு தான் அதுவரை வெட் கத்துடன் மௌனமாக இருந்த அந்தக் குள்ளமான மலையேறி அங்கிருந்து நூறு கஜ தூரத்தில் இடதுபுறமாக வளைநது மேலேறும் வழியொன்று இருப்பதைத் தெரிவித்தான். லெஃப்டினன்டுககு அதை சத்தமாகக் கத்திச் சொலலி விட்டு குழுவிற்கு முன்னே நான் செல்ல மலை யேறிகள் என்னைத் தொடர்ந்து வந்தார் கள். நரகத்தையே கண்முன் கொண்டு வந்தாற்போல் கன்னாபின்னாவென்று சுட்டு, வழியெங்கும் அடர்த்தியான நெருப்பைத் தெளித்து, அதைப் பின்பற்றி அவர்கள் வருவதைப் பார்த்து ஆனந்தித் துக்கொண்டே சென்றேன். நாங்கள் செல்லவேண்டிய பாதை தொடங்குமிடத்தி லிருந்த சேயிபா (ceiba) மரத்தடிக்கு அனைவரும் வந்து சேர்ந்தோம். அங்கிருந்து அந்தக் குள்ளமான மலையேறி வழிகாட்டியபடி முன்னே செல்ல, நாங்கள் பின்தொடர்ந் தோம். என்னை நடக்கக்கூட சக்தியற்ற வனாக்கி விட்ட என் ஆஸ்த்மாவுடன், பின் கழுத்தின் குண்டடிபட்ட காயத்திலிருந்து தலை துண்டிக்கப்பட்ட பன்றியைப் போல் ரத்தம் வழிய வழிய நான் மேலேறிய போது, அன்றைய பொழுதுக்கு நாங்கள் நிச்சயம் தப்பித்து விடுவோம் என்று திட்டவட்டமாகத் தெரிந்தது. என்ன காரணத்தாலோ, அன்றிரவே லூயிஸைச் சந்திக்கப் போகிறோம் என்பதும் ஒரு

தேற்றத்தைப் போல தெள்ளத் தெளிவாகியது.

பின் தொடர்ந்து வருகிறவர்களை எப்படித்தான் பிரிந்து விடுகிறோம் என்பது தெரிவதேயில்லை. கொஞ்சம் கொஞ்சமாக நெருப்பு அணைந்து போனதும் ''சண்டை போடாமல், பிரித்து விட்டு விட்டுப் போகிறான்கள், கோழைகள்'' என்ற வழக்கமான வசை. பிறகுசட்டென்று அமைதி. மீண்டும் உயிர்பெற்று மரங்கள் சிநேகமாகி விடும். மேடுகள் நிறைந்த பாதை, கவனிக்கப்பட வேண்டிய காயமடைந்தவர்கள், வாய்க்கு வாய் புழங்கும் ரம் கலந்த தண்ணீர், பெருமூச்சு, முணுமுணுப்பு சப்தங்கள், பின் ஒய்வும் — சுருட்டும்; பிறகு பழையபடி நடை, காது வழியே வெளியே குதித்து விடுகிறாற்போல் நுரையீரல்கள் அடித்துக் கொள்ள மேலே மேலே ஏறினேன். இடையே பாப்லோ ''நாற்பத்தி ரெண்டு சைஸில் காலைக் கட்டி விட்டாய், நண்பா, ஆனால் என் சைஸ் நாற்பத்து மூன்று'' சொல்லிச் சிரித்தான். குன்றின உச்சியை அடைந்தாயிற்று. அங்கிருந்த விவசாயி ஒருவரின்குடிசையில் எங்களுக்கு யூக்காவும் (yuca) சட்னியும் குளிர்ந்த நீரும் கிடைத்தது சம்பிரதாயமாக, ரொம்பவும் வற்புறுத்தி அதற்குரிய விலையாக நான்கு பெஸோவை ரோபர்த்தோ அந்த விவசாயியிடம் கொடுத்த போது அந்த விவசாயி உட்பட எல்லோருமே பைத்தியங்களைப் போல் சிரித்தோம். நடுப்பகலில் சொக்கி வந்த தூக்கத்தை நாங்கள் உதற வேண்டியதாயிற்று. அழகான பெண் ஒருத்தியைக் கை நழுவ விட்டு விட்டு பார்வையை விட்டு மறையும் வரை அவள் காலையே பார்த்துக் கொண்டிருக்கிறவனைப் போலாயிற்று எங்கள் நிலை.

இரவு கவியும் நேரம் வந்தபோது பாதை செங்குத்தாகவும் இன்னும் கடினமானதாகவும் ஆயிற்று. ஆனால் எங்களைச் சந்திக்க இந்த இடத்தைத் தேர்ந்தெடுத்த லூயிஸை மெச்சாமல் இருக்க முடியவில்லை. ஒரு மான்குட்டிகூட இத்தனை உயரத்தில் வந்துவிட முடியாது. ''தேவாலயத்தில் இருப்பது போல் இல்லை?'' என்று ஜோக்கடித்தான் பாப்லோ, ''இங்கே ஒரு ஹார்மோனியம் கூட இருக்கிறது'' என்று சொல்லி என்னைப் பார்த்தான். Passacaglia வாத்தியத்தைப் போல் நான் இரைத்துக் கொண்டிருந்தது அவனுக்கு வேடிக்கையாக இருந்தது போலும். அந்தச் சில மணி நேரங்களைப் பற்றி தெளிவாக எதுவும் ஞாபகமில்லை. முதல்சென்ட்ரியை அடைந்த போது இருட்ட ஆரம்பித்திருந்தது. ஒவ்வொரு சென்ட்ரியாக நாங்கள் யாரென்று தெரிவித்துக் கொண்டு, இடையே மலையேறிகளுக்கும் பதில் சொல்லிக் கொண்டு, கடைசியாக மரங்களுக்கிடையே இருந்த அந்த இடத்தை அடைந்தோம். வாயில் சுருட்டு எப்போதும் போலவே அந்த eyeshade இணைந்த தொப்பியுடன் மரத்தின மேல் சாய்ந்து நின்று கொண்டிருந்தான் லூயிஸ். பாப்லோ ஒடிப் போய் தன் சகோதரனைக் கட்டிக் கொள்ள தொடர்ந்து லெஃப்டினன்டும் மற்றவர்களும் அவனைத் தழுவிக் கொண்டார்கள். அத்தனை நேரமும் பொறுமையாயிருப்பது எனக்கு நரக வேதனையாயிருந்தது. மருந்துப் பெட்டியையும் springfieldஐயும் கீழே வைத்துவிட்டு. கைகளைப் பாக்கெட்டுக்குள் விட்டுக் கொண்டு, அவனை நெருக்கமாக நின்று பார்த்தபோது, அவன் என்ன சொல்லப் போகிறான் என்று எனக்குத் தெரிந்து விட்டது. அதே பழைய ஜோக்தான்.

''இன்னுமா அந்த அல்பக் கண்ணாடியை வைத்திருக்கிறாய்?'' என்றான் லூயிஸ்.

''நீ அந்த மூக்குக் கண்ணாடியை இன்னுமா போட்டுக் கொண்டிருக்கிறாய்?'' என்று நான் பதிலுக்குச் சொல்ல, இருவரும் இரட்டையராய் கட்டித் தழுவிக் கொண்டு குலுங்கிச் சிரித்தோம். குண்டடிபட்ட என் காயத்தில் அவன் தாடைபட்டு நரக வேதனையை உண்டு பண்ணியது. ஆனால் அந்த வலியை நிரந்தரமாக அனுபவிக்க நான் தயாராயிருந்தேன்.

''சாதித்துவிட்டாய், சே!'' என்றான் லூயிஸ். எதிர்பார்த்தபடியே 'சே'யை மிக மோசமாகவே உச்சரித்தான்.

''வேறெப்படி நினைத்தாய்?'' என்று நானும் அவனுக்குக் கொஞ்சமும் சளைக்காமல் மிக மோசமான உச்சரிப்பிலேயே சொன்னேன். முட்டாள்களைப் போல் இரட்டையராய் கட்டித் தழுவிக் கொண்டு நாங்கள் சிரிக்க, ஏனென்று தெரியாமல் எல்லோருமே சிரித்தார்கள். அவர்கள் தண்ணீரோடு செய்திகளையும் பரிமாறிக் கொண்டுவர, நாங்கள் வழக்கப்படி லூயிஸைச் சுற்றி வட்டம் அமைத்துக் கொண்டோம். அப்போதுதான் அவன் மிகவும் இளைத்துப் போய்விட்டதையும் அந்தப் பாழும் கண்ணாடிக்குந் பின் அவன் கண்கள் மின்னுவதையும் கவனித்தோம்.

கீழே மீண்டும் சுடத் தொடங்கி விட்டார்கள். ஆனால் எங்கள் முகாமுக்கு தற்போதைக்கு அபாயமில்லை. காயம் அடைந்தவர்களைக் கவனிக்க வேண்டும். ஊற்றில் குளிக்க வேண்டும். எல்லாவற்றையும்விட, தூங்க வேண்டும். தன் சகோதரனுடன் எவ்வளவோ பேச நினைத்த பாப்லோவும்கூட தூங்கத்தான் செய்தான். ஆனால் என் காதலியான ஆஸ்த்மா இரவு நேரத்தை எப்படி எனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதென்று சொல்லிக் கொடுத்திருந்ததால் நானும் லூயிஸோடு மரத்தின் மீது சாய்ந்து உட்கார்ந்து புகை பிடித்தவாறு இலைகள் ஆகாயத் திரையில் வரைந்த சித்திரங்களைப் பார்த்துக் கொண்டிருந்தேன். கரையேறிய பிறகு எங்களுக்கு என்னவெல்லாம் நிகழ்ந்தது என்பதைப் பற்றி அவ்வப்போது பேசினோம். முக்கியமாக எதிர்காலத்தைப் பற்றி — ஆயுதங்களைத் துறந்து டெலிஃபோன்கள் இருக்கும் அலுவலகங்களுக்குள், மலைகளை விட்டிறங்கி நகரத்திற்குள் நாங்கள் பிரவேசிக்கப் போகும் அந்த நாளில் தொடங்கப் போவது என்னவாக இருக்கும் என்பதைப் பற்றி பேசினோம். சட்டென்று அந்த தாரை தப்பட்டை முழக்கம் என் காதில் ஒலிக்க, அன்றிரவு நான் கண்ட காட்சியைச் சொல்லி லூயிஸைச் சிரிக்க வைக்கலாமா என்று ஒரு கணம் நினைத்தேன். ஆனால் கடைசியில் சொல்லவில்லை. நாங்கள் கடந்து சென்று கொண்டிருக்கிற சில மணி நேரங்களே நீடிக்கக்கூடிய quartetஇன் இந்த adagio நிச்சயமற்றதானாலும் நாங்கள் மறக்கவே முடியாத தொரு குறியாகிவிட்டது. இன்னும் எத்தனை முறை அந்த வேட்டை முழக்கம் கேட்கப் போகிறதோ! எத்தனை பேர் ரோக்குவேவைப் போல், திந்த்தியைப் போல், அந்தப் பெரு நாட்டுக்காரனைப் போல் உயிர்விடப் போகிறோமோ! ஆனால் மர உச்சியைப் பார்த்த மாத்திரத்தில் அவை குழப்பங்களையெல்லாம் ஒழுங்குபடுத்தி adagioவின் சித்திரத்தை தெளிவாக்கி விடுமென்றும், என்றாவது ஒருநாள் பெயருக்கேற்றாற் போல் அது இறுதி allegroவை நிதர்சனமாக்கிவிடும் என்றும் உணர முடிந்தது. லூயிஸ் அன்று வரையிலான அகில உலகச் செய்திகளையும், தலைநகரத்திலும் மாகாணங்களிலும் நடப்பனவற்றைப் பற்றியும் சொல்லிக் கொண்டே வர, நான் கொஞ்சம் கொஞ்சமாக இலைகளும் கிளைகளும் என் விருப்பத்திற்கு வளைந்து கொடுப்பதைப் பார்த்தேன். அவைதான் என்னுடைய மெலடி. என் Fantasyயிலிருந்து எத்தனையோ மைல்களுக்கப்பாலிருந்து பேசிய லூயிஸின் மெலடி. அப்போதுதான் சித்திரத்தின் மையத்தில் பொறிக்கப்பட்டிருந்த அந்த நட்சத்திரத்தைப் பார்த்தேன். சிறிய-கரு நீல நட்சத்திரம். வானவியலைப் பற்றி எதுவும் தெரியாத நான் அது நட்சத்திரமா அல்லது கோளா என்று சொல்ல முடியாவிட்டாலும், நிச்சயமாக அது செவ்வாயோ புதனோ அல்ல என்று உணர்ந்தேன். Adagioவின் மையத்தில், லூயிஸின் வார்த்தைகளுக்கு மத்தியில் மிகப் பிரகாசமாக ஒளிர்ந்ததால், அது நிச்சயம் செவ்வாயாகவோ புதனாகவோ இருக்கும் சாத்தியமே இல்லை.

★

**கதாசிரியர் மற்றும் கதை பற்றிய குறிப்பு :**

ஹூலியோ கொர்த்தஸார்: அர்ஜென்டீனியர். 1914இல் ப்ரஸ்ஸல்ஸ் (பெல்ஜியம்)-இல் பிறந்த இவர் தனது நான்காவது வயது முதல் பியூனோஸ் அயிரஸ் (அர்ஜென்டினா) நகரில் வளர்ந்தார். ஐந்து வருட காலம் வெவ்வேறு பள்ளிகளிலும் பணியாற்றிய இவர், பின்னர் மென்டோசாவிலுள்ள ஹூயோ பல்கலைக் கழகத்தில் பிரெஞ்சு இலக்கியம் பயிற்றுவித்தார். பெரோனின் அதிகாரத்திற்கெதிராக தனது வேலையைத் துறந்து மீண்டும் பியூனோஸ் அயிரசுக்கு வந்து சேர்ந்து, 1951இல் பாரீசுக்குக் கிளம்பினார். அங்கு யுனெஸ்கோவில் மொழி பெயர்ப்பாளராகப் பணியாற்றினார். 1984இல் இறக்கும் வரை பாரீஸிலேயே வாழ்ந்தார். ஹோர்ஹே லூயிஸ் போர்ஹேயின் நிழலிலும், விக்டோரியா ஒகாம்போவின் SUR என்ற மிகப் பிரசித்தி பெற்ற இலக்கிய சஞ்சிகையின் மூலமும் வளர்ந்த கொர்த்தஸார் மிகவும் தாமதமாகத்தான் தனது தனித்தன்மை வாய்ந்த எழுத்துக்கான தளத்தைக் கண்டு பிடித்தார். 'ஹாப்ஸ்காச்' என்ற பரீட்சார்த்த நாவலின் மூலமாக உலகப் புகழ் பெற்ற இவரது சிறுகதையொன்று அந்தோனியோனியால் இயக்கப்பட்டிருக்கிறது (Blow-up). இரண்டு கவிதைத் தொகுதிகளுக்கும், எட்டு சிறுகதைத் தொகுதிகளுக்கும் ஆசிரியரான இவரது நாவல்கள்: The Winners (1960), Hopscotch (1963), 62 : A Model Kit (1968), A Manual for Manuel (1973), A Certain Lucas (1979). அறுபதுகளின் மத்தியிலிருந்து லத்தீன் அமெரிக்காவின் புரட்சிகரச் செயல்பாடுகளில் தீவிர ஈடுபாடு கொண்டிருந்த இவரது அரசியல் கட்டுரைகள் 'Nicaragua so violently sweet' (1984) மற்றும் 'Argentina : Years of cultural wire-fencing' (1984) என்ற இரண்டு தொகுப்புகளாக வெளிவந்திருக்கின்றன. தன் வாழ்வின் பிற்பகுதியில் தீவிர முற்போக்காளராக மாறிய கொர்த்தஸாரின் அரசியல் வாழ்வின் திருப்புமுனையாக இருந்தது 1959இல் நடந்த கூபப் புரட்சிதான். Russell Tribunalக்காகவும் சான்டினிஸ்டா நிகாராகுவாவுக்காகவும் கடுமையாக உழைத்த கொர்த்தஸார் இவற்றிற்கு தனது ராயல்டி தொகையையும் கொடுத்து வந்தார்.

★

''சந்திப்பு'' என்ற இந்தக் கதை மே 1964இல் முதன் முதலில் பிரசுரமாயிற்று. பின்னர் All Fires the Fire (1966) என்ற சிறுகதைத் தொகுதியில் சேர்க்கப்பட்டது. இக்கதை Seymour Menton-ஆல் தொகுக்கப்பட்டு கதை பற்றிய விமர்சனக் குறிப்புகளுடன் வெளியிடப்பட்டிருக்கும் The Spanish American Short Story - A Critical Anthology என்ற நூலில் Suzanne Jill Levin-இன் ஆங்கில மொழி பெயர்ப்பிலிருந்து தமிழாக்கம் செய்யப்பட்டிருக்கிறது. கதை பற்றிய விமர்சனக் குறிப்புகளை எழுதியிருப்பவர் : Seymour Menton.

கூபப் புரட்சியின் மிக முக்கியமான நிகழ்ச்சிகள் எத்தனை அபத்தங்களுடன் நிகழ்ந்தன என்பதைப் பற்றி—அதாவது granmaவிலிருந்து கரை சேர்ந்து sierra maestraவை நோக்கிப் பயணப்பட்டது வரையிலான நிகழ்ச்சிகளை—புரட்சியின் முக்கியப் பங்கேற்பாளர்களை mythify செய்து சந்திப்பு என்ற இந்தக் கதையின் மூலம் கொர்த்தஸார் பெரும் வெற்றி கண்டிருக்கிறார். கதையைச் சொல்லும் அர்ஜென்டினா தேசத்தவர் அதாவது சே குவேரா — ஃபிடல் காஸ்ட்ரோவை இயேசுவுக்குச் சமமானவராக்குகிறார். இது புரட்சி பற்றிய கூப நாவல்களின் ஒரு பொதுத் தன்மை. கதையின் இறுதியில் சே குவேரா 'சித்திரத்தின் மையத்தில் பொறிக்கப்பட்டிருந்த நட்சத்திரமாக'க் காண்பதும் லூயிஸ் (காஸ்ட்ரோ) என்ற அவதார புருஷனைத்தான். 'கொடுமையான ஆஸ்த்மா', 'இந்த உலகின் மீதான என்உக்கிரமான புரிதல்', 'நரகப் பாதை'. 'குகையின் இருட்டு', 'தியாதோச்சியினால் எல்லாம் நாசமாய்ப் போனது' போன்ற தொடர்கள் கதை

சொல்லும் அர்ஜென்டினா தேசத்தவன் தன்னைப் பிசாசாகவும் லூயிஸை இயேசுவாகவும் வேறுபடுத்திக் காட்டுகிறான். மாஜிகல் ரியலிஸத்தைப் பயன்படுத்தி கொர்த்தஸார் தன் கதை மாதிரியான குறியீடுகள் காரணமாக கதை வெறும் சலிப்பூட்டும் பிரச்சார வடிவமாகி விடாமல் செய்திருக்கிறார். கதை சொல்பவன் ஒரு கடுமையான ஆஸ்த்மா நோயாளி—அதிலும் தன் நிலைமையை நன்றாக உணர்ந்த புத்தி ஜீவி என்ற காரணங்களினால் யதார்த்தம் (கரையேறும் நிகழ்ச்சியின் வரலாற்று விபரங்கள்) fantasyயாக மாறியிருக்கிறது. சூழ்நிலையின் அபத்தம் சர்க்கஸ் என்ற படிமத்தை உபயோகிப்பதன் மூலம் மேலும் தீவிரமடைகிறது. மொஸார்ட்டின் வேட்டை என்ற quartetஐ புரட்சியின் மூன்று நிலைகளுக்கு குறியீடாக்கி இருப்பது கதையின fantasy தன்மையை மேலும் அதிகப்படுத்துகிறது.

யதார்த்தத்துக்கும் fantasyக்குமான மலையின் மீது நிகழும் சந்திப்பிலும் காணப்படுகிறது. அச்சமயம் நிகழ்ந்த ஹாஸ்யத் தன்மை வாய்ந்த உரையாடலில் (கதையின் மொழி பெயர்ப்பில் இதை நாம் இழந்து விட்டோம்) இயேசுவைப் போன்ற கூபத் தலைவனும், அரக்கத்தனமான அர்ஜென்டீனிய மருத்துவனும் மற்றவனுடைய தேசிய பேச்சு வழக்கு மொழியை நகல் செய்வது கதையின் மதம் சார்ந்த விளக்கத்தை ஒத்துக்கொள்ளச் செய்வதோடல்லாமல் கொர்த்தஸார் போர்ஹேஸிடமிருந்து எடுத்துக் கொண்ட கருத்தாக்கமான 'ஒருவன் மற்றொருவனின் இரட்டை; ஒவ்வொரு மனிதனும் தானே வீரனாகவும் கோழையாகவும், நன்மையும் தீமையும் செய்யும் திறமை கொண்டவனாக இருக்கிறான்' என்பதையும் வலியுறுத்துகிறது.

''சாதித்து விட்டாய், சே!'' என்றான் லூயிஸ்.

எதிர்பார்த்தபடியே 'சே'யை மிக மோசமாகவே உச்சரித்தான்.

''வேறெப்படி நினைத்தாய்?" என்று நானும் அவனுக்குக் கொஞ்சமும் சளைக்காமல் மிக மோசமான உச்சரிப்பிலேயே சொன்னேன். முட்டாள்களைப் போல் இரட்டையராய் கட்டித் தழுவிக்கொண்டு நாங்கள் சிரிக்க, ஏனென்று தெரியாமல் எல்லோருமே சிரித்தார்கள்.

மிகத் தெளிவுடன் கூபத் தலைவனை தனது இரட்டையாகத் தேர்ந்தெடுக்கும் அர்ஜென்டினா தேசத்தவன் (கதை சொல்பவன்) தனது மற்றொரு இரட்டையான அர்ஜென்டீனிய நண்பனை மறுதலிக்கிறான்.

## அடிக்குறிப்பு

1. The Diadochi — தியாதோச்சி என்ற கிரேக்க வார்த்தையின் நேரடிப் பொருள் successors என்பதாகும். அலெக்ஸான்டரின் ஆறு முக்கியத் தளபதிகளும் (Antigonus I Monophthalmus மற்றும் அவனது மகன் Demetrius I Poliorcetes; Antipater மற்றும் அவனது மகன் Cassander; Seleucus I Nicator; Ptotemy I Soter, Eumcnes; மற்றும் Lysimachus) தியாதேர்ச்சி என்று அழைக்கப்பட்டனர். அலெக்ஸாண்டர் இறந்த கி.மு, 323இலிருந்து கி.மு. 301 வரை இவர்களுள் இருவர் மாஸிடோனியப் பேரரசைக் கட்டிக் காக்கவும் மீதி நால்வரும் பேரரசைப் பகிர்ந்து கொள்வதிலுமான போராட்டத்தில் ஈடுபட்டிருந்ததால் இக் கால கட்டம் தியாதோச்சி காலம் என்றே அழைக்கப்படுகிறது ஆனால் கி.மு. 301இல் நடந்த Ipsus சண்டையின் இறுதியில் Antigonus I இன் இறப்புடன் மாஸிடோனியப் பேரரசை முழுமையாக நிலை நாட்டுவதற்கான கடைசி முயற்சியும் தோல்வி கண்டது. கி.மு. 281இல் நடந்த (Corupedion) சண்டையினால் மாஸிடோனியப் பேரரசு பல துண்டுகளாகச் சிதறியது,

(அமெரிக்க கலைக் களஞ்சியத்திலிருந்து ஆங்கிலம் வழி தமிழாக்கம் : சம்யுக்தா)

# புதுமைப்பித்தன்

## ராவ்சாகிப் எஸ். வையாபுரிப்பிள்ளை

இப்பெயர் எனது நண்பர் சொ. விருத்தாசலம் அவர்கள் புனைந்து கொண்டது. இவர்களைப் பற்றிய வரலாற்று நூலொன்று திரு. ரகுநாதன் அவர்களால் சமீபத்தில் வெளியிடப் பட்டது. அதில் புதுமைப்பித்தன் கைப்பட எழுதிய இரண்டு வெண்பாக்கள் கையெழுத்து மாதிரிக்காகத் தரப்பட்டுள்ளன. அவை வருமாறு :-

அல்வா எனச்சொல்லி
அங்கோடி விட்டாலும்
செல்வா நீ தப்ப
முடியாதே—அல்வா
விருது நகர்கெடியில்
உன்னுடனே கட்டாயம்
வருது என காத்திருப்பேன்
நான்.
சென்னைக்குப் பதினேழில்
சீட்டுக் கொடுத்து விட்டு
உன்னைப் பிறகங்கே
சந்தித்து—பின்னை
ஊருக்குப் போவேன்
உறுதியாய் வா அங்கே
நேருக்கு மற்றவையப்
பா.

இந்தச் செய்யுட்களைப் பார்த்த அளவில் இவை பண்டைச் செய்யுள் இலக்கணத்திற்கு மாறாக உள்ளன என்பது எளிதிற் புலப்படும். சீர், தளை, மோனை முதலியன இலக்கணங்களிற் கூறியபடி அமையவில்லை. சொ. வி. வேண்டுமென்றே இலக்கணத்தைக் கைவிட்டு நூதன முறையைப் பின்பற்றியிருக்கிறார். இவ்வாறு பின்பற்றியவர்களிலே ஆழ்வாராதியர்கள்கூட உட்பட்டிருக்கின்றனர். உதாரணமாக நான்முகன் திருவந்தாதியில்,

''இது விலங்கை யீடழியக் கட்டிய
சேது
இது விலங்கு வாலியை வீழ்த்ததுவும்-
இது விலங்கை
தானொடுங்க வில்நுடங்க தண்தாரி
ராவணனை
ஊனொடுங்க வெய்தா னுகப்பு"

என்ற செய்யுளைக் காட்டலாம். ஆனால் ரிஷிகள் முதலியோரால் செய்யப்பட்ட கவிதையைப் பிழையென்று சொல்லலாமா? 'ஆர்ஷம்' என்று அதைக் கூறி விடுதல் முற்காலத்தில் மரபு இன்னும் ஆயிரம் ஆண்டுகள் கழித்து சொ. வி.யை ஒரு ரிஷியாகத் தமிழுலகம் போற்றுமானால் அவரது கவிதையையும் ஆர்ஷம் என்றுதான் அக்காலத்து அறிஞர்கள் கூறுவார்கள்.

இவ்வாறாக, பழமையைத் துறந்து புதுமையிலே ஈடுபட்டு மனததை இழந்து விட்ட ஒரு புலவர் ஆவார் நமது சொ. வி. இதை நாம் நன்றாய் மனத்திற்கொள்ள வேண்டியது. கம்பனும் ''புதியன கண்ட போது விடுவரோ புதுமை பார்ப்பார்'' (பூக்கொய். 9) என்று புதுமையில் மக்களுக்கு இயல்பாக உள்ள பைத்தியத்தை உணர்த்தியிருக்கிறான்.

பழமை எப்பொழுதும் பின்னோக்கிச் செல்வது; அல்லது முன்னேறிச் செல்வதை ஏற்றுக்கொள்ளாதது. இந்தப் பழமை புதுமை என்ற இரண்டின போராட்டத்தினால் தான் மக்கள் வாழ்வு அபிவிருத்தியடைந்து கொண்டிருக்கிறது. இவ்விரண்டினுள் ஒன்று இல்லாது போனாலும் வாழ்வு பூர்த்தியாக மாட்டாது. இதை நனகுணர்ந்தவர் நமது சொ. வி. ஆனால் அவர் புதுமையிலே அதிகப்பற்றும் பழமையிலே மிகக் குறைந்த பற்றும் உடையவர். இப்படியிருப்பதுதானே நியாயம். எதிர் கால வாழ்வைத்தானே நாம் நெறிப் படுத்த முடியும். இந்த இயல்பை அவர் எழுதியுள்ள செய்யுட்கள, கடிதங்க்ள், வசன நூல்கள், கதைகள், விமர்சனங்கள் முதலிய எல்லாவற்றிலும் காணலாம்.

புதுமை என்றவுடன் தற்காலத்தார் அறியாத புதுமை என்று நினைத்தல் கூடாது. தற்காலத்தார் வழங்கும் சொற்களையும் நடையையுமே சொ.வி. கையாளுகிறார். சில இடங்களில் கீழ்மக்கள் என்று சிலர் கருதும் இனத்தவர்கள் பேசும் சொற்களையும் உபயோகப்படுத்துகிறார். தற்காலத்தார் அடிக்கடி வழங்கும் ஸ்டுடியோ, ஹோட்டல் முதலிய ஆங்கிலச் சொற்களையும் வழங்குகிறார். சிலர் தற்காலத்தில் வாழ்பவர்களாயிருந்தும், கிறிஸ்துவ பதற்திற்கு முன்னிருந்தவர்கள் போலத் தம்மைக் கருதிக்கொண்டு எழுதி-வருகிறார்கள். இந்த இனத்தை இவர் சார்த்தவரேயல்ல. முழுக்க முழுக்க தற்காலத்தைச் சேர்ந்தவரே நமது சொ. வி.

நமது நாட்டில் வெகு காலமாகச் சொற்களும் கருத்துக்களும் அடக்குமுறைச் சட்டத்திற்கும் உட்பட்டு உயிர்த்தத்துவத்தை இழந்து வருகின்றன. அவற்றிற்கு விடுதலை கொடுத்துச் சுயேச்சையாய் வெளியில் உலவிவரும்படி செய்தவர்களுள் ஒருவர் நமது சொ. வி. மக்கள் பொதுப்படப் பிறர் கண்ணிற்படாதபடி மறைவிற் செய்யும் காதல் கலவி முதலிய விஷயங்களையும் வெளிப்பட இவர் கூறியுள்ளார். ஒளிவு மறைவு என்பது இலக்கியத்திற் கூடாது என்பதுதான் இவர் கொள்கை. இதனால் இவரைக் கட்டுப்பாட்டிற்கு அடங்காதவர் அல்லது சமுதாய ஒழுங்கிற்குப் புறம்பானவர் என்று சிலர் நினைப்பார்கள். மறைவும் சோகமும் நிரம்பி இருள் மயமாயிருக்கும் மனத்திலே அகவிருளைப் போக்கவேண்டுவது அவசியமல்லவா? அன்றியும் மேல் நாட்டில் எழுத்தாளர்கள் எழுதிவரும் போக்கை நாம் கவனித்தால் இது ஒரு குற்றம் என்று சொல்லவே முடியாது. இவரது தந்தையாராகிய சொக்கலிங்கம்பிள்ளை இவரது குணத்தைக் குறித்து ‘‘என்னமோ அவன் பிறந்த ராசி அப்படி; அடங்காப்பிறவி’’ என்று ஒரு முறை கூறினாராம். இயற்கையிலேயே இந்த அடங்காக்குணம் வாய்ந்த சொ. வி. முற்கூறியபடி எழுதினார் என்றால் அது தவிர்க்கமுடியாத ஒர் இயல்பினால் ஏற்பட்டதென்றுதான் நாம் கருதல் வேண்டும். உலகம் இதனால் கெட்டுப் போய்விடாது.

இவ்வாறு புதுமைப்பித்தனாய் அமைந்துவிட்ட சொ. வி. மிகுந்த ஆத்ம சக்தியுடையவர். தேக வலிமைதான் அவர்க்கில்லை. தாம் கருதியவற்றை எவ்வாறாயினும் முடித்துவிடத் தீவிரமாக முயல்வார். தமது சக்தியைத் தமிழுலகம் அறிந்து போற்றவில்லையே என்ற பெருங் குறை இவர் மனத்துக்குச் பெரும் பாரமாக இருந்தது. இத்தகைய பாரம் தமிழுலகில் பலரையும் அழுத்தி வந்ததென்பதை நாம் அறிவோம் டாக்டர் சாமிநாதையர் அவர்கள் தம்மைத் தமிழுலகம் தக்கபடி போற்றவில்லையென்று இறுதிவரை கூறிவந்தார்கள். தமிழ் எழுத்தாளர்கள் ஒவ்வொருவரும் நமது நாட்டில் இவ்வாறு குறைகூறிக் கொள்வது வழக்கம். ஆனால் புதுமைப்பித்தன் விஷயத்தில் இப்பாரம் அவரைக் கொன்றேவிட்டது என்று நாம் சொல்லலாம். அவரது முயற்சிகளுக்கெல்லாம் பெருந்தடையாக அவரது வறுமைப் பிணி இருந்தது. வேண்டாத இடங்களில் செல்லும்படி செய்தது. வேண்டாத முயற்சிகளில் தலையிடும்படிச் செய்தது. இறுதியில் இவரது உயிருக்கே உலை வைத்துவிட்டது. அவரது மரணம் தமிழ் நாட்டு இளைஞர்களுக்கும் அவரோடு அனுதாபமுள்ள பிறர்க்கும் பெருந்துன்பத்தை விளைத்தது. ஆத்ம சக்திக்குத் தகுந்தபடி தேகவலிமையும் நீண்ட ஆயுளும் இறைவன் அவருக்கு அளித்திருப்பானானால், அவர் எத்தனையோ அரிய நூல்களை இயற்றித் தம் புகழை நிலை நாட்டியிருப்பார் என்பதில் ஐயமேயில்லை.

(நன்றி : திரு நா. சு. ராமசாமி [சுந்தர ராமசாமி] பதிப்பாசிரியராக இருக்க வெளிவந்த ‘புதுமைப்பித்தன் நினைவு மலரிலிருந்து...இதனை வையாபுரியார் நினைவுமன்றச்சார்பில் எமக்கு வழங்கி உதவியவர்கள் : திரு. எஸ். எஸ். இராமசாமி பி. எஸ்ஸி, பிஎல், அவர்கள்)

# சில பல

*மீ.ப. சோமு*

''என்னவோ அதை எழுதக்கூடாது, இதை எழுதக்கூடாது அப்ப டீன்னு பாத்திகட்டிப் பூச்சி புடுங்கிறாகளே, அவுஹளுக்கு நம்ம கதை பிடிக்காது. நான்தான் கேக்கிறேன். ஏன்யா? எதை எழுதினா என்ன? அதுக்குக்கூட எனக்குச் சுதந்திரம் கிடையாதா? பெரியவுஹ சொல்றாஹங்கிறதுக்காக உண்மையை மறைக்க முடியுமா? கருவைத் தடை செய்யலாம்; கருத்தைத் தடை செய்ய முடியுமா?''

— புதுமைப்பித்தன்



''நீங்கள் தொகுத்துள்ள **புதுமைப் பித்தன் கதைகள்** என்ற புத்தகம் இப்போது பி.ஏ. வகுப்புக்குத் துணைப் பாட மாக இருப்பதால், மாணவர்கள் மட்டுமல்லாமல் பெற்றோர்களாகிய நாங்களுமே உங்களுடைய முன்னுரையைப் படித்துப் புதுமைப்பித்தனைப் பற்றியும் அவருடைய நேர்த்தியான சிறுகதைகள் பற்றியும் பல புதிய செய்திகளையும் கருத்துக்களையும் தெரிந்து கொண்டோம். எனவே ஒரு வேண்டுகோள் விடுக்கிறோம். நீங்கள் உங்களுக்கு அவர் எழுதிய அதியற்புத மான இரண்டு கடிதங்களைக் **கலைமகளில்** அவர் மறைந்த புதிதில் வெளியிட்டீர்களே, அதுபோல மேலும் உள்ள கடிதங்களை சிலபலவில் கொடுத்தால் இன்றையத் தலைமுறையினருக்குப் புதுமையாகவும் சுவையாகவும் இருக்கும். செய்வீர்களா?''

இவ்வாறு திண்டுக்கல்லிலிருந்து சி. இராமசாமி எழுதுகிறார். புதுமைப் பித்தனைப் பற்றித் திருச்சி வி. கிருஷ்ண னும் ஒரு முக்கியமான செய்தியைக் கேட் டிருக்கிறார்.

''புதுமைப்பித்தனுக்கும் கல்கிக்கும் இடையே பெரிய மனஸ்தாபம் இருந்து வந்தது என்று இங்கே பலர் பலபடியாகச் சொல்கிறார்கள். முக்கியமாக ராஜாஜியை யும், கல்கியையும், டி.கே.சி.யையும் மிகக் கடுமையாகத் தாக்கிப் புதுமைப் பித்தன் எழுதியுள்ள ஒரு பாடல் இலக்கிய நண்பர்களிடையே பவனி வருகிறது. நானே திருலோக சீதாராம் அவர்கள் இந்தப் பாடலைப் பாடிக் கேட்டிருக் கிறேன். சில நாட்களுக்கு முன்பு பிரபல வாரப் பத்திரிகை ஒன்றில் இந்தப் பாடலைப் பற்றிச் சுவையானதோர் சர்ச்சை நடந்தது என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். பாடலை எழுதியவர் திருச்சிற்றம்பலக் கவிராயர் என்னும் புனைப் பெயர் கொண்ட தொ. மு. சிதம்பர ரகுநாதன் அவர்களா, அல்லது வேலூர் கந்தசாமிக் 'கவிராயர் என்னும் புதுமைப்பித்தன் அவர்களா? பாடலை என் போன்று பலரும் கேட்டிருப்பதால், அதன் ஆசிரியர் யார் என்று திட்டவட்ட மாகத் தெரிந்து கொள்ள ஆசைப்படு கிறேன். சில பலவில் விளக்குவீர்களா?''

முதலில் கடிதங்களைப் பிரசுரிப்பது குறித்துத் திண்டுக்கல் நேயரின் வேண்டு கோள் : இது சம்பந்தமாக ஒரு வார்த்தை: இலக்கிய மதிப்பீடு, பத்திரிகை தருமம் ஆகியன பற்றிப் புதுமைப்பித்தனுக்குச் சில ஆணித்தரமான அபிப்பிராயங்கள் உண்டு. கூர்மையான பார்வையும், 'சுருக்'கென்று பாய்கிற அரிய வாக்கியங்களும், சிந்தனை நுட்பமும் வாய்ந்த அந்த மதிப்பீடுகளை அவ்வப்போது வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைவேன். சந்தேகமில்லை. ஆனால் நம்மிடையே வாழ்ந்து வருகிற சில அறிஞர்களைப் பற்றி அவர் மனம்விட்டு நையாண்டியாக எழுதியுள்ள பகுதிகளை வெளியிடத் தயங்குகிறேன். இது புதுமைப் பித்தனுடைய கடிதங்களுக்கு மட்டுமல்ல, டி.கே.சி. கடிதங்களுக்குமே பொருந்தும். ராஜாஜியின் சிற்சில குறிப்புக்களும் ஒலிப் பதிவுகளுங்கூட அப்படியே! நம்பிக்கை யிலும் அன்பிலும் சில விஷயங்களை அந்தரங்கமாக அவர்கள் சொல்லியிருப் பார்கள். அவற்றை முழுதும் பிரசுரிப்பதில் எனக்குப் பெரிய பொறுப்பு இருக்கிறது என்பதை நேயர்கள் ஒப்புக் கொள்வீர்கள்.

இனி திருச்சி நேயரின் கடிதம் :

புதுமைப்பித்தனுக்கும் கல்கிக்கும் நடுவே இருந்த, நடந்த, பல இலக்கியச் சண்டைகளுக்கு மத்தியில் ஒரு பெரிய

பீரங்கிப் புகை 1945-இல் திடீரென்று கிளம்பியது.

மு. அருணாசலம் அவர்கள் இக் காலத்துத் தமிழ் வசன நடையை மதிப்புரை செய்து ஒரு நூல் எழுதினார். அந்தப் புத்தகம் வெளியானதோ இல்லையோ, கூவம் நதியே தீப்பிடித்து எரிந்தது என்று சொல்லவேண்டும்! காரணம், அந்த நூலிலே கல்கி, டி.கே.சி. முதலிய சிலரை மிகவும் உயர்வாகப் பாராட்டிய ஆசிரியர், புதுமைப்பித்தனை யும் வேறு எழுத்தாளர்களையும் சட்டை செய்யவில்லை. அவருடைய மதிப்பீடு அது. ஆனால் புதுமைப்பித்தனுடைய இலக்கியக் கோட்பாட்டுக்கு இது ஏற்க வில்லை. வெகுண்டெழுந்தார். விறுவிறுப் போடு ஒரு பாட்டு எழுதினார், நான்கே வரிகளில்! பிறகு, இந்த நான்கு வரிகளும் ஒரு காவியமாகவே விரிந்தன! பாடல் முழுவதும் எனக்கு அவர் அனுப்பி, என் னிடம் இருக்கிறது. சில ஆண்டுகளுக்கு முன்பு சர்ச்சை நடந்த பாட்டு இதுவே. பாடலை இப்போது படித்தாலும் சிற்சில இடங்களில் மூச்சுத் திணறுகிறது! அதே சமயம் அதன் கவிநயம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகிறது! சில பெரியோர் கள்மீது சொ(க)ற்களை வீசியுள்ளதைப் பார்க்கும்போது, அதை அப்படியே வெளி யிடுவது உசிதமில்லை என்று தோன்று கிறது. ஆனால் அந்தக் கவிநடை அதை உடனே வெளியிட வேண்டும் என்னும் ஆசையை எழுப்புகிறது! என் மனநிலையை உங்களிடம் அப்படியே சொல்கிறேன். மேலும் சொல்வதாக இருந்தால், இந்தப் பாடலை அதன் முழு வடிவிலும் வெளியிடு வதற்காகப் புதுமைப்பித்தன் இருந்த போதே ஒரு முயற்சி நடந்தது. நான் தலையிட்டு அதை நிறுத்த நேர்ந்தது.

ராஜாஜி என்னிடம் கேட்டார், ''நீ ஏன் அதை நிறுத்தினாய்? முட்டையும் தாரெண்ணெயும் வாங்கிப் பழகிய உடம்பு தானே இது?

"அதுசரி; ஆனால் அந்தப் பழக்கத் துக்கு உள்ளாகாத சில உடம்புகளும் மாட்டிக் கொண்டிருக்கின்றனவே!" என்று சொன்னேன். சிரித்துவிட்டார்!

''அதிகார பூர்வமாக" முழுப்பாட்டும் வெளியாகாவிட்டாலும் பலருக்கு முக்கிய பகுதிகள் மனப்பாடமே ஆகியிருப்பதால், சர்ச்சைக்குள்ளான இந்தப் பாடலின் ஆசிரியர் யார் என்ற கேள்விக்கு விடை யாக நண்பர் புதுமைப்பித்தனின் 5.11.1945 கடிதத்தின் ஒரு பகுதி வருமாறு :

"இது இரண்டுபேர் பெற்ற கதம்ப விவகாரம். தமிழ் வசன நடை புத்தகம் வந்தவுடன் ரகுநாதன் ஒரு பிரதியை எடுத்து வந்து என்னிடம் கொடுத்து மதிப்புரை ''காரமாக" எழுதவேண்டும் என்றார். நான் புத்தகத்தை வாங்கியதும், ''மூனாவருணாசலமே..." (நான்கு வரிப் பாட்டு) என்பதுதான் இதற்கு மதிப்புரை என்று சொன்னேன். மறுநாள் என்னை ரகுநாதன் சந்தித்தபொழுது ''மூனா அருணாசலமே" என்றெடுத்த பாட்டைக் கொண்டு வந்தார். அதை நான் திருத்தி அமைத்ததுதான் இப்பொழுது அது பெற் றுள்ள உருவம். உண்மையில் இது நாங்கள் இருவரும் "பாடியது"(!) கேட்ட வர்கள் எல்லோரும் அதை நான்தான் எழுதியிருக்க வேண்டும் என்று நம்புகிறார் கள். என்ன செய்வது? சுமைதாங்கிதான்! டி.கே.சி., ராஜாஜி, கல்கி விளக்கங்கள் தான் என் கைச்சரக்கு!"

நன்றி : ''கல்கி"

# மரம் சுட்டுக் கரியாகலாம் மயிர் சுட்டுக் கரியாகுமா?

''சொத்தைக்
கதை எல்லாம்
அளக்காதீர்.
ஒற்றைச் சிதையினிலே
உம்மெல் லோரையும்
வைத்து எரித்திட்டாலும்
வயிற்றெரிச்சல் தீராது!''

—புதுமைப்பித்தன்

''மொழி பெயர்ப்பு என்று போடாமல் எழுதவே மாட்டார். இறந்த சமீபத்தில் அச்சுக்குக் கொடுக்க நேர்ந்ததால் சரியாகப் பிரித்துத் தொகுத்து எல்லாம் கொடுக்கும் மனநிலையில் நானில்லை. இலக்கியத் திருட்டை வாழ்க்கை முழுதும் எதிர்த்து வந்தார். இலக்கியத் திருடர்களை எப்பொழுதும் கடுமையாகச் சாடிவந்தார். கூடவே முழுக்க முழுக்கப் பழகி இருந்து விட்டு இவர்களே இப்படி பழி சுமத்துவது மிகவும் அதிர்ச்சியாக இருக்கிறது. அவர் இருக்கிற போது இப்படி எழுதி இருந்தால் அப்பொழுது தெரியும் சேதி!''

—கமலா புதுமைப்பித்தன்

—பித்தகுமாரன் கூத்தப் பறையன்

பேனாத் துணையுண்டு
பேச்சுக்குச் சொல்லவில்லை
மூனா வருணாசலங்கள்
முந்தாநாள் பட்டதுவும்

போக்கற்றுக் கடைவிரித்த
மாணிக்கஞ் செட்டி மக்கள்
மூக்கறுந்து பேச்சிழந்து
கல்லாவைக் கட்டியதுவும்

ஆனானப் பட்டவராம்
ஆண்டவர்தம் ஈட்டமெலாம்
ஆளைவிட்டால் போதுமென
அலறியடித் தோடியதுவும்

ஏனோ மறந்தீர் நீர்
எம்பித்தன் திருமுன்னே?
ஏங்காணும்

சிட்டிசிவ பாதமென்னும்
சில்விஷம ரெட்டையரே
முட்டி முட்டிப் பார்த்தாலும்
முகமூடி கிழிவதல்லால்

ஒரு மயிரும் பிடுங்குதற்கு
உம்மாலே ஆகாது
பெருமைமிகு பித்தனவன்
பேருக்குப் பழிசூழ

எத்தனையோ அவதாரம்
எடுத்துநீர் ஆடுகிறீர்
அத்தனையும் அரிதாரம்!
அம்புட்டும் நச்சரவம்!

பித்தனுக்குச் சாவில்லை
பேசுதற்கோ நாவில்லை

பிட்டுக்கு மண்சுமந்த
பெம்மான்மேல் பட்டஅடி
பிரபஞ்சம் எங்கணுமே
பேரிடியாய் விழுந்தாற்போல்

பித்தன்மேல் விழுந்த பழி
எத்தனையோ விளைவுகளை
எதிரொலிக்கும் ஈதுறுதி!

இலக்கியத் திருடர்களின்
பேய்க்கனவே எம்பித்தன்

வெண்டைக்காய் சேம்போடு
விளக்கெண்ணெய் கற்றாழை
மண்டிக் கொழ கொழக்கும்
மசமசத்த உம்நடையின்

சேட்டை சில்விஷமம்
செல்லுபடி யாகாது!
மூட்டைக் கட்டிப்போய்
முடங்கும் மூலையிலே!

ஏங்காணும் ரெட்டையரே
யாரிடம் உம் வாலாட்டல்?
ஒரு சோற்றுப் பதமாக
ஒன்றிரண்டை உடைத்திடவா?

கள்ளத்தனமாய்ப் 'புஷ்கினை'யே
'உல்டா'க்கள் பண்ணி வைச்சு
'கல்கி' தழுவிப் பெத்ததுதான்
'கள்வனின் காதலி'யாள்!

கலக்கிய கதையெல்லாம்
காயடிக்கப் பார்க்கின்றீர்!

'ரசமட்டம்' அன்றுமது
ராஜரிஷி மைந்தனவன்
'ரிஷிமூலம் நதிமூலம்'
அளந்த கதை மறைக்க

'கல்கி'ப் பிணத்தை
காபந்து பண்ண வேண்டிக்
கஜகர்ணம் போட்டாலும்
கதைஏதும் நடவாது!

கடப்பாரை தனைமுழுங்கி
காஷாயம் குடித்தாற்போல்
இடிப்பாரே இல்லையெனும்
ஏக்கழுத்த மீதேறிப்

புற்றீசல் புடைசூழப்
பூஞ்சைக் காளான் குடைவிரித்து
'புரூடா'க்கள் திரிக்கின்றீர்
புதுக்கரடி விடுகின்றீர்!

'ஒரு டாவும்' நடக்கது
உம் ஜம்பம் பலிக்காது?

★''சொந்தமாய் எனக்கேதும்
சரக்கிருப்பு கிடையாது
சந்தன மரம் நானே!
சார்ந்திருக்கும் மரவேர்கள்
சாலவும் நீருருஞ்சிச்
சாரமெலாம் ஈர்த்தெழுதி
கோலங்கள் போட்டிடுவேன்
கோபுரமும் கட்டிடுவேன்''

ஒப்புதல் வாக்குமூலம்
உம்முடைய கல்கியதே
தப்பேதும் இதிலில்லை
உம்குருவின் 'ரிஷிமூலம்'

செல்லும் செல்லாததற்கு
சேதி இதை மூதலிக்க
'ஸ்டார்' ராமநாதனெனும்
செட்டியாரைப் போய்க்கேளும்.

ஏங்காணும் சிட்டி!
யாரிடம் உம் நூலாட்டல்?
ஒட்ட நறுக்கிருவேன்
உருப்பட வழிபாரும்!

அகோ வாரும் பிள்ளாய்!
ஆதியிலே நீரொரு நாள்
ரத்னாபாய் சரஸ்வதிபாய்
ரெண்டு 'பாய்'க்குமாய்

படம்பண்ண வேண்டிப்
'பத்ம சாகசங்கள்'
பண்ணிப் பாக்கலையோ?

நதிமூலம் வேண்டுமெனில்
நான் சொல்லத் தேவையில்லை
செல்லும் செல்லாததற்குச்
□செல்லப்பாவைப் போய்க் கேளும்!

---

★ தகவல் உபயம் :
*ஸ்டார் பதிப்பகம் திரு. ராமநாதன் செட்டியார்-மேற்படி புஷ்கின் நூலை 'கள்வனின் காதல்' எனும் பேரில் மொழிபெயர்த்தவர்.*

□ தகவல் உபயம் :
*திரு. சி. சு. செல்லப்பா, 'பத்மசாகசம்' 'சிட்டி'யின் 'உல்டா'க்கதை*

பண்பாடாம் நாகரிகமாம்
பம்மாத்தா பண்ணுகிறீர்?
கூறுகெட்ட மூதிகளே!
குழிப்பிணத்தைத் தோண்டிவைத்துக்
கூறுபோட்டுப் பார்க்கையிலே
கூவமது மணக்காமல்
பூவா மணம் விரிக்கும்?

போஸ்ட்மார்ட்டம் பண்ணித்தான்
போட்டுவச்ச ரிப்போர்ட் இது!
நடைப்பிணங்கள் உம்முடைய
கச்சாப் பொருள் மணந்தான்!

கிரியா ஊக்கிகளாம்
கிருஷ்ண பரமாத்மாக்கள்
நரியாய்க் கரந்துறைந்து
நாடகங்கள் ஆடிடினும்

கீதாபதேசங்கள்
கேட்க இனி நாதியில்லை
*கிஷ்கிந்தா வாசிகளே!*

சூத்திர தாரிகளின்
சூக்குமங்கள் அத்துபடி!

மரம்சுட்டுக் கரியாகலாம்
மயிர்சுட்டுக் கரியாகுமா?
தரங்கெட்டுப் போனீர்களே
தலை நரைத்தால் அறிவாளியா?

ஆயிரமாயிரம் விழுதுகள் கண்ட
ஆலமரம்தான் எம் 'சொ.வி'
ஆலமரமே தோப்பாகும்
அதிசயங்காண் எம் 'சொ. வி'

ஆயிர மரங்கள் படர்ந்தடர்ந்த
ஆதிவிருட்சம் பேரடவி!
ஞானஒளியும் காரிருளும்
மண்டிக்கிடக்கும் தமிழ்ப்புடவி!

மேதை அவனுக் கீடாக
மேலைத் திசையில் தேடுங்கள்!
பேதை உம்போல் மேதினியில்
பிரகிருதிகள் ஏதுமில்லை!

…''சில ஆண்டுகளுக்கு முன்பு சர்ச்சை நடந்தபாட்டு இதுவே. பாடலை இப்போது படித்தாலும் சிற்சில இடங்களில் மூச்சுத் திணறு கிறது! அதே சமயம் அதன் கவிநயம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகிறது!…அதை அப்படியே வெளியிடுவது உசிதமில்லை என்று தோன்றுகிறது. ஆனால் அந்தக் கவிநடை அதை உடனே வெளியிட வேண்டும் என்னும் ஆசையை எழுப்புகிறது…இந்தப் பாடலை அதன் முழுவடிவிலும் வெளியிடுவதற்காகப் புதுமைப்பித்தன் இருந்த போதே ஒரு முயற்சி நடந்தது. நான் தலையிட்டு அதை நிறுத்த நேர்ந்தது''

—மீ. ப. சோமு

□

# பேச்சுக்குச் சொல்லவில்லை பேனாத் துணையுண்டு!

வேலூர் வெ. கந்தசாமிக் கவிராயர், திருச்சிற்றம்பலக் கவிராயர்

□

□

□

தமிழ் கூறு நல்லுலகின்கண் கர்ண பரம்பரையாய் உலாவரும் இக்கவிதைப் பாட்டைப் பாட பேதங்கள் பார்த்துப் பதிப்பித்தோன் : (பண்பாடு நாகரிக வரம்பிகந்த) குடந்தைவாணன வே. மு. பொதிய வெற்பன்.

மூலச்சுவடிகள் வழங்கி உதவிய 'முதுக்குறைவி'கள் :
முதுபெரும் எழுத்தாளர் மூவராவார்:

திரு. கரிச்சான் குஞ்சு
திரு. 'கலாமோஹினி' சாலிவாஹனன்
'சேக்கிழார் அடிப்பொடி'
திரு. தி. நா. இராமச்சந்திரன்

மூனா வருணாசலமே
முச்சந்திக் கும்மிருட்டில்
பேனாக் குடைபிடிச்சுப்
பேயாட்டம் போடுகிறீர்!

பேயாட்டம் போட்டாடும்
பித்தக் கிறுகிறுப்பை
நாயாட்டம் ஆட்டுவிக்க
நச்சிக் குழையடிச்சேன்

★

பன்னூறு நூற்றாண்டாய்ப்
பாரில்நட மாடிவரும்
கன்னித் தமிழணங்கு
கரிமுடிஞ்சி போமாறு

சுத்தி எருவடிச்சி
சூழ வக்கோல் பரப்பி
மத்தியிலே கல்லுவச்சு
மண்ணைக் கொழச்சிவச்சு

நீ சங்கெடுத்து ஊத
நீசத் திருக்கூட்டம்
சுத்தி வந்துதலைமாட்டில்
சுமந்து வந்தகுடமுடச்சி

வாய்க்கரிசி அள்ளியிட்டு
வாஞ்சையுடன் தீயெடுத்து
கொள்ளி வைக்கப் பார்த்தால்
குவலயத்தார் பொறுப்பாரோ?

★

ஆற்றுப் பெருக்கெனவே
ஆர்வத் தமிழ்வளர்த்த
நூற்றுவரும் உன்கண்ணில்
கௌரவராய்த் தோன்றினரோ?

அஞ்சு கணவருக்கும்
அழியாத பத்தினியே
நெஞ்சத் துணிவினிலோ
நீதம் மறந்துவிட்டாய்!

பத்திரிக்கைச் சந்தையிலே
பத்தினிஉன் துகிலுரிந்தால்
நத்திஉனைக் காக்கும்
நாயகனும் யாரேயோ?

கரையான் உருவெடுத்துக்
கம்பன் வயிறெறிய
சிரையாய் சிரைத்துத் தினம்
செந்தமிழைத் தின்றுதின்று

ஓட்டைக் கருத்துகளை
ஒட்டி வச்சுப் பாத்திக்கட்டிப்
பம்மாத்து பண்ணி வரும்
குற்றாலத்து அண்ணலுக்கு உன்
குருபக்தி காட்டிவிட்டால்
இற்றைத் தமிழ்நடையை
எழுதிவிட்ட தாகிடுமோ?

★

வத்திவச்சுப் பேசும்
வைணவத்துச் சம்பிரமப்
புத்தியுடன் பக்குவமாய்ப்
பொல்லாங்கு இழைத்துவரும்

குத்திருமல் கோட்டான்
குள்ளநரிச் சித்தாந்த
கீல்எண்ணெய்க் கண்ணாடிக்
கிளிமூக்கின் சந்நிதியில்

வாலைக் குழைச்சுவரும்
மாயவரம் பார்ப்பான்

★

இரவல் புருஷன் வச்ச
ஏந்திழைமேல் ஆசைவச்சு
கத்திரிச்சு ஒட்டவச்ச
காகிதப் பூஞ்சோலையிலே
சித்திரிச்ச காதல்
சிறு மலராம் சிறுக்கிவர
கச்சணிந்த கொங்கை
கனமேறிக் காட்டுதற்கே
வச்சதுணிப் பந்தில்
வச்சக்கண் மாறாதே
புத்திதடுமாறி விட்டால்
போக்கேது பொழப்பேது?

★

சைவ சித்தாந்தச்
சக்கரத்தில் சிக்கியநீர்
கைவல்ய நவநீதம் கற்காமல்
தமிழ்ப் பங்கில் கைவைத்தீரே!

கரிமுடிஞ்சி போனவரே!
காசிக்குப் போனால்
கருமம் தொலையுமெனப்
பேசிவரும் பேச்சை
பெரும் புளுகு ஆக்கிவிட்டீர்!

நீரோ—

காய்கறித் தோட்டத்தில்
களை பிடுங்க லாயக்கு
பேய்களுடன் ஆடுகின்ற
பித்தனது தத்துவத்தை
ஆய்கின்ற சேற்றில்
அழுந்துதற்கு லாயக்கு
கூளப்ப நாயக்கன்
கூத்திமார் தம்முடனே
வேலை தொடங்கையிலே
விளக்கெடுக்க லாயக்கு!

பேனாப் பிடித்தெழுதி
பேரெடுக்க லாயக்கோ?

★

சின்னத் தமிழ்நடையை
எழுதத் துணிந்திட்ட
உன்சிறு தனத்தை
ஓடோட அழிக்கோமோ?

கொண்டைக் கட்டிவேளாளா?
உன் குடுமி பறக்காதா?
கூச்சம் சிறிதுமின்றி
குறையிழைத்த உன் கரத்தை
வீச்சரிவாள் கொண்டு
வெட்டித் தொலைக்கோமோ?

பாச்சா பலிக்காது!
பருப்பிங்கே வேகாது,
பேச்சுக்குச் சொல்லவில்லை
பேனாத் துணையுண்டு.

['மூலம்' மட்டுமே முதலில் அச்சேறுகிறது. காண்டிகை விருத்தி முதலாய பாரிப்புரைகள் கால வெள்ளத்தின் தேவைக்கேற்ப விதந்து விரிக்கப்படும். விடுபட்டவரிகளோ வேறு வடிவமோ மாற்றி யாரிடமேனும் கிடைக்கக்கூடுமேல் எமக்கனுப்பி உதவுக.]

—பதிப்பாசிரியன்

"

சமீபத்தில் சிலர் சூரியனைத் தூக்கிச் சட்டைப் பையில் போட்டுக் கொள்ளும் முயற்சியைத் தழுவல் என்கின்றனர். அது வெறும் திருட்டு.

இன்னொருவர் கதையைத் திருடி தன் சொந்தக் கதையென்று கூசாமல் சொல்லும் பொய்யர்களை, சோரம் போன மனைவிக்குப் பிறந்த குழந்தைகளுக்கு தான் தான் தகப்பன் என்று கூறிக் கொள்ளும் வெட்கம் கெட்டவர்களுக்கு ஒப்பிடலாம்.

—**புதுமைப்பித்தன்**

"

# திருச்சிற்றம்பலக் கவிராயருக்கு ஒரு திறந்த மடல்

□

அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய திரு. தொ.மு.சி அவர்களுக்கு பொதியவெற்பன் வணக்கங்கள்.

நீண்ட நெடு நாட்களாகவே தங்களுக்கு எழுத நினைத்தும் இயலாமல் போய் இன்றுதான் சாத்தியமாகிறது. மீண்டும் ஒருமுறை புதுமைப்பித்தனின் படைப்புலகத்திற்குள் ஆட்பட்டவாறு மீளமுடியாமல் மூச்சுத் திணறி முக்குளித்து என் மன அவசங்களை தங்கள்முன் வைக்கலானேன். புதுமையும், பித்தமும் வாய்ந்த திகம்பர சொரூபசித்தக் கூத்துக்கள். ஒழுங்கமைவைச் சீர்குலைக்கும் கலகத்தை முன்வைக்கும் பிரதிகள். ஓர்மையுடன் தமிழில் நவீனத்துவம் விழி திறக்கும் காற்றங்கால்கள். இந்த யாத்திரைக்கு ஊடே பு. பி. யின் படைப்புக் களை அணுகுதற்கு பு.பி.யின் இதர எழுத்துக்களும் தங்கள் பு.பி. வரலாறும், பு.பி. பற்றிய திரு. சுந்தரராமசாமியின் எழுத்துக்களும் எனக்குத் தோன்றாத் துணையா கின்றன.

பு.பி.யை இலக்கியத் திருடனின் பேய்க் கனவென்பீர்கள். நேர்மையான தழுவல்—திருட்டுத் தழுவல் இரண்டுக்கும் அவர் எதிரி என்பீர்கள். இலக்கியத் திருடர்களை அவர் இனங்காட்டும் முகமாக 'இரவல் விசிறி மடிப்பு', 'ரசமட்டம்' இவை மூலமாக அம்பலப்படுத்தியதையும் அறிமுகப்படுத்தினீர்கள். சமீபத்தில் சிலர் சூரியனைச் 'ஜோப்பி'யில் போட்டுக் கொள்ளும் முயற்சியாக பு. பியின்

> ''கல்கியின் நோக்கம் தனக்குச் சாதகமான ஒரு வாசகப்பட்டாளத்தை திரட்டுவது. கல்கிக்கு தன் வரையறைகள் தெரியும். அத்தன்மைகளையே தன் சமூக ஸ்தானத்திற்கான இலக்கிய நியதிகளாக்கினார். இது மடமையல்ல, கயமையாகும்'' என்பார் திரு. சுந்தர ராமசாமி.

வரலாற்றை திரித்துக் காட்ட முயன்று வருவதும் கட்டாயம் தங்களுக்குத் தென்பட்டிருக்கக் கூடும்.

கல்கியின் பிம்பத்தை காபந்து பண்ணும் நிமித்தமாக பு. பி. மீது களங்கம் சுமத்த முயலும் ஒரு கும்பலின் பகீரதப் பிரயத்தனம் இங்கு தொடர்வது குறித்தும் அதன் கண்ணிகளை தங்கள் கவனத்திற்கு மையம் குவித்தும் இங்கு எழுத முயல்கிறேன்.

மணிக்கொடி இலக்கியப் போக்கிற்கும் மணிக்கொடி பொற்காலத்தை இன்று சுவீகரித்துக் கொள்ள முயல்கிற திரு சிட்டி, சிவபாதசுந்தரம் போன்றோருக்கும் எள்ளளவும் தொடர்பில்லை என்று எமது மணிக்கொடி பொன்விழா மலரிலே *திரு. அ. மார்க்ஸ் குறிப்பிடுகிறார்.*

இவ்வாறு மணிக்கொடி பொற்காலத்தை சுவீகரிக்க முயலும் இரட்டையர்கள் மணிக்கொடி பொன்விழா என்று சென்னையில் கொண்டாடினர். பேராசிரியப் பெருமக்கள் மத்தியில் அவர்கள் அங்கீகாரம் தேடும் அளவிலேயே இது நீர்த்துப் போயிற்று. கல்கியின் வாரிசுகள் மணிக்கொடி பொன்விழாவை கேலிக் கூத்தாக்குகிறார்கள் எனவும், கல்கியின் இலக்கியத் திருட்டை பு.பி. அம்பலப்படுத்திய ரசமட்ட விவகாரத்தையும் நான் குறிப்பிட்டேன், நான் குறிப்பிட்டதையும் திரு. பிரபஞ்சன் வலியுறுத்திப் பேசினார். உடனே இரட்டையர்கள், கல்கி இல்லையேல் மணிக்கொடியே இல்லை என்றும் யார் பிளேஜியரிஸம் பண்ணவில்லை? கம்பன் பண்ணலையா? பு.பி. பண்ணலையா? என்று குதித்தார்கள். இத்தகைய இரட்டைத் தனங்கள் இன்றளவும் தொடர்கதையாகின்றன. இரட்டையர்களின் தமிழில் **சிறுகதை: வரலாறும், வளர்ச்சியும்** எனும் நூலை பாலத்தில் மதிப்பிட்ட திரு. தொ. பரமசிவம் அவர்கள் ''தொ.மு.சி. ரகுநாதன் எழுதிய **புதுமைப்பித்தன் வரலாற்றில்** இலக்கியத் திருட்டுப் பற்றித் தமிழர்களுக்குப் புதுமைப்பித்தனே முதலில் எடுத்துக் கூறினார். என்ற செய்திக்கு இவர்கள் மறைமுகமாக மறுப்புரையை வழங்குகிறார்கள் என்பதும் எதையோ செரிக்க இயலாமல் திணறும் இவர்களின் முகமும் நுணுகிப் படிப்பவர்க்குப் புரியும்,'' எனக் குறிப்பிடுகிறார்.

**இங்கு கயமை, போலித்தனம் போன்ற வார்த்தைகள் வெறும் வசவுகளாக வாரித் தூற்றப்படவில்லை. கயமையும், போலித்தனமும் கல்கியின் சுபாவம் என்பது அம்பலப் படுத்தப்பட்டுள்ளது. இதனை எதிர்கொள்ளும் திராணி இரட்டையர்களுக்கு அறவே இல்லை.**

இரட்டையர்தம் சிறுகதை வரலாற்றில் அவர்கள் ''சிறுகதையைப்பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்ட சிலர் கல்கியைப் பற்றிக் குறிப்பிடும்போது கயமை, போலித்தனம் என்பன போன்ற வார்த்தைகளை உபயோகித்திருப்பது அநாகரிக மாகப்படுகிறது'' என்று பொருமுகின்றனர். அவர் குறிப்பிடும் ஒரு சிலர் என்பது திரு. சுந்தரராமசாமியையும், திரு வேதசகாயகுமாரையும் ஆகும் அவர்கள் குறிப் பிடுவதையும் ஒருசேர நாம் அவதானிக்கலாம்.

''கல்கியின் நோக்கம் தனக்குச் சாதகமான ஒரு வாசகப்பட்டாளத்தை திரட்டுவது. கல்கிக்கு தன் வரையறைகள் தெரியும். அத்தன்மைகளையே தன் சமூக ஸ்தானத்திற்கான இலக்கிய நியதிகளாக்கினார். இது மடமையல்ல, கயமையாகும்'' என்பார் திரு. சுந்தரராமசாமி.

''கல்கி ஒரு பாடகரல்ல. அவர் பொருள்தேட தேர்ந்தெடுத்தத் துறை சங்கீதம் அல்ல. தனக்கு இலாபம் தராத சங்கீதத்தில் சனரஞ்சகம் புகுந்தபோது அதற்கு எதிராக குரல் கொடுக்க முடிந்தது. நேர்மைக்கும் கல்கிக்கும் வெகுதூரம்''... ''கல்கிக்கு தன்னால எழுதப்படுபவை இலக்கியமல்ல என்றும் தெரியும்; இலக்கியம் என்றால் என்ன என்றும் தெரியும். ஆனால் அவரது நோக்கம் இலக்கியத் தரமல்ல., வியாபாரமே. அதற்குத் தேவையான ஜனரஞ்சகமே அவரது லட்சியம்.''... ''புற உலக வாழ்வில் கூட கல்கி நேர்மையான அரசியல் வாதியல்ல. இராஜகோபாலாச்சாரியின் தந்திர அரசியலுக்கு பிரச்சார வாயாகவே அவர் செயல்பட்டார்.''... ''கல்கியின் போலித்தனம் அவர் வாழ்ந்த காலத்திலேயே புதுமைப்பித்தன் போன்றோர்களால் இனங்கானப்பட்டது.'' என்றுக் குறிப்பிடு கிறார். திரு. வேதசகாயகுமார்.

இங்கு கயமை, போலித்தனம் போன்ற வார்த்தைகள் வெறும் வசவுகளாக வாரித் தூற்றப்படவில்லை. கயமையும், போலித்தனமும் கல்கியின் சுபாவம் என்பது அம்பலப்படுத்தப்பட்டுள்ளது. இதனை எதிர்கொள்ளும் திராணி இரட்டை யர்களுக்கு அறவே இல்லை. இதனால்தான் உடனே வ.வே.சு ஐயர் முதல் பு.பி. ஈறாக இந்தத் தொழிலில் (இலக்கியத் திருட்டு) கைதேர்ந்தவர்கள் தான், எனக்

குறிக்கிறார்கள். எப்படி இருக்கிறது இந்தக் கதை. ''எங்கக் கல்கியையாத் திருடன்ன...நீ திருடன்,...உங்க ஒப்பன் திருடன்...உங்க ஆத்தா திருடி...உங்க உங்க பரம்பரையேத் திருட்டுக்கும்பல்...'' இதானே இதற்கு அர்த்தம். கவனிக் கவும். கம்பன்ல தொடங்கி வ.வே.சு வழி பு.பி. வரைக்கும்தான். அதற்கப்புறம் பிரச்சனையில்லை. அவர்களுக்கு இலக்கு பு.பி. தானே?

இதே மூச்சில் இந்தக் கும்பலின் விஷமமான முயற்சி குறித்து **புதுமைப் பித்தன் படைப்புகள்** முன்னுரையில் திரு. க.நா. சுப்பிரமணியன் குறிப்பிடுவதையும் தங்கள் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

''பல மோபாஸான் கதைகளைப் புதுமைப்பித்தன் தழுவி ஊழியனில் எழுதி வெளியிட்டிருப்பதாகத் தெரிகிறது. இந்தத் தழுவல் பழக்கம் அவரைக் கடைசி வரை விடவில்லை என்றும் சொல்லாமம். தழுவலை ஒரு இலக்கிய முறையாகவே, ஒரு வெற்றிகரமான பத்திரிகைக் கோஷ்டி அப்பொழு கைக்கொண்டிருந்தது. (கல்கி, துமிலன், தேவன், ராலி) சொல்லியும், சொல்லாமலும், பல நல்ல கதை களையும், மட்டமான கதைகளையும் தழுவல் செய்து தங்கள் பெயரில் போட்டுக் கொள்வது என்பது தமிழ்நாட்டில் ஒரு சாதாரணமான பழக்கமாக இருந்தது. ஒரு சிலர் மூல ஆசிரியர்களின் பெயர்களைச் சொன்னார்கள். பலர் மூல ஆசிரியர்களின் பெயர்களைச் சொல்லாமலே, எல்லாம் தங்கள் சொந்தக் கற்பனையே போலப் பாசாங்கு பண்ணிப் புகழ் சம்பாதித்துக் கொண்டிருந்தார்கள். புதுமைப்பித்தன் பிற்காலத்தில் தழுவல்காரர்களையும், தழுவல்கட்சியையும் வன்மையாகக் கண்டித் தாலும்கூட அவசியம் நேர்ந்தபோது; தன் சொந்தக் கற்பனை ஓடாத சிலசமயங் களில் சில கதைகளைப் பெயர் சொல்லாமலும் கூடத் தழுவி எழுதியதுண்டு. ஆனால், தழுவல்காரர்களின் கற்பனை வறட்சியைப் போலப் புதுமைப்பித்தனுக்குக் கற்பனை வறட்சி இல்லை என்பது நிதர்சனமாகத் தெரிகிற ஒரு காரியம். கதை சொல்லும் மேன்மையும் சொந்தக் கற்பனை ஆட்சியும் புதுமைப்பித்தனுக்குக் கைவந்திருப்பது போலத் தமிழில், இந்த ஒரு நூற்றாண்டில், வேறு ஒருவருக்கும் இருந்ததில்லை என்று சந்தேகத்திற்கிடமில்லாமல் நிரூபிக்கப்பட்டுவிட்ட விஷயம். இந்தத் தொகுப்பில் உள்ள கதைகள் எல்லாமே அவர் கற்பனைத் திறனுக்கும், கதை சொல்லும் மேன்மைக்கும் சான்றுகள். ஆகையினால், அவர் செய்த சில தழுவல்களை சுட்டிக்காட்டி அவரும், தழுவல்களால் மட்டும் பெயர் பெற்ற மற்றவர் களும் ஒன்றுதான் என்று சொல்லுகிற ஒரு கூட்டம் சமீபகாலத்தில் ஏற்பட்டிருப்பது மிகவும் வருந்தத்தக்க விஷயம். இந்தக் கூச்சல் விமர்சனம் அல்ல. இதற்கு அர்த்தம் ஏதுவும் இருப்பதாக தெரியவில்லை. தழுவல் தவிர வேறு எந்தவிதமான எழுத்தும் இல்லாதவர்களையும் புதுமைப்பித்தனையும் சமமாகக் காட்டுவது ''விஷமமான'' ஒரு முயற்சி.''

**புதிய ஒளி** தொகுப்பில் இடம்பெற்றுள்ள ''பயம், நொண்டி, கொலைகாரன் கை, அந்த முட்டாள்வேணு,'' ஆகிய நான்குகதைகளும் மோபஸானைத் தழுவியவை

எனக் குறிப்பிட்டு இலக்கிய வெளிவட்டத்தில் (ஆகஸ்ட்-80) "புதுமைப்பித்தனின் தழுவற் கதைகள்-சில குறிப்புகள்" என்ற தலைப்பில் திரு. கிருஷ்ணமூர்த்தி எழுதியிருந்தார். இவற்றோடு "சமாதி" எனும் பு.பி.யின் கதையும் மோபஸானைத் தழுவியது எனவும் டாக்டர். மதனகோபால் தமது ஆய்வில் குறிப்பிட்டுள்ளார். இந்த ஐந்துக் கதைகளும் **புதிய ஒளி** சிறுகதைத் தொகுப்பில் வெளிவந்தவையாகும். இவற்றோடு **புதுமைப்பித்தன் கதைகள்** தொகுதியில் உள்ள 'கவந்தனும் காமனும்' ஆல்ட்டஸ் ஹக்ஸ்லியின் தழுவல் என அந்நூலின் முன்னுரையில் (1955) திரு. ரா, ஸ்ரீ. தேசிகன் குறிப்பிடுவதாகவும் இரட்டையர் தெரிவிக்கின்றனர். மேற்கூறியத் தகவல்கள் இரட்டையர்தம் 'வரலாற்றில்' இடம் பெற்றவை. **சித்தித்** தொகுப்பில் உள்ள 'விபரீத ஆசை' நட்ஹம்சனின் தழுவல் எனவும் அந்தக் கதை மலேசியாவிலோ, சிங்கப்பூரிலேயே வெளியான ஒரு மலரில் வெளி வந்தது என்றும் திரு. சி.சு. செல்லப்பா நேர்ப் பேச்சில் என்னிடம் தெரிவித்தார். இரட்டையர்கள் திரு. மீ.ப. சோமுவிடம் பேட்டிக் கண்டதில் சில 'திடுக்'கிடும் தகவல்கள் கிடைத்ததாக நமது ஜு.வி. கழுகு மாதிரி துப்புத்துலக்கி தகவலைத் திரித்து ஜேம்ஸ்பாண்ட் ரீல் விடுகிறார். "**புதிய ஒளி** என்ற தொகுப்பு 1953ல் முதல் பதிப்பாக வெளிவந்தது. இந்த தொகுப்பு நூலை வெளியிட்ட பதிப்பகத் தாரின் கையிலே எழுத்துப் பிரதியாக இருந்து பு.பி. இறந்தபிறகு புத்தகமாக வெளியிடப்பட்டதாக" குறிப்பிடுகின்றனர். உள்ளே தகவல் தரும்போது 1945ஆம் ஆண்டு பு.பி. சென்னையில் தனியாக இருந்த சமயம் (திருமதி கமலா அம்மையார் திருவனந்தபுரத்தில்) தம் கையெழுத்துப் பிரதிகள் முழுவதையும் ஸ்டார் பதிப்பகத் தாருக்கு திரு மீ.ப. சோமு மூலம் விற்றுக் கொடுத்தாகவும் குறிப்பிடுகிறார். கைமாறிய தொகுதியின் உள்ளடக்கம் தெரியவில்லை என்றும் குறிப்பிடுகிறார். அத்துடன் 23.11.45 தேதியிட்டு பு.பி. சோமுவுக்கு எழுதிய கடிதத்தில் தம்முடைய நாடகங்களுக்கு உலக அரங்கு அல்லது நாடகமாடிய கதைகள் எனப் பெயர் வைக்கலாமா என்று கேட்கும் தம் கதைத் தொகுதிக்கு அயல்நாட்டுக் கதைகள் அல்லது 'மண்படர்ந்த மாண்பு' என்று பெயரிடலாமா? என்றுக் கேட்டும் எழுதி தாகத் தகவல் தருகிறார். இதில் என்ன 'திடுக்'கிடும் தகவல் காணக்கிடைக் கிறது?

மாறாக புதுமைப்பித்தன் அஞ்சல் மூலம் கைமாறியத் தொகுதியின் உள்ளடக்கம் மொழிபெயர்ப்பு என்பதாகத்தானே ஊகிக்க இடமிருக்கிறது. மேலும் கைமாறி தொகுதியின் உள்ளடக்கம் தெரியவில்லை என்று வேறு குறிப்பிடு கிறார்கள். இதிலிருந்து புதுமைப்பித்தனின் இலக்கியத் திருட்டுக்கான எந்த ஆதாரத்தை தந்து இவர்கள் நம்மைத் திடுக்கிட வைத்தார்கள்?

திருமதி கமலா புதுமைப்பித்தன் அவர்கள், புதிய ஒளி முதலான புதுமைப் பித்தன் எழுத்துக்கள் பு.பி. மறைவிற்குப் பின்னால்தான் ஸ்டார் பதிப்பகத்திற்குக் கொடுக்கப்பட்டன என்றும் அவர் இறந்த சமீபத்தில் கொடுக்கப்பட்டதால் அவற்றை

முறைப்படுத்தியும் தொகுத்தும் கொடுக்கும் மனநிலையில் தாம் இல்லை என்றும் என்னிடம் நேர்ப்பேச்சில் குறிப்பிட்டார்.

தகவல் குறிப்பிடும் பொழுது. திரு. மீ.ப. சோமு மூலம் பு.பி. உயிருடன் இருந்தபொழுதே கைமாறிய பிரதியின் உள்ளடக்கம் தெரியவில்லை என்று குறிப் பிட்டுவிட்டு உள்ளே தம் ஆய்வில் **புதிய ஒளி** தொகுப்பு பதிப்பகத்தார் கையிலே எழுத்துப்பிரதியாக இருந்து, அவர் மறைந்தபின்னர் வெளியிடப்பட்டதாகத் தகவலைத் திரிக்கின்றனர்.

**புதிய ஒளி** தொகுப்புக் கதைகள் யாவும் சொ.வி. பு.பி, ஆகும் முன்பாக ஆரம்பகாலத்தில் பல்வேறு புனை பெயர்களில் ஊழியன், குமரன் ஆகிய பத்திரிகை களில் எழுதியவை எனவும் பெயர் குறிப்பிடாமல் வந்தச் சிலவற்றையும் பு.பி.யின் எழுத்து என்ற அனுமானத்தில் வெளியிட்டதாகவும் ஸ்டார் பதிப்பகம் திரு. ராமநாதன் செட்டியார் அவர்கள் என்னிடம் நேர்ப்பேச்சில் குறிப்பிட்டார்.

ஆக, இதுவரை இங்கே குறிப்பிடப்பட்டவற்றாலும் எனது நேர்காணல் தகவல்களாலும் **புதுமைப்பித்தன் உயிரோடு இருந்தவரை புதுமைப்பித்தன் என்ற பெயரில் மேற் குறிப்பிடப்பட்ட** ஏழு கதைகள் எந்த பத்திரிகையிலும் வெளிவந்ததாக இதுவரை எந்த விதமான ஆதாரமும் கிடைக்கவில்லை, புதுமைப்பித்தனாக சொ.வி. அவதாரம் எடுக்கும்முன் அவர் நடைபயில முனைந்தநடைவண்டி எழுத்தாக தலைப்பிரட்டைகளாக—வெவ்வேறு புனை பெயர்களில் இவை வெளிவந்திருக்கக் கூடும். தவிரவும் பெயர் குறிப்பிடாமல் வந்தவை கூட பு.பி.யின் எழுத்து என்ற அனுமானத்தின் பெயரில் தொகுக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படுபவற்றுள் இவை அடங்கவும் கூடும். எனவே, அவரது வாழ்நாள் காலத்தில் இக்கதைகளை அவர்தம் படைப்பாக (புதுமைப்பித்தன் படைப்பாக) உரிமை கொண்டாடும் ஆதாரம் ஏதுமில்லா நிலையில் அவர் மீது திருட்டுப்பழி சுமத்துவதில் என்ன நியாயம் இருக் கிறது. அவரது மறைவிற்குப்பின் பதிப்பாளர்களின் அசிரத்தையாலும் அக்கறை யின்மை பொறுப்பின்மையாலும் நேர்ந்த தவறுகளுக்கு பு.பி. மீது பழி சுமத்துவது நீலம்பாரித்த காழ்ப்புணர்ச்சியின் லீலாவினோதம் அல்லால் வேறு என்ன?

ஏலவே, இந்தக் கும்பலின் முயற்சி புதுமைப்பித்தனுக்குச் செய்யும் மகத்தான துரோகம் எனவும் கோட்பாடு ஏதுமின்மை, அணுகுமுறை இன்மை, ஆய்வு நெறி யின்மை இன்மை ஆகிய குறைபாடுகளை உடையாதாகவும், தற்சார்பு உடையதும், முழுதும் அகவயமான மனப்பதிவு உடையதாகவுமே இரட்டையரின் வரலாறு அமைந்துகிடக்கிறது எனவும் மேலும் இதழில் (மே 1990) டாக்டர் சு.வேங்கடராமன் மதிப்பிட்டுக் காட்டியுள்ளார், மேலும், **புதிய ஒளியின்** தொகுப்பாளராகவும் தாங்கள் இருந்த விபரம் தெரிவித்துள்ளார்.

'மூனா அருணாசலமே' பாடல் புதுமைப்பித்தனும் தாங்களும் சேர்ந்து பெற்ற கதம்ப விவகாரம் என்றும் திரு. மீ.ப. சோமு புதுமைப்பித்தன் தமக்கு எழுதிய அஞ்சலில் குறிப்பிட்டதாக கல்கியில் (சிலபல-பகுதி) சுட்டிக்காட்டியுள்ளார். (அப்பாடலை தங்கள் அனுமதியின்றியே இத்தொகுப்பில் வெளியிட நேர்ந்தமைக்கு எம்மை மன்னிக்கவும். இந்தச் சூழலிலும் அப்பாடலை வெளியிடாமல் இருப்பது எந்த விதத்திலும் நியாயமில்லை.)

எனவே இதுவரையிலான எல்லாவற்றையும் குறித்து தங்கள் எதிர்வினையை நாங்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம். இயன்ற விரைவில் தங்கள் பதிலஞ்சலை எதிர்பார்க்கிறோம்.

புதுமைப் பித்தன் விட்டுப் போன சொத்து தொ. மு. சி. ரகுநாதன் என்கிற முறையில் தங்களிடம் இந்த வரலாற்றுக் கடமையினை நிறைவேற்றித் தரும்படி தங்களைக் கேட்கும் தார்மீகப் பொறுப்பு எனக்கிருக்கிறது. அதுமட்டுமல்ல தொ.மு.சி. அவர்களே! இதுவரை வெளிவராத புதுமைப்பித்தனின் இரவில் விசிறி மடிப்பு, ஏசமட்டம், திரு வேதசகாயகுமார் கண்டுபிடித்துக் கொடுத்த ஐந்து சிறு கதைகள், அபூர்ணமாக நிற்கும் அன்னை இட்ட தீ இன்னும் புதுமைப்பித்தனின் திரைத்துறை முயற்சிகளான ஸ்கிரிப்ட் வடிவங்கள், இன்னோரன்னபிற புதுமைப் பித்தனின் எழுத்துக்கள் எல்லாவற்றையும் தயவுசெய்து, மீண்டும் வெளிவருவதற்கு தாங்கள் ஒத்துழைப்பை எதிர்நோக்கி இருக்கிறேன். எனதிந்த முயற்சிக்கு புதுமைப்பித்தன் குடும்பத்தாரின் இசைவினையும் பெற்றுள்ளேன். இந்த வகையில் தாங்கள் கட்டாயம் ஒத்துழைப்பீர்கள் என்ற புரிந்துணர்வும் எதிர்பார்ப்பும் எனக்குண்டு.

நேருக்கு நேர் காண திராணி இல்லாமல் ஒரு புனித சதுர பதிப்பாளனால் தும்பு தும்பாக கிழித்தெறியப்பட்ட புதுமைப்பித்தன் படைத்த சரஸ்வதியின் திகம்பர ஸ்வரூபத்தின் உருவச் சிதைவுகள் என் கண்முன்னே கலைடாஸ்கோப்பின் ரூப விசித்திரங்களாக கோலம் மாறுகின்றன. என் சாதியான் (பதிப்பாளன் என்கிற சாதி, செய்த தவறுகளுக்கு என்னாலான பிராயச்சித்தம் ஏதும் நான் செய்தாகவேண்டுமே) பிற தங்களிடமிருந்து,

என்றும் தங்கள்,

இராஜவேலுமான் [signature]

"மனத்தை ஓர் தொல்கதை அமைப்பு என்கிறார் லெவி—ஸ்ட்ராஸ். ஆகவே நம்முள்ளிருந்து கலையை இலக்கியத்தை, நடனத்தை ஓவியத்தை ஓர் ஆதிவாசி ரசிக்க வைக்கிறான் என்பது லெவி—ஸ்ட்ராஸின் கண்டுகிடிப்பு"

—தமிழவன்

# திறந்து கிடக்குமொரு தேதியில்லாக் குறிப்பேடு

— பறை

+ ஆதிவாசி மனநிலை

★ கொல்லாஜ்

○ குப்பைகளே கச்சாப் பொருளாக...

▨ தலித் இலக்கியமும்
மூன்றாம் உலக இலக்கியமும்

△ பாரதிதாசனை முன்னிறுத்தி
எம்.டி.எம். Vs. புதுமைப்பித்தன்

□ பிரம்மாக்கள் மரித்தாலென்ன?
பிரதிகள் ஜீவிக்கும்!

திகம்பரம்

சூர்யமுகி

# திறந்து கிடக்குமொரு தேதியிலாக் குறிப்பேடு :

''தண்டோராக்களும் தப்பட்டை
களும்
குடிசைப் பரண்களில் வீசி எறியப்
பட்டன!
நாடெங்கும் ஓடிய கிராமிய நதியின்
இந்தக் கலாச்சார அலைகள்
தங்கள் பாடல்களை இசைக்க
மறுத்தன...மறந்தன!''

எழுபதுகளின் இறுதியில் தண்டோரக் கலைஞர்கள் பிணம் எரித்தல், செத்தமாடு தூக்குதல், பறை அடித்தல் ஆகியவை உள்ளிட்ட மரபான தொழில்களைக் கை விட்டனர்...இன்று தஞ்சை மாவட்டத்தின் பல கிராமங்களில் தண்டோராக் கலைஞர் கள், அடிமைத்தனத்தின் அடையாளமான தங்கள் தொழிலை உதறிவிட்டு, விவ சாயத்திற்குத் திரும்பியது என்பது தளை உடைப்பின் ஒரு முக்கிய கட்டமாகும்''

ஆ. தனஞ்செயனின் ''ஒலிக்க மறுத்த தண்டோராக்கள்'' நமக்கு உணர்த்தும் உண்மை இது.

ஈழச் சூழலிலும் இந்த யதார்த்தத்தை டானியலின் தலித்திலக்கியங்கள் நமக்குப் பறையறையும். இந்த யதார்த்தத்தின் வெளிச்சத்தில்தான் — பறை — ஆளும் வர்க்கத்தின் அறிவிப்புக் கருவி என முகஞ் சுளிக்கும் என் அன்பு தோழர்களையும் எதிர்கொண்டு மீண்டும் பறையை ஏந்து கிறேன் நான். இது ஒரு பகுதி உண்மை. இன்னொரு பக்கத்தையும் பார்ப்போம்.

விஞ்ஞான பூர்வமாக சிந்திக்கும் என் தோழர்கள் மத்தியிலிருந்து இத்தகைய கேள்வி ஒன்று எழுவதுதான் விந்தை?

கையாளுவதையும், கையாள்பவரை யும் பொறுத்துத்தானே கருவி அமையும். ஆளும் வர்க்கத்தின் அடக்குமுறைக் கருவி எனக் கூறி ஆயுதங்களைப் புறக்கணிக்கச் சொல்வார்களா என் அன்புத் தோழர்கள்?

அனைத்திந்திய புரட்சிப் பண்பாட்டுக் கூட்டமைப்பு தன் இலச்சினையில் ஏந்தி யுள்ளதும் பறைதான். ஜனநாட்டிய மண்டலியின் மகத்தான புயற்கலைஞன் கத்தார் ஏந்துவதும் பறைதான். ஆதி முதல் இன்று வரை ஆடற்கலையும் வீர விளையாட்டும் ஒரு சேர என் சக பறையர் கள் தம் தப்பாட்டக் கலையில் ஏந்தி ஆடுவதும் பறைதான். மேட்டுக் குடி மனோபாவத்தின் செவிப் பறைகளில் நாராசமாய் அறைவதும் சாப்பறைதான். 'தலித் மரபின்' தார்மீகக் குரலும் பறை தான். அனைத்திற்கும் மேலாக ஆதி நிலையை அவாவி நிற்கிற நமது மனோ லயத்தின் குறியீடுதான் பறை.

☐

''ஆதிவாசி மனத்தை'பிரிக்கோலேஜ்' மனம் எனலாம். 'பிரிக்கோலெஜ்' என் பது (bricolage) ஒரு பிரெஞ்சு வார்த்தை. இதற்கேற்ற ஆங்கில வார்த்தை இல்லை என்று மொழிபெயர்ப்பாளர்கள் பிரெஞ்சி லேயே கொடுத்துள்ளனர். 'பிரிகோலர்' என்பவன் (bricoleur) தட்டுமுட்டுச் சாமான்களை ரிப்பேர் செய்து கொடுப் பவன். அவன் கையில் ஏதோ மரம் இருக் கும், ஏதோ கருவி இருக்கும். ஒரு வீட்டுக்கு வரும் போது வீட்டில் அங்கு தேவையாய் இருப்பதற்கேற்ப உடனே இருக்கும் மரத்தையோ, இரும்பையோ உடைத்தோ, அறுத்தோ, வளைத்தோ, அந்த வீட்டு ரிப்பேரை எப்படியோ செய்து கொடுத்து விடுவான். அவன் செயலை Bricolage என்பர். ஆதிவாசி மனமும் இத்தகையது. அது தனக்குக் கிடைத் துள்ள குறைந்த வசதிகளான வார்த்தை

கள், பொருள்களின் கருத்தாக்கங்கள், படிமங்கள் போன்றவற்றைக் கொண்டு சிருஷ்டிக்கும் திறன் கொண்டிருக்கும், உலகை அறியும் விஞ்ஞானத்தை அது படைக்கும். அந்த விஞ்ஞானம்தான் மந்திரவாதம் அல்லது புராணங்கள் (myths).'' — தமிழவன்

□

''கொலாஜ் என்பது அச்சியன்ற தாளையோ அதுபோல் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத பிற பொருட்களையோ இணைப்பதன் மூலம் ஒரு முழு வடிவம் தேடும் கற்பனை நிறைந்த ஓர் ஓவிய முயற்சி. அதில் சிதைப்பதும் கலை; இணைப்பதும் கலை. ஒழுங்கின்மையில் ஒழுங்கு கண்டு மலர்த்தும் அற்புதம். கவிதைகளை ஒரு குறிப்பிட்ட பொருளைக் குவிமையமாகக் கொண்டு எடுக்கவும் கோக்கவுமாக 'எடிட்' செய்வதைக் 'கவிதை கொலாஜ்' என்று வே. மு. பொ. கையாள்வது நல்ல ஒரு கொலாஜ் வேலைப்பாடாகும்''

**கே. எம். வேணுகோபால்**

□

''பார்த்தெல்மே வார்த்தைகளின் விளிம்புக்கு வாசகர்களைக் கூட்டிச் செல்லும் வழிநடைப் பயணக்காரர். சொல்லாடல்கள் எல்லைகளுக்கு இல்லாத இடங்களுக்கு, சூன்யங்களுக்கு பயணப்படும் நபர் கூறுகிறார் : ...ஆக குப்பையை, எச்ச சொச்ச மிச்சத்தைப் படிக்க வேண்டும் ஆராய வேண்டும்ம் என்கிறார். இது வழியாகக் குப்பை பற்றிய அறிவுக் கோட்பாட்டுக்குப் (epistemology) போகிறார். பேசு பொருட்களை, சிதறல்களாகக் கட்டமைத்துக் கொடுப்பதையே இதன்தொடர்ச்சியாகக் காண்கிறார். இங்குதான் Inter text என்கிற இணைப்பிரதி உருவாவதைக் கவனிக்க வேண்டும். இதைத் தமது கலை/இலக்கியக் கோட்பாடாக? விவரிக்கிறார் :—

**கொலாஜ் என்ற சிதறல்களைத் தொகுக்கும் வடிவம்தான் இருபதாம் நூற்றாண்டின் பிரதான கலை/இலக்கிய தொடர்பு சாதன வடிவம்''**

**— நாகார்ஜுனன்**

''ஆழமான பகுப்பாய்வு என நாம் முயன்றதெல்லாம் கேலிக்குரியனவாகவே போய் முடிந்தன. சொற்கள் தங்களின் அர்த்தங்களை இழந்து போலிகளாயின. புதிய மொழியைப் படைக்கும் முயற்சிகள் தோற்றுப் போயின. தொலைக்காட்சி, திரைப்படம், இதழ்கள், சந்தை நவீனங்கள் போன்றவை உருவாக்கிய உயிரிழந்த அச்சுப் பதிவுகள் சலிப்பைத் தந்தன. அனைத்தும் குப்பையாய்ப் பொய்யாய்ச் சவசவத்துப் போன இந்தச் சூழலில் இதற்கு இணையான இன்னொரு அச்சுப் பதிவை உருவாக்குவதோ இல்லை, விரக்தியுற்றுச் சோம்புவதோ விடிவாக இருக்க முடியாது. இந்த யுகத்தின் கலைப் படைப்பு இந்தக் குப்பைகளையே கச்சாப் பொருளாகக் கொண்டு கட்டமைக்கப்பட்டாக வேண்டும். புதிய புனைவுகளை உருவாக்கி விடாமல் நாம் வாழ்வது புனைவுகளின் மத்தியில்தான் என்கிற உணர்தலை வாசகனுக்கு உருவாக்கிவிட வேண்டும். என்கிற புரிதலோடு மேலைச் சூழலில் உருவான இப் புதுப்போக்கு 'நவீனத்துவத்திற்குப் பிந்திய புனைகதை' 'சம காலத்திற்குப் பிந்திய புனைகதை' Superfiction, parafiction, surfiction, fubulation என்றெல்லாம் குறிப்பிடப் பட்டது.

காலம் என்பது நிகழ்காலமாய்ச் சுருக்கி உணரப்பட்டது. காலவரிசை என்பது தேவையற்றதாகியது. தொடர்ச்சி இடைநிலை இறுதி என்கிற நேர்கோட்டு (Linear movement) இயக்கம் என்பவை எல்லாம் இன்றைய கொடூரமான பொய்மையை, ஏமாற்றத்தை, ஏற்றத் தாழ்வு

அதிகாரத்துவத்தை அர்த்தமுள்ளவையாகவும், ஒரு ஒழுங்குக்குட்பட்டதாகவும் காட்ட மட்டுமே பயன்படும்...

...பன்முகமான ஒன்றுக்கொன்று முரண்பாடான பார்வைக் கோணங்களை ஒரே சமயத்தில் பயன் படுத்துதல், நம் முன் குவிந்து கிடக்கும் மலினப்பட்டுப் போன பல்வேறு குப்பைகளை வெட்டி ஒட்டுதல். பல்வேறு வடிவ எழுத்துக்களை அச்சில் பயன்படுத்துதல், இடைவெளி விட்டு அச்சிடுதல். உண்மைகளையும் புனைவுகளையும் திட்டமிட்டுக் குழப்புதல் என இவ் உத்திகள் பன்முகப்பட்டவைகளாக அமைந்தன.

...தொலைக்காட்சி விளம்பர வடிவம், சனரஞ்சகமான துப்பறியும் கதை, கீழ்த் தரமான சிரிப்புத் துணுக்குகள், திரைப் பட வசனம், காத்திரமான ஆய்வுக் கட்டுரை வாசகம், பாடப் புத்தக வரிகள், செக்ஸ் — புத்தகம் என எதிர்ப்படுகிற ஒவ்வொன்றும் இவர்களின் கச்சாப் பொருளாயின.இவற்றை எதிர்கொள்ளும் போது பரிச்சயபட்ட வாசகனில் தோன்றும் எதிர்பார்ப்புகள் அதிர்ச்சிக் குள்ளாகின்றன. இந்த அதிர்ச்சியே' இவற்றின் பிடியிலிருந்து விடுபடுவதற்கான முதற்படி 'ஆழமாக' ஒன்றைச் சிந்திக்க வைப்பதாகச் சொல்லும் அதிகாரத்துவ முயற்சிகள் அனைத்தின் போலித் தன்மையைக் கேலி செய்யும் நோக்கில் எந்த விதமான ஆழமான பொருள்களையும், உள்ளர்த்தங் களையும் படைப்புகளில் இல்லாமற் செய்து வாசகனின் கவனத்தை மேற்பரப் பிலேயே குவிய வைக்கவும் இந்த உத்திகள் பயன்பட்டன."

— அ. மார்க்ஸ்

''அமைப்பியல்வாதம் கீழைத் தேயங்களின் ஆதிவாசிகளின் அறிவுமுறைதான். எனினும் மேற்கின் பூச்சு அதில் உண்டு''

—தமிழவன்

''இந்தியக் காவியங்கள்-பாரதத்திலிருந்து சிலப்பதிகாரம் வரை ஆதிவாசிக் கதைகளின் தொகுப்புக்கள்தான். கதைகளை இவற்றிலிருந்து பிரித்துவிட்டுத் தத்துவச் சரடோ, பண்பாட்டு அல்லது வேறெந்த உயர்வகை விளக்கச் சரடோ விடுவது அபத்தம். பாத்திரங்கள் என்று வந்துவிட்டாலே கதை அங்கு இருக்கிறது. பாத்திரத்தின் பெயரிலிருந்து, அப் பாத்திரத்தின் உடலமைப்பிலிருந்து ஒவ்வொரு வருணிப்பும் கதைக்குணம் கொண்டவை தான்''

—தமிழவன்

''ஒரு தாழ்த்தப்பட்டவன், மலம் அள்ளலாம். உடல் உழைப்புச் செய்யலாம். ஆனால் அவனுக்குள் உள்ள படைப்பு நிலை பிரபஞ்ச விசாலமானது. அவனது நாட்டுப்புறக்கதை (Folktale) பஞ்சாபிலுள்ள நாட்டுப்புறக்கதையுடன் பொருந்தும்; ஒரு செவ்விந்தியனின் தொல்கதையுடன் (Myth) சம்பந்தம் கொண்டிருக்கும்''

—தமிழவன்

''ஆதிமனநிலை அதிகம் கொண்ட நீக்ரோ எழுத்தாளர்கள்தான், இன்று வெள்ளைக்காரர்களை விட முக்கியமானவர்களாக இருக்கிறார்கள். Chinua Achebe ஆகட்டும், Ngugi ஆகட்டும், Soyinka ஆகட்டும், Sengor ஆகட்டும் மிகமிக முக்கியமானவர்களாய்ப் நமக்குத் தமிழ்ச் சூழலில் அர்த்தம் தருகிறார்கள். இந்தியா இவர்களைப் போல பிராமணர்களாலும், பிராமணர்களைப் போலவே உள்ள பிராமணரல்லாத உயர்சாதியாலும் ஒதுக்கப் பட்டுவரும் பஞ்சமர்கள் எனற தாழ்த்தப் பட்டவர்களின் கலைகளும், நாட்டுப்புறவியல் (Folklore) கிராம தேவதைகள் மற்றும் சடங்குகள் போன்றனவும் கலை பற்றி நாம் தெரிந்து கொள்ள முக்கியமானவையாகும். இந்திய மொழிகள் சிலவற்றில் தோனறியுள்ள 'தலித் இலக்கியம்' பெறும் முக்கியத்துவம் இங்கு

வலியுறுத்தப்படுகிறது. மொத்தத்தில் ஏனைய மூன்றாம் உலக நாடுகளின் எழுத்தும் ஓவியமும் கலையும் சினிமாவும் இசையும் நாட்டியமும் விஞ்ஞானமும் நம் சூழலுக்கு ஐரோப்பியக் கலையை விட முக்கியமாகும்.

—தமிழவன்

''தேசிய உள்ளோட்டம்' ஒன்று பீறிட்டு மேலேறி வெளிப்பட்ட மரபின் தமிழக உதாரணம்—பாரதி, அந்தண, வெள்ளாள, தலித் மரபுகளின் ஒட்டு மொத்தமான குறியீடு இவன். (எனவே, பிராமண மரபா, வெள்ளாள மரபா என்ற அல்லாட்டம் இவனிடம் காணப்படுவது சகஜம்) பாரதிசாசன் வெள்ளாள மரபின் முழுப் பிரதிநிதி (தலித் மரபு இன்னும் தோன்றவில்லை).

—தமிழவன்

இங்கே தான் கொஞ்சம் உதைக்கிறது தமிழவன்; கே. டானியலின் 'பஞ்சமர்' முதலான நாவல்கள் தலித் இலக்கியங்கள் அல்லாமல் வேறு என்னவாம்? தலித் மரபு இன்னும் தமிழ்நாட்டில் தோன்றவில்லை, சரிதான். அங்கொன்றும், இங்கொன்று மாகத்தான் அரும்பு கட்டுகிறது எனலாம். ஆனால் ஈழத் தமிழில் தலித் மரபு டானிய லோடு என்றோ தொடங்கி விட வில்லையா? இன்றளவும் அலை யேசு ராசாக்களாலும்,பத்மநாப ஐய்யர்களாலும் 'இழிசனர்' இலக்கியமாக அத் தலித் மரபு அங்கு தாழ்த்தப்பட்டு வரவில்லையா?

—சூர்யமுகி

☐

''பாரதிதாசனின் கவிதைகளில் ஒன்றுக்கூட எக்காரணம் கொண்டும் தேறாது. ஞானி முழுவதுமாக பாரதி தாசனை நிராகரிக்காதது ஆச்சரியம் தான்."

—எம்.டி. முத்துக்குமாரசாமி

''பாரதியார் இன்று நமக்கு வைத்து விட்டுப்போன சொத்துககள் பல. இவற் றில் முக்கியமானவற்றைக் குறிப்பிட வேண்டின் ஞானரதம், குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம், கனக. சுப்புரத்தினம் என்ற பாரதிதாஸன் என்று சொல்ல வேண்டும்...........பாரிச வாய்வும், பக்க வாதமும் போட்டலைக்கும் இன்றையக் கவிதையுலகிலே, அவருடைய பாட்டுக்கள் ஒன்றுதான் நிமிர்ந்து நடக்கின்றன........ அவர் கவி.

> கோட்டைப் பவுன் உருக்கிச் செய்த
> குத்து விளக்கினைப் போன்ற குழந்
> தைகளைப்

பார்க்கத் தெரியாத, ரஸிகர்களைக் 'குரு டேயும் அன்று நின் குற்றம்' என்று அவ்வையுடன் சேர்த்தே ஆசீர்வதிக்க வேண்டியிருக்கிறது..........பாரதிதாஸன் கட்டி வைத்துள்ள கவிதைக் கோயிலிலே எத்தனையோ பிரகாரங்கள் உண்டு. எத்தனையோ ஆயிரங்கால் மண்டபங்கள் உண்டு. அவற்றில் நடுநாயகமாக விளங் குவது என நான் கருதுவது புரட்சிக்கவி என்ற அவரது பாட்டு............உதாரன் பேசுகிறான்; அவன் மனசு எரிமலைபோல் கொப்புளிக்கிறது. புரட்சிக்கனலை அவன் நினைவறிந்து ஏற்றினானோ என்பது சந்தேகம். அவன் பேச்சு ஊரைச் சுட்டது! ஊரில் உள்ள உளுத்த கருத்துக்களைச் சுட்டது. அவனுடைய பேச்சே தமிழ் இலக்கிய வரிசையிலே உயர்ந்த ஸ்தானம் வகிக்கிறது............"

—புதுமைப்பித்தன்

''பாரதியாரது கவிதா மார்க்கத்தைப் பின்பற்றிப் பல அறிஞர்களும் இப்பொழுது கவிதைகள் எழுதி வருவது தமிழ் விடுதலை யடைந்ததற்கு ஓர் அறிகுறியாகும். இக் கவிகளும் கற்போர்க்கு இன்ப மூட்டு கின்றன. இவற்றிலே காணப்படும் புதுமையும் ஆற்றலும் சுவையும் பெரிதும் பாராட்டுதற்குரியன."

பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதியில்—**பேரா. எஸ். வையாபுரியார்**

''ஒவ்வொரு விமர்சகனுடைய திறன் அவன் தன் சமகாலத்தில் புதிதாய் வருடம் படைப்புக்களை எந்த வகையில் ஆராய்ந் தான் என்பதைப் பொறுத்தே தீர்மானிக்கப்படுகிறது......''

**—எம்.டி.எம்.**

# பிரம்மாக்கள் மரித்தாலென்ன?

# பிரதிகள் ஜீவிக்கும்!

□

திமிகிட திமிகிட
வாத்ய மிருதங்கம்
ஆதிவாசிக்கு ஜே!

திடுக்கிட திடுக்கிட
வாக்ய நட்வாங்கம்
பார்த்தல்மேக்கும் ஜே!

ஆதௌ கீர்த்தனா ரம்பத்திலே
எல்லோருடைய
'ஸ்தான'ங்களும் ஜாக்கிரதை!

அமைப்பியல் கிரகத்தின்
சூன்யவாத சித்தர்கள்
பராக்! பராக்! பராக்!

அமைப்பியல் கிரகத்தின்
சூன்ய வாதச் சித்தர்கள்
தமிழ்ச் சூழல்
அவதரித்த மாத்திரத்தில்

உன்னதங்கள் கேலிக்குள்ளாயின
ஸ்தானங்கள் கேள்விக்குள்ளாயின
பீடங்கள் சரியலாயின
பிம்பங்கள் சிதிலமாயின
நிர்வாண உண்மைகள்
நிதர்சனமாயின.

'நானி'ன் தாத்பரியம்
கீதைப் பேருரை
ஊடறுத்து ஒரு சீட்டு

ஓர்மையில்லாமல்
உரக்கப் படித்தார்
தயானந்தா

'நான்'
தாய் வழிவந்த
தந்தையின் விந்து

அதிர்ந்து வெடித்தார்
தயானந்தா
**'யார் இந்த முட்டாள்'**

'நான்தான் சார்'

*விமர்சகர்களின் புறக்கணிப்பிற்கும் இளைய தலைமுறையின் வரவேற்புக்கும் ஆளாகியுள்ள ஒரு புதிய இலககியப் போக்கு பற்றி இங்கு சுட்டிக் காட்டுவது அவசியம். எதார்த்தவாதப் புனைவுகளின் சில அடிப படையான வடிவக்கூறுகளான கால வரிசையில் கதை சொல்லல், தர்க்கப் பூர்வமான நேர்கோட்டுக் கதைப்பின்னலை அமைத்தல், தூலமான சிதைக்க முடியாத ஆளுமையைப் பாத்திரங்களாக வார்த்தல், தூலமான எதார்த்தத்தையும் அதன் தர்க்கபூர்வமான விவரணையையும் களமாகக் கொள்ளல் என்பனவற்றையெல்லாம் அடித்து நொறுக்கி, எள்ளி நகையாடி ஒழுக்கவாதிகளையும், சனாதனிகளையும் அதிர்ச்சிக்குள்ளாக்கி தமிழ்ச் சூழலில் தடம் பதித்துள்ளன இவர்களின் புனைவுகள். தமிழ்ச் சூழலுக்கு அமைப்பியலை அறிமுகப் படுத்தியவர்கள் இத்தகைய முயற்சிகளில் முன்னோடியாக நிற்பது குறிப்பிடத் தக்கது. முந்திய தலைமுறையில் நவீனத்துவ உத்திகளை தமிழில் இறக்குமதி செய்தவர்களிடமிருந்து இவர்கள் மிகப் பல அம்சங்களில் வேறுபட்ட போதிலும் ஓர் அம்சத்தில் ஒப்புமை காண முடியும். இவர்கள் இன்று அறிமுகப்படுத்துகிற போக்குகள் என்பன சுமார் இருபதாண்டுகளாக அமெரிக்கா, லத்தீன் அமெரிக்கா போன்ற பகுதிகளில் தோன்றிய இலக்கியப்போக்கின் தாக்கத்தால் விளைந்தவைதான்.*

மௌனத்தைக் கிழித்து
எழுந்து நின்றான்
மெய்யறி வாணன்

அக்கணமே
மரித்து விழுந்தது
தயானந்தரின்
'நான்!'

சமநிலையைச் சிதைக்கக்கூடிய தான பலவித மொழியமைப்பையும் சொல்லாடல்களையும் கொண்டிருக் கக்கூடிய ஒரு இலக்கியப் பிரதி தத்துவங்களுக்கும் அறிவியலுக்கும் எதிரான ஒரு கலகத்தை முன் வைக்கிறது.

ஒழுங்கமைவைச் சீர்குலைத்து
கலகத்தை முன்வைத்தன
அந்தப் பிரதிகள்

ஆனபோதிலும்
அந்தப் பிரதியிலும்
இன்னும் ஒரு
ஒழுங்கமைவு

'நான்'-ஐத் தகர்என்றது
அமைப்பியல் வாதம்
'நான்'-ஆய்த் திரிந்தனர்
சூன்யச் சித்தர்கள்

தன்னைத் தவிர
மற்றவற்றை மறுப்பதே
கலையின் உன்னதங்கள்

தம்மைத் தவிர
பிறரை மறுத்தனர்
சூன்யச் சித்தர்கள்

பாரதிதாசன் கவிதைகளில்
ஒன்றுகூட
எக்காரணம் கொண்டும்
தேறாது

விமர்சன அலகோ
தர்க்க நியாயமோ
ஏதுமில்லா
அபிப்பிராயங்களுக்கெல்லாம்
எதிர்வினைஏதும் தேவையில்லை.

தம்மைத் தவிர பிறரை மறுத்த
சூன்ய சித்தர்
தம்முள்ளேயே
தன்னைத் தவிர
பிறரை மறுத்தனர்
உன்னதங்களாய்!

அந்நியப்பட்ட ரத்தமெல்லாம்
தனித்தனித் தீவாய்த்
தகையலாயின.

'நான்—லீனியர்'
நான் 'ஸீனியர்'
நீ 'ஜூனியர்'

அவன் திருடன்
முன்னுரையா எழுதறான்
முன்னுரை
நாவலைப் பற்றி
ஒத்தவரி ஊதும்...

நானும் திருடன்
மதிப்புரைக்கு வந்தது
நாவல் தேறாது
நண்பர் நாவல்
ஆளை விடுங்கள்

எப்படியும் எழுதலாம்
இன்னைத் தேதிக்கு
இதைவிட்டால் ஏதுமில்லைன்னும்
எதுக்குமே இது தேறாதுண்ணும்
எப்டி எழுதினாலும்
என் எழுத்து
விஞ்ஞான பூர்வம்
எவனும் கிடையாது

இங்கே ஒருபயல்
என்னை மறுக்க

மௌனத்தைப் பேசவைத்தோர்
மெய்களை இருட்டடிக்கலாமா?
விஞ்ஞான பூர்வமென்ன
வக்கீலின் வாதம்தானா?

டொனால்ட் பார்த்தெல்மே
தமிழ் வாக்கிய அமைப்புக்கு
கூற்றுவனானார்

பார்த்தெல்மேக்கு முன்னமேயே
ஜேம்ஸ்ஜாய்ஸின் நினைவோடை
பித்தன் கொடுத்த கொடையாக
தவளைப்பாய்ச்சலாய்த் தமிழில்
பாயலானது

இலக்கியம் எல்லாம் குப்பையாச்சு
குப்பையெல்லாமும் இலக்கியமாச்சு

வெட்டி எடுக்கப்பட்ட கதையில்
நசுக்கு நான்சுக்காச்சு

அந்த ஐரீஷ்காரருக்காச்சும்
இங்கிலிஷ் மேலே கோபம்
இந்தக் கதை சொல்லிக்கு
என்னவந்தது தமிழின்மேல்
கோபம்?

நசுக்கு நான்சுக்கானால்
'நானை' நன் என்பேன் நன்

யாக்ஞவல்கியன்
என்பாணியை 'ஓத்துனு'போய்
அவன்தான்
முதல்ல பண்ற மாதிரி
உட்றான்.

இவ் 'ஓத்து'
என்னுதலிற்றோ எனின்
'திருடிக் கொண்டுபோய்'
எனும் பொருட்டாய
சென்னைத் தமிழாம் என்க!

யாரையடா சொன்னாய் அது?

மோட்டெருமைக் கவிராயன்
முக்காரம் போட்டகதை
பண்டல்ல இன்றன்று
பன்னூறு நூற்றாண்டாய்
பாரில் நடமாடுது காண்

என் எழுத்தைப் போடாமல்
என்ன 'புடுங்கி' இவன் 'ங்கோத்தா'
சோட்டா சிறுபத்திரிக்கையான்
ஜோல்னாப் பைமேலே
'பலானதை' உட்டடிக்க

'ங்கோத்தா' என்னுதலிற்றோ எனின்
அரவணைக்கும் விளி ஆகுமென்ப
மற்றுப் 'பலானதோ' என்னின்
'பரத்தை' எனப் பொருள் விரியும்

போட்டா முதலிதழ்லேயே போடு
போடாங்கட்டி போடவே வேணாம்

மன்னிக்கனும் மாண்புடைத் தமிழ்
வாசகர்களே!
கெட்டவார்த்தைகள் கேட்க நேர்ந்ததற்கு
ஏனெனிலோ தமிழ்கூறு நல்லுலகம்
'அவையல்கிளவி' என முகஞ்சுளிக்கும்
'அன்பார்லிமெண்டரி' என
அவைக்குறிப்பில் நீக்கும்
பாராளுமன்றத்தின் பண்பாடு
தானென்னே?

'கெட்டவார்த்தை பண்ணலாம்'
பரவாயில்லை
எழுத்தில் பேச்சில் வரவே கூடாது

உந்துவண்டியில் உரசிப்பார்க்கலாம்
உத்தித் தள்ளலாம்
ஓரம் சாரமாய் 'சைனும்' போடலாம்
ஒண்ணாக மட்டும்
உட்காரவே மாட்டோம்.

'சைன்' போடுதலாவது
கையெழுத்திடல்

கைவண்ணம் காட்டுதல் என
விரித்தோதுக
விரிப்பிற்பெருகும் என்றஞ்சி
விட்டோம் இத்தோடு!

ஆபாசமென்பது
பிரயோகிக்கும்
வார்த்தைகளில் இல்லை

ஆசியாக்கண்டத்தின் ஆண்குறி
மாதிரித்
துருத்திக் கொண்டிருக்கும்
புண்ணிய பாரதமென்னும்
சேரன் வரிகளில் சித்திரமாவது
பாரதபூமியின் ஆதிக்க வெறிதான்!

விதித்த கர்மத்தைச் செய்துமுடி
விளையும் பலனை எதிர்பாராதே
எனும் கீதையின் மௌனத்தில்
உறைந்து கிடப்பதுதான்
உள்ளார்ந்த ஆபாசம்!

சூத்ரதாரிகளாம் கிருஷ்ண
பரமாத்மாக்கள்
குருக்ஷேத்திரத்தில் மட்டுந்தானா?

ஏந்தவேண்டிய ஆயுதம்
வகுக்கவேண்டிய வியூகம்
எவைஎவை என்னும் தீர்மானம்
எதிரியைப் பொருத்தே தகவமையும்!

'ரத்தம் ரத்தம் கொள்ளு'மென்றது
'மாக்பெத்து'க்கு மட்டுந்தானா?
ரத்தத்தின் கைநனையாதவன்
போராளி ஆகமுடியாது!
ரத்தத்தில் குளித்தபின்னே...
விலங்குகளை வேட்டையாடத்தான்
வேட்டுவனாய் ஆனதெல்லாம்
வேடனே விலங்கானபின்னால்...
வதைமுகாம்கள் கதைசொல்லும்

தர்மயுத்தம் ஏதுமில்லை
யுத்ததர்மம் ஒன்றேதான்!

அரவானைப் பலியாயிட்டது
ஆதிநாளில் மட்டுந்தானா?
சுறங்கிவரும் காலச்சுழலில்
களப்பலிகளும் ஆயுதங்களும்
நவநவமாய்
அகிம்சையின்
அந்தப்புரமும் வன்முறைதான்
மகாத்மாக்களின் •
புன்னகை மர்மம்தான்
பகத்சிங் ராஜகுரு சுகதேவ்!
ஆயுதப் போருக்கு ஊடாக
அகிம்சையின் களப்பலிதான்
திலீபன!

தர்மயுத்தம் ஏதுமில்லை
யுத்ததர்மம் ஒன்றேதான்

கூற்றுவனின் கோரதாண்டவம்!
ஒவ்வொரு முறையும்
கூத்து முடிந்த பின்னாலே
கிருஷ்ண பரமாத்மாக்கள்
யுத்ததர்மம் ஸ்தாபிப்பர்
பரமஹம்ஸ அம்சமாய்!

சவப்பெட்டிக் கடைக்காரன்
மட்டுமே
நம்பிக்கையோடு கடை
திறந்திருப்பது
ஈழத்தில்தான் என்றாலும் சேரன்!
சர்வதேச அளவிலுங்கூடச்
சந்தோஷம் இன்று சாத்தியமாவது
சாவு வணிகர்களுக்கு
மாத்திரந்தான்!

தேசியப் பாதுகாப்பிற்கான
கெரில்லா யுத்தம்
கட்டமைக்கப்படுவதென்பது...
கஞ்சா + அபின் + ஹெராயின்
= எம்— 9 + ஏகே—47 etc.,
என ஈழப்போராளிகள் மட்டுமில்லை
'ஃபிடலின் பிள்ளைகளே'
புதுச்சமன்பாடு
வகுத்திட நேர்கையில்

1990

தியாகத்தின் மறுபக்கமும்
துரோகந்தானா?
போராளிகளின் புறமுதுகில்
போதை மருந்தா

ஏகாதிபத்தியங்களின் வலைப்பின்னலில்
ஏகப்பட்ட கண்ணிகளில் ஒன்றென்றாலும்
ஏகசக்ராதிபதி 'நான்'' ஆக
அதிகாரங்களோடும் ஆயுதங்களோடும்
அந்தப்புரத்தில் கைகோப்பது
மாஃபியாக்களும் என்றான பின்னே

மானுட வாழ்வின் நிகழ்தகவு
மனுஷ அத்தின் அர்த்தப்பாடு
எல்லாமே வினாக்குறிதான்!

அபத்தம் அபத்தங்கள்தான்
அத்தனையும் அபத்தங்கள்தான்!
ஆனாலுமென்ன...?

நீங்க படிச்சுக்கிழிச்ச
லச்சணம் போலத்தான்
ஒங்க பதக்கமும் பாடம் படிக்கிறது
எந்தக் காலம் ஒப்பேற?

மாணவப்பருவத்தில்
புதுமைப்பித்தனை ஆய்ந்ததற்காக
வாய்த்த அந்தப் பதக்கமும்
மார்வாடிக் கடையில்
பாடம் படிக்கும் அடிக்கடி!

பதக்கத்துக்கென்ன
மீட்டுத் தொலைக்கலாம்
மார்வாடிகையில் அடகுபோய்ப்
பாழாய்ப்போன என் ஜீவிதம்......?!

அப்கோ மதராஸி ஹை!
மதராஸி ஹிந்தி நை மாலும்!

தோடா தோடா மாலும் ஸாப்!

அச்சா!
பான்வாலா ஜீ!
கல்கத்தா பான்மே
ஏக் ஜர்தா பீடா!
ஏக்ஸோபீஸ் அவுர் தீன்ஸோ
ரத்னாபிராண்ட் பிரபாத்கா ஜர்தா!
ஏ.ஆர்.ஆர். பான்பராக் ஜர்தா
நவரத்தன் ஹிமாம்
எல்லாய்ச்சி அவுர் படாபட்டி!
பஸ்!

பங்கி அடிச்சேண்டி
பான்பீடா போட்டேண்டி
சிங்கிள் டபுளாச்சு!
வெத்திலையப் போட்டேண்டி
சக்தி வந்து ஏறுதடி!
சக்தி வந்து ஏறையில
புத்தி கொஞ்சம் மாறுதடி!

ஜர்தாபீடா என்பது ஒரு வடக்கத்திய தாம்பூல வகையறா. கல்கத்தா வெற்றிலை —கத்தக் காம்புச் சாறு—பன்னீரில் பாடம் போட்ட புகையிலைத்தூள் — சந்தனக் தைலத்தில் ஊறிய பாக்கு—ஏலம்—இல வங்கம்— எலுமிச்சைச்சாறு — மெந்தால் இத்தியாதி இத்தியாதி. இதில் ஜர்தா பவருக்கு 120 மற்றும் 300 என்ற கவுண்ட்ஸ் கணக்கும் உண்டு' போடக் கொஞ்சம் 'தில்' வேண்டும். புகையிலைப் பழக்கம் இல்லாவிட்டால் போட்டபின் தலைசுத்தும். போட்டுமென்று சாறு ஊற ஊற லாகிரி ஏறும். உள்ளே விழுங்காமல் வாயில் ஒதுக்கித் துப்பி விடவேண்டும். விக்கல் எடுத்தால் துப்பிவிட வேண்டும் நிகோட்டின் உள்ளே இறங்கிவிட்டால் விக்கல் வரும். துப்பாவிட்டால் வாந்தி வரும்.

வாந்தி யெடுக்கும்வரை
இறங்கும் நிகோட்டின் குப்பிகளுடனும்
உங்கள் ஆன்மா நீடுழி வாழட்டும்!

**STATUTORY WARNING**

Chewing of tobacco
is inlurious to health

புற்றுநோய் வருமென்ற போதிலும்
புகையிலையைத் தவிர்க்கவா முடிகிறது?

ஓட்டுப் போடுவதென்பதெல்லாம்
நம் தலைக்கு நாமே போடும் மண்
என்றாலும்
ஓட்டுப் போடாமலா போகிறோம்?

புகையிலை உபயோகம் தொடர்ந்தால் புற்றுநோய் வரவாய்ப்பதிகம். தொண்டைப்புற்று வந்த பின்னே துண்டிக்கப்படும் உணவுக்குழாய். திரவ வடிவ உணவு மட்டுமே கண் முன்பாக நெஞ்சில் இணைத்த குழாய் மூலம் நேரடியாக ஊத்தப்படும். எதை வேண்டுமானாலும் வாயில் மெல்லலாம் விழுங்க மட்டும் இயலாது. மென்றுமென்று துப்பித்தான் தீர வேண்டும். முன்பு புகையிலையை மென்றுமென்று துப்பியமாதிரி. இயற்கை தரும் தண்டனை எந்தவிதமாய்ப் பார்த்தீரா?

உமிழும் தாம்பூலம் ரத்தம்
விடுதல் அறியா வேட்கை
அமிழும் போதையில் முக்குளிக்கும்
லாகிரியின் சுகலய லஹரி!

போடுற ஆளுக்கு என்ன வந்தது
பொண்டாட்டி புள்ள தெருவில நிக்கும்
புண்ணியவாளன் போய்ச் சேர்ந்துர்லாத்
பண்ணின கர்ம பலன் எல்லாம்!

நிஜந்தன்றன் நான் இல்ல
ஷோபனாரவிதான் இல்லவே
இல்ல
தமிழன்பன்
எல்லாரும் அவுட்
கடேய்சில பாட்டிம்மா!
(மன்னிக்கணும் ஃபாத்திமாபாபு)

பனிச்சென்று நீறு துலங்கும் நெற்றி
'நுதல் விழி நாட்டம்' திறந்தாற் போலே
சந்தனக் கீற்றில் குங்குமத் திலகம்

அய்யா வணக்கம்
தனித்தமிழ் வந்தது முன்னாலே
தமிழய்யா வந்தார் பின்னாலே

அய்யா ஓர் அய்யம்!

சிவ சிவா!
அடியேன் கடையேன்
சிற்றறிவிற் கெட்டிய மட்டிலும்
தெரிந்தால் ஏதும் விடை சொல்வேன்

விடயம் விடயம் என்கிறார்களே
விடயம் என்றால் தெரியுமா?

விடயம் இவ்வளவுதானா?
விடயம் என்றால் விசயம்தான்!

பாதிக்கிணறு தாண்டி வீட்டீர்!
அந்த விடயம் தெரிஞ்சதுதான்
வெற்றிலை பீடாக்
கடையில் கிடைக்கும்
விடயத்திற்கு
அந்தப் பெயர் வந்ததெப்படி?

அய்யாவுக்கு விடயம்
அகப்படவே இல்லை

அவிழ்க்கப்பட்டது விடயம்.

பொம்பள விசயம்
பாத்திருக்கிறீரா?
அதான்யா விடயம்!

புகையிலை கமறும் வெடிச்சிரிப்பு!

சிவசிவா!

காந்தி பொம்மைக் குரங்கானார்
கனிந்த சிவப்பழத் தமிழையா!

சிவப்பு முக்கோணம் ஏன் தெரியுமா?
பெரியவாள் கொடுத்த
சிம்பல் அது!

'ஸ்ரீசக்கரம்' பாத்திருக்கீரா
எத்தனை முக்கோணம்
அதில் இருக்கு?

நம் தர்மஞ் சொல்லும்
தாத்பர்யம்.

முக்கோணச் சிம்பல்
பெண்குறி குறிக்கும் குறியீடே?

இருவகைச் செழிப்பின் (மானுடச் செழிப்பும் தாவரச் செழிப்பும்) சின்னமாகவும் பெண் கருதப்பட்டமையாலே செழிப்புத் தெய்வங்களாகப் பெண் தெய்வங்கள் அமைந்து தாய்த் தெய்வ வழிபாடு தோன்றி வளர்ந்தது. அததுடன் குழந்தை உற்பத்தியுடன் தொடர்புடைய பெண் குறியும் கருப்பையும் செழிப்பின் குறியீடாகவும் அமைந்தன. இதன் விளைவாகப் பெண்குறி வழிபாடும் கருப்பையின் குறியீடான பூரண கடா வழிபாடும் தோன்றின தமிழ்நாட்டில் கும்பகோணம் அருகிலுள்ள தாராசுரம் என்னும் ஊரிலுள்ள கோயிலொன்றில் 'சக்ராயி' என்ற பெயருடைய பெண் தெய்வமொன்றுள்ளது. பிராமணர்கள் உட்பட அனைத்துச் சாதியினராலும் வணங்கப்படும் இத் தெய்வம் சௌராஷ்டிர சாதியினரால் மிக விருப்பமாக வணங்கபடுகிறது. இத் தெய்வத்தின் சிற்பமானது நிர்வாணமாகவே அமைந்துள்ளது. உட்கார்ந்த நிலையில் கால்களை அகலமாக விரித்துக் கொண்டு. பெண்குறியினைக் காட்டிய நிலையில் இச் சிற்பம் காட்சியளிக்கிறது.

கும்பகோணத்தில் இருந்து கொண்டு
கோணந் தெரியாதிருக்கலாமா?

தாராசுரம் சக்ராயி
தரிசன மின்னும் பண்ணலையா?

ஆதிசங்கரர் முதலாக
சாரதாபீடம் தொடர்வதும்
ஸ்ரீ சக்கரா வழிபாடே!

கொங்கைகளே சிவலிங்கம் எனக்கூறி
கோக் கவிஞன் காளிதாஸன் பூஜை
செய்தான்

நாபிக் கமலே
நாலாங்குல தூரே
அங்க மத்திமே
ரோமாலங்கார பூஜிதே
கோமுக துவாரகா
ஜலத் துவாரகா
லிங்கா பிஷேகப் பிரியே!

தலைக்கு மேலே கைகூப்பித்
தப்பிப் பிழைத்தார் தமிழையா !



யப்பாவ்
சேரன் மாமாவுக்கே
கேக்குமா ?

என்னடா ?

இல்ல
இப்ப நீங்க சிரிச் சிங்கல்லா
இந்த சிரிப்பு
சிலோன்ல இருக்கற
சேரன் மாமாக்கே கேக்குமாங்கேன்!

மனுசன்னா சிரிக்கணும்டா
மனம் விட்டுச் சிரிககணும்டா!

சிந்திக்கத் தெரிஞ்ச மனித குலத்துக்கே
சொந்தமான கையிருப்பு—வேறு
ஜீவராசிகள் செய்ய முடியாத
செயலாகு மந்த சிரிப்பு!

**பறை அச்சு முடிந்து விட்டது**
**மீதி மேட்டர் அனுப்பவும்**
**மீதிப் பணமும் அனுப்பவும்**

நமஸ்காரம்
விஜய் துணியகம்
பாககி ரொம்போ நாளாச்சு
வீட்லே என்னா பண்றே நீ

ட்ரைபண்ணி ஆர்டர் வாங்கவும்
காலேஜ் பாக்கி நாலுமாசமாய்
சர்வீஸ் காண்ட்ராக்ட்
எடுக்கப்பாருங்கள் எல்.ஐ.சி,யில்!

*உமது சிரிப்பு . . . சிரிப்பா அது?*
*நாம் சந்தித்த*
*குற்றால மலைச் சாரல் எல்லாம்*
*இன்னமுங் கூட*
*எதிரொலித்துக் கிடக்கிறது !*

அவரது வாயில் எப்போதும் சிரிப்பும் சிவப்புமாகவே இருக்கும். வெற்றிலையைப் போட்டு அண்ணாந்து இருநது கொண்டு கடகடவென்று சிரிப்பார். அவரது சிரிப்பு பொய்ச் சிரிப்பல்ல. மனம்திறந்த பிள்ளைச் சிரிப்பு. எனினும் புதிதாகக் கேட்பவனுக்கு ஒரு கணம் எரிச்சலையோ, அருவருப்பையோ தரும் பேய்ச் சிரிப்பு. வெடிக்க வெடிக்கச் சிரிப்பார்.

எல்லாடெப்போவிலும் நல்ல
இம்ப்ருவ்மண்ட்
உங்க ஏரியாதான்.........

வணக்கம் தோழர்!
பாத்து ரொம்ப நாளாச்சு
எப்படி இருக்கு இயக்கமெல்லாம்?

1978ஆம் ஆண்டு திரு. அய்யப்பன் என்பவருடன் சேர்ந்து TOPTEN என்ற தயார் உடைகளை ஏற்றுமதி செய்யும் நிறுவனத்தை உருவாக்கினார். இதே சமயத்தில்தான் 'ழ' இதழையும் தொடங்கினார். தன்னுடைய நிறுவனத்தைக் கட்டிஎழுப்ப இரவுகளிலும் வேலை செய்ய வேண்டிவந்தது. இரண்டு மூன்று ஈடுபாடுகளில் ஒரே நேரத்தில் தீவிரமாய் இயங்கிய போது Affective Disorder என்ற மனநலத் தாக்குதல் ஏற்பட்டுச் சிகிச்சை பெற்றார்.

தோதுபடாது நாய்னா
தாகசாந்தியில தனிஆவர்த்தனம்
அய்யாவக் கேளு அயிட்டமெல்லாம்
பக்கவாத்தியம் சுதி சேந்தாத்தான்
கச்சேரி என்னைக்கும் களை கட்டும்!

சரி சரி! சங்கதிக்கு 'ராநாய்னா!'

சாயுங்காலம் சாயுங்காலம்
ஜானேக்ஷாவும் பேக்பைப்பரும்

ஆவின்ல கெடய்க்கும்
ஐஸ்கிரீம் சோடா!
ஐஸ்கிரீம் ஸக்வாஸ் பன்னீர்சோடா!
சும்மா
நுரை நுரையாத் தூள் கிளப்பும்
'தம்மாரேதம்'

ஹனீ பீ ஒயினா
காம்பினேசன் என்னன்னா
'செர்ரி' கலரும் 'சீட்லெஸ்'
திராட்சையும்

புளுபேர்டு ஜின்னுன்னா
போட்டுக்கக் கூட
லிம்கா—பிளிண்ட் இல்ல லெமனட்
எலுமிச்சம் பழமோ! புளிச்ச காடியோ!

சோசலிச புண்யபூமிச்
சோமபானம் 'வோட்கா'வா?
புதுவைக்குத்தான் போகோணும்
ஜிவ்வுண்ணு தூக்கும் 'ஜின்னு'
சாதிதான்

குதிரைச் சக்தி அதிகம் வேணுமா
செஞ்சுரி அடிச்ச ஓல்டுமங்க்கோ
XXX மிலிட்டரி ரம்மோ
பட்டாளத்தான் வந்தாத் தான்!

பீரைப் பத்தியே பேசல்லியே!

சர்த்தான் போய்யா சாவு கிராக்கி

'ஆப்டர் ஆல்''
லேடீஸ் டிரிங்க்ஸெல்லாம்
அய்யா தொடவே மாட்டாரு!

மன்னிக்கணும்
பெண்ணிலைவாதிகள்!
இங்கே 'ஆப்டர் ஆல்' என்றது
பெண்ணையில்லை பீரைத்தான்!

கொங்கணி மணக்கும் கோவா பீச்
'ஜஸ்ட்லைக் தட்' 'ஸன்பாத்தில்'
பீரும் தம்-முமாய் பெண் ஹிப்பி!

ஹ்ம்க்கும்
ஜின்னில் மட்டும் என்ன வாழுதாம்
ஜின்னு பீருக்குச் சக்காளத்திதான்
ஜெயலலிதா பேவரிட் டிரிங்க்

அதனாலென்ன
அப்ப நான்
அர்த்த நாரீஸ் வரராக்கும்!

நம்ம
சிங்காரி சரக்கு நல்ல சரக்கு
சும்மா
ஜிவ்வுன்னு ஏறுது கிக்கு எனக்கு!

இலக்கியத்தில் இன்னது தான் சொல்லவேண்டும், இன்னது சொல்லக் கூடாது என ஒரு தத்துவம் இருப்பதாவும் அதை ஆதரித்துப் பேசுவதாகவும் மனப் பால் குடித்துக் கொண்டிருக்கலாம். உண்மை அதுவல்ல. சுமார் இருநூறு வருஷங்களாக ஒரு விதமான சீலைப்பேன் வாழ்வு நடத்திவிட்டோம். சில விஷயங் களை நேர் நோக்கில் பார்க்கவும் கூசு கிறோம். அதனால்தான் இப்படிச் சக்கர வட்டமாகச் சுற்றி வளைத்துக் சப்பைக் கட்டு கட்டுகிறோம்...இலக்கியம் என்பது மன அவசத்தின் எழுச்சி தானே;...நடை முறை விவகாரங்களைப் பற்றி எழுதுவதில் கௌரவக்குறைச்சல் ஏதும் இல்லை... நாசூக்கான கட்டம் வரை, அதாவது உடை குலையாத கட்டம் வரை, எழுதிக் கொண்டிருப்பதே கலையல்ல; அவைகளே 'அப்புறம்' என்ற நினைப்பைத் தட்டிவிட்டு ஆபாச வேட்கைகளைக் கிளப்புகின்றன. இலக்கியத்தில் கலையம்சம் என்பது ஜீவத் துடிதுடிப்பில்தான் இருக்கிறது. ராமாய ணத்தில் விபசாரம் இல்லையா? தற்காலப் புத்தகப் தணிக்கைப் போர்டார், இப் பொழுது எழுதினால் 'ஆபாசம்' என்ற தலைப்பில் தடை விதிக்கக் கூடிய வேறு விவகாரங்கள் இல்லையா?

பொதுப்படப் பிறர் கண்ணிற்படாத படி மறைவிற் செய்யும் காதல் கலவி முதலிய விஷயங்களையும் வெளிப்பட இவர் கூறியுள்ளார். ஒளிவு மறைவு என்பது இலக்கியத்திற் கூடாது என்பது தான் இவர் கொள்கை. இதனால் இவ ரைக் கட்டுப்பாட்டிற்கு அடங்காதவர் அல்லது சமுதாய ஒழுங்கிற்குப் புறபோன வர் என்று சிலர் நினைப்பார்கள்... அன்றியும் மேல் நாட்டில் எழுத்தாளர்கள் எழுதிவரும் போக்கை நாம் கவனித்தால் இது ஒரு குற்றம் அன்று......இயற்கை யிலேயே அடங்காப் பிறவியானவர் முற்கூறியபடி எழுதினார் என்றால் அது தவிர்க்க முடியாத ஓர் இயல்பினால் ஏற்பட்டதென்று நாம் கருத வேண்டும். உலகம் இதனால் கெட்டுப் போய் விடாது.

விழுமியங்களின் பெறுமதியில்
நேற்றின் அர்த்தங்கள்
இன்றைய அபத்தங்கள்

அகோ வாரும் பிள்ளாய்
சூன்யச் சித்தரே!

எந்தப் பாழை
உடைத்து நூறி
இந்த மண்ணில் அவதரித்தீர்?
எதுவும் அபத்தம்
எல்லாம் வியர்த்தம்

மண்டும் பெரு இருட்டு
மானுடவர் தம் நினைவில்
கண்டும் அறியாத காரிருட்டு
செல்லும் வழி இருட்டு
செல்லும் மனம் இருட்டு
சிந்தை அறிவினிலும் தனிஇருட்டு

பாழில் புறப்பட்டு
இருட்டுக்கு ஊடாக
சூனியத்தை நோக்கி
நடைபோடும் உம்பயணம்

எக்கேடோ கெட்டுச்
செத்தொழியுங்கள் சித்தர்காள்!
என்றாலும் இன்னமும் நான்
மெத்தவும் நேசிக்கிறேன்
உமது பிரதிகளையே!

பிரதிகள் மையமற்றன
பிரம்மாக்கள்
'நானி'ல் மையங் கொண்டனர்
பிரம்மாக்கள் மரித்தாலென்ன?
பிரதிகள் ஜீவிக்கும்.

அச்சுப் பொறுப்பேற்பேன்
தலைசுமந்து பறையறைந்து
அலையாய் அலைந்தலைந்து
வீதிகளில் விலை பகர்வேன்.

விலைகேட்க நாதியிலா
வீதிகளில் தான் கூட
கட்டையில போம் வரைக்கும்
கடைவிரிப்பேன் ஈதுண்மை;

ஆசனவாய் தான் எரிய
அலைந்தலைந்து உள்மூலம்
வருத்தப்பட்டு பாரம்'
சுமந்ததனால குடல் இறக்கம்
பதறிப் பதறி
பதற்றத்தால் மிகை அழுத்தம்

எக்கச்சக்கமாய்ஏதேதோ கோளாறு
என்னுடலில் ஆங்காங்கே
அக்கக்காய்க் கழற்றி என்னை
'ஓவராயில்' பண்ண வேணும்

உம்
ஆக்கம் தலை சுமக்கும்
'ஆக்கர் யாபாரி' இவன்
போக் கொழிந்து போனபின்னே
புலனாகும் ஓர் உண்மை.

'ஆக்கர்யாபாரி' எனில் தலைச்சுமை
வணிகனாம்.

அது வரைக்கும்
இது தொடரும் அபத்தங்கள்தான்
அத்தனையும் அபத்தங்கள்தான்

வருகிறவாசல், போகிற திசை
இரண்டுந்தான் தெரிகிறது
வருகிறது
ஒரு யோனித் துவாரம்
பிரகிருதி என்ற
அன்னையிடந்தானா?
முடிவில்லா வித்தையா
முறையில்லாத தந்திரமா?

கங்கையின் வெள்ளம்போல்
காலம் என்ற ஜீவநதி
தயிர்க்காரி
சுவரில் போட்ட புள்ளி மாதிரி
ஞாயிறு திங்கள் செவ்வாய்
நான் ஓடினால் காலம் ஓடும்
நான் அற்றால் காலமற்றுப் போகும்
வெறும் கயிற்றரவு!

நான் என்ற ஒரு கருத்து, அதனடியாகப் பிறந்த நானல்லாத பல என்ற பேத உணர்ச்சி; எனக்கு முன், எனக்குப் பின் என்று நாமாக வக்கணையிட்டுப் போட்டுக் கொண்ட வரிகள்...இவை எல்லாம் எத்தனை தூரம் நிலைத்து நிற்கும்? நான் என நினைத்த, நினைக்கும், நினைக்கப் போகும் பல தனித் துளிகளின் கோவை செய்த நினைப்புத்தானே இந்த நாகரிகம்...கூட்டு வாழ்வு என்ற வாசனையை யொட்டி, மனசு இழைத்து இழைத்துக் காட்டும்மணற் சிற்றில்தானே இந்த நாகரிகம் மகாகாலம் என்ற சிலந்தியின் அடிவயிற்றிலிருந்து பிறக்கும் ஜீவ நதியின் ஓரத்தில் கட்டி வைத்த மணற் சிற்றில்...

அகந்தைக் கிழங்கை அகழ்ந் தெறிவோம்
முரண்படும் புள்ளிகளல்ல முக்கியம்
செயல்படும் மையங்களில்
கைகோப்போம்!

'நான்' ஏ
வழியும் ஜீவனுமாய் இருப்போரே'
'நான' ஐக் களைவதுதான்
நான் கண்ட இளைப்பாறல்
'நான்' அழிய 'நான்' அழிய
நாளும் நாம் திகம்பரராம்.

மெல்ல மெல்ல இல்லாகி
சகமனித சாகரத்தில்
திப்பியும் 'நான்' இன்றித்
தினங் கரைவோம் பூரிதமாய்!

வேரில்லாக் கம்பெடுத்து
தனானே னான்னே னானே
தூரில்லாக் கூடை பின்னித்
தானே னண்ணே னானே
மைய மத்துப் போனேனே
தானே னண்ணே நானே!

—சூர்யமுகி

# பொருத்தம்

*கிவி*

பாசமும் அறிவும்
அறிமுகமாகும் பொழுதில்
தந்தையாக...

பந்தமும் ஆசையும்
இணையும் வேளையில்
தலைவனாக...

எப்போதும்
எங்கள்
பெயரில்—
வாழ்வில்—

முன்னும் பின்னும்
முதலும் முடிவும் என

தலையாக நீங்கள்...நீங்களே...
வாலாக நீங்கள்...நீங்களே...
உடலாக நாங்கள்...நாங்களே

உடலில்
உயிர் இருந்தென்ன?

நிமிர்ந்து நிற்பது
தலை
சுழன்று சப்திப்பது
வால்

இயங்குதல் உடல்
இயக்குவதோ
தலையும் வாலும்

தலை
ஆடும் போதெல்லாம்
உடல்
குறுகி நடுங்குகிறது

வால்
ஆட்டம் போடுகையில்
உடல்
நெளிந்து ஒடுங்குகிறது

சகித்தல் என்பதில்...
உயிருள்ளவை
பொருளற்றுப் போவதில்
வாழ்வில்லை!

பொருந்தாத உருவத்தில்
பொருத்திப் பொருத்திக்
கூட்டில் உறைவதும்
கூண்டில் உழல்வதும்
ஆற்றலில்லை!

—இனி
நீயுமில்லை!
நானுமில்லை!
நாம்!

நமக்கே என்றான
வடிவெடுப்போம்?
பால்பேதம் அற
'மனிதம்' காண்போம்!

மூளையால்
சுவாசிப்போம்
இதயத்தால்
இயங்குவோம்

ஏனெனில்

பொருந்துவதுடன்
பொருத்திக் கொள்வதே
பொருத்தம்!

# பங்களிப்பாளர் பற்றி...

## 1. காப்ரியேல் கார்ஸியா மார்க்யொஸ்

புகழ்மிக்க லத்தீன் அமெரிக்க எழுத்தாளர்-'ஒரு நூற்றாண்டுத் தனிமை' நாவலுக்கு (1982) நோபல்பரிசு-Magical Realism என்கிற புனைவியல் முறையை அறிமுகப்படுத்தியவர்.

## 2. நாகார்ஜுனன்

இயற்பெயர் : ரமேஷ்-UNI இல் பணி-கல்வித்துறை வளாகத்தைத் தாண்டி அமைப்பியலை அரசியலின் கட்டுமானங்களுக்குள் பிரயோகிப்பவர்-நவீனத்துவ எத்தனங்களை இனங்கண்டு எடுத்துரைக்கும் தகைமையாளர். நெல்லை மண்ணின் 'தெற்கத்தி வக்கணை கெக்கலிக்கும்' குறும்புக்காரர்-அணு உலை எதிர்ப்பை தனது எழுத்து மூலமும், நடவடிக்கைகளுக்கூடாகவும் மக்கள் மத்தியில் கொண்டு செலுத்தியவர். 'நான்-லீனியர்' எழுத்து முறையிலும் தலைப்பட்டு வருபவர்.

## 3. சம்யுக்தா

இயற்பெயர் : விசாலாட்சி-'அன்று செவ்வாய்க்கிழமை அதை எப்படி நான் மறக்க முடியும்' எனும் லத்தீன் அமெரிக்க எழுத்துக்கள் அடங்கிய நூலின் மொழிபெயர்ப்பாளர். மூலநூலை வாசிப்பது போன்ற உணர்வினை மொழியாக்கத்தின் மூலமே ஏற்படுத்திட வல்லவர்.

## 4. கோமகன்

Er. இரா. கோமகன் B.E., P.G. Dip., A.M.I.E.,—பொறியாளர். நின்றுபோன 'விவேகா' எனும் சனரஞ்சக இதழின் ஆசிரியர்-ஞாநியின் ஆசிரியப் பொறுப்பில் வெளிவந்த 'அலைகள்' இதழின் ஆசிரியர் குழுவிலும் அங்கம் வகித்தவர். மொழியாக்கத்தில் இது கன்னி முயற்சி.

## 5. கரிச்சான்குஞ்சு

கு.ப.ரா.வின் சீடர் என்கிற முறையில் 'கரிச்சான் குஞ்சு' என்ற நாமகரணம் இயற்பெயர் : நாராயணசாமி அய்யர்-

'அன்றிரவே', 'தெளிவு', 'கரிச்சான் குஞ்சு சிறுகதைகள்', 'பசித்தமானுடம்' (நாவல்), கு.ப.ரா., 'பாரதி கண்டதும் கேட்டதும்' (விமர்சனம்)-கழுகு (நாடகங்கள்) வடமொழிப் புலமை-ஓய்வுபெற்ற தமிழாசிரியர்-தேவிபிரசாத் சட்டோ பாத்தியாயாவின் 'இந்தியத்தத்துவ இயலில் நிலைத்திருப் பனவும் மறைந்தனவும்' எனும் புகழ்பெற்ற ஆங்கில நூலை அருமையாகத் தமிழாக்கித் தந்தவர்.

6. ஜமாலன்

இயற்பெயர்: H. ஜாஹீர் உசேன் M.Sc.,-'ஜனகனமன' நகலச்சிதழில் ஆசிரியராக இருந்தவர்-அமைப்பியலில் தலைப் படும் வரை கவிதைகள் படைத்து வந்தவர்-அமைப்பியல் சார்ந்த நவீனத்துவக் கண்ணோட்டங்களுடன் தமிழ் விமர்சனத் தளத்தில் இயங்கி வருபவர்-அமைப்பியல் விமர்சன முறையில் அச்சுறுத்தாத லாவகமிக்க மொழிநடையாளர்-அச்சில் வெளி வரும்கட்டுரை என்கிற ரீதியில் 'பறை' மூலமே அறிமுகம்.

7. அ. மார்க்ஸ்

இயற்பியல் பேராசிரியர் — கல்வித்துறை வளாகத்தைத் தாண்டி மார்க்சிய விமர்சனத்தை மக்கள் சிக்கல்களுக்கூடே பிரயோகிப்பவர். சமாந்தரக் (Contemporary) கலை எத்தனங் களையும் நவீனத்துவ இலக்கிய எத்தனங்களையும் 'பாய்ச்சல் நேரத்திலேயே பகுத்துணரும்' பார்வைக்கு உரியவர். அண்மைக் காலமாக அமைப்பியல் விமர்சனத் தளத்திலும் தலைப்பட்டுள்ளவர்—'மார்க்சிய இலக்கியக் கொள்கை' மொழி பெயர்ப்பாளர்— 'சிற்றிலக்கியங்கள் சில குறிப்புகள்' 'எது கவிதை?' 'படைப்பாளி வாழ்க்கை இலக்கியம்' 'சீனமும்...' 'புதிய கல்விக் கொள்கை ஒரு பார்வை' 'நமது மருத்துவ நலப் பிரச்னைகள்' முதலான நூல்களின் ஆசிரியர்.

8. ஜெனகப்ரியா

இயற்பெயர் நடராஜன்— 'இலக்கிய வெளிவட்டம்' இதழா சிரியர்—தமிழில் நவீன சிறுகதை அமைப்பாக அறிமுகமாகும் 'நான்—லீனியர்' எழுத்து வகையிலும் எத்தனித்து வருபவர்— 'மரணம் எதுவென' (கவிதைகள்) நூலாசிரியர்.

9. கோபி கிருஷ்ணன்

இயற்பெயர்: கோபாலகிருஷ்ணன்—மனநலக் காப்பகத்தில் களப்பணியாளர்—யாந்திரீகமான புறஉலகில் மனிதம் காணும் படைப்புலகம்—உள் மனம் நினைவிலிமனம் இவற்றிற்கு ஊடாகவும் குறுநகை இழையோடச் சஞ்சரிக்கும் மன அவசங் களின் பிரதிமைகள்—சின்ன சின்ன விவரணங்களிலும் செய் நேர்த்தி—'ஒவ்வாத உணர்வுகள்' (சிறுகதை) — 'உணர்வுகள்

உறங்குவதில்லை' (குறுநாவல்) 'முடியாத சமன்' (சிறுகதை) (அச்சில்)

10. கோணங்கி

இயற்பெயர் : இளங்கோ. 'தமிழில் நவீனகதைக்காரனின் வர' வென்பார் நாகார்ஜுனன்—கரிசல்மண்ணின் வரிசையிலே சோதனை பின்னும் கதைசொல்லி— சித்தம் போக்கு சிவம் போக்காய்த் தேசந்திரியும் ஊர் சுற்றி —'கல்குதிரை' இலக்கி யச்சிற்றிதழாசிரியர் — 'மதினிமார்கள் கதை', 'கொல்லனும் ஆறு பெண மக்களும்' (சிறுகதை) நூலாசிரியர்.

11. மாலன்

இயற்பெயர் : நாராயணன். சுப்ரமண்யராஜுவின் 'வாசகன்' மூலம் அறிமுகம் — 'சாவி'யின் 'திசைகள்' மூலம் பிரபலம்— இன்று 'இண்டியா டுடே' தமிழ்ப் பதிப்பாசிரியர் என்பது பிர சித்தம்— இவரது நூல்கள் 'ஜனகனமன', 'கல்லிற்குக் கீழும் பூக்கள்', 'வழிதவறிய வண்ணத்துப் பூச்சிகள்', 'இறகுகளும் பாறைகளும்', 'புரட்சிக்காரர்கள் நடுவே'.

12. இன்குலாப்

இயற்பெயர் : ஷாகுல் ஹமீது—தமிழ்ப் பேராசிரியர்—மூன்றாம் அணி முற்போக்குக் கவி மரபின் முன்னோடி—சனரஞ்சக இதழ் களிலும் எழுதியதன் வாயிலாக மக்கள் மத்தியிலும் அறிமுகம்— 'தளம்' இதழின் சிறப்பாசிரியர்—இவரது நூல்கள் 'இன்குலாப் கவிதைகள்', 'வெள்ளை இருட்டு', 'சூரியனை சுமப்பவர்கள்', 'கிழக்கும் பின் தொடரும்' 'துப்பாக்கிகள் பூவாளிகள்' 'யுகாக் கினி'. தனது கவிதைகளால் திரு. கருணாநிதியை விமர்சித்த தன் மூலமும் —இஸ்லாத்தைக் கேள்விக் குள்ளாக்கியதன் மூலமும் பலத்த சர்ச்சைகளுக்கு பாடு பொருளானவர்.

13. பழமலை

தமிழ்ப்பேராசிரியர் — தம் 'சனங்களின் கதை' மூலம் தமிழ்க் கவிதை சூழலில் பழமலை அலை எழச் செய்தவர் — 'நவீன கதைப் பாடல்களின் வரவு' என்பார் அல்லாபிச்சை. —மக்கள் சிக்கல்களை மண்மணங் கமழும் பண்களில் நையாண்டி நய மிளிர லாகவகமாகப் பாட்டுக்கட்டக் கூடியவர்—எங்கு கண்டா லும் குரோட்டன்சுகளை விட்டுவைக்க மாட்டார் (அதற்காகவே ஒரு கோணிப்பை வைத்திருப்பார்).

14. உஷா எஸ். நாயர்

கேரளத்தில் Art Matel Training Centre இல் பணி — 'கணை யாழி'க் கவிஞர்—அடக்கி வாசிக்கும் குரல் இவரது சுபாவம்.

**15. கிவி**

இயற்பெயர் : முனைவர் கி. விஜயலட்சுமி — அன்னம் நவ கவிதை வரிசையில் 'காற்றின் சந்தேகம்' மூலம் அறிமுகம்— அடுத்து 'விடைபெறா வினாடிகள்'—பாரதி விழிகளின் தீட்சண்யத்திலும் பெண்நிலை வாதத்திலும் ஈடுபாடுமிக்கவர்.

**16. சூர்யமுகி**

திகம்பர கவிகளின் ஆதர்சத்தில் 'சூர்யமுகி' ஆனவர்—இயற்பெயர் : வே. மு. பொதியவெற்பன் (எம்.ஏ.) பி.ஒ.எல். — 'பறை' தொகுப்பாசிரியர்— 'முனைவன்' இதழாசிரியர் — 'புதுமைப்பித்தன் கதைகள்'(ஆய்வு) 'சூரியக்குளியல்' (கவிதை மற்றும் பாடல்) 'நிகழ்கலை அனுபவமாகும் கவிதையின் இன்னொரு பரிமாணம்' (நிகழ்கலை விமர்சனம்) நூலாசிரியர் — கவிதா நிகழ்வை தமிழகததில் அறிமுகப்படுத்தியவர்—'சிலிக் குயில்' வெளியீட்டாளர், 'தோழமை' பதிப்பாசிரியர்.

# எமது இதர வெளியீடுகள் மற்றும் எமது விற்பனை உரிமையில்

| | | | |
|---|---|---|---|
| 1. | சிலிக்குயிலுக்கு ஓர் செங்கவிதாஞ்சலி | (தொகைநூல்) | 3-60 |
| 2. | மணிக்கொடி பொன்விழா மலர் | ,, | 10-00 |
| 3. | ரசியாவில் நடப்பதென்ன? | ,, | 10-00 |
| 4. | நமது மருத்துவ நலப் ப்ரச்னைகள் | அ. மார்க்ஸ் | 17-00 |
| 5. | சீனமும்... | ,, | 3-00 |
| 6. | மார்பக நோய்கள் | டாக்டர் சு. நரேந்திரன் | 9-00 |
| 7. | யமன் | சேரன் (கவிதைகள்) | 5-00 |
| 8. | சோகங்களிலும் துயரமானது | கௌரி (கவிதைகள்) | 7-00 |
| 9. | சமாதானத்தின் பகைவர்கள் | அருந்ததி (கவிதைகள்) | 10-00 |
| 10. | தீக்கொன்றை | செந்தாரகை (பாடல்கள்) | 7-50 |
| 11. | சூரியக்குளியல் | சூர்யமுகி (கவிதை மற்றும் பாடல்கள்) | 4-00 |
| 12. | சனங்களின் கதை | பழமலை (நவீன கதைப் பாடல்) | 7-50 |
| 13. | கோவிந்தன் | கே. டானியல் (நாவல்) | 12-00 |
| 14. | அடிமைகள் | ,, ,, | 16-00 |
| 15. | கானல் | ,, ,, | 30-00 |
| 16. | எக்சிஸ்டென்ஷியலிசமும் ஃபேன்ஸிபனியனும் | சாருநிவேதிதா | 18-00 |
| 17. | கூடங்குளமா? கொலைக்களமா? | அ. ஜ. கான் | 3-00 |
| 18. | பண்பாடும் புரட்சியும் | எரிதழல் | 7-00 |
| 19. | ரசியக் கரடியின் உண்மை முகம் | சுர. ராசன் | 6-09 |
| 20. | மார்க்சியத் திறனாய்வுச் சிக்கல்கள் | கோ. கேசவன் | 6-00 |
| 21. | கதைப் பாடல்களும் சமூகமும் | ,, (நாட்டார் இலக்கிய ஆய்வு) | 9-00 |
| 22. | இந்தியம் ஈழம் நக்சலியம் | சாலை இளந்திரையன் | 7-50 |
| 23. | சாதியமும் கல்விக் கொள்கையும் | எரிதழல் | 3-50 |
| 24, | நிகழ்கலை அனுபவமாகும் கவிதையின் இன்னொரு பரிமாணம் | வே. மு. பொதியவெற்பன் | 8-00 |
| 25. | ஒரு கிராம சபையில்... | கனிவண்ணன் (சிறுகதைகள்) | 14-00 |
| 26. | முடியாத சமன் | கோபிகிருஷ்ணன் (சிறுகதைகள்) | அச்சில் |

**'சிலிக்குயில்'** மற்றும் **'தோழமை'**

அச்சுக்காகக் காத்திருப்பன...

- 'ஆயுதமாகக் கவிதை' (கருத்தரங்கக் கட்டுரைகள்)
- 'அணுஉலையும் கலைக்குரலும்' (தொகுப்புநூல்)
- புதிய ஜீவா கவிதைகள்
- உஷா எஸ். நாயர் கவிதைகள்
- 'மார்க்சியமும் இலக்கியத்தில் நவீனத்துவமும் — அ. மார்க்ஸ்
- 'பஞ்சகோணங்கள்' (நாவல்) — கே. டானியல்
- 'சாநிழல்' (குறுநாவல்) — கே. டானியல்

(இவை எமது வெளியீடுகளாகத்தான் வெளிவர வேண்டும் என்பதில்லை. இதர பதிப்பாளராம் எமது சக பயணிகள் எவரேனும் முன்வரினும் அவர்கள் பொறுப்பில் இவை வெளிவர வழி வகை செய்கிறோம்—'சிலிக்குயில்')

1990

"

Wretched of the Earth இன் முன்னுரையில் சார்த்தர் அல்ஜீரிய மக்களின் உளவியலைப் பற்றி பேசுவது எம்போன்ற பறையரின் உள வியலைத்தான் என்பதாக நான் புரிந்து கொண்டேன். அல்ஜீரியப் போரின்போது ஃபிரான்சின் புத்தி ஜீவிகள் மற்றும் ஃபிரெஞ்ச் பொது வுடமைக் கட்சி எல்லாமே வெள்ளைத் தோல் மனிதர்களுக்குத்தான் என்பது நிருபணமாயிறறு. இந்தியப் பொதுவுடைமை இயக்கத்திலும் உயர்சாதியினரின் ஆதிக்கம்தான் இருந்து வருகிறது. இவர்களால் பறையரின் உளவியலைப் புரிந்துகொள்ள முடியவில்லை—இவர்கள் மொண்ணையாக சாதி இல்லை என்கிறார்கள். ஒரு உயர்சாதியைச் சேர்ந்தவன் தன் சாதியிலிருந்து வெளியே வந்துவிட முடியும்—தன் சாதியை மறந்துவிட முடியும். சாதி கிடையாது என்று சொல்ல முடியும் ஒரு பறையனால் அது முடியவே முடியாது. பல படித்த பறையர்கள் தம் சாதி குறித்ததாழ்வு மனப்பான்மையினால் பிராமண ராகிவிடுகிறார்கள்...

நான் பறையன் என்று சொல்—தலை நிமிர்ந்து சொல். இச் சமூகத்தின் அடிச்சக்தியாக இருந்து இயக்குவது எமது உழைப்புத்தான் என்று சொல். இப்படித்தான் நான் பறையனானேன். இது அனை வருக்கும் ஒரு சமூகக் கடமை.''

— சாரு நிவேதிதா

"



முன்னட்டைச் சிற்பம் : பி. கே. மூக்கையா